இலங்கை
காப்புறுதி ஒழுங்கு
முறைப்படுத்தல்
ஆணைக்குழு



காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு
போட்டித்தன்மையுள்ள கைத்தொழிற்துறை

# விவேகமான ஒழுங்குவிதிகள்

ஆண்டறிக்கை 2020

# பொருளடக்கம்


தொலைநோக்கு, செயற்பணி ........ 5
ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் ........ 6
தலைவரின் செய்தி ........ 8
பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு ........ 10
ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் ........ 16
ஆணைக்குழு அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் ........ 17
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு ........ 19
அலுவலர் குழாம் ........ 20
மீளாய்வுகள்
பொது மீளாய்வு ........ 24
புள்ளிவிபர மீளாய்வு........ 28
தொழிற்பாடுகளின் மீளாய்வு
- மேற்பார்வை மீளாய்வு ........ 68
- ஒழுங்குமுறைப்படுத்தல் மீளாய்வு ........ 72
- விசாரணை மீளாய்வு ........ 75
- சந்தை அபிவிருத்தி மற்றும் வெளித்தரப்பு உறவுகள் மீளாய்வு ........ 78
- நிர்வாக மீளாய்வு ........ 80
- நிதியியல் மீளாய்வு ........ 81
நிதி தகவல்கள்
- கணக்காளர் நாயகத்தின் அறிக்கை ........ 84
- கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2020ஆம் ஆண்டுகாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில் ........ 90
- நிதியியல் நிலைமை கூற்று ........ 92
- நிதிச் செயலாற்றுகை கூற்று ........ 93
- உரிமைப்பங்கு / தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றத்திற்கான கூற்று ........ 94
- காசுப்பாய்ச்சல் கூற்று ........ 95
- காப்பறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் காசுப்பாய்ச்சல் கூற்று ........ 96
- கணக்கீட்டு கொள்கைகள் ........ 97
- நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள் ........ 101
இணைப்பு I ........ 109
இணைப்பு II ........ 110
இணைப்பு III ........ 112
அருஞ்சொல் அகராதி ........ 113






## காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு.
## போட்டித்தன்மையுள்ள கைத்தொழிற்துறை.
## விவேகமான ஒழுங்குவிதிகள்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு பொது நலனைப் பாதுகாக்கவும், போட்டித்தன்மையுள்ள காப்புறுதிக் கைத்தொழிற்துறையை ஊக்குவிக்கவும் மற்றும் நாட்டின் காப்புறுதி ஒழுங்குவிதிகளை மேம்படுத்தவும் உதவுகின்றது.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு இடர்களுக்கு எதிராக அதிக மீள்தன்மை கொண்டதாக எங்கள் சமூகத்தையும் பொருளாதாரத்தையும் உருவாக்க உறுதிபூண்டுள்ளது. எங்கள் மக்களையும் எங்கள் நாட்டையும் பாதுகாப்பதற்கு நாங்கள் குறிப்பிட்டளவு வளங்களை முதலீடு செய்துள்ளதுடன் கைத்தொழிற்துறையுடன் இணைந்து பணியாற்றுகின்றோம்.
நாங்கள், இலங்கை செழிக்க உதவுவதற்கு காப்புறுதியாளர்கள் பொருளாதாரத்தில் முதலீடுகளை மேற்கொள்ளவும், புத்தாக்கங்களை உருவாக்கவும்,

தாங்கிக்கொள்ளக்கூடிய பண்டங்களை வழங்கவும் இயலக்கூடிய அதேவேளையில் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு, நிலைபேறு மற்றும் நியாயத்தை வழங்குதற்கு இயலும் வகையில் நாடானது ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பைக் கொண்டுள்ளது என்பதை உறுதிசெய்கின்றோம்.


இலங்கை காப்புறுதி
ஒழுங்குமுறைப்படுத்தல்
ஆணைக்குழு

# தொலைநோக்கு

ஆசியாவின் திறன்மதிப்புமிக்க காப்புறுதி ஒழுங்குபடுத்துனராக இருத்தல்.

# செயற்பணி

காப்புறுதியாளர்களின் நாட்டங்களைப் பாதுகாக்கும் அதேவேளை, காப்புறுதித்துறையின் அபிவிருத்தியை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் வசதிப்படுத்தல்.

# ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை - 28
- காப்புறுதித் தரகர்களின் எண்ணிக்கை - 68
- காப்புறுதியாளர்களைப் பிரதிநிதித்துப்படுத்திய காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை - 43,342
- காப்புறுதித் தரகர்களுடன் பதிவுசெய்துள்ள காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை - 509

02 பிரதேச செயலகங்களில் 163 கிராம சேவையாளர் பிரிவுகளில் காப்புறுதி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது.

**காப்புறுதித் தொழிற்துறையின் செயலாற்றுகை**

| | 2020 | 2019 | மாற்றம் % |
|---|---|---|---|
| மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பணம் (ரூ. மில்லியனில்) | 208,250 | 196,472 | 5.99 |
| மொத்த சொத்துகள் (ரூ. மில்லியன்) | 796,791 | 696,941 | 14.33 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) % சத வீதத்தில் ஊடுருவல் | 1.39 | 1.31 | 6.11 |
| காப்புறுதியின் அடர்த்தி (ரூபா) | 9,501 | 9,011 | 5.44 |

**ஆணைககுழுவின் செயலாற்றுகை**

| | 2020 | 2019 | மாற்றம் % |
|---|---|---|---|
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் (ரூ.மில்) | 7,468.71 | 6,252.96 | 19 |
| செஸ் (ரூ.மில்) | 506.14 | 493.07 | 3 |
| வருடாந்தக் கட்டணம் (ரூ.மில்) | 244.90 | 224.43 | 9 |

**ரூபா 796,791 மில்லியன்**

காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துகள்

**ரூபா 208,250 மில்லியன்**

காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்



# முகாமைத்துவத் தகவல்கள்

# தலைவரின் செய்தி



**பொதுக் காப்புறுதித்துறை 2020 இல் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக இ.ரூபா 105,276 மில்லியனைப் பதிவு செய்தது.**

ராசீக் ஸரூக் பி.சீ
தலைவர்

# தலைவரின் செய்தி

2019 இன் பிற்பகுதியில் வேகமாகப் பரவத் தொடங்கிய கோவிட்-19 வைரஸ் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் உலகம் முழுவதிலும் பரவியது. உலகம் முழுவதிலும் அரசாங்கங்கள், சமூகங்கள் மற்றும் வியாபாரங்கள் மீது கோவிட் 19 நோய்ப்பரவலின் தாக்கம் ஏற்பட்டதுடன் அண்மைக்கால வரலாற்றில் மிகவும் சவாலான ஆண்டில் ஒன்றாக 2020ஆம் ஆண்டு காணப்பட்டது. இலங்கை உட்பட பல நாடுகள் பொருளாதார மந்தநிலை மற்றும் நிதிச் சந்தைகளில் இடையூறுகளைச் சந்தித்துள்ளன. இந்தப் பின்னணியில், நான் 2020ஆம் அண்டுக்கான இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையை முன்வைக்கின்றேன்.

## செயலாற்றுகை மேலோட்டம்

கோவிட் 19 நோய்ப்பரவலின் பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்கள் இலங்கை காப்புறுதிச் சந்தையில் எண்ணற்ற சவால்களையும் சந்தர்ப்பங்களையும் உருவாக்கின. நோய்ப்பரவல் காரணமாக எழுந்த சந்தர்ப்பங்களினால், ஆயுள் பாதுகாப்பு தொடர்பான பொது மக்கள் விழிப்புணர்வு அதிகரிக்கலாம் என நம்பப்படுகின்றது. மேலும், நோய்ப்பரவலானது ஆயுள் காப்புறுதி ஊடாக இடரைத் தவிர்த்துக் கொள்ள முடியும் எனும் விழிப்புணர்வு மட்டத்தை மேம்படுத்தியது, இது ஆயுள் காப்புறுதியாளர்களின் செயலாற்றுகையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

அரசினால் மேற்கொள்ளப்பட்ட முடக்கல்கள் மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள், பொதுக் காப்புறுதிப் பண்டங்களுக்கான கேள்வியை அடக்கியது. குறிப்பாக, மோட்டார், கடல் மற்றும் பயணக் காப்புறுதி வகையைச் சேர்ந்த காப்புறுதிகள் கடுமையாகப் பாதிப்படைந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தவணைக் கட்டணங்களிலும் வீழ்ச்சி காணப்பட்டது.

சவாலான சூழ்நிலையின் மத்தியிலும் காப்புறுதித்துறை 2020ஆம் ஆண்டு முழுமையான வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. காப்புறுதிக் கைத்தொழிற்துறை 2020இல் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக இ.ரூபா 208,250 மில்லியனைப் பதிவுசெய்துள்ளதுடன் இது 5.99% வீத வளர்சியை வெளிப்படுத்துகின்றது. நீண்ட கால காப்புறுதித்துறை 2020இல் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணமாக இ.ரூபா 102,974 மில்லியனைப் பதிவுசெய்ததுடன், இது 15.98% வீதத்தினால் உயர்வடைந்துள்ளது. இந்த வருடத்தில் வியாபார வளர்ச்சியை அடைவதற்குப் பண்டப் புத்தாக்கம், தொழிற்பாடுகள் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டமை, விநியோக ஊடகங்கள் மீள் கட்டமைக்கப்பட்டமை மற்றும் வாடிக்கையாளரை மையப்படுத்திய தொழிற்பாட்டு மாதிரிகளின் பயன்பாடு போன்ற சில பிரதான உபாயமார்க்கங்கள் நீண்டகால காப்புறுதியாளர்களினால் பயன்படுத்தப்பட்டது.

இதற்குமாறாக, 2020இல் பொதுக் காப்புறுதி வியாபாரம் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணமாக இ.ரூபா 105,276 மில்லியனைப் பதிவு செய்ததுடன் 2.24% வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது மற்றும் இந்த பின்னோக்கிய செயலாற்றுகைக்கு மோட்டார் வாகன இறக்குமதித் தடையே பிரதானமான காரணமாக அமைந்திருந்தது. குறிப்பிட்ட தொகை வாகனங்கள் மட்டுமே சந்தைக்கு அனுமதிக்கப்பட்டதுடன் வாகனங்களின் விலையும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தன, இவை பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் புதிய வியாபாரத் தவணைக் கட்டணங்களை உருவாக்குவதைத் தடுத்தன. காப்புறுதி ஊடுறுவல் 2020இல் சற்று அதிகரித்திருந்ததுடன், ஆசிய வலயத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஊடுறுவல் மிகக் குறைந்தளவே காணப்படுகின்றது. 2020இல், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் காப்புறுதிக் கைத்தொழிற்துறை 29.26% இலாப வளர்ச்சியுடன் குறிப்பிடத்தக்க நிதியியல் செயலாற்றுகையை வெளிப்படுத்தியது.

## ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டகத்தைப் பலப்படுத்தல்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், பொது மக்களின் விழிப்பூட்டலை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. காப்புறுதி மற்றும் காப்புறுதி செய்வதன் முக்கியத்துவம் தொடர்பாக பொது மக்கள் சிறந்த முறையில் அறிவூட்டப்படுத்தல் வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இது காப்புறுதிக்கான கேள்வியை உருவாக்கி எதிர்காலத்தில் காப்புறுதிக் கைத்தொழிற்துறையை முன்னோக்கிச் செல்வதற்கு வசதியளிக்கும்.

காப்புறுதிக் கைத்தொழிற்துறை நிதி, தொழிற்பாட்டு, உபாயமார்க்க ரீதியாக பரந்தளவிலும் ஆழ்ந்த தாக்கத்தை அனுபவித்தது, அதனால் கோவிட் -19 எதிர்காலத்தை முன்னோக்கிக் கொண்டுவந்தது, நீண்ட காலத்தில் பல போக்குகளை உந்தியது.

கோவிட் - 19 வியாபாரத்தை டிஜிட்டல் மயப்படுத்துவதையும் முன், மத்திய மற்றும் பின் காரியாலயங்கள் முழுவதிலும் மாதிரிகளை தொழிற்படுத்துவதையும் உந்தியது. மெய்நிகர் தொடர்புகள் வாடிக்கையாளர் உறவுமுறையைக் கட்டியெழுப்புவதற்கும், சேவையை வழங்குவதற்கும், விற்பனை செய்வதற்குமான சந்தர்ப்பங்களைத் திறந்தது. காப்புறுதியாளர்களுக்கு புதிய வியாபார உபாயமார்க்கங்களை அபிவிருத்தி செய்வதற்கு, எந்த வகையான வாடிக்கையாளர்களை இலக்காகக் கொள்வது எனச் சிந்திப்பதற்கும் மற்றும் பண்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் இதுதான் நேரமாகும். டிஜிடல் முதலீடுகளினால் சந்தையை விரைவாக அடைவதற்கும் மேம்படுத்துவதற்கும் இயலும் மற்றும் புதிய காப்புறுதிப் பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான முக்கிய நுண்ணறிவுத் தகவல்கள் வழங்கப்படும். சந்தைப் போக்குகள், வாடிக்கையாளர் நடத்தைகள், மோசடி கண்டுபிடிப்புகள், எழுதப்படுதல் இடர்கள் மற்றும் வேறுபட்ட காப்புறுதி வரிசைகளின் இலாபம் என்பவற்றுக்கான கூர்மையான விபரங்களுக்கு தகவல் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்குப் பிரதானமான கவனத்தைச் செலுத்துதல். மேலும் டிஜிடலை நோக்கி முதலீடுகளை மேற்கொள்ளல் என்பது அதன் இயலளவை மேம்படுத்துவதற்கு அவசியம் என்பதனால் கைத்தொழிற்துறை அதனைத் தொடர வேண்டும் என மீள வலியுறுத்த விரும்புகின்றேன்.

காப்புறுதிப் பூட்கையாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்கும் மிகச்சிறந்த கைத்தொழிற்துறையினை வழங்குதற்கும் கட்டாயமாக ஆணைக்குழு அர்ப்பணிப்புடன் முன்னோக்கிச் செல்லுதல் வேண்டும். கோவிட்-19 நோய்ப்பரவலின் தாக்கம் காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் உறுதியினைப் பரிசோதிப்பதுடன் 2021 இல் அதேபோல் வீழ்ச்சியடைவதற்கும் வழிவகுக்கும். இருப்பினும், காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை மீதான இடர் மற்றும் நிச்சயமற்றதன்மையின் அளவு தொடர்பாக அறிந்து கொள்வதற்கு ஆணைக்குழு சூழ்நிலையைத் தொடர்ச்சியாக காண்காணித்தல் வேண்டும்.

## எதிர்காலத்திற்கான சவால்கள்

நோய்ப்பரவல் காரணமாக உருவாக்கப்பட்ட இடையூறுகளுடன் இணைந்து இளைய சமுதாயத்தின் ஆயுள், சுகாதாரம் மற்றும் ஏனைய பாதுகாப்புகள் தொடர்பான பண்டங்களின் விருப்பம் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. புதிய சமூகத் தேவைகள் மற்றும் சந்தைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான காப்புறுதி சேவைகளை வழங்குவதற்கும் மற்றும் நேருக்கு நேரான விற்பனைகளை மேற்கொள்வதற்கான டிஜிடல் ஊடகங்களை இணைத்துக் கொள்வதற்கும், பாதுகாப்புக்கான பொது மக்கள் கேள்விகளுக்கு சமாந்தரமாக பண்ட அபிவிருத்திகளை உந்துவதற்கும் காப்புறுதியாளர்களுக்கு தங்களைப் புதுப்பித்துக்கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் பரந்தளவில் விரிவடைந்துள்ளது.

கோவிட்-19 நோய்ப்பரவலின் தாக்கத்திற்கு அப்பால், வாடிக்கையாளரின் எதிர்பார்ப்புகள் உயர்வடைதல், சைபர் அச்சுறுத்தல்கள், அதிகரிக்கும் காலநிலை இடர்கள் மற்றும் பேரழிவு நிகழ்வுகள், நிலைத்திருப்புக் கட்டாயங்கள் மற்றும் பரந்த ஓய்வூதியச் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு இடைவெளி போன்ற ஏனைய பிரதான சவால்களையும் காப்புறுதித்துறை சந்திக்கின்றது, இது காப்புறுதியாளர்களை எதிர்வரும் வருடங்களில் பரந்தளவிலும் வேறுபட்ட முறையிலும் சிந்திப்பதற்கான அவசியத்தைக் கோருகின்றது.

## பாரட்டுதல்கள்

இறுதியில், ஆணைக்குழுவின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியினை அடைவதற்கு பல்வேறுபட்ட கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எனது சக அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய அளப்பரிய உதவிக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அத்துடன் அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகள், தரகர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட இடைத்தரகர்கள், இலங்கை காப்புறுதிச் சங்கம், இலங்கை காப்புறுதி தரகர்கள் சங்கம், இலங்கை காப்புறுதி நிறுவனம் மற்றும் காப்புறுதி ஓம்புட்ஸ்மன் என்பவற்றை உள்ளடக்கிய அனைத்து கைத்தொழில் பங்களிப்பாளர்களுக்கும் தொடர்ச்சியாக வழங்கிய ஆதரவுக்கும், மிகச்சிறந்த ஒத்துழைப்புக்கும் மற்றும் தொடர்ச்சியாக எங்களுடன் பேணி வந்த உறவுக்கும் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் நோக்கத்தை அடைவதற்கு வருடம் முழுவதிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட பணிப்பாளர் நாயகம், சிரேட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்ட ஊழிய அங்கத்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். வரும் வருடங்களில் நுகர்வோரைப் பாதுகாத்து மற்றும் பலமான காப்புறுதிச் சந்தையைப் பேணுவதற்கு அவசியமான உபாயமார்க்கங்களை நிறைவேற்றுவதை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு தொடரும் என நம்புகின்றேன்.



ராசிக் ஸரூக் பி.சீ
தலைவர்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

ஒரு ஒழுங்குமுறைப்படுத்துனராக, ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில், கைத்தொழிற்துறையின் வளர்ச்சியை எந்தவகையிலும் பாதிக்காதவகையில் எங்கள் மீள்கட்டமைப்பை உறுதி செய்யும் அதேவேளையில், பூட்கையாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்கான எங்கள் முழுமையான பொறுப்பினை நிறைவேற்றுவறத்கு சமநிலையைப் பேணுதல் வேண்டும். உலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளுடன் இணைந்த புத்தாக்கத்தின் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலில் முதலீட்டாளர்களுக்கு துறையினை மேலும் துடிப்புள்ளதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் உருவாக்க முடியும்.

**தமயந்தி பெர்னாண்டோ**
**பணிப்பாளர் நாயகம்**



# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் சாதனைகளை தெரிவிப்பது எனக்கு ஒரு கௌரவமாகும்.

இலங்கையின் காப்புறுதித் துறையானது 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து அதன் உலகளாவிய சகாக்களைப் போலவே, COVID-19 பெருந்தொற்று தொடங்கியதிலிருந்து ஏற்ற இறக்கங்களின் நியாயமான பங்கை அனுபவித்துள்ளது. 2020 நிதியாண்டில் கோவிட்-19 விளைவுகளால் இலங்கைப் பொருளாதாரம் கணிசமான பின்னடைவைச் சந்தித்த போதிலும், காப்புறுதிதாரர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் அதே வேளையில், காப்புறுதிதாரர்களின் நம்பிக்கையை மேம்படுத்தும் நோக்கில் IRCSL கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை தொடர்ந்தும் முன்னெடுத்தும் செயற்படுத்தியும் வந்தது.

பெருந்தொற்று நிலைமை தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிடையே பல நிதிச் சிக்கல்களைக் கொண்டு வந்துள்ளது. இதை நிவர்த்தி செய்ய, **IRCSL** அதன் வாடிக்கையாளர்களுக்கு காப்பீட்டு பிரீமியத்தை செலுத்துவதற்கு சலுகை கால அவகாசத்தை வழங்குமாறு தொழிற்துறைக்கு வழிகாட்டுதல்களை வழங்கியது. சலுகைக் காலம் 2020 மார்ச் முதல் செப்டம்பர் வரை இருந்தது, இதில் காப்புறுதிதாரர்களுக்கு பிரீமியத்தை செலுத்த மூன்று மாத கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. வாகனங்களின் மட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதிகள், மட்டுப்படுத்தப்பட்ட இயக்கம் மற்றும் நிதிக் கட்டுப்பாடுகள் வணிக வளர்ச்சியில் மோட்டார் காப்புறுதி வணிகத்தைப் போலவே மற்ற பொதுக் காப்பீட்டு வகுப்புகள் குறைவதற்கு வழிவகுத்தது. இருப்பினும், அபாயங்களை காப்பீடு செய்யும் வணிகத்தின் தன்மை காரணமாக காப்பீட்டுத் துறையானது பெருந்தொற்று நோயால் குறைவாக பாதிக்கப்படும் அதிர்ஷ்டத்தினை பெற்றது. இந்த பெருந்தொற்று உலகெங்கிலும் ஏற்படுத்திய வாழ்க்கை மற்றும் சுகாதார செலவுகளின் நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு, உயிர் மற்றும் உடல்நலக் காப்பீட்டுத் தேவைகள் பொதுமக்களுக்கு மிகவும் முக்கியமானதாகிவிட்டன. பெருந்தொற்று நிலைமையைப் பூர்த்தி செய்ய காப்பீட்டுத் தயாரிப்புகள் உருவாக்கப்படுவதையும் **IRCSL** உறுதி செய்தது. சில தயாரிப்புகள் கோவிட் கவருடனான பயணக் காப்பீடு, கோவிட் தடுப்பூசிகளால் ஏற்படும் உடல்நல சிக்கல்களுக்காக வழங்கப்பட்ட கவர், மட்டுப்படுத்தப்பட்ட மைலேஜ் பயன்பாட்டிற்காக அல்லது வாகனம் பயன்படுத்தப்பட்டபோது மோட்டார் இன்சூரன்ஸ் கவர்கள் போன்றவை கொடுக்கப்பட்டன. அதன் காப்பீடுதாரர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கையாக, காப்பீட்டாளர்கள் பதிவுசெய்யப்பட்ட மருத்துவமனைகளால் நிறுவப்பட்ட இடைநிலை கோவிட் பராமரிப்பு மையங்களை மருத்துவமனைகளாகக் கருதினர் மற்றும் சுகாதார உரிமைகோரல் செலவுகளுக்கு மதிப்பளித்தனர்.

ஒரு ஒழுங்குமுறைப்படுத்துனராக, ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில், கைத்தொழிற்துறையின் வளர்ச்சியை எந்தவகையிலும் பாதிக்காதவகையில் எங்கள் மீள்கட்டமைப்பை உறுதி செய்யும் அதேவேளையில், பூட்கையாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்கான எங்கள் முழுமையான பொறுப்பினை நிறைவேற்றுவறத்கு சமநிலையைப் பேணுதல் வேண்டும். உலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளுடன் இணைந்த புத்தாக்கத்தின் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலில் முதலீட்டாளர்களுக்கு துறையினை மேலும் துடிப்புள்ளதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் உருவாக்க முடியும்.

### முக்கிய ஒழுங்குமுறை முன்முயற்சிகள்

2020 ஆம் ஆண்டில் ஆணையம் ஒழுங்குமுறை சீர்திருத்தங்களை மேற்கொண்டது, அதன் முக்கிய அம்சங்கள் இந்த அறிக்கையின் பொது மதிப்பாய்வில் சேர்க்கப்பட்டுள்ளன. அவை:

1. வழிமுறை # 2 க்கு திருத்தம் -கொள்கை ஆவணத்தை வழங்குதல்
2. வழிமுறை # 19 க்கு திருத்தம் - தரகர்களுக்கான குறைந்தபட்ச நிகர மூலதனத் தேவைக்கு இணங்குதல்
3. வழிமுறை # 17- காப்பீட்டு நிறுவனங்களுக்கான கார்ப்பரேட் நிர்வாகம்
4. வழிமுறை # 21 - வங்கிகள், நிதி மற்றும் குத்தகை நிறுவனங்கள் (BFL) காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் தரகர்களிடம் ஏற்கனவே உள்ள குறியீடுகளை வலுக்கட்டாயமாக மாற்றுவதன் மூலம் நியாயமற்ற நடைமுறைகள் என்று குற்றம் சாட்டப்பட்டது.
5. வழிமுறை # 22 - காப்பீட்டு முகவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை.

> **நோய்ப்பரவல் சூழ்நிலை தனிப்பட்டவர்கள் மற்றும் தொழில்முயற்சிகளிடையே பல்வேறுபட்ட நிதியியல் பிரச்சினைகளைக் கொண்டு வந்தது. இதற்குத் தீர்வளிக்கும் வகையில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, காப்புறுதித் தவணைக் கட்டணக் கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்குச் சலுகைக் காலத்தை வழங்குமாறு கைத்தொழிற்துறைக்கு பணிப்புரையினை வழங்கியது.**

### காப்பீட்டுத் துறையின் செயல்திறன்

#### மொத்த எழுதப்பட்ட காப்பீடு (GWP) மற்றும் ஊடுருவல

நாட்டினை முடக்குதல், தனிமைப்படுத்துதல் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் உள்ளிட்டவற்றை எதிர்த்துப் போராட விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுடன் இணைந்து **COVID-19** ஏற்பட்டதால் பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன. இந்த மிகவும் சவாலான காலகட்டத்தில், நீண்ட கால காப்பீட்டாளர்கள் 2020 ஆம் ஆண்டில் 15.98% வளர்ச்சியை பதிவு செய்ய முடிந்தது, அதாவது ஒட்டுமொத்த **GWP** 102,974 மில்லியன் ஆக காணப்பட்டது, கோவிட்-19 தொற்றுநோயின் முன்னோடியில்லாத பொருளாதார மற்றும் சமூக தாக்கத்தை கருத்தில் கொள்ளும்போது இது பாராட்டத்தக்கது. தொழில்துறையின் ஒட்டுமொத்த GWP வளர்ச்சி விகிதம் கடந்த சில ஆண்டுகளாக கீழ்நோக்கிய பாதையை சந்தித்து வருகிறது. எவ்வாறாயினும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், ஆயுள் காப்பீட்டுத் துறையின் **GWP** கடந்த ஐந்து ஆண்டுகளில்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

இரண்டாவது மிக உயர்ந்த GWP வளர்ச்சி விகிதத்தைப் பதிவுசெய்து துரிதமான விகிதத்தில் வளர்ந்தது. மதிப்பின் அடிப்படையில், GWP 2016 முதல் 2020 வரை 62.22% அதிகரித்துள்ளது. பொதுக் காப்பீட்டு வணிகமானது கடந்த ஆண்டில் பதிவான 7.06% வளர்ச்சிக்கு எதிராக 2.24% இனால் எதிர்மறையான காப்பீட்டு வளர்ச்சியை 2020 இல் வெளிப்படுத்தியது.

குறைந்த பிரீமியம் வளர்ச்சி பதிவாகியிருந்தாலும், 2020 ஆம் ஆண்டில் நாட்டின் காப்பீட்டு ஊடுருவல் நிலை 1.39% ஆக உயர்ந்துள்ளது, இது முதன்மையாக தற்போதைய சந்தை விலையில் குறைக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியால் தூண்டப்படுகிறது. 2015 இல் 1.12% ஆக இருந்த காப்பீட்டு ஊடுருவல் 2020 இல் 1.39% ஆக அதிகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் நீண்ட கால காப்பீட்டு வணிகத்தின் ஊடுருவல் 0.69% ஆகவும், பொதுக் காப்பீட்டு வணிகமானது 0.70% ஆகவும் இருந்தது, இது முறையே நீண்ட காலக் காப்பீட்டில் சிறிது அதிகரிப்பு மற்றும் பொதுக் காப்பீட்டு வணிகங்களில் சிறிதளவு குறைந்துள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளில், காப்பீட்டு நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பொது விழிப்புணர்வு மற்றும் மேம்பட்ட சேவைகள் மற்றும் தயாரிப்பு மேம்பாடுகள் காரணமாக காப்பீடு மற்றும் காப்பீட்டுத் தயாரிப்புகளை வாங்குவதற்கான நடத்தை முறை மீதான நுகர்வோர் நம்பிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளது.

ஊடுருவல் நிலை ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும், மொத்த மக்கள்தொகையின் சதவீதமாக நடைமுறையில் உள்ள ஆயுள் காப்பீடுகளின் எண்ணிக்கையும், தொழிலாளர் சக்தியின் சதவீதமாக நடைமுறையில் உள்ள ஆயுள் காப்பீடுகளின் எண்ணிக்கையும் முறையே 16.39% மற்றும் 42.60% ஆக இருந்தது, இது புதுமைகளை உருவாக்கி, வளர்ந்து வரும் உண்மைகளுக்கு ஏற்றவாறு சந்தையில் செழித்து வளர ஆயுள் காப்பீட்டாளர்களின் திறனை வலியுறுத்தும் வகையில் முறையே மேல்நோக்கிய போக்கைப் பதிவு செய்தது. பொதுக் காப்பீட்டுத் துறையைப் பொறுத்தவரை, காப்பீடுகளின் எண்ணிக்கை முந்தைய ஆண்டைக் காட்டிலும் 2.45% குறைந்து 6,539,589 ஆக இருந்தது. மோட்டார் காப்புறுதி காப்பீடுகளால் இந்த சரிவு குறிப்பிடத்தக்க அளவில் தூண்டப்படுகிறது.

### நீண்ட கால காப்பீட்டு வணிகத்தின் செயல்திறன்

நீண்ட கால காப்பீட்டாளர்கள் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 இல் 15.98% வளர்ச்சியைப் பதிவு செய்ய முடிந்தது, இது பாராட்டத்தக்கது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இது இரண்டாவது மிக உயர்ந்த வளர்ச்சி விகிதம் ஆகும்.

ஆயுள் GWP-க்கு முதல் ஐந்து பங்களிப்பாளர்கள் மொத்த ஆயுள் GWP-யில் 81.72% ஆகும். மீதமுள்ள பத்து ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் மொத்த ஆயுள் GWP-யில் 18.28% ஐ வைத்திருந்தன, இது 2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 19.40% இலிருந்து குறைந்துள்ளது. செலிங்கோ லை∴ப், SLIC, சொப்ட்லொஜிக் லை∴ப், AIA லை∴ப் மற்றும் யூனியன் லை∴ப் ஆகியவை சந்தையில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றன. செலிங்கோ லை∴ப் நீண்ட கால காப்புறுதி சந்தையில் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொண்ட அதேவேளையில் SLIC மற்றும் சொப்ட்லொஜிக் லை∴ப் சந்தையில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றன. இந்த மூன்று நிறுவனங்களும் மொத்த சந்தைப் பங்கில் 55.35% பங்களித்தன.

நீண்ட கால காப்பீட்டு வணிகத்தின் GWP ஆனது 2020 இல் பங்குபெறும் வணிகத்தில் 20.90%, பங்குபெறாத வணிகத்தில் 41.32%, உலகளாவிய வாழ்க்கை வணிகத்தில் 36.15% மற்றும் இணைக்கப்பட்ட நீண்ட கால வணிகத்தில் 1.63% ஆகியவற்றை உள்ளடக்கியது.

IRCSL ஆனது, காப்பீட்டாளர்களின் மூலதன நிலைகளை திறம்பட நிர்வகிப்பதை உறுதி செய்யும் நோக்கத்துடன், ஆயுள் காப்பீட்டாளர்களின் இடர் அடிப்படையிலான மூலதன அளவை தொடர்ந்து அளந்து கண்காணித்து வந்தது. அதன் மூலம் முறையாக நிர்வகிக்கப்படும் காப்பீட்டுத் துறையின் மூலம் காப்பீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாக்கிறது. ஒரு காப்பீட்டாளரைத் தவிர, அனைத்து ஆயுள் காப்பீட்டாளர்களும் மூலதனப் போதுமான விகிதம் 160% என்ற அமலாக்க நிலைக்கு மேல் அறிக்கை செய்துள்ளனர், இருப்பினும் குறைந்தபட்ச அளவு 120% உடன் இணங்கினர்.

2020 இல் நடைமுறையில் உள்ள மொத்த ஆயுள் காப்புறுதிக் காப்பீடுகள் 3,593,454 ஆக அதிகரித்து 6.21% வளர்ச்சி விகிதத்தை வெளிப்படுத்தி இருந்தது. 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய காப்பீடுகள் 739,784, இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெருந்தொற்றினால் ஏற்பட்ட சவால்கள் இருந்தபோதிலும் சிறிய முன்னேற்றத்தினை காண்பித்தது.

மறுபுறம், நடைமுறையில் உள்ள மொத்த காப்புறுதி காப்பீடுகள் 7.13% ஆகவும், புதிய காப்புறுதி காப்பீடுகள் 9.51% ஆகவும் காலாவதியாகிவிட்டன, இது 2019 உடன் ஒப்பிடும்போது குறைந்து வருவதைக் காட்டுகிறது.

### பொது காப்பீட்டு வணிகத்தின் செயல்திறன்

பொது காப்பீட்டுத் துறையால் பதிவுசெய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட பிரீமியம் (GWP) 2019 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டில் 2.24% எதிர்மறையான வளர்ச்சி விகிதத்தை வெளிப்படுத்தியுள்ளது. நாட்டிற்கு வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடு மற்றும் பெருந்தொற்றால் உருவாக்கப்பட்ட வணிக செயற்பாடுகளின் சுருக்கம், சமூக தொலைதூர நடவடிக்கைகளுக்கு மத்தியில் வாடிக்கையாளர்களுக்கு வரம்புக்குட்பட்ட அணுகல் மற்றும் நுகர்வோரின் காப்பீட்டு பிரீமியத்தின் மலிவு ஆகியவை இந்த எதிர்மறை வளர்ச்சியின் முக்கிய விளக்கங்களாகும்.

ஐந்து நிறுவனங்களால் ஆதிக்கம் செலுத்தும் பொதுக் காப்பீட்டுத் துறை 72.09% பங்களித்தது, மீதமுள்ள ஒன்பது நிறுவனங்கள் சந்தைப் பங்கில் 27.91% பங்களித்தன. 03 காப்புறுதி நிறுவனங்களைத் தவிர அனைத்து பொதுக் காப்புறுதி நிறுவனங்களும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (SLIC), செலிங்கோ ஜெனரல் மற்றும் ∴பேர்∴பர்ஸ்ட் போன்ற GWP இன் அடிப்படையில் செயற்திறனில் முன்னேற்றத்தைக் காட்டின.

SLIC, செலிங்கோ ஜெனரல், எல்லையன்ஸ் ஜெனரல், NITF மற்றும் ∴பேர்∴ பர்ஸ்ட் ஆகியவை 2020 ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதி சந்தையில் முதல் ஐந்து சந்தைப் பங்குகளை அடைந்தன. எவ்வாறாயினும், SLIC விஞ்சியது மற்றும் 2020 ஆம் ஆண்டில் சந்தையில் தலைமை இடத்தினை பெற்றிருந்தது, அத்துடன் முந்தைய ஆண்டில் இரண்டாவது இடத்தைப் பிடித்திருந்தது. இது முக்கியமாக 2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 'சுரக்ஷா' மாணவர் காப்பீட்டுக் கொள்கையைப் பெற்றதன் மூலம் காப்பீட்டு வணிகத்தின் சுகாதார வகையால் இயக்கப்பட்டது

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

மோட்டார் காப்பீடு அதிக விகிதத்தில் பங்களித்தது அத்துடன் அது மொத்த பொது காப்பீட்டு வணிகத்தில் 58.13% ஆகும். 3.90% எதிர்மறை வளர்ச்சி விகிதத்துடன் மோட்டார் காப்புறுதி வணிகத்தின் வளர்ச்சி விகிதத்தில் குறிப்பிடத்தக்க சரிவு காணப்பட்டது, மார்ச் 2020 முதல் அமுலுக்கு வரும் மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டின் விளைவாக, வருடத்தில் புதிய மோட்டார் வாகனங்கள் பதிவு செய்வதில் ஏற்பட்ட கூர்மையான சரிவு இதற்கு முதன்மையான காரணமாகும். மேலும், மோட்டார் வணிக வகையைப் பொறுத்தமட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் வளர்ச்சி விகிதத்தின் சரிவுப் போக்கு முக்கியமாக இருந்தது.

2019 இல் விளக்கப்பட்ட எதிர்மறை வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டில் தீ காப்பீட்டு வணிகம் 7.74% என்ற விகிதத்தில் வளர்ந்தது மற்றும் பொது காப்பீட்டுத் துறையில் சந்தை விகிதத்தில் 8.46% ஆக்கிரமித்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் 4.53% எதிர்மறையான வளர்ச்சி விகிதத்தைப் பதிவுசெய்ததன் மூலம், கடல்சார் காப்பீட்டு வணிகம் GWP வளர்ச்சிக்கு எதிர்மறையாகப் பங்களித்தது. மேலும், வணிகத்தின் இதர வகை வளர்ச்சியின் அடிப்படையில் உச்சரிக்கப்படும் சரிவை பதிவு செய்தது, NITF இன் 'தேசிய இயற்கை பேரிடர் காப்பீட்டுத் திட்டம்' நிறுத்தப்பட்டதை அடுத்து இது 22.45% எதிர்மறையான தாக்கத்தைக் குறிக்கிறது, இது 2020 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முடிவின் மூலம் நடைமுறைக்கு வரும். மேலும், COVID-19 இன் தாக்கம் பயண மற்றும் சுற்றுலாத் துறையை கடுமையாகப் பாதித்தது மேலும் வணிகத்தின் இதர வகுப்பின் கீழ் வருவதனால் பயணக் காப்பீடு மற்றும் விமானக் கப்பல் சரக்குக் காப்பீடு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க எதிர் விளைவிற்கு வழிவகுத்தது,

SRCC & T பிரீமியம் மொத்த GWP-யில் 5.78% வளர்ச்சி விகிதம் ஆகும் இது -3.47% எதிர் விளைவினை காட்டுகிறது.

பொதுக் காப்புறுதித் துறையானது வருடத்தில் 42,517 மில்லியன் ரூபாவை நிகர உரிமைகோரல்களைச் செலுத்தியுள்ளது மற்றும் 26.88% வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. ஒட்டுமொத்த நிகர உரிமைகோரல் விகிதம் 49.16% ஆகக் குறைந்துள்ளது, இது கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைவான விகிதமாகும். மேலும், பொதுக் காப்பீட்டுத் துறையின் ஒவ்வொரு துணை வகுப்பினரும் 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிகர உரிமைகோரல்களில் சுருக்கங்களை வெளிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. கோவிட்-19 இன் 1வது மற்றும் 2வது அலைகளின் போது செயற்படுத்தப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாடுகள், தொற்றுநோய்க்குப் பிறகு பயண மற்றும் சுற்றுலாத் தொழில்களில் ஏற்பட்ட திடீர் சரிவு என்பன மோட்டார் உரிமைகோரல்களை நேரடியாகக் குறைத்தது.

### இலாபம்

காப்புறுதித் துறையானது வருடா வருடம் 29.26% இலாப வளர்ச்சியைப் பதிவுசெய்து, இ.ரூபா 41,767 மில்லியன் இலாபத்தைப் பதிவு செய்ததன் மூலம் குறிப்பிடத்தக்க நிதிச் செயற்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. வருடத்தின் ஒட்டுமொத்த லாபத்தில் பொது காப்பீட்டாளர்களின் பங்களிப்பு நீண்ட கால காப்பீட்டு நிறுவனங்களை விட அதிகமாக உள்ளது. நீண்ட கால காப்பீட்டு வணிகத்தின் லாபம் 2020 இல் 17.89% குறைந்தது மற்றும் இந்த குறைப்பு, முக்கிய நீண்ட கால காப்பீட்டாளர்களின் உபரி இடமாற்றங்கள் மற்றும் விரிவாக்கப்பட்ட உரிமைகோரல்களின் விளைவாகும்.

19 டிசம்பர் 2007 தேதியிட்ட கூடுதல் சாதாரண அரசாங்க வர்த்தமானி எண். 1528/20 இன் படி, 'தேசிய மறுகாப்பீட்டாளர்' என்ற முதன்மை நோக்கத்துடன் 2008 முதல் NITF மறுகாப்பீட்டின் அபாயத்தை ஏற்கத் தொடங்கியது.

2020 ஆம் ஆண்டில், NITF இன் மறுகாப்பீட்டு பிரீமியம் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22.48% இனால் குறைவடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மறுகாப்பீட்டு பிரீமியம் LKR 3,235 மில்லியனாக இருந்தது, இதில் LKR 275 மில்லியன் மறுகாப்பீட்டாளர்களுக்கு NITF ஆல் மறுகாப்பீட்டு பிரீமியமாக வழங்கப்பட்டது, இது ஆண்டுக்கு 38.75% குறைந்துள்ளது. NITF ஆனது LKR 1,567 மில்லியன் உரிமைக் கோரல்களைப் பெற்றுள்ளது மற்றும் ஆண்டுக்கு 55.98% குறிப்பிடத்தக்க குறைவை பதிவு செய்துள்ளது. கோவிட்-19 இன் 1வது மற்றும் 2வது அலைகளின் போது செயற்படுத்தப்பட்ட இயக்க கட்டுப்பாடுகள், மோட்டார், தீ மற்றும் இதர உரிமைகோரல்களை நேரடியாகக் குறைத்தது மற்றும் தொற்றுநோயைத் தொடர்ந்து பயணம் மற்றும் சுற்றுலாத் தொழில்களில் கூர்மையான சரிவு ஆகியவை ஏற்பட்டுள்ள இந்த குறிப்பிடத்தக்க சரிவுக்குப் பின்னால் உள்ள முக்கிய காரணிகள் ஆகும்.

2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட உரிமைகோரல்களில் கூர்மையான குறைவுடன், NITF இன் மறுகாப்பீட்டு வணிகமானது 2019 ஆம் ஆண்டில் முறையே LKR 770 மில்லியன் மற்றும் LKR 662 மில்லியன் எழுத்துறுதி இழப்பு மற்றும் வரிக்கு முந்தைய நிகர இழப்புடன் ஒப்பிடுகையில் முறையே LKR 990 மில்லியன் மற்றும் LKR 1,170 மில்லியன் எழுத்துறுதி லாபம் மற்றும் வரிக்கு முந்தைய லாபத்தைப் பதிவு செய்துள்ளது.

### முக்கிய ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள் நடந்து வருகின்றன

காப்பீடுதாரர்களின் சிறந்த பாதுகாப்பிற்காக இடர் அடிப்படையிலான மூலதன விதி, இடர் அடிப்படையிலான மேற்பார்வை கட்டமைப்பு மற்றும் பல சட்ட சீர்திருத்தங்கள் போன்றவற்றில் சீர்த்திருத்தங்களை ஆணையம் மேற்கொள்கிறது.

நிதித்துறையின் வளர்ச்சியை நோக்கிய அதன் செயற்திறனை மேம்படுத்துவதற்காக, நிதித்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், நிதித்துறையின் முக்கிய ஒழுங்குமுறை நிறுவனங்களில் ஒன்றாக ஆணையம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்தத் திட்டம் படிப்படியாக சீர்திருத்தங்களுடன் 2022 வரை தொடரும் வகையில் இந்தத் துறையில் திட்டமிடப்பட்டுள்ளன. ஆணையம் அதன் மூலதன போதுமான விதிகளை மறுபரிசீலனை செய்வதன் மூலம் அதன் ஒழுங்குமுறை ஆட்சியில் சாத்தியமான மாற்றங்களில் கவனம் செலுத்த விரும்புகிறது. காப்பீட்டு மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் காப்பீட்டு மையக் கோட்பாடுகளுக்கு ஏற்ப பரந்த அதிகாரங்களைக் கொண்ட புதிய காப்பீட்டு ஒழுங்குமுறைச் சட்டம், நுண் காப்புறுதி ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை மற்றும் தயாரிப்பு மேம்பாட்டு மதிப்பாய்வுக்கான மேம்படுத்தப்பட்ட விதிகள் ஆகியவை கருத்தில் கொள்ளப்படும் சில முக்கிய சீர்திருத்தங்கள் ஆகும்.

### காப்பீட்டு ஊடுருவலை அதிகரிக்கும் முன்னோக்கிய பாதை

பல காரணிகள் ஒரு நாட்டில் காப்பீட்டு ஊடுருவலின் அளவை பாதிக்கின்றன. செலவழிக்கக்கூடிய வருமான நிலை மற்றும் காப்பீட்டில் பொது மக்கள் வைக்கும் முக்கியத்துவத்தின் அளவு ஆகியவை ஒரு நாட்டின் காப்பீட்டு ஊடுருவல் அளவை கணிசமாக பாதிக்கலாம். காப்பீடு பற்றிய எதிர்மறையான கருத்து, பேரழிவு நிகழ்வுகளின் போது பொதுமக்களைப்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

பாதுகாப்பதற்காக அரசாங்கத்திடமிருந்து இலவச காப்பீடு ஆகியவை காப்பீட்டு ஊடுருவல் மட்டத்தின் வளர்ச்சி மற்றும் அதிகரிப்புக்கு தடையாக இருக்கும் சில காரணிகள்.

காப்புறுதி ஊடுருவலை அதிகரிப்பதற்கு IRCSL கவனம் செலுத்த வேண்டிய சில முக்கியமான பகுதிகள் உள்ளன. அதிக ஊடுருவல் மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு உகந்த ஒழுங்குமுறை சூழலை உறுதி செய்வது மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். வாடிக்கையாளர் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை ஆதரிப்பதற்காக சுற்றுச்சூழலில் நிகழும் மாற்றங்களுடன் ஒழுங்குமுறை சூழல் உருவாக வேண்டும்.
வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒழுங்குமுறை சூழல் வலுவாக இருக்க வேண்டும். இதில் தயாரிப்பு கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பது, புதிய விற்பனை மற்றும் விநியோக வழிகள், விற்பனை பணியாளர்களிடையே ஒப்பீட்டு அறிவு மற்றும் திறன்கள், பொறுப்புகள் மற்றும் செலவுகளைச் சந்திக்க போதுமான மூலதனம் மற்றும் காப்பீட்டுத் தயாரிப்புகளுக்கான தேவையை உருவாக்க உகந்த வரி விதிப்பு ஆகியவை அடங்கும்.

மற்றுமொரு முக்கியமான காரணி என்னவென்றால், தொழில்துறை பங்குதாரர்கள் வணிகத்தை நேர்மையுடனும், தொழில் முறையிலும் பொதுமக்களின் நம்பிக்கையையும் தைரியத்தையும் வளர்ப்பதை உறுதிசெய்வதாகும். தொழில்முறை விற்பனையை மேற்கொள்வது, காப்புறுதிதாரர்களுக்கு உரிமை கோரல் தீர்வுகளில் திறமையான விற்பனைக்குப் பிந்தைய பராமரிப்பு மற்றும் தொழில்துறையில் திறமையான தகராறு நிவர்த்தி செய்யும் பொறிமுறை ஆகியவை சில எடுத்துக்காட்டுகளாகும்.

காப்பீடு பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பது மற்றும் பொது மக்களிடையே அவர்கள் எதிர்கொள்ளும் அன்றாட ஆபத்துகளைச் சந்திக்க காப்பீடுகளை வாங்குவதற்கான போதுமான அறிவு ஆகியவை துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மிக முக்கியமான அம்சங்களாகும். பெரும்பாலான சிக்கல்கள் தவறான கருத்து மற்றும் தவறான புரிதலின் காரணமாக எழுகின்றன, எனவே அதிக விழிப்புணர்வு மற்றும் அறிவிற்காக அதிக நேரத்தையும் வளங்களையும் முதலீடு செய்ய வேண்டும். விழிப்புணர்வு உருவாக்கம் மற்றும் அறிவு மேம்பாடு ஆகியவை தொழிற்துறை மற்றும் கட்டுப்பாட்டாளரின் பொறுப்புகளாகும், மேலும் IRCSL-ல் பல விழிப்புணர்வு உருவாக்கம் மற்றும் அறிவு மேம்பாடு நிகழ்ச்சிகளை வெகுஜன அளவில் நடத்த திட்டமிட்டுள்ளோம். மேலும் மேம்பாட்டிற்கான ஒரு நடவடிக்கையாக, IRCSL ஆனது, காப்பீடு செய்யப்பட்ட பொதுமக்களுக்குத் தகராறுகளைத் திறம்படத் தீர்ப்பதற்காக, காப்பீட்டுக் குறைதீர்ப்பாளருடன் நேரடியான ஈடுபாட்டைக் கொண்டிருக்க விரும்புகிறது.

### பாராட்டுதலில்

IRCSL இன் நோக்கக் கூற்று மற்றும் பணிக் கூற்றினை நனவாக்குவதற்கு ஆதரவு அளித்த தலைவர் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சீர்திருத்தங்கள், தொழில் வளர்ச்சிக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் காப்பீட்டுத் துறை சங்கங்களுக்கு எனது பாராட்டுக்களையும் பதிவு செய்ய விரும்புகிறேன். எங்கள் பங்குதாரர்கள் அனைவரின் தொடர்ச்சியான ஆதரவு இல்லாமல் IRCSL இன் வெற்றியும் சாத்தியமில்லை.

ஆணைக்குழுவின் நோக்கங்களை அடைவதில் விலைமதிப்பற்ற ஆதரவை வழங்கிய சிரேஷ்ட நிர்வாகக் குழு மற்றும் பணியாளர்களுக்கும் சிறப்பு அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

Damayanthi Fernando

தமயந்தி பெர்னாண்டோ
பணிப்பாளர் நாயகம்



# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்கள்

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்




1. திரு. ராசிக் ஸரூக் - தலைவர்
2. திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க
3. திரு. சஞ்சீவ திசாநாயக்க
4. திருமதி. இவட் பெர்னாண்டோ
5. திரு. ஹரிஸ் சல்பிடிகோரள
6. திரு. ராஜா குணரத்ன
7. செல்வி. இந்திரா பதுகே

# ஆணைக்குழு அங்கத்தவர்களின் சுயவிபரங்கள்

**திரு. ராசிக் ஸரூக்**
தலைவர்
ஜனாதிபதி சட்டத்தரணி

திரு. ராசிக் ஸரூக் ஒரு சட்டத்தரணி, தூதுவர் மற்றும் பல்வேறு அரச கூட்டுத்தாபனங்களின் முன்னாள் தலைவர் என பல பதவிகளை வகித்துள்ளதுடன், நடைமுறையில் அவர் சிரேஸ்ட சட்டத்தரணியாவார்.

இவர் கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் தலைவராக இருந்தார், அத்துடன் அவரது பதவிக் காலத்தில், அதாவது 1978ஆம் ஆண்டில் இருந்து 1989ஆம் ஆண்டுவரை கூட்டுறவு மொத்த ஸ்தாபனம், இலாபகரமான மற்றும் சாத்தியமான அமைப்பாக மாற்றப்பட்டதுடன், பல சொத்துக்களை பன்முகப்படுத்தி கையகப்படுத்தியதுடன் ஆதனங்கள் வாங்கி விற்கும் துறையை வளர்த்து சத்தோச மோட்டர்ஸ், லங்கா மில்க் புட்ஸ் போன்ற பல நிறுவனங்களை நிறுவியது. அத்துடன் அவர் விவசாய அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் இலங்கை வங்கியின் தலைவராகவும் இருந்தார்.

அப்போதைய பெரடல் குடியரசு கோலோவஸ்கியாவின் தூதராகவும், அதன் பின்னர் ஹங்கேரியின் முதல் தூதுவராகவும் இராஜதந்திர சேவையில் பணியாற்றியதுடன், அதனைத் தொடர்ந்து சிங்கப்பூருக்கு உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார்.

இவர் மாத்தறை புனித சேவியஸ் கல்லூரி மற்றும் கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவன் ஆவார்.

**திரு. ஆர். எம். பி. ரத்நாயக்க**

திரு. ஆர்.எம்.பி. ரத்நாயக்க இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தர அலுவலராவதுடன், தற்போது பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளராகப் பணியாற்றுகின்றார்.

இவர் நோர்வேப் பல்கலைக்கழகத்தில் இருந்து விவசாயத்தில் முதுமானிப் பட்டத்தையும் பேராதெனியப் பல்கலைக்கழகத்தில் இருந்து விஞ்ஞானமானி விசேட பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

இவர் 1994 ஆம் ஆண்டு அரச சேவையில் இணைந்ததுடன் தேசிய திட்டமிடல் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களங்கள் உள்ளடங்கலாக பொது திறைசேரியில் பல்வேறுபட்ட பதவிகளில் கிட்டத்தட்ட 27 வருடங்களாகச் சேவையாற்றியுள்ளார். வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக, அபிவிருத்திப் பங்காளர்கள், முன்னணி முகவர்கள் மற்றும் மூலதனச் சந்தையுடன் இணைந்து அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டு நிதியைத் திரட்டுவதற்காகவும் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கும் மற்றும் வெளிநாட்டு நிதியிடலின் சரியான நேரப் பகிர்ந்தளிப்புக்கும் பொறுப்பேற்றார்.
இவர் தற்போது இலங்கை வங்கி, இலங்கை பிணையங்கள் மற்றும் நாணயப் பரிமாற்ற ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையில் திறைசேரியின் பிரதிநிதியாக பங்கேற்கின்றார்.

திரு. ரத்நாயக்க வேறுபட்ட பல துறைகளில்/விடயங்களில் பல்வேறுபட்ட கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

**திரு. சஞ்சீவ திசாநாயக்க**

திரு. சஞ்சீவ திசாநாயக்க ஹொங்கொங் பல்கலைக்கழகத்திலிருந்து மனித உரிமைகள் தொடர்பான முதுமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளார் இவர் 1997ஆம் ஆண்டு இலங்கை மீயுர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக அனுமதிக்கப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்டார். இவர் இலங்கை சட்டமா திணைக்களத்தில் பிரதி சொலிஸ்டர் ஜெனரலாக இணைக்கப்பட்டுள்ளதுடன் தற்போது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பணிகளை ஏற்பதற்காக பொதுச் சேவை ஆணைக்குழுவினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

திரு. சஞ்சீவ திசாநாயக்க சட்டமா திணைக்களத்தின் குற்ற மற்றும் சிவில் பிரிவு எனும் இரண்டிலும் அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் ஊழலுக்கு எதிரான பிஜி சுயாதீன ஆணைக்குழுவில் வழக்கறிஞராகவும் பணியாற்றியுள்ளார். இவர் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம், இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியம கண்காணிப்பு சபை மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் நாணயப்பரிமாற்ற ஆணைக்குழுவின் பதவிநிலை அங்கத்தவராகவும் இருக்கின்றார்.

**திருமதி. இவட் பெர்னாண்டோ**

திருமதி இவட் பெர்னாண்டோ தற்போது இலங்கை மத்திய வங்கியில் நிதியியல் முறைமை நிலைபேற்றுப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி ஆளுனராகப் பணியாற்றுகின்றார். இவர் மத்திய வங்கியின் வங்கிகளின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல், வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற முகாமைத்துவம் மற்றும் நாணய முகாமைத்துவம் போன்ற பிரிவுகளில் 30 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ளார். இந்தக் காலப்பகுதியில் இவர் நாணயப் பரிமாற்றக் கட்டுப்பாட்டாளராக பணியாளராக சேவையாற்றியதுடன், வங்கி மேற்பார்வை, நாணயம், வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் உதவி ஆளுனர் பதவிகளையும் வகித்துள்ளார்.

திருமதி. பெர்னான்டோ பல்வேறுபட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் பங்குபற்றியதன் ஊடாக வங்கி மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல், பொது வங்கியின் தொழிற்பாடுகள், சிறந்த ஆளுகை நடைமுறை, பலவீனமான வங்கிகளுக்கான தீர்வு, காசுத் தொழிற்பாடுகள், நாணய முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவ திறன்கள் போன்ற வேறுபட்ட விடயங்களில் தனது அறிவை மேம்படுத்தி இற்றைப்படுத்தியுள்ளார். பல்வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் வள நபராக இருப்பதுடன் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பணி சார்ந்த விடயங்கள் மீதான மேடைக் கலந்துரையாடல்களிலும் பங்குபற்றியுள்ளார்.

திருமதி. பெர்னான்டோ, இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் முறைமை நிலைபேற்றுக் குழு மற்றும் தேசிய கொடுப்பனவுக் கவுன்சில், இலங்கை வங்கியாளர் நிறுவனம் மற்றும் இலங்கை கடன் தகவல் பணியகம் என்பவற்றின் தலைவராகவும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் இருக்கின்றார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து நிதியியல் பொருளாதாரத்தில் முதுமானிப் பட்டத்தைக் கொண்டிருப்பதுடன் இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகமானிப் (விசேட) பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். .

**திரு. ஹரிஸ் சல்பிடிகோரல**

திரு. ஹரிஸ் சல்பிதிகோரள ஐக்கிய ராஜ்ஜிய முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினதும் ஐக்கிய அமெரிக்காவின் ஆயுள் முகாமைத்துவ நிறுவனத்தின் அங்கத்தவராவர். இவர் ஆயுள் காப்புறுதித்துறையில் 30 வருடத்திற்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன், இவர் புருணை, சிங்கப்பூர் மற்றும் இலங்கையில் காப்புறுதிக் கம்பனிகளுக்கு ஆலோசனையாளராகப் பணிபுரிந்துள்ளார்.

**திரு. ராஜா குணரத்ன**

திரு. ராஜா குணரத்ன ஒரு சட்டத்தரணியாவார். இவர் அவுஸ்திரேலியாக மொனாஷ் பல்கலைக்கழகத்தில் வர்த்தக சட்டம் தொடர்பான முதுமானியை பெற்றிருப்பதுடன், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளராகவும் பணிபுரிகின்றார். திரு குணரத்ன இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வித் திணைக்களத்தின் சிரேஸ்ட விரிவுரையாளராகவும் உள்ளார்.
இவர் அரச சேவையில் தேசிய மருத்துவ ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும்

# ஆணைக்குழு அங்கத்தவர்களின் சுயவிபரங்கள்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு என்பவற்றின் பணிப்பாளர் சபைகளில் அங்கத்தவராக உள்ளார். திரு.குணரத்ன சட்டத்தரணிகள் சங்கத்தில் ஆயுட்கால அங்கத்தவராக இருப்பதுடன், பங்களாதேஷ் உயிரியல் மருத்துவ சங்கம் மற்றும் இலங்கை மெடிகோ சட்ட சங்கம் என்வற்றிலும் அங்கத்தவராக இருக்கின்றார். அத்துடன், இவர் முன்னாள் தேசிய வீடமைப்பு ஆணையாளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் மற்றும் தேசிய அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர் போன்ற பதவிகளிலும் இருந்துள்ளார். இவர் பல்கலைக்கழக முறைமையில், சட்டக் கல்வித் திணைக்களத்தின் தலைவர் மற்றும் மனிதத்தன்மை மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் பதில் கல்வி நிலைய துறைத் தலைவர் என பல பதவிகளை வகித்துள்ளார்.

### செல்வி. இந்திரா பதுகே

செல்வி. இந்திரா பதுகே ஒரு சட்டத்தரணியாவதுடன் சட்டக் கல்வியில் முதுமானியையும் பெற்றுள்ளார். இவர் அரச மற்றும் தனியார் துறைகளில் 26 வருடத்திற்கு மேற்பட்ட சேவைக் காலத்ததைக் கொண்டுள்ளார். இவர் பணியாற்றிய காலத்தில் வீதிப் போக்குவரத்து அமைச்சின் சட்ட ஆலோசகர், தேசிய மீன்வள மற்றும் கடல்சார் பொறியியல் நிறுவனத்தின் பிரதான சட்ட ஆலோசகர் போன்ற உயர் பதவிகளை வகித்துள்ளார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு




1. திருமதி. தமயந்தி பெர்னான்டோ (பணிப்பாளர் நாயகம்)
2. திருமதி. சமரி ஏக்கநாயக்க (பணிப்பாளர் மேற்பார்வை)
3. திரு. சதீஸ் குமார் (பணிப்பாளர், நிதி மற்றும் நிர்வாகம்)
4. திருமதி. பிரபாஷினி சமரகோன் (பணிப்பாளர், புலனாய்வு)
5. திரு. ராஜன் நிருபசிங்கம் (பணிப்பாளர் சட்டம் மற்றும் அமுல்படுத்தல்)
6. திருமதி. தீபிகா நவரத்ன (பணிப்பாளர் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி உறவுகள்)
7. திரு. பிம்சரா விஜேசிங்க (உதவிப் பணிப்பாளர் சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி உறவுகள்)
8. திருமதி. சாரிக வத்துஹேவா (உதவிப் பணிப்பாளர் மேற்பார்வை)
9. திரு. சன்ன கவிடியாகல (உதவிப் பணிப்பாளர், நிதி மற்றும் நிர்வாகம்)
10. திருமதி. சமரி ஹீனடிகல (உதவிப் பணிப்பாளர் புலனாய்வு)
11. திரு. பிரியந்த பெர்னான்டோ (உதவிப் பணிப்பாளர் தகவல் தொழில்நுட்பம்)
12. திரு. சௌமியா பண்டார (உதவி காப்புறுதிக் கணிப்பீட்டாளர்)

# அலுவலர் குழாம்




1. திரு. அனுஷ்கா பண்டார
2. செல்வி. சதுனி தல்பாவில
3. திருமதி. லசந்தி தொடஹேவா
4. திருமதி. வீனா செனவிரத்ன
5. திருமதி. பவித்ரா புஞ்சிஹேவா
6. திருமதி. சந்திம கம்புறுகமுவ
7. திரு. லக்மின பத்திராஜா
8. திரு. சமிந்த லால் குமார
9. திருமதி. சுஜீவா ரனசிங்க
10. திருமதி. டி.டபில்யூ.எஸ்.எஸ். சுபுலி
11. திரு. நயனா ரவீந்ர
12. திருமதி. பிரியங்கி த சில்வா
13. திருமதி. கவுசாலி தயாரத்ன
14. திரு. சரித விக்ரமசிங்க
15. திரு. கோகில சிறிவர்தன
16. திருமதி. மல்ஹாரி விகரமசிங்க
17. திரு. சமன் சனாதீர




18. திருமதி. நிலங்கா வலிசுந்தர
19. திரு. கலன புஷ்பகுமார
20. திருமதி. சாஷினி பிரேமலால்
21. திருமதி. நடாஷா கீர்த்திசிங்க
22. திருமதி. திலினி வகிஸ்டா
23. திருமதி. துஷாரி விஜேகுணவர்தன
24. திருமதி. பிரசாதி நாதுன்ன
25. திருமதி. டெஷிகா ரத்நாயக்க
26. திருமதி. உஷானி ரனதுங்க
27. திரு. ரொஷான் த கொஸ்தா
28. செல்வி. சுபோதா வீரசூரிய
29. திருமதி. உபேந்ரா செனவிரத்ன
30. திரு. எதிராஜ் ஸ்ரீகாந்தன்
31. திரு. நளின் தலகால
32. திருமதி. சந்தமாலி கருணாதிஸ்ஸ
33. திருமதி. ரூவினி லியனகே
34. திரு. பானுக கமகே
35. திரு. சனத் உதயாங்க



# மீளாய்வுகள்


பொது மீளாய்வு 24

புள்ளிவிபர மீளாய்வு 28

தொழிற்பாடுகளின் மீளாய்வு 68

# பொது மீளாய்வு

### சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மறுசீரமைப்புகளின் நிர்வாகம்

**சட்டவாக்கம்**

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (இதற்குப் பின்னர் ஆணைக்குழு எனக் குறிப்பிடப்படும்) இலக்கு மற்றும் பொறுப்பு யாதெனில், காப்புறுதிப் பூட்கையாளர்கள் மற்றும் சாத்தியமான காப்புறுதிப் பூட்கையாளர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை நேர்மைத்திறனுடன் தொழிற்துறை ரீதியாகவும் விவேகமாகவும் நடாத்துதலாகும்.

2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டம் (இதன் பின்னர் “சட்டம்” எனக் குறிப்பிடப்படும்) காப்புறுதிக் கம்பனிகள், காப்புறுதி தரகுக் கம்பனிகள், காப்புறுதி முகவர்கள் மற்றும் நட்ட சீராக்கலாளர்கள் ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்குரிய இயைபான சட்டக் கட்டமைப்பைத் தருகின்றது.

2007 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க மற்றும் 2017ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் (திருத்தம்)சட்டம் என்பவற்றினால் காப்புறுதிக் கைத்தொழிலின் ஒழுங்குமுறைப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளது.

**துணைச் சட்டவாக்கம்**

இவ்வாண்டில் இந்தச் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கம் கீழே ஒழுங்குமுறைப்படுத்தல் சீரமைப்புகளின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன.

**ஒழுங்குமுறைப்படுத்தல் மறுசீரமைப்புகள்**

**சட்டத்தின் 96அ பிரிவின் கீழ் விநியோகிக்கப்பட்ட பணிப்புரை**

1. **பணிப்புரை #2 இற்கான திருத்தம் – கொள்கை ஆவணத்தின் விநியோகம்**

   இலங்கை காப்புறுதி சங்கத்தின் வேண்டுகோளைக் கருத்தில் கொண்டு, கொள்கை ஆவணங்களை வேறுபட்ட முறைகளில் விநியோகிப்பதற்கும் அதனை பணிப்புரை #2இன் (A) இன் கீழ் செல்லுபடியான சான்றுகளையும் அங்கீகரித்தது. இந்தப் பணிப்புரை 13 மார்ச் 2020ஆம் திகதி தொடக்கம் பயனுறுதி பெற்றது.

2. **பணிப்புரை #19 இற்கான திருத்தம் – குறைந்தபட்ச தேறிய மூலதனத் தேவைப் பாட்டுடன் இணங்குதல்.**

   சில தரகுக் கம்பனிகளின் தொடர்ச்சியாக ரூ.2.5 மில்லியன் குறைந்தபட்ச தேவைப்பாட்டுடன் இணங்காமையை ஆணைக்குழு கவனத்தில் கொண்டு கீழ்வரும் ஏற்பாடுகளை பணிப்புரை # 19இல் உள்ளடக்குவதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது.

   கம்பனியானது ஆறு (6) மாத காலங்களுக்கு இடைநிறுத்தப்பட்டு, அந்த குறிப்பிட்ட 6 மாத காலத்தினுள் குறைந்தபட்ச தேறிய மூலதனத் தேவைப்பாட்டுடன் இணங்காவிட்டால், அந்த தரகுக் கம்பனிக்கு மேலதிக எந்தவொரு அறிவித்தலையும் வழங்காது, அந்த குறிப்பிட்ட தரகுக் கம்பனிக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்தல்.

   குறைந்தபட்ட தேறிய மூலதனத் தேவைப்பாட்டுடன் உடனடுத்துவரும் 4 காலாண்டுகளுக்கு இணங்காமை காரணமாக இரண்டு தடவைகளுக்கு மேல் தரகுக் கம்பனி இடைநிறுத்தப்பட்டு, அந்த குறிப்பிட்ட இணங்காமை தொடர்ந்தால், அந்த தரகுக் கம்பனிக்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு வழங்கிய அனுமதிப்பத்திரத்தை அந்த தரகுக் கம்பனிக்கு மேலதிக அறிவித்தல் எதுவுமின்றி இரத்துசெய்தல்.

   இந்தப் பணிப்புரை 3 ஜுன் 2020ஆம் திகதி தொடக்கம் பயனுறுதி பெற்றது.

3. **பணிப்புரை #17இற்கான திருத்தம் - காப்புறுதிக் கம்பனிகளுக்கான கூட்டிணைந்த ஆளுகை**

   காப்புறுதிக் கம்பனிகளின் விவகாரங்களில் அதிகூடிய வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு 17 ஆம் இலக்க பணிப்புரையை ஆணைக்குழு விநியோகித்தது. இந்தப் பணிப்புரை 8 ஜுன் 2020ஆம் திகதி தொடக்கம் பயனுறுதி பெற்றது.

4. **பணிப்புரை #21இற்கான திருத்தம் - தரகர்களை நோக்கி தற்போதுள்ள குறியீட்டை வலுக்கட்டாயமாக மாற்றுவதன் ஊடாக வங்கிகள், நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகளின் குறித்த நியாயமற்ற நடைமுறைகளை மேற்கொள்வதாகக் கருதல்.**

   ஆணைக்குழு வங்கி, நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகளின் நியாயமற்ற நடைமுறைகளைக் கருத்தில் கொண்டு, காப்புறுதிக் கம்பனிகள், விற்பனையை ஆரம்பித்த (முதலாவது முகவர்) முகவரின் எழுத்து மூலமான ஒப்புதலின்றி, காப்புறுதிக் கம்பனிகள் தற்போதுள்ள முகவரின் குறியீடுகளை மாற்றுதல் கூடாதெனும் பணிப்புரையை 04 செப்டெம்பர் 2020ஆம் திகதி விநியோகித்தது. இந்தப் பணிப்புரை 2021ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட விற்பனையை ஆரம்பித்த காப்புறுதி முகவர் அல்லது காப்புறுதி தரகரின் எழுத்து மூலமான சம்மதமின்றி தற்போதுள்ள குறியீடுகளை மாற்றுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும் என கம்பனிகள் கோரப்பட்டு வழங்கப்பட்ட பணிப்புரை 02ஐ பிரதியீடு செய்தது. எனினும் காப்புறுதிப்பூட்கையாளர் காப்புறுதி முகவர் அல்லது காப்புறுதித் தரகரை மாற்ற விரும்பின் அந்த ஒப்புதல் அவசியமில்லை. இந்தப் பணிப்புரை 23 மார்ச் 2020ஆம் திகதி தொடக்கம் பயனுறுதி பெற்றது.

5. **பணிப்புரை #22இற்கான திருத்தம் - காப்புறுதி முகவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்**

   அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளுக்கும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளுக்கும் காப்புறுதி முகவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்தால் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக ஆணைக்குழு பணிப்புரையை விநியோகித்தது. இந்தப் பணிப்புரை 05 ஒக்டோபர் 2020ஆம் திகதி தொடக்கம் பயனுறுதி பெற்றது.

**இவ்வருடத்தில் விநியோகிக்கப்பட்ட சுற்றுநிருபங்கள்**

சுற்றுநிருபம் # 42 – நட்ட சீராக்கலாளர் பதிவுசெய்தல் விதிகள் 05 ஜுலை 2017 ஆம் திகதி 2026/27ஆம் இலக்க வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்டது

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவில் பதிவுகளை மேற்கொள்ளாது சில குறிப்பிட்ட நட்ட சீராக்கலாளர்கள் செயற்படுவது அவதானிக்கப்பட்டதனால், காப்புறுதியாளர்களும் அனுமதிப்பத்திரம் பெறாதவர்களின் சேவையைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கோரி இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தை ஆணைக்குழு விநியோகித்தது. இந்த சுற்று நிருபம் 25 பெப்பரவரி 2020ஆம் திகதியில் இருந்து பயனுறுதி பெறும் வகையில் விநியோகிக்கப்பட்டது.

**சந்தைக் கட்டமைப்பு காப்புறுதியாளர்கள்**

சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கு அமையவும், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்பவும், சட்டத்தின் கீழ், அத்தகைய வியாபாரத்தின் பதிவு அல்லது பதிவு செய்யக் கருதும் எந்த ஒரு நபரும் அத்தகைய பதிவினை மேற்கொள்ளாதிருப்பாராயின் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ள முடியாது.

சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கு அமைவாக, இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு ஆர்வமுடைய ஒருவர், 2007 இன் 7ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி ஒன்றில் ஒன்றிணைந்திருக்க வேண்டும் என்பதுடன், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமத் தேவைகள் அனைத்தையும் பூரணப்படுத்தியதன் பின்னர் காப்புறுதி தொழிலின் ஒழுங்கமைப்பு சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

ஆண்டின் இறுதியில் அன்றுள்ளவாறு சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர்களாக 27 கம்பனிகள் பதிவு செய்துள்ளன. ஏஐஜி காப்புறுதி லிமிடட் நிறுவனம் எந்தவொரு புதிய காப்புறுதி வியாபாரத்தையும் ஏற்றுக்கொள்ளமாட்டாது மற்றும் 2007 ஆம் ஆண்டு 07ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக திரவப்படுத்தல் ஒருவரை நியமித்து இலங்கையில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

எம்பிஎஸ்எல் காப்புறுதிக் கம்பனி 01 ஜுன் 2020 இல் இருந்து ஆயுட் காப்புறுதி வியாபாரத்தின் கீழ் புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

வியாபாரத்தை கொண்டு செல்வதற்கு பதிவு செய்துள்ள காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ளும் கம்பனிகளின் வகைகளை

வரைபு 01 காண்பிக்கின்றது. தொழிற்படும் 27 காப்புறுதிக் கம்பனிகளில், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தையும், பொதுவான காப்புறுதி வியாபாரத்தையும் மேற்கொள்ளும், கலவை காப்புறுதி வழங்குனர்களாக பதிவு செய்யப்பட்ட 2 கம்பனிகளும், நீண்ட காலக் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 13 கம்பனிகளும், பொதுவான காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 12 கம்பனிகளும் உள்ளடங்கும்.

**விளக்கப்படம் 1**
**காப்புறுதியாளர்களினால் கொண்டு நடாத்தப்படும் காப்புறுதி வியாபாரத்தின் வகைகள்**




## காப்புறுதித் தரகர்கள்

2007 இன் 7ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் உட்சேர்க்கப்பட்டு காப்புறுதி தரகு வியாபாரத்தை மேற்கொள்வதற்காக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி காப்புறுதித் தரகர் எனப்படும். காப்புறுதி வழங்குனர், காப்புறுதி வைப்பாளர் அல்லது காப்புறுதி ஒன்றை பிரேரிப்பவர்கள் அல்லது மீள் காப்புறுதி செய்பவர்களுக்கு அல்லது ஒரு காப்புறுதி கம்பனியுடன் அவர்கள் சார்பாக காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதிக் கம்பனியிடமிருந்து தரகுப் பணத்தை அல்லது தரகு எனும் கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் காப்புறுதி வியாபாரத்திற்கு இடையீட்டாளர்களாக காப்புறுதி தரகர்கள் செயற்படுகின்றனர்.

ஆண்டிறுதியின் போது 68 கம்பனிகள் காப்புறுதி தரகர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன. சொல்லப்பட்ட கம்பனிகளில், 48 கம்பனிகள் நீண்ட காலம் மற்றும் பொதுவான காப்புறுதி தரகு வியாபாரம் இரண்டிலும் பதிவு செய்திருந்த அதே நேரம் 20 கம்பனிகள் பொதுக் காப்புறுதி தரகு வியாபாரத்தில் மட்டும் பதிவு செய்திருந்தன.

விளக்கப்படம் 2 இந்த ஆண்டில் காப்புறுதி தரகர்கள் மேற்கொண்ட காப்புறுதி தரகு வியாபாரத்தின் வகைப்படுத்தல்களைக் காண்பிக்கின்றது.

**விளக்கப்படம் 2**
**காப்புறுதி தரகர்களினால் கொண்டு நடாத்தப்படும் காப்புறுதி வியாபாரத்தின் வகைகள்**




## காப்புறுதி முகவர்கள்

சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி தரகர் ஒருவருடன், காப்புறுதி முகவராக பதிவு செய்து கொள்ளும் தனியாளர்கள், அத்தகைய காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி தரகர்களுடன் தரகை நோக்கமாகக் கொண்டு காப்புறுதி வியாபாரத்தைப் பதிவு செய்வதவர்களாவர். பதிவுசெய்வதற்கான தகைமைகள் சபையினால் நிர்ணயிக்கப்படும்.

சட்டத்தின் 34 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி முகவர்கள் முக்கிய விநியோக ஊடகமாக இருப்பதுடன், இவர்களூடாக காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதி வியாபாரத்தை தேடிப் பெற்றுக் கொள்ளுகின்றனர்.

காப்புறுதி வழங்குனர்களினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக இந்த ஆண்டின் போது காப்புறுதி முகவர்களாகச் சேர்க்கப்பட்ட தனிநபர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 15,913 ஆகவிருந்ததுடன், இது கடந்த ஆண்டின் எண்ணிக்கையுடன் (16,101) ஒப்பிடும் போது 1.17% வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

இந்த ஆண்டின் இறுதியில், காப்புறுதி வழங்குனர்களை பிரதிநிதித்துவப்படுத்திய தனிப்பட்ட காப்புறுதி முகவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 43,342 ஆகும். இது கடந்த ஆண்டின் (45,567) எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 4.88% வீத வீழ்ச்சியாகும்.

விளக்கப்படம் 03 காப்புறுதி கம்பனிகளுடன் பதிவு செய்து கொண்டுள்ள தனிப்பட்ட காப்புறுதி முகவர்களைக் காட்டுகின்றது.

**விளக்கப்படம் 3**
**31.12.2020ஆம் திகதியன்று மொத்த முகவர்கள்**
இந்த வருடம் காப்புறுதி முகவர் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 509 ஆகும்.




## நட்ட சீராக்கலாளர்கள்

இவ்வருட இறுதியில் 23 தனிப்பட்ட நட்ட சீராக்கலாளர்கள் செயற்பட்டார்கள்.

2017 ஜுலை 5ஆம் திகதியிடப்பட்ட 2026/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் நட்ட சீராக்கலாளர்களுக்கான பதிவு விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவில் பதிவு செய்யாமல் நட்ட சீராக்கலாளராக (பிரிவு 114(1) இல் வரையறுக்கப்பட்டவாறு) எவரேனும் நபர் செயற்படுதல் அல்லது வைத்திருத்தல் தடைசெய்யப்பட்டு 2011ஆம் ஆண்டு 3ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் மூலம் 2011ஆம் ஆண்டு சட்டம் திருத்தப்பட்டது. சட்டத்தின் 89அ(2)ஆம் பிரிவுக்கு அமைவாக பதிவு செய்வதற்கான தேவைப்பாடுகளில் இருந்து வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகள் சில உள்ளன.

சட்டத்தின் 89பி பிரிவின் கீழ் நட்ட சீராக்கலாளராக பதிவு செய்வதற்கு அவசியமான குறிப்பிடப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவங்களை குறிப்பிட்ட விண்ணப்பங்களைக் கோருவதற்கு ஆணைக்குழு விதிகளை உருவாக்க முடியும். சட்டத்தின் 89 சீ (1)இன் கீழ் ஆணைக்குழு பதிவுசெய்வதற்கு அவசியமான விண்ணப்பங்களைக் கோருவதற்கு அவசியமான ஆவணங்கள், தகவல்கள் மற்றும் கட்டணங்களைக் குறிப்பிட்டு விதிகளை உருவாக்க முடியும்.

அதற்கமைவாக, ஆணைக்குழு நட்ட சீராக்கலாளராக பதிவு செய்வதற்கு அவசியமான தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் கோரி மேற்குறிப்பிட்ட விதிகளை உருவாக்கும்.

## கம்பனியின் அந்தஸ்தும் மூலதன மாற்றங்களும்

31 டிசம்பர் 2020 அன்று பின்வரும் காப்புறுதி வர்த்தகத்தில் ஈடுபடும் காப்புறுதி வழங்குனர்களில் 08 கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டன. அவை யூனியன் அசூரன்ஸ் பிஎல்சி, சொப்ட்லொஜிக் லைப் இன்சூரான்ஸ் பிஎல்சி, எச்என்பி அஸ்யூரன்ஸ் பிஎல்சி, அமானா டக்பாபுல் பிஎல்சீ, அமானா டக்பாபுல் லைப் பிஎல்சீ, ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சீ ஆர்பிக்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி மற்றும் பீப்பள்ஸ் இன்சூரனஸ் பிஎல்சீ, என்பனவாகும்.

பட்டியலிடப்பட்டதும், பட்டியலிடப்படாததுமான காப்புறுதியாளர்களின் சதவீதத்தை விளக்கப்படம் 4 காண்பிக்கின்றது.

**விளக்கப்படம் 4**
**பட்டியலிடப்பட்டதும், பட்டியலிடப்படாததுமான காப்புறுதியாளர்களின் நிலவரம்**



1987 இன் 36 ஆம் இலக்க இலங்கையின் பிணையங்களும் பரிவர்த்தனையும் ஆணையகத்தின் கீழ், உரிமம் பெற்ற பங்குப் பரிவர்த்தனையில் தற்போதுள்ள காப்புறுதியாளர்கள் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும் எனும் தேவைப்பாட்டை 2011ஆம் ஆண்டு 3ஆம் இலக்கச் திருத்தச் சட்டம் கொண்டுள்ளது. பெப்ரவரி 2015 அன்று அல்லது அதற்கு முன்னர், கலவைக் காப்புறுதி கம்பனிகள் அதன் வியாபாரத்தை இரண்டு வெவ்வேறு கம்பனிகளாக வேறாக்கி பெப்பரவரி 2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பட்டியலிடுதல் வேண்டும்.

2011ஆம் ஆண்டு 3ஆம் இலக்கச் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்யும் புதிய கம்பனி ஒன்றிற்கு சபையின் உரிமம் வழங்கப்பட்ட மூன்று ஆண்டு காலத்திற்குள், 1987 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்களும், பரிவர்த்தனைகளும் ஆணையத்தின் கீழ் உரிமம் பெற்ற பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட வேண்டிய தேவையுள்ளது.

2011 ஜுன் மாதத்திற்கு முன்னால் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்யப்பட்ட கம்பனி ஒன்றிற்கு, 2015 பெப்ரவரி அன்று அல்லது அதற்கு முன்னர் காப்புறுதி வியாபாரத்தின் ஒவ்வொரு வகைப்படுத்தலுக்கும் அதன் பங்கு மூலதனத்தை மிகக் குறைந்தது ரூபா ஐந்நூறு மில்லியனை அதிகரிக்குமாறு கூற வேண்டிய தேவை ஆணைக்குழுவிற்கு உள்ளது.

2011 ஜுன் மாதத்தை தொடர்ந்து பதிவு செய்து கொண்டுள்ள காப்புறுதிக் கம்பனிகள், ரூபா 500 மில்லியனுக்கு குறையாத பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ளனர்.

### காப்புறுதியாளர்களிடமிருந்து ஒரு செஸ் தீர்வை

சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கு செஸ் தீர்வை ஒன்றை ஏற்படுத்துமாறு கட்டளை ஒன்று கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்டது. 09 ஜுலை 2002ஆம் திகதி உடைய 1244/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி, நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 0.2% வீதமும் மற்றும் பொதுக் காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 0.4%மும் காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2003 ஜனவரியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, காப்புறுதியாளர்கள் வழங்குனர்களிடமிருந்து செஸ் சேகரிப்பு ஆரம்பமாகியதுடன், 2020 ஆம் ஆண்டிற்கான செஸ் சேகரிப்பு தொகை ரூபா 506 மில்லியன் ஆகும்.

### காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம்

சட்டத்தின் 103 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட செஸ் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் வைப்பு செய்யப்படுகின்றது.

இந்த நிதி காப்புறுதிப்பூட்கையாளர்களின் பொதுப் பாதுகாப்புக்கும் மற்றும் ஏதேனும் விசேட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம். இது காப்புறுதிப் பூட்கையாளர்களுக்கும் உத்தேச பூட்கையாளர்களுக்கும் நன்மையளிப்பதற்காக இருக்கின்றது.

(அ) பொதுமக்கள் மத்தியில் காப்புறுதி தொழில் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதில் ஏற்படக்கூடிய செலவினம் மற்றும் காப்புறுதித் தொழிலை அபிவிருத்தி செய்வதில் ஏற்படக்கூடிய ஏனைய செலவினங்களைத் தீர்த்தல்.

(ஆ) ஆணைக்குழுவின் அதிகாரங்கள், நடவடிக்கைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை பிரயோகிப்பது, கடமையாற்றுவது மற்றும் செயற்படுத்துவதினால் ஏற்படக்கூடிய செலவினத்தைத் தீர்த்தல்.

காப்புறுதி பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் வரவில் இருக்கும் தொகை அரசாங்க பிணையங்களிலும் அரசாங்க வங்கிகளின் நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்படும்.

2020 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு நிதியத்திற்கு திரண்ட தொகை ரூபா 7,469 மில்லியனாகும். இது முன்னைய ஆண்டைவிட (ரூபா 6,253 மில்லியன்) 19.45% அதிகரிப்பாகும்.

**விளக்கப்படம் 5**

**செஸ் மற்றும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம்**




### காப்புறுதித் தீர்வை

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் எந்தவொரு வகுப்புத் தொடர்பிலும் தற்போது எவ்வித தீர்வைகளும் இல்லை. மோட்டார் காப்புறுதி, தீ அபாயக் காப்புறுதி, தொழிலாளர் நட்ட ஈட்டுக் காப்புறுதி என்பவற்றிற்கு இருந்த தீர்வைகள் முறையே 1 ஜனவரி 2002, 2005, 2007 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு நீக்கப்பட்டன.

### சட்டத்தின் பிரயோகத்திற்கான விதி விலக்குகள்

சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவிற்கு அமைவாக, 1999 இன் 20 ஆம் இலக்க விவசாயம் மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட விவசாய மற்றும் கமத்தொழில் சபை, 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் 1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை சட்டத்தின் கீழ் சமூக பாதுகாப்பு சபை என்பவற்றுக்குச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுவதில்லை.

### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்(NITF)

2006 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்தினால் (NITF சட்டம்) தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபை தாபிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டு 3ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் ஆணைக்குழுவின் நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்திற்கு அமைவாக, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றிற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் பேணப்பட்டு வந்த நிதி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டது. காப்புறுதியாளர்களினால் விநியோகிக்கப்படும் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் காப்புறுதி இடர்களுக்கு எதிராக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சார்பான காப்புறுதி காப்புகளை வழங்கும் காப்புறுதியாளர்கள் அவற்றின் மீது சேகரிக்கும் எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் வைப்புச் செய்ய வேண்டும்.

2007 இன் 27 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட சட்டத்திற்கு அமைவாக, ஒவ்வொரு மீள்காப்புறுதி செய்யும் ஒவ்வொரு காப்புறுதியாளரும் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளவாறு 50% வீதத்திற்கும் மேற்படாது பொறுப்புத் தொகையை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் மீள் காப்புறுதி செய்ய வேண்டும். 31 டிசம்பர் 2012 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1791/ 4 ஐக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் படி, ஒவ்வொரு காப்புறுதியாளரும் நீண்டகால மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் தவிர்த்து ஒவ்வொரு பொது மீள்காப்புறுதிக் கொள்கையில் இருந்து எழும் மொத்தப் பொறுப்பில் 30c வீதத்தைத் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் மீள்காப்புறுதி செய்வதற்கு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதற்கு முன்னர் இது 20% சதவீதமாகும்.

## ஏனைய தொடர்புடைய விடயங்கள்

### வீதி பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில் (NCRS)

வீதி பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில் போக்குவரத்து அமைச்சின் நோக்கெல்லையின் கீழ், வாகனப் போக்குவரத்து சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. வாகன காப்புறுதியை வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதியாளரும் வீதிப்பாதுகாப்பு நிதியத்திற்காக மூன்றாந் தரப்பு காப்புறுதிக் கட்டணங்களின் 1% வீதத்தைப் பங்களிப்பு செய்ய வேண்டும். வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சிலின் சபையில் காப்புறுதி சபை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

இந்தப் பங்களிப்பு மோட்டார் வாகன விபத்துகளின் போது விபத்தை ஏற்படுத்திவிட்டு ஓடும் சந்தர்ப்பங்களில் நட்டஈட்டை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும்.

### நிதியியல் முறைமை மேற்பார்வைக் கவுன்சில் (FSOC)

இலங்கை மத்திய வங்கியினால் நிதியியல் முறைமை மேற்பார்வைக் கவுன்சில் நிறுவப்பட்டதுடன், இதில் நிதியியல் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல்களை மேற்கொள்ளும் சிரேஸ்ட பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். இந்த உயர் மட்டக் குழு, நிதிச் சந்தையின் சீரான அபிவிருத்திக்குப் பொருத்தமான கொள்கை பணிப்புரைகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் முழு நிதி முறைமையினதும் தேவைக்கு அமைவாக அனைத்து நிதியியல் ஒழுங்கமைப்பு முகவர்களை ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதியியல் முறைமை மேற்பார்வைக் கவுன்சிலில் ஆணைக்குழுவின் தலைவரும் பணிப்பாளரும் பிரதிநிதித்துவம் வகிப்பர்.

### இலங்கை காப்புறுதிச் சங்கம் (IASL)

இலங்கை காப்புறுதி சங்கம் (IASL) 1989 இல் நிறுவப்பட்டது. சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதியாளர்கள் அனைவரும் சபையில் அங்கத்துவம் பெறுவதற்குத் தகுதி பெறுவார்கள்.

இலங்கை காப்புறுதி கம்பனிகள் அனைத்தினதும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளைக் கொண்டுள்ள இலங்கை காப்புறுதி சங்கத்தின் நிறைவேற்றுக் குழு, சங்கத்தின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவிருக்கும். அத்துடன் பின்வரும் குழுக்கள் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் நிறைவேற்றுக் குழுவிற்கு தமது பரிந்துரைகளை செய்வதிலும் உதவும். :

- ஆயுள் காப்புறுதி மன்றம்
- பொதுக் காப்புறுதி மன்றம்
- நிதி தொழில்நுட்ப உப-குழு
- சட்ட ஆலோசனை மன்றம்
- மனிதவள உப-குழு
- தகவல் தொழில்நுட்ப உப-குழு
- சந்தைப்படுத்தலும் விற்பனையும் மன்றம்
- காப்புறுதிக் கணிப்பீட்டு உப குழு

### இலங்கை காப்புறுதித் தரகர்கள் சங்கம் (SLIBA)

ஆணைக்குழுவில் பதிவுசெய்த காப்புறுதி தரகர்கள் இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவர். இலங்கை காப்புறுதி தரகர் சங்கம் காப்புறுதி தரகர்களின் நன்மைக்காக உருவாக்கப்பட்டது.

### இலங்கை காப்புறுதி நிறுவனம் (SLII)

1982 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை காப்புறுதி நிறுவனமானது இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பாக இருப்பதோடு காப்புறுதி வியாபாரத்தில் உள்ளவர்களின் திறமைகளையும் அறிவையும் விருத்தி செய்வது அதன் நோக்கமாகவும் உள்ளது. இலங்கை காப்புறுதி நிறுவனத்திற்கான நிதிக் காப்புறுதி வழங்குனர்களின் ஆண்டு சந்தா மற்றும் அதன் உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகளில் இருந்து கிடைக்கிறது.

இலங்கை காப்புறுதி நிறுவனம் இலண்டன் பட்டயக் காப்புறுதி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இலண்டனிலுள்ள பட்டயக் காப்புறுதி நிறுவனம், இந்திய காப்புறுதி நிறுவனம், இந்தியாவின் காப்புறுதிக் கணிப்பீட்டாளர் சங்கம் போன்ற தொழிச்சார் அமைப்புகளுக்கான பரீட்சைகளையும் நிருவகித்து வருகின்றது. நிறுவனமானது காப்புறுதி கைத்தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நபர்களுக்காக காப்புறுதியில், குறுங்கால டிப்ளோமா பாடநெறிகளையும் நடாத்தி வருகின்றது.

ஆணைக்குழுவானது காப்புறுதி முகவர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகளை நடாத்துவதற்கான பொறுப்பையும் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. நிறுவனமானது காப்புறுதி வியாபாரத்தின் இரு பகுதிகள் தொடர்பிலும் ஆட்சேர்ப்பு பரீட்சைகளை தொடர்ந்தும் நடாத்தி வருகின்றது.

### காப்புறுதி ஒம்புட்ஸ்மன்

இலங்கை காப்புறுதி சங்கம் பெப்பரவரி 2019 ஆம் ஆண்டு டாக்டர் ரஞ்சித் ரனராஜாவை காப்புறுதி ஒம்புட்ஸ்மனாக நியமித்ததுள்ளது. இலங்கை காப்புறுதிச் சங்கம் மற்றும் ஒம்புட்ஸ்மன் என்பவற்றுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக, காப்புறுதி வைப்பாளர்களினால் காப்புறுதி ஒம்புட்ஸ்மனுக்கு கொண்டுவரப்படும் முரண்பாடுகளை இலங்கை காப்புறுதிச் சங்கத்துடன் இணைந்துள்ள காப்புறுதிக் கம்பனிகள் தீர்த்துக்கொள்கின்றன.

### காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கம் (IAIS)

காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் ஒரு அங்கத்தினர் என்ற வகையில் சபையானது காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான பிரதான காப்புறுதிக் கோட்பாடுகள், தகவல்கள் போன்ற வெளியீடுகளையும், வழிகாட்டிகளையும் கிரமமான முறையில் பெறுகின்றது. காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட சில பிரதான கோட்பாடுகள் இலங்கையில் காப்புறுதித் தொழிலின் சிறந்த மேலாண்மை மற்றும் கண்காணிப்பிற்காக சபையினால் பின்பற்றப்படுகின்றன.

### காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் (AFIR)

சீனக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் முன்னெடுப்புடன் 2006 ஆம் ஆண்டு காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் பிராந்திய காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஒத்துழைப்பு பொறிமுறைக்காக உருவாக்கப்பட்டது. ஆணைக்குழு காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றத்தில் அங்கத்தவராக உள்ளது.

காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் கரைகடந்த மேற்பார்வையைப் பலப்படுத்துவதற்காக ஆசிய காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தலாளர்களுக்கான பிராந்திய ஒத்துழைப்பு மேடையாக அமைந்துள்ளது.

அதன் வகிபாகத்தை நிலைநிறுத்துவதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் தகவல்கள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பரிமாற்றிக்கொள்ளுதல், ஒழுங்குமுறைப்படுத்தல் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளல் மற்றும் கைத்தொழிற்துறை நிபுணர்களை பரிமாறிக்கொள்ளுதல் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கான அதன் பிரதான மேடையை சரியாக அமைப்பதற்கும், எல்லை தாண்டிய அபாயங்களை தடுப்பதற்கும் பதிலளிப்பதற்கும் ஒழுங்குமுறை ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புக்கான ஒரு முக்கிய தளமாகவும், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கிய தளமாகவும் இதனை உருவாக்குவதற்கும், காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கான ஆசிய மன்றம் எதிர்பார்க்கின்றது. இதனால் உலகளாவிய காப்புறுதி ஒழுங்குமுறை சீர்திருத்தத்தில் மிகவும் பயனுள்ள முறையில் பங்கேற்க வேண்டும்.

# புள்ளிவிபர மீளாய்வு

**காப்புறுதிக் கம்பனிகளின் சுருக்கப் பெயர்**

| | காப்புறுதிக் கம்பனிகளின் முழுப் பெயர் | சுருக்கப் பெயர் |
|---|---|---|
| 1 | ஏஐஏ இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் | ஏஐஏ லைப் |
| 2 | எலைன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். | எலைன்ஸ் ஜென் |
| 3 | எலைன்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். | எலைன்ஸ் லைப் |
| 4 | அமானா டக்காபுல் பிஎல்சி. | அமானா ஜென |
| 5 | அமானா டக்காபுல் லைப் பிஎல்சி. | அமானா லைப் |
| 6 | ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி. | ஆர்பிகோ |
| 7 | சிலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | சிலிங்கோ ஜென் |
| 8 | சிலிங்கோ லைப் இன்சூரன்ஸ் லிமிடட். | சிலிங்கோ லைப் |
| 9 | கென்டினன்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட். | கென்டினன்டல் |
| 10 | கோப்பரட்டிவ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். | கோப்பரட்டிவ் ஜென் |
| 11 | கோப்லைப் இன்சூரன்ஸ் லிமிடட். | கோப்லைப் |
| 12 | பியார்பெஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட். | பியார்பெஸ்ட் |
| 13 | எச்என்பி அசூரன்ஸ் பிஎல்சி. | எச்என்பி லைப் |
| 14 | எச்என்பி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | எச்என்பி ஜென். |

| | காப்புறுதிக் கம்பனிகளின் முழுப் பெயர் | சுருக்கப் பெயர் |
|---|---|---|
| 15 | ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி. | ஜனசக்தி லைப் |
| 16 | ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | ஜனசக்தி ஜென் |
| 17 | லைப் இன்சூரன்ஸ் கோப்பரேஷன் (லங்கா) லிமிடட். | எல்ஐசி |
| 18 | எல்ஓஎல்சி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட். | எல்ஓஎல்சி ஜென் |
| 19 | எல்ஓஎல்சி லைப் அசூரன்ஸ் லிமிடட். | எல்ஓஎல்சி லைப் |
| 20 | எம்பிஎஸ்எல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட். | எம்பிஎஸ்எல் |
| 21 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம். | என்ஐடிஎப் |
| 22 | ஒரியன்ட் இன்சூரன்ஸ் லிமிடட். | ஒரியன்ட் |
| 23 | பிப்பீள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | பிப்பீள்ஸ் |
| 24 | சனச லைப் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் | சனச லைப் |
| 25 | சனச ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் | சனச ஜென். |
| 26 | ஸொப்ட்லொஜிக் லைப் இன்சூரன்ஸ் பிஎல்சி | ஸொப்ட்லொஜிக் லைப் |
| 27 | வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | எஸ்எல்ஐசி |
| 28 | யூனியன் அசூரன்ஸ் பிஎல்சி | யூனியன் லைப் |

**புள்ளிவிபர மீளாய்வுக்கான அட்டவணைகளினதும் விளக்கப்படங்களினதும் தரவுகளை விளக்கும் போது கீழ்வரும் பொதுக்குறிப்புகள் துணையாகும்.**

1. காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகளினால் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் அட்டவணைகளும் வரைபுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.
2. ஏஐஏ பொதுக் காப்புறுதி லங்கா லிமிடட் மற்றும் ஜனசக்தி பொதுக் காப்புறுதி லிமிடட் என்பன 2016 இல் ஒன்றிணைக்கப்பட்டு 'ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட்' என அழைக்கப்படுகின்றது.
3. ஜனசக்தி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் 28 செப்டெம்பர் 2018 இல் எலைன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு 'எலைன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட்' என அழைக்கப்படுகின்றது.
4. 2016இற்கு முன்னர் சொப்ட்லொஜிக் லைப் பிஎல்சி நிறுவனம் ஏசியன் அலைன்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி லிமிடட் என அழைக்கப்பட்டது
5. யூனியன் ஜெனரல் லிமிடட் பியார்பர்ஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட் நிறுவனத்தினால் கைக்கொள்ளப்பட்டு அத்துடன் இணைக்கப்பட்டு 28 பெப்பரவரி 2017 தொடக்கம் 'பியார்பர்ஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்' என அழைக்கப்படுகின்றது.
6. ஏஐஜி இன்சூரன்ஸ் லிமிடட் தனது வியாபார நடவடிக்கைகளை 2014 தொடக்கம் நிறுத்திக் கொண்டு, இலங்கையில் இருந்து மீளச்செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.
7. சீமாசயித்த ரக்ஷன சமாகம 01 ஜுலை 2019ஆம் திகதி தொடக்கம் நீண்ட கால காப்புறுதி வியாபரமாகவும் பொதுக் காப்புறுதி வியாபாரமாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக, 'சனச லைப் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட்' மற்றும் 'சனச ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடட் என நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தையும் பொதுக் காப்புறுதி வியாபாரத்தையும் தொடர்கின்றது.
8. என்ஐடீஎப் வேறுபட்ட காப்புறுதித் திட்டங்களைக் கையாளுவதனால் ஒப்பீட்டளவைப் பராமரிப்பதற்கு இடர் அடிப்படையிலான மூலதனத்தைக் கருத்தில் கொள்வதற்கு என்ஐடீஎப் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தரவுகள்கவனத்திற் கொள்ளப்படவில்லை.
9. என்ஐடீஎப் நிறுவனத்தின் பயிர் மற்றும் கடன் பாதுகாப்பு திட்டத்தின் நிதித் தரவுகள், குறிப்பிடப்பட்ட தொழிற்பாடு காப்புறுதியாக கருதப்படாமையினால் 2014 தொடக்கம் அப்புள்ளிவிபரங்கள் அகற்றப்பட்டன.
10. அட்டவணைகளில் காணப்படும் பெறுமதி மிகக்கிட்டிய எண்ணுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், காட்டப்பட்டுள்ள மொத்தத் தொகைக்கும் அதன் ஆக்கக்கூறுகளின் கூட்டுத்தொகைகளுக்கும் இடையில் சிறிய வேறுபாடு காணப்படக்கூடும்.
11. முன்னர் வெளியிடப்பட்ட பெறுமதிகளுடன் தற்போதுள்ள பெறுமதியை ஒப்பிடும் போது வேறுபாடு காணப்பட்டால், அது திருத்தத்தின் காரணமாக ஏற்பட்டதாகும்.
12. அடைப்புக்குறிக்குள் சுட்டிக்காட்டியுள்ள பெறுமதிகள் மறைபெறுமதியாகும்.
13. கீழ்வரும் சின்னங்கள் அறிக்கை முழுவதிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(a) = மீண்டும் குறிப்பிடப்பட்ட மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட பெறுமதி (b) தற்காலிக புள்ளிவிபரங்கள் - = ஏதுமில்லை

(a) = மீண்டும் குறிப்பிடப்பட்ட மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட பெறுமதி
(b) = தற்காலிக புள்ளிவிபரங்கள் -
- = ஏதுமில்லை

இலங்கை காப்புறுதிக் கைதொழிற்துறை பற்றிய ஓர் கண்ணோட்டம்

உலக காப்புறுதிச் சந்தை ஒரே பார்வையில்

2020 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் வேகமாகப் பரவிய கோவிட்-19 தொற்றுநோயின் தாக்கங்களினால் உலகளாவிய காப்புறுதித்துறை பெரிதும் பாதிக்கப்பட்டது. வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தக் கடுமையான முடக்கல் மற்றும் பயணக் கட்டுபாடுகள் போன்ற தடுப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு பல அரசாங்கங்கள் வலியுறுத்தப்பட்டதால், இந்த சூழ்நிலைகள் மற்றும் வியாபாரங்களின் வழங்கமான செயற்பாடுகளை வியத்தகு முறையில் மாற்றியுள்ளன, இதனால் பல்வேறு வழிகளில் காப்புறுதித்துறை பாதிக்கப்படுகின்றது. தொற்றுநோயால் உருவாக்கப்பட்ட இடையூறுகளுடன், காப்புறுதியாளர்கள் தங்களைத் தாங்களே புதுப்பித்துக் கொள்ளவும், புதிய சமூகத்தேவைகளையும் சந்தைத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் காப்புறுதி சேவைகளை வழங்கவும் வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

அதிகரித்த வேலையின்மை, வியாபார முடக்கல்கள், தடைப்பட்ட தவணைக் கட்டண விநியோகம் மற்றும் சுற்றுலா ஆகியவை உலகம் முழுவதிலும் காப்புறுதித் தவணைக் கட்டண வளர்ச்சியில் பாதகமாக விளைவுகளை உருவாக்கியுள்ளன. சுவீஸ் ரீ வெளியீடுகளின்படி, 2020ஆம் ஆண்டில் உலகளாவிய காப்பீட்டு தவணைக் கட்டணங்கள் சுமார் 4% குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளன. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உள்ள பல சந்தைகளில், நீண்ட கால தவணைக் கட்டணங்கள், எழுதப்பட்ட புதிய வியாபாரத்தின் சரிவு மற்றும் அதிகரித்து வரும் குறைபாடுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டன. பயணக் காப்புறுதி, கடல் காப்புறுதி, விமான சேவைக் காப்புறுதி மற்றும் மோட்டார் காப்புறுதி போன்ற சில பொதுக் காப்புறுதி வகுப்புகள் பெரிய வீழ்ச்சியைச் சந்தித்தன. எவ்வாறாயினும், வளர்ந்து வரும் சந்கைள், குறிப்பாக ஆசியாவில் அதிகரித்து வரும் இடர் விழிப்புணர்வு மற்றும் விநியோக வழிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஆகியவற்றின் ஆதரவுடன் வளர்ச்சி வேகத்தைத் தக்கவைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நிதிச் சந்தையின் ஏற்ற இறக்கம் மற்றும் குறைந்த வட்டி விகிதச் சூழல் ஆகியவை காப்புறுதியாளர்களின் முதலீட்டு வருமானத்தைக் குறைத்துக்கொண்டே இருந்தன. தொற்றுநோய் மற்றும் நாடு முடக்கல்கள் வெடித்ததால், 2020 முதல் பாதியில் பங்கு விலைகள் கடுமையாக சரிந்தன. பல சந்தைகள் பின்னர் மீண்டு வந்தாலும், கோவிட் 19 நெருக்கடியின் காலம் மற்றும் தாக்கம் குறித்த நிச்சயமற்ற தன்மை காரணமாக ஏற்ற இறக்கங்கள் தொடர்ந்து முன்னேறி வருகின்றன. குறைந்த வட்டி விகிதங்கள் காப்புறுதி நிறுவனங்களின் இலாபத்தில் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக நீண்ட கால காப்புறுதியாளர்கள், காப்பீட்டுக்கான பூட்கை உத்தரவாதங்களுடன், உத்தரவாதமான வருடாந்திர விகிதங்கள் மற்றும் உத்தரவாத முதலீட்டு வருமானம் போன்றவற்றில் குறைந்த வட்டி வீதங்கள் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

கோவிட் 19 பாதிப்புகள் தொடர்பான உரிமைக் கோரல் அனுபவம் நாடுகளுக்கும் பிராந்தியங்களுக்கும் இடையே மாறுபடலாம், ஏனெனில் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை மற்றும் கொள்கை நிலைமைகள் மீது காப்பீடுகள் வேறுபட்டவையாகும். நிகழ்வு இரத்து, வணிகத் தடங்கல், பயணக் காப்புறுதி, வேலையாட்களுக்கான இழப்பீடு போன்ற வியாபார நிகழ்வுகளின் விரிவாக்கப்பட்ட கோரிக்கை வெளிப்பாடுகளுடன், பல வளர்ந்த சந்தைகளில் மருத்துவமனை மற்றும் மருத்துவப் பலன்கள் அதிகரித்துள்ளன.

இந்த முன்னோடியில்லாத சவால்களுக்கு விடையிறுக்கும் வகையில் உலகளாவிய காப்புறுதித்துறையானது, செயற்பாட்டு நிவாரணம் வழங்கும் மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் சில பிராந்தியங்களில் நிதிச் சந்தைகளில் பண மற்றும் நிதி ஆதரவு நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் செயற்பாட்டு நிதி நிலைத்தன்மையை வெளிப்படுத்தியுள்ளன. பல அதிகார வரம்புகளில் உள்ள கட்டுப்பாட்டாளர்கள் காப்பீட்டாளர்களின் ஈவுத்தொகை கொடுப்பனவுகளை கட்டுப்படுத்த அல்லது தாமதப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். கூடுதலாக வாடிக்கையாளர்களுக்கான நியாயமான நடவடிக்கைகளை உறுதி செய்யப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன (ஆதாரம்: குளோபல் இன்சூரன்ஸ் மார்க்கட் அறிக்கை - IAIS) காப்புறுதியாளர்கள் செயற்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகளை டிஜிடல் மயமாக்குவதில் தங்கள் கவனத்தை அதிகரித்துள்ளனர், மேலும் தொலைதூரப் பணிச்சூழலை செயற்படுத்துவது போன்ற இந்த மாற்றங்களில் பெரும்பாலனவற்றை எளிதாக்குவதில் சிறந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளின் தேவை முக்கியமானது. மேலும், தொற்றுநோய்ப் பரவலுடன், வாழ்க்கை, உடல்நலம் மற்றும் பிறபாதுகாப்புத் தயாரிப்புகளில் இளைய தலைமுறையினரின் ஆர்வம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளதால், நேருக்கு நேர் விற்பனைக்குப் பதிலளிக்க டிஜிடல் ஊடகங்களைப் பின்பற்றவும், பாதுகாப்பிற்கான பொதுத் தேவைகளை விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோவிட் -19 இன் தாக்கத்திற்கு அப்பால், காப்புறுதித்துறையானது நுகர்வோர் எதிர்பார்ப்புகளின் உயர்வு, இணைய அச்சுறுத்தல்கள், அதிகரிக்கும் காலநிலை ஆபத்து மற்றும் பேரழிவு நிகழ்வுகள் நிலைபேற்றுத் தன்மையின் தேவைகள் மற்றும் பரந்த ஓய்வூதிய சேமிப்பு மற்றும் பாதுகாப்பு இடைவெளிகள் போன்ற பிற முக்கிய சவால்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதனால் காப்புறுதியாளர்கள் வரும் ஆண்டுகளில் பெரிதாகவும் வித்தியாசமாகவும் சிந்திப்பதற்கான தேவையுள்ளது.

### இலங்கைப் பொருளாதாரம் பற்றிய ஓர் கண்ணோட்டம்

கோவிட் - 19 தொற்றுநோயால் உந்தப்பட்ட ஆழமான பொருளாதார மந்தநிலையை உலகம் அனுபவித்து வரும் நிலையில், இலங்கைப் பொருளாதாரம் 2020 இல் 3.6 % வீதத்தினால் சுருங்கியது, சுதந்திரத்திற்குப் பிறகு மிக மோசமான வளர்ச்சி செயற்திறனைப் பதிவுசெய்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகையை இடைநிறுத்துதல் மற்றும் நாடளாவிய ரீதியல் ஊரடங்குச் சட்டம் போன்ற அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சுற்றுலா, உற்பத்தி, கட்டுமானம் மற்றும் போக்குவரத்து போன்றவற்றின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இடையூறாக உள்ளன. இந்த ஆண்டில் தொழிற்துறை நடவடிக்கைகள் மற்றும் சேவைகள் நடவடிக்கைகளில் முறையே 6.9% மற்றும் 1.5% வீத சரிவு காணப்பட்டது. இதற்கிடையில், தொற்றுநோய் தொடர்பான இடையூறுகள் காரணமாக விவசாயத்துறையும் 2.4 வீதத்தினால் சுருங்கியது, இருப்பினும் அரசாங்கக் கொள்கைகள் பூட்டப்பட்ட காலங்களில் கூட பெரும்பாலான விவசாய நடவடிக்கைகளைத் தொடர்வதை ஊக்குவித்தன.

தொற்றுநோயைச் சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக, பல வியாபாரங்கள் மற்றும் நிறுவனங்கள் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ மூடப்பட்டுவிட்டன மற்றும் குடும்ப வருமான இழப்பின் விளைவாக, வேலையின்மை விகிதம் 2020இல் 5.5% ஆக அதிகரித்துள்ளது (2019:4.8%). பெண் தொழிலாளர் பங்கேற்பில் கணிசமான சரிவு காணப்பட்டது, அதோடு வெளிநாட்டு வேலைக்கான புறப்பாடுகளில் கூர்மையான சரிவு காணப்படுகின்றது. தற்போதைய சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுருக்கம் மற்றும் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் பண வீக்கம் ஆகியவை முந்தைய ஆண்டில் 3,852 அமெரிக்க டொலர்களாக இருந்த தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020இல் 3,682 அமெரிக்க டொலர்களாக குறைந்துள்ளது.

(ஆதாரம் - மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை 2020)

## இலங்கை காப்புறுதிச் சந்தை

இலங்கையின் காப்புறுதித்துறை 2020ஆம் ஆண்டு இருபத்தியேழு காப்புறுதிக் கம்பனிகளை கொண்டுள்ளதுடன் இந்த இருபத்தியேழு காப்புறுதிக் கம்பனிகளில் பதின்மூன்று கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தையும் பன்னிரெண்டு கம்பனிகள் பொது வியாபார நடவடிக்கைகளையும் இரு கம்பனிகள் இவை இரண்டு வியாபாரத்தையும் கொண்டு நடாத்துகின்றன. எட்டு நிறுவனங்கள் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளதுடன், ஆறு கம்பனிகள் முக்கிய வெளிநாட்டுப் பங்குகளை வைத்துச் செயற்படுகின்றன. இந்த ஆண்டில், ஒரு வருங்கால நிறுவனம் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்வதற்கான அனுமதிக்கு விண்ணப்பித்தது.

பல நாடுகளில் உள்ளதைப் போலவே, கோவிட் -19 தொற்றுநோயின் பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்கள் இலங்கையின் காப்புறுதிச் சந்தைக்கு பல சவால்களையும் வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளன. அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட முடக்கல்கள் மற்றும் பிற கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பெரும்பாலான பொது காப்புறுதித் தயாரிப்புகளுக்கான தேவையைக் குறைத்தன. குறிப்பாக மோட்டார், கடல், போக்குவரத்து மற்றும் விமானச் சேவை போன்ற காப்புறுதி வகைகள், முந்தைய ஆண்டைவிட தவணைக் கட்டணச் சரிவை முக்கியமாக பாதித்துள்ளன. அதன்படி, பொதுக் காப்புறுதி வியாபாரமானது, கடந்த ஆண்டில் பதிவான 7.06% வளர்ச்சிக்கு எதிராக 2020இல் 2.24% எதிர்மறையான தவணைக் கட்டண வளர்ச்சியை வெளிப்படுத்தியது. இதற்கு நேர்மாறாக, மொத்த தவணைக் கட்டண வருமானம் 15.98% (2019:10.58%) வீதத்தினால் அதிகரித்து, வரலாற்றில் முதல் முறையாக இ.ரூபா 100 பில்லியனைத் தாண்டியதால், நீண்டகால காப்புறுதி வியாபாரம் ஒரு நேர்மறையான வேகத்தைக் காட்டியது. தயாரிப்பு கண்டுபிடிப்பு, தொழிற்பாடுகளின் டிஜிடல் மயமாக்கல், விநியோக ஊடகங்களின் மறுவடிவமைப்பு செய்தல் மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட இயக்க மாதிரியின் பயன்பாடு ஆகியவை வருடத்தில் வணிக வளர்ச்சியை அடைய நீண்டகாலக் காப்புறுதி பயன்படுத்தும் சில முக்கிய உபாயமார்க்கங்களாகும். மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தளர்வு நடவடிக்கைகளால் ஆதரிக்கப்படும் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் அதிகரித்த கடன் நன்கொடைகள் காரணமாக, குறையும் கால உத்தரவாதம் (DTA)/ அடமானப் பாதுகாப்புக் கொள்கைகள் மூலம் உருவாக்கப்பட்ட தவணைக் கட்டணம் இந்த ஆண்டில் கணிசமான உயர்வைக் கண்டது. அதே நேரத்தில், தொற்றுநோயால் உருவான சூழ்நிலைகளின் காரணமாக உயர் பாதுகாப்புக் குறித்த பொது விழிப்புணர்வு அதிகரிக்கப்படுவதாக நம்பப்படுகின்றது.

வரைபடம் 1

**காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் மற்றும் வளர்ச்சி வீதம்**




ஒட்டுமொத்தமாக, காப்புறுதித்துறையானது 2019இல் பதிவான இ.ரூபா 196,472 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் இ.ரூபா 208,250 மில்லியனாக மொத்த தவணைக் கட்டண வருமானத்தைப் பதிவாக்கியுள்ளதுடன் 5.99% (2019:8.62%) குறைந்த வளர்ச்சி வீதத்தை வெளிப்படுத்தியுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்குப் பொதுக் காப்புறுதி நிறுவனங்களின் மீள்காப்புறுதி தவணைக் கட்டணங்களை கட்டாயமாக நிறுத்திவைப்பதை நிரூபிக்கும் மீள்காப்பீட்டு தவணைக் கட்டண வருமானம், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் மீள்காப்புறுதி நிறுத்திவைப்பதில் மேற்கொள்ளப்பட்ட வரையறுக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளலின் விளைவாக 2020 இல் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்துள்ளது. கீழே உள்ள அட்டவணை 1இல் விளக்கப்பட்டுள்ளபடி, குறைந்த தவணைக் கட்டண வளர்ச்சியை அறிக்கையிட்ட போதிலும், 2020ஆம் ஆண்டில் காப்புறுதி ஊடுருவல் நிலை 1.39% வீதமாக உயர்ந்துள்ளது, இது முதன்மையாகத் தற்போதைய சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வீழ்ச்சியடைந்ததன் ஊடாக தூண்டப்பட்டுள்ளது. ஆயினும்கூட, இது பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளின் ஊடுருவல் அளவை விட ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. முந்தைய ஆண்டுகளைப் போலவே, காப்பீடு அடர்த்தி ஓரளவு மேம்பட்டு 2020இல் இ.ரூபா 9,501ஆக பதிவாகியுள்ளது.

கைத்தொழிற்துறையானது, அதன் முக்கிய செயற்பாடுகளின் செயற்பாட்டை மேம்படுத்துவதற்காக சமீபத்தில் சில முன்னேற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. பல நிறுவனங்கள் வருடத்தில் தொலைதூர பணிச்சூழலுக்கு மாறிவிட்டதால், வலுவான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளின் தேவை காப்புறுதியாளர்களுக்கு இன்றியமையாததாக மாறியது. டிஜிடல் மற்றும் மெய்நிகர் தளங்களின் பயன்பாடு வாடிக்கையாளர் சேவை, தவணைக் கட்டணச் சேகரிப்பு மற்றும் உரிமைக் கோரிக்கைகளைக் கையாளுதல் போன்ற சில செயற்பாடுகளின் செயற்திறனை மேம்படுத்தியது.

அட்டவணை 1

**எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானமும் ஊடுறுவலும்**

| | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020(ஆ) |
|---|---|---|---|---|---|
| எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் - நீண்டகால காப்புறுதி வியாபாரம் (இரூபா.மில்) | 63,477 | 71,571 | 80,294 | 88,787 | 102,974 |
| தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம் (%) | 18.23 | 12.75 | 12.19 | 10.58 | 15.98 |
| எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் - பொதுக் காப்புறுதி வியாபாரம் (இரூபா.மில்) | 79,590 | 93,389 | 100,586 | 107,685 | 105,276 |
| தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம் (%) | 14.90 | 17.34 | 7.71 | 7.06 | (2.24) |
| மொத்தத் தவணைக் கட்டண வருமானம் - காப்புறுதி வியாபாரம் (இரூபா.மில்) | 143,067 | 164,960 | 180,880 | 196,472 | 208,250 |
| மொத்தத் தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் - காப்புறுதி வியாபாரம் (%) | 16.35 | 15.30 | 9.65 | 8.62 | 5.99 |
| மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானம் (இரூபா.மில்) ** | 2,397 | 3,683 | 4,056 | 4,174 | 3,235 |
| நடைமுறை சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (இரூபா.மில்) * | 11,996 | 13,328 | 14,291 | 15,013 | 14,973 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் (%)* * * | 4.5 | 3.6 | 3.3 | 2.3 | (3.6) |
| ஊடுருவல் (மொ.உ.உ. இன் % இல் மொத்தக் காப்புறுதி எழுதப்பட்ட தவணைக் கட்டணம்) | 1.19 | 1.24 | 1.27 | 1.31 | 1.39 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் எழுதப்பட்ட தவணைக் கட்டணம்) | 0.53 | 0.54 | 0.56 | 0.59 | 0.69 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | 0.66 | 0.70 | 0.70 | 0.72 | 0.70 |
| காப்புறுதி செறிவு (மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் - காப்புறுதி வியாபாரம் / சனத்தொகை) (இரூபா.மில்) | 6,747 | 7,693 | 8,347 | 9,011 | 9,501 |
| சனத்தொகை '000 (ஆண்டின் மத்தியில்) * | 21,203 | 21,444 | 21,670 | 21,803 | 21,919 |

* *மூலம்: இலங்கை மத்திய வங்கி மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் : இலங்கை மத்திய வங்கியின் 2020ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2016 இல் இருந்து தற்போதைய சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி இற்றை செய்யப்பட்டுள்ளது.*

** *தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் உழைக்கப்பட்ட பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கட்டாய மீள்காப்புறுதி எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை மீள்காப்புறுதி எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. .*

## காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள்

காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த சொத்துக்களின் அடிப்படை 2019ஆம் ஆண்டு பதிவு செய்த 10.55% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டில் இ.ரூபா 796,791 மில்லியனைப் பெற்றும் 14.33% வீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளபடி, இந்த வளர்ச்சியானது நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களின் அதிகரிப்பால் முக்கியமாக உந்தப்பட்டு, 16.21% வீத வேகத்தில் வளர்ந்தது. முந்தைய ஆண்டுகளைப் போலல்லாமல் பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகளும் 2019இல் பதிவான 4.66% வளர்ச்சிக்கு எதிராக 2020ஆம் ஆண்டில் 10.15% வளர்ச்சியைப் பதிவு செயததன் மூலம் அதிகரித்து வரும் வடிவத்தைக் காட்டியுள்ளன.

வியாபார அளவுகளின் விரிவாக்கம் மற்றும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பொறுப்புகள் அதிகரித்து வருதல், முதலீட்டு வருமானத்தை அதிகப்படுத்துதல் என்பன ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்கும் போது போதுமான சொத்து போட்போலியோவை பராமரிக்க காப்புறுதி நிறுவனங்களைக் கோரியது.

நீண்ட காலக் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் இரண்டிலும் சொத்து வளர்ச்சிக்கு நிதி முதலீடுகள் முக்கிய பங்காற்றுகின்றன. அதேசமயம், தவணைக் கட்டண வரவுகள் பொதுக் காப்புறுதியாளர்களின் சொத்துக்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் காட்டுகின்றன. செயற்திறன் மிக்க மூலதன முகாமைத்துவ நடவடிக்கைகளின் அடிப்படையில், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு நிறுவனங்களின் சொத்து நிலுவைகளின் அதிகரிப்பில் சாதகமான விளைவைக் கொண்ட ஆண்டில் பங்கிலாப பிரகடனம் மற்றும் விநியோகத்தைக் கட்டுப்படுத்தத் தலையிட்டது.

அட்டவணை 2

**காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்களின் ஊடுறுவலும்**

| | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி (இ.ரூபா. மில்லியன்) | 345,589 | 391,890 | 430,759 | 485,121 | 563,769 |
| வளர்ச்சி வீதம் - நீண்ட கால காப்புறுதி (%) | 10.51 | 13.40 | 9.92 | 12.62 | 16.21 |
| பொதுக் காப்புறுதி (இ.ரூபா. மில்லியன்) | 173,985 | 185,583 | 196,005 | 205,130 | 225,956 |
| வளர்ச்சி வீதம் - பொதுக் காப்புறுதி (%) | 15.09 | 6.67 | 5.62 | 4.66 | 10.15 |
| மீள்காப்புறுதி (இ.ரூபா.மில்) | 5,755 | 4,212 | 3,683 | 6,690 | 7,066 |
| வளர்ச்சி வீதம் - மீள்காப்புறுதி (%) | 68.42 | (26.82) | (12.54) | 81.63 | 5.62 |
| மொத்தம் (இ.ரூபா மில்லியன்) | 525,329 | 581,685 | 630,447 | 696,941 | 796,791 |
| வளர்ச்சி வீதம் - மொத்தம் (%) | 12.61 | 10.73 | 8.38 | 10.55 | 14.33 |

முந்தைய ஆண்டுகளைப் போலவே, அரசாங்கப் பிணையங்கள், கூட்டிணைந்த கடன்கள், வைப்புகள் மற்றும் உரிமைப் பங்குகள் ஆகியவை காப்புறுதியாளர்கள் முதலீடு செய்த முக்கிய சொத்து வகைகளாகும். இதற்கிடையில், நாட்டில் நிலவும் குறைந்த வட்டி விகிதச் சூழலைக் கருத்தில் கொண்டு 2020இல் அலகு நம்பிக்கைக்கூறுகளின் முதலீடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டது மற்றும் காப்புறுதியாளர்கள் அதிக திரவ, பாதுகாப்பான மற்றும் அதிக வருமானம் தரும் முதலீடுகளுக்கு மாறுகின்றார்கள். ஒரு கலவை காப்புறுதியாளரான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் நீண்ட கால காப்புறுதியாளர்களான சிலிங்கோ லைப், ஏஐஏ லைப் மற்றும் யூனியன் லைப் என்பன மொத்தச் சொத்துக்களுக்கு பிரதான பங்குதாரர்களாக இருந்தன. அதனைத் தொடர்ந்து பொதுக் காப்புறுதிக் கம்பனிகளினுள் உயர் சொத்துக்களைக் கொண்ட நிறுவனங்களாக எலையின்ஸ் ஜெனரல் மற்றும் சிலங்கோ ஜெனரல் என்பன காணப்பட்டன. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அரசாங்கப் பத்திரங்கள் மற்றும் தவணைக் கட்டணம் பெறத்தக்கவைகளின் ஏற்றத்தாழ்வுகளினால் 5.62% சிறிதளவு அதிகரிப்பைக் காட்டி, மீள்காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களில் வளர்ந்து வரும் போக்கைப் பராமரிக்க முடிந்தது.

வரைபடம் 2
**பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துக்களின் பரம்பல்**




**பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துக்களின் பரம்பல்**

கோவிட் 19 தொற்றுநோயின் விளைவாக சவாலான பொருளாதாரச் சூழல் இருந்தபோதிலும், 2020ஆம் ஆண்டில் 17.44% வீத வளர்ச்சியைப் பதிவு செய்வதன் மூலம் நிதித்துறை ஒட்டுமொத்த சொத்து அளவுகளில் குறிப்பித்தக்க விரிவாக்கத்தை வெளிப்படுத்தியது. இந்த வளர்ச்சியானது பிரதானமாக வங்கித் துறையினாலும், அதனைத் தொடர்ந்து ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்களினாலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. எவ்வாறாயினும், அதிகரித்துவரும் செயற்படாத கடன்கள், இறையாண்மை தர மதிப்பீட்டுக் குறைப்பு மற்றும் வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் ஆகியவை வங்கித்துறை பிற வைப்புத்தொகை எடுக்கும் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறப்பு நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளை வருடத்தில் மோசமாகப் பாதித்தன.

வங்கித்துறையானது 2020ஆம் ஆண்டில் இறுதியில் 30 வங்கிகளை உள்ளடக்கியது மற்றும் மொத்தம் சொத்து போர்ட்போலியோவில் 72.5% வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் நிதித்துறையில் ஆதிக்கத்தைக் தொடர்ந்து வங்கித்துறையின் சொத்துக்கள் ஆண்டுக்கு ஆண்டு 18.32% வீதமாக அதிகரித்தன, இதற்கு முதன்மையாக அதிகரித்த முதலீகள் மற்றும் கடன் போட்ர்போலியோ பங்களித்தது. மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தளர்வு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், 2020ஆம் ஆண்டில் மறு திட்டமிடப்பட்ட கடன்கள், வீட்டுக் கடன்கள் மற்றும் காலக் கடன்கள் அதிக வளர்ச்சி வீதங்கள் பதிவாகியுள்ளன. திறைசேரிப் பத்திரங்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் வங்கித்துறையால் செய்யப்பட்ட முதலீடுகளும் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளன. (ஆதாரம் - மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை 2020)

அட்டவணை 3
**பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துக்களின் பரம்பல்**

| நிதியியற் துறை | 2016 | | 2017 | | 2018 | | 2019 | | 2020 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இ.ரூபா பில்லியன்கள் | % | இ.ரூபா பில்லியன்கள் | % | இ.ரூபா பில்லியன்கள் | % | இ.ரூபா பில்லியன்கள் | % | இ.ரூபா பில்லியன்கள் | % |
| வங்கித்துறை | 10,575.8 | 69.5 | 11,897.4 | 69.7 | 13,711.4 | 72.2 | 14,442.1 | 71.9 | 17,087.9 | 72.5 |
| வைப்புகளை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள் | 1,246.7 | 8.2 | 1,370.4 | 8.0 | 1,603.2 | 8.4 | 1,553.2 | 7.7 | 1,637.6 | 6.9 |
| விசேட நிதி நிறுவனங்கள் | 335.4 | 2.2 | 388.9 | 2.3 | 241.1 | 1.3 | 286.7 | 1.4 | 415.3 | 1.8 |
| ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் | 2,536.6 | 16.7 | 2,838.0 | 16.6 | 2,807.4 | 14.8 | 3,097.9 | 15.4 | 3,639.7 | 15.4 |
| காப்புறுதிக் கம்பனிகள் * | 525.3 | 3.5 | 581.7 | 3.4 | 630.4 | 3.3 | 696.9 (அ) | 3.5 | 796.8 (ஆ) | 3.4 |
| மொத்தம் | 15,219.8 | 100 | 17,076.4 | 100 | 18,993.5 | 100 | 20,076.8 | 100 | 23,577.3 | 100 |

*மூலம் : இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை - 2019*
* *காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில் காப்புறுதிக் கம்பனிகளின் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.*

ஏனைய வைப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் நிதியியல் நிறுவனங்களை அனுமதிப்பத்திரம் பெற்ற நிதியியல் கம்பனிகள், பிராந்திய வங்கிகள் மற்றும் கூட்டுறவுச் சங்ககங்கள் என்பன பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன், 31 டிசம்பர் 2020ஆம் திகதியன்று மொத்தச் சொத்துக்களின் பெறுமதி இ.ரூபா 1,637.6 பில்லியனாவதுடன், இது நிதியியல் துறையில் உள்ள மொத்த சொத்துகளில் 6.9% வீதமாகும். இதன் வளர்ச்சி 2018ஆம் ஆண்டில் 16.99% வீதமாக இருந்ததுடன் வருடத்தின் அடிப்படையில் அதன் வளர்ச்சி 2.74% வீதத்தினால் குறைவடைந்ததைக் காட்டுகின்றது. 2019ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுருக்கத்திற்குப் பிறகு இந்தத்துறை அதன் சொத்து வளர்ச்சியை மீட்டெடுத்திருந்தாலும், எதிர்மறைக் கடன் வளர்ச்சி மற்றும் அதிக செயற்படாத கடன்கள் காரணமாக உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களில் மந்தமான செயற்திறன் தொடர்ந்தது. இதற்கிடையில், சிறப்பு நிதி நிறுவனங்கள் 2020இல் குறிப்பித்தக்க சொத்து வளர்ச்சி 44.86% வீதத்தைக் காட்டியுள்ளது, இது முக்கியமாக கூறு நம்பிக்கை முகாமைத்துவ நிறுவனங்களில் அதிகரித்த சொத்துக்களால் பங்களித்தது.

ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியம் ஆகியவை ஒப்பந்தச் சேமிப்பு நிறுவனங்களின் முக்கிய கூறுகளாகும், இது 31 டிசம்பர் 2020 இல் மொத்த சொத்துத் தளமான இ.ரூபா 3,639.7 பில்லியனைக் கொண்டு 17.49% வீத குறிப்பிட்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. இந்த வளரச்சி பிரதானமாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவர்களின் தேறிய பங்களிப்பினாலும் நிதியங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் இருந்து உருவாக்கப்பட்ட வருமானங்களினாலும் ஏற்பட்டதாகும். ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் பிரதான சொத்து போர்ட்போலியோ அரசாங்கப் பத்திரங்களைக் கொண்டிருந்தது, அதேசமயம் சிறிய பங்கினை பங்குகள் நிலையான வைப்புகள் மற்றும் கூட்டிணைந்த தொகுதிக் கடன்களின் விகிதங்கள் கொண்டிருந்தது.

காப்புறுதிக் கம்பனிகளினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகளின் மொத்தப் பெறுமதி அதிகரித்ததன் மத்தியில், நிதித்துறையின் மொத்த சொத்து போர்ட்போலியோ தொடரந்து அதே மட்டத்தில் கடந்த ஆண்டைப் போலவே இருந்ததுடன், 2020இல் 3.4% வீத வளரச்சியைப் பதிவு செய்தது (2019:3.5%)

வரைபடம் 3

**31 டிசம்பர் 2020ஆம் திகதியன்று பிரதான நிதியியல் துறைகளில் மொத்த சொத்துக்களின் பரம்பல்**




## இலாபத்தன்மை

2020ஆம் ஆண்டில், காப்புறுதித்துறையானது ஆண்டுக்கு ஆண்டு 29.26% இலாப வளர்ச்சியைப் பதிவு செய்வதன் மூலம் குறிப்பிடத்தக்க நிதிச் செயற்திறனைக் காட்டியது. அதன்படி, தொழிற்துறையின் மொத்த இலாபம் (வரிக்கு முந்தைய இலாபம்) 2020ஆம் ஆண்டில் இ.ரூபா 41,767 மில்லியனாக பதிவாகியது, அதேசமயம் 2019இல் இது இ.ரூபா 32,311 மில்லியனாக இருந்தது. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 2020ஆம் ஆண்டுக்கான மொத்த இலாபம் இ.ரூபா 23,040 மில்லியனை பதிவுசெய்ததன் மூலம் பொதுக் காப்புறுதி வியாபாரத்தால் வெளிப்படுத்தப்பட்ட இலாப வளர்ச்சியின் விளைவாக, ஒட்டுமொத்த இலாபத்தில் பொதுக் காப்புறுதியாளர்களின் பங்களிப்பு நீண்ட கால காப்புறுதி நிறுவனங்களை விட அதிகமாக இருந்தது. தேசிய காப்புறுதி நம்பிக்கைநிதியம் மற்றும் எலைன்ஸ் ஜெனரல் ஆகியன இலாப வளர்ச்சியின் முக்கிய உந்து சக்திகளாக இருந்தன, அதேவேளை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலாபத்தில் சிறிதளவு சுருக்கத்தை வெளிப்படுத்திய போதிலும் அதிக இலாபத்தை ஈட்டித்தருபவர்களில் ஒரு நிறுவனமாக இருந்தது.
குறிப்பாக அதிக கோரிக்கை வெளிப்படுத்தலின் காரணமாக எலையின்ஸ் ஜெனரல் 2019 இல் கணிசமான இழப்பைச் சந்தித்தது. எவ்வாறெனினும், தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக குறைந்த அளவிலான உரிமைக் கோரல்களுடன் இணைந்து ‘சுரக்ஷா திட்டம்’ நிறுத்தப்பட்டது. அந்த ஆண்டில் நிறுவனத்தின் உரிமைக் கோரல் அளவைக் குறைத்தது மற்றும் குறிப்பிடத்தக்க அதிகரித்த இலாபத்தைப் பெற்றுக்கொண்டது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் இலாபம் பெரும்பாலும் அனைத்து வணிகப் பிரிவுகளில் இருந்தும் குறிப்பாக அக்ரஹாரத் திட்டம், தேசிய இயற்கை இடர் காப்புறுதித் திட்டம், வேலை நிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம், மீள்காப்புறுதி வியாபாரம் மற்றும் மோட்டார் வகை ஆகியவற்றின் உரிமைக்கோரல்கள் குறைவதால் ஏற்பட்டது. தேசிய இயற்கை இடர் காப்புறுதித் திட்டத்தை நிறுத்தியதன் விளைவாக, தேசிய இயற்கை இடர் காப்புறுதித் திட்டம் தொடர்பான உரிமைக்கோரல்களின் விதிமுறைகள் அந்த ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தால் திருத்தியமைக்கப்பட்டதனால், இது கோரிக்கை குறைப்பு மற்றும் இலாப அதிகரிப்பில் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் எம்பிஎஸ்எல் தவிர்ந்த ஏனைய அனைத்து பொதுக் காப்புறுதி நிறுவனங்களும் ஆண்டு முழுவதிலும் மேம்பட்ட இலாபத்தை வெளிப்படுத்தியுள்ளன, பெரும்பாலும் குறைந்த உரிமைக்கோரலின் விளைவாக, அதாவது நாட்டில் விதிக்கப்பட்ட பூட்டுதல் நடவடிக்கைகளால் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக குறிப்பாக மோட்டார் வகுப்பில் கோரல்கள் குறைந்தமையினால் ஏற்பட்டுள்ளது.

நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் இலாபம் 2020இல் 17.89% வீதமாக குறைவடைந்தது மற்றும் இந்த வீழ்ச்சி முக்கிய நீண்ட கால காப்புறுதியாளர்களின் உபரி இடமாற்றங்கள் மற்றும் விரிவாக்கப்பட்ட உரிமைக்கோரல்களின் விளைவாகும். அட்டவணை 4இல் விளக்கப்பட்டுள்ளபடி, நீண்டகால காப்புறுதி வணிகத்தில் ஈடுபட்டுள்ள ஒன்பது நிறுவனங்கள் 2020 இல் குறைந்த இலாபத்தை அடைந்துள்ளன. சிலிங்கோ லைப், ஒட்டுமொத்த நீண்ட கால இலாபத்திற்கு அதிக பங்களிப்பை வழங்கி, இ.ரூபா 8,767 மில்லியன் இலாபத்தைப் பதிவு செய்தது. ஸொப்ட்லொஜிக் லைப், யுனியன் லைப் மற்றும் எஸ்எல்ஐசி ஆகியவை முறையே அடுத்தடுத்த அதிகபட்ச இலாபத்தை வெளிப்படுத்தின.

அட்டவணை 4
**காப்புறுதிக் கம்பனிகளின் இலாபத்தன்மை**

| காப்பறுதியாளர் | 2019(அ) | | | 2020(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | நீண்டகால காப்புறுதி (இ.ரூபா'000) | பொதுக் காப்புறுதி (இ.ரூபா'000) | மொத்தம் (இ.ரூபா'000) | நீண்டகால காப்புறுதி (இ.ரூபா'000) | பொதுக் காப்புறுதி (இ.ரூபா'000) | மொத்தம் (இ.ரூபா'000) |
| ஏஐஏ லைப் | 3,167,396 | | 3,167,396 | 724,428 | | 724,428 |
| எலைன்ஸ் ஜென. | | (1,959,390) | (1,959,390) | | 2,296,604 | 2,296,604 |
| எலைன்ஸ் லைப் | 47,369 | | 47,369 | 80,926 | | 80,926 |
| அமான ஜென. | | (284,699) | (284,699) | | 50,145 | 50,145 |
| அமான லைப் | (29,118) | | (29,118) | (33,147) | | (33,147) |
| ஆர்பிகோ | 316,106 | | 316,106 | 300,244 | | 300,244 |
| சிலிங்கோ ஜென. | | 1,734,516 | 1,734,516 | | 1,862,479 | 1,862,479 |
| சிலிங்கோ லைப். | 8,211,938 | | 8,211,938 | 8,766,512 | | 8,766,512 |
| கொன்டினன்டல் | | 514,716 | 514,716 | | 1,084,491 | 1,084,491 |
| கோப்பரட்டிவ் ஜென. | | 397,254 | 397,254 | | 883,336 | 883,336 |
| கோப்லைப் | 59,107 | | 59,107 | 68,880 | | 68,880 |
| பியார்பர்ஸ்ட் | | 614,175 | 614,175 | | 765,688 | 765,688 |
| எச்என்பி லைப் | 1,106,535 | | 1,106,535 | 999,363 | | 999,363 |
| என்என்பி ஜென. | | 354,826 | 354,826 | | 631,133 | 631,133 |
| ஜனசக்தி லைப் | 532,364 | | 532,364 | 776,772 | | 776,772 |
| எல்ஜசி | (245,381) | | (245,381) | (380,835) | | (380,835) |
| எல்ஓஎல்சி ஜென. | | 730,808 | 730,808 | | 1,584,907 | 1,584,907 |
| எல்ஓஎல்சி லைப் | 145,948 | | 145,948 | 453,650 | | 453,650 |
| எம்பிஎஸ்எல் | 32,115 | (87,961) | (55,846) | 36,696 | (99,278) | (62,582) |
| என்ஜசீஎப் * | | 3,134,562 | 3,008,485 | | 7,629,376 | 9,015,095 |
| ஓரியன்ட் | | 169,426 | 169,426 | | 185,816 | 185,816 |
| பீப்பிள்ஸ் | | 912,032 | 912,032 | | 1,670,799 | 1,670,799 |
| சனச லைப் | 45,953 | | 45,953 | (18,958) | | (18,958) |
| சனச ஜென. | | 99,742 | 99,742 | | 148,127 | 148,127 |
| சொப்ட்லொஜிக் லைப் | 2,603,557 | | 2,603,557 | 2,130,347 | | 2,130,347 |
| எஸ்எல்ஜசி | 3,217,275 | 4,987,731 | 8,205,006 | 1,642,561 | 4,346,389 | 5,988,950 |
| யூனியன் லைப் | 1,908,463 | | 1,908,463 | 1,793,841 | | 1,793,841 |
| **மொத்தம்** | **21,119,627** | **11,317,738** | **32,311,288** | **17,341,280** | **23,040,012** | **41,767,012** |

** பயிர் மற்றும் மீள்காப்புறுதி வியாபாரத்தின் வரிக்கு முன்னரான இலாபம்/நட்டத் தொகைகளானது முறையே இ.ரூபா 216 மில்லியனையும் (2019: இ.ரூபா 536 மில்லியன்) இ.ரூபா 1,170 மில்லியனையும் (2019: இ.ரூபா 662 மில்லியன்) உள்ளடக்கியுள்ளது..*

## காப்புறுதிக் கம்பனிகளின் பங்குதாரர்களின் நிதி

2020இல் மொத்த பங்குதாரர்களின் நிதியானது இலாபம் உருவாக்கப்பட்டமையினால் முதன்மையாக உந்தப்பட்டது, காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் மொத்த பங்குதாரர்களின் நிதியானது 2019இல் இ.ரூபா 209,924 மில்லியனில் இருந்து 12.21% வீதமாக 2020ஆம் ஆண்டில் இ.ரூபா 235,547 மில்லியனால் வளர்ச்சியடைந்தது. சிலிங்கோ லைப், என்ஜடீஎப் மற்றும் எலைன்ஸ் ஜெனரல:, 2020 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டில் சிறப்பான இலாபத்தை ஈட்டியதால், மேலே உள்ள வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாற்றினார்கள். தொற்றுநோயின் நிலைமையின் முன்னரில்லாத இடர்களுக்கு மத்தியில் எடுக்கப்பட்ட விவேகமான மூலதன முகாமைத்துவ நடவடிக்கை காரணமாக தக்கவைக்கப்பட்ட உழைப்பு, 2020ஆம் ஆண்டில் கட்டுப்படுத்தப்பட்ட பங்கிலாப விநியோகத்தின் விளைவாக ஒரு செங்குத்தான உயர்வை அறிவித்தது. மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களின் நிதிகளின் பெரும்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொது ஒதுக்குகளுடன் சேர்த்து, தக்கவைக்கப்பட்ட வருமானங்கள் கீழே உள்ள அட்டவணை 5 இல் உள்ள மொத்த மற்ற இருப்புகளின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

எல்ஜசி தனது பங்கு மூலதனத்தை இந்த ஆண்டில் அதிகரித்துள்ளது மற்றும் அதன்படி, மொத்த அறிவிக்கப்பட்ட மூலதனத் தொகை இ.ரூபா 43,696 மில்லியனாக சற்று விரிவடைந்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 'கட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை இருப்பு' எனப் பராமரிக்கப்படும் ஒரு முறை உபரியானது, இ.ரூபா 16,248 மில்லியனாக மாறாமல் உள்ளது.

2020 இன் இறுதியில், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதி உயர் பங்குதாரர் நிதியாகக் கொண்டிருந்ததுடன், அதனைத் தொடர்ந்த இடங்களை சிலிங்கோ லைப், ஏஐஏ லைப் மற்றும் யூனியன் லைப் என்பன பெற்றிருந்தன. பொதுக் காப்புறுதி நிறுவனங்களுக்கு இடையிலான மொத்த பங்குதாரர்களின் நிதிகளுக்கு அதிக பங்களிப்பாளராக அதிகரித்த இலாப கையிருப்புகளால் உந்தப்பட்டு, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் சிலிங்கோ ஜெனரல் மற்றும் எலைன்ஸ் ஜெனரலை விஞ்சியது, எல்ஜசி இந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட மூலதனத்தை செலுத்தியிருந்தாலும், ஏற்பட்ட கணிசமான இழப்புகள் காரணமாக, பங்குதாரர்களின் நிதி 87 மில்லியனாக சரிந்துள்ளது. அமான லைப், அந்த ஆண்டில் பதிவான இழப்புகள் காரணமாக பங்குதாரர்களின் நிதிகளில் குறைந்துள்ளதாகவும் அறிவித்தள்ளது. எல்ஜசி மற்றும் அமான லைப் என்பன 2020 டிசம்பர் 31ஆம் திகதியில் மிகக் குறைந்த பங்குதாரர் நிதியினை அறிக்கையிட்டன.

**அட்டவணை 5**
**காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த பங்குதாரர்களின் நிதிகள்**

| காப்புறுதியாளர் | 2019 (அ) | | 2020(ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த பங்குதாரர்களின் நிதிகள் (இ.ரூபா'000) | % | எழுதப்பட்ட மூலதனம் (இ.ரூபா'000) | கட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப் படுத்தல் ஒதுக்கு (இ.ரூபா'000) | மொத்த ஏனைய ஒதுக்குகள் (இ.ரூபா'000) | மொத்த பங்குதாரர்களின் நிதிகள் (இ.ரூபா'000) | % |
| ஏஐஏ லைப் | 20,641,383 | 9.83 | 511,922 | 6,080,848 | 13,986,914 | 20,579,684 | 8.74 |
| எலைன்ஸ் ஜென. | 9,656,605 | 4.60 | 8,619,972 | | 3,108,340 | 11,728,313 | 4.98 |
| எலைன்ஸ் லைப் | 1,598,532 | 0.76 | 739,624 | | 1,341,470 | 2,081,093 | 0.88 |
| அமான ஜென. | 1,458,269 | 0.69 | 1,860,001 | | (351,596) | 1,508,405 | 0.64 |
| அமான லைப் | 487,853 | 0.23 | 500,000 | | (40,458) | 459,542 | 0.20 |
| ஆர்பிகோ | 1,660,447 | 0.79 | 675,565 | | 1,285,126 | 1,960,691 | 0.83 |
| சிலிங்கோ ஜென. | 11,697,592 | 5.57 | 500,200 | | 12,472,446 | 12,972,646 | 5.51 |
| சிலிங்கோ லைப். | 31,492,076 | 15.00 | 500,001 | 3,456,184 | 34,188,848 | 38,145,032 | 16.19 |
| கொன்டினன்டல் | 2,047,880 | 0.98 | 750,000 | | 2,147,707 | 2,897,708 | 1.23 |
| கோப்பரட்டிவ் ஜென. | 2,646,419 | 1.26 | 1,515,757 | | 1,903,101 | 3,418,858 | 1.45 |
| கோப்லைப் | 904,937 | 0.43 | 544,260 | | 514,890 | 1,059,150 | 0.45 |
| பியார்பர்ஸ்ட் | 5,663,418 | 2.70 | 3,131,949 | | 3,172,559 | 6,304,508 | 2.68 |
| எச்என்பி லைப் | 6,277,995 | 2.99 | 1,171,875 | 381,156 | 5,707,957 | 7,260,988 | 3.08 |
| எச்என்பி ஜென. | 1,586,349 | 0.76 | 1,150,000 | | 933,242 | 2,083,242 | 0.88 |
| ஜனசக்தி லைப் | 9,566,634 | 4.56 | 4,853,752 | 1,795,829 | 3,078,757 | 9,728,337 | 4.13 |
| எல்ஜசி | 241,760 | 0.12 | 650,000 | | (562,919) | 87,081 | 0.04 |
| எல்ஓஎல்சி ஜென. | 1,918,274 | 0.91 | 700,000 | | 2,424,389 | 3,124,389 | 1.33 |
| எல்ஓஎல்சி லைப் | 1,324,760 | 0.63 | 1,250,000 | 256,134 | 291,122 | 1,797,256 | 0.76 |
| எம்பிஎஸ்எல் | 1,296,734 | 0.62 | 2,280,022 | | (1,035,613) | 1,244,409 | 0.53 |
| என்ஐசீஎப் | 6,153,312 | 2.93 | | | 13,087,458 | 13,087,458 | 5.56 |
| ஓரியன்ட் | 886,154 | 0.42 | 825,000 | | 191,320 | 1,016,320 | 0.43 |
| பீப்பிள்ஸ் | 3,642,649 | 1.74 | 1,350,000 | | 3,248,573 | 4,598,573 | 1.95 |
| சனச லைப் | 1,170,406 | 0.56 | 1,044,846 | | 2,850 | 1,047,695 | 0.44 |
| சனச ஜென | 641,614 | 0.31 | 508,996 | | 281,501 | 790,497 | 0.34 |
| சொப்ட்லொஜிக் லைப் | 8,218,919 | 3.92 | 1,062,500 | 798,004 | 8,075,743 | 9,936,247 | 4.22 |
| எஸ்எல்ஐசி | 62,380,498 | 29.72 | 6,000,000 | 98,237 | 55,422,571 | 61,520,808 | 26.12 |
| யூனியன் லைப் | 14,662,903 | 6.98 | 1,000,000 | 3,381,934 | 10,726,556 | 15,108,490 | 6.41 |
| மொத்தம். | **209,924,370** | **100** | **43,696,240** | **16,248,326** | **175,602,854** | **235,547,420** | **100** |

*குறிப்பு: கணக்காய்வு சீராக்கத்துடன் 2019 இல் வெளியிடப்பட்ட எண்கள் திருத்தப்பட்டன.*

## காப்புறுதியாளர்களின் கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் பகுப்பாய்வு

நாடு முழுவதிலும் அவற்றினுடைய கிளைகளைப் பரப்புவதன் ஊடாகக் காப்புறுதியாளர்களினால் அதிக காப்புறுதி பூட்கையாளர்களுக்கு வினைத்திறனுடன் சேவைகளை வழங்குவதற்கு இயலுமாகின்றது. தற்போதைய தொற்றுநோய் சூழல் காப்புறுதி நிறுவனங்களை அவர்களுடைய பெரும்பாலான செயற்பாடுகளை டிஜிடல் தளங்கள் மூலம் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்வதற்கு செல்வாக்கு செலுத்தியிருந்தாலும், காப்புறுதியாளர்களின் செயற்பாடுகளின் சீரான செயற்பாட்டிற்குப் பௌதீக கிளைகளின் தேவை இன்றியமையாததாக அமைந்திருந்தது. எனினும், இவ்வருடத்தினுள், சில காப்புறுதியாளர்கள் தங்களுடைய கிளைகளை மீள்கட்டமைப்பு செய்தமையினால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கிளைகளின் எண்ணிக்கையானது குறைவடைந்துள்ளது. நாட்டின் அதிக பூட்கையாளர்களைக் கொண்டுள்ள மேல் மாகாணத்திலும் அதனைத் தொடர்ந்து தென் மற்றும் வட மேல் மாகாணத்திலுமே அதிக எண்ணிக்கையான கிளைகள் உள்ளன. 2020ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தக் கிளைகளில் 965 நீண்ட கால காப்புறுதிக் கிளைகளும், 837 பொதுக் காப்புறுதிக் கிளைகளும் 151 கலவைக் காப்புறுதிக் கிளைகளும் உள்ளடங்குகின்றன. 2020ஆம் ஆண்டில் காப்புறுதித் துறையின் ஊழியர்கள் மொத்தம் 19,571 ஆக இருந்தனர், இதில் 11,067 நபர்கள் பொதுக் காப்புறுதி நிறுவனங்களிலும், 5,838 நபர்கள் நீண்ட கால காப்புறுதி நிறுவனங்களிலும், 2,666 நபர்கள் கலவைக் காப்புறுதி நிறுவனங்களிலும் பணிபுரிகின்றனர். பெரும்பாலான கிளைகள் மற்றும் தலைமைக் காரியாலயங்கள் மேல் மாகாணத்தில் அமைந்துள்ளதால், இது காப்புறுதித் துறையின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 60% வீதத்தை விட அதிகமாக உள்ளது.

அட்டவணை 6இல் காட்டப்பட்டுள்ளபடி, 2020ஆம் ஆண்டின் இறுதியில் காப்புறுதித்துறையில் சேவை செய்யும் முகவர்களின் மொத்த எண்ணிக்கை 42,719 ஆக பதிவாகியுள்ளது, இது 2019 இல் இருந்த முகவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் சிறிது சரிவைக் காட்டியுள்ளது. ஏஐஏ லைப், சிலிங்கோ லைப், யூனியன் லைப் போன்ற காப்புறுதி நிறுவனங்கள் புதிய ஆட்சேர்ப்பு மூலம் தங்கள் முகவர் படையை அதிகரித்திருந்தாலும், ஒரு பெரிய கலவைக் காப்புறுதியாளர் ஒரு வருடத்தில் கணிசமான எண்ணிக்கையிலான முகவர்களை தகுதியின்மை, மோசமான செயற்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் நீக்கியுள்ளது. 2020ஆம் ஆண்டின் இறுதியில், நீண்ட கால காப்புறுதி நிறுவனங்களில் 59.40% வீத முகவர்களும் பொதுக் காப்புறுதி நிறுவனங்களில் 31.95% வீத முகவர்களும் காணப்பட்டனர்.

**அட்டவணை 6**

**31 டிசம்பர் 2020 மற்றும் 31 டிசம்பர் 2019 அன்று கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை**

| மாகாணம் | கிளைகளின் எண்ணிக்கை | | ஊழியர்களின் எண்ணிக்கை | | காப்புறுதி முகவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2019 | 2020 | 2019 | 2020 |
| மத்திய மாகாணம் | 211 | 207 | 1,158 | 1,214 | 4,036 | 3,741 |
| கிழக்கு மாகாணம் | 134 | 126 | 682 | 605 | 2,151 | 2,112 |
| வட மத்திய மாகாணம் | 146 | 137 | 725 | 663 | 2,478 | 2,520 |
| வட மேல் மாகாணம் | 221 | 221 | 1,263 | 1,244 | 4,212 | 4,676 |
| வட மாகாணம் | 144 | 133 | 613 | 615 | 2,805 | 2,683 |
| சப்பரகமுவ மாகாணம் | 171 | 148 | 872 | 835 | 3,347 | 3,088 |
| தென்மாகாணம் | 250 | 242 | 1,559 | 1,527 | 4,848 | 5,124 |
| ஊவா மாகாணம் | 122 | 107 | 634 | 580 | 2,430 | 2,153 |
| மேல் மாகாணம் | 670 | 632 | 12,335 | 12,288 | 18,691 | 16,622 |
| **மொத்தம்** | **2,069** | **1,953** | **19,841** | **19,571** | **44,998** | **42,719** |

**வரைபடம் 4**

**31 டிசம்பர் 2020 அன்று கிளைகள், ஊழியர்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை**



#### காப்புறுதிக் கம்பனிகளின் விநியோக ஊடகம்

இலங்கையின் காப்புறுதித் துறையானது, வேகமாக மாறிவரும் வியாபாரச் சூழல் காரணிகளின் விளைவாக, தவணைக் கட்டண விநியோக முறைகளில் பல அபிவிருத்திகளை அண்மையில் அனுபவித்துள்ளது. பல ஆண்டுகளாகத் தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றம், காப்புறுதித் தயாரிப்புகளை வாங்க வாடிக்கையாளர்களினால் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தளங்களின் பயன்பாட்டை மேம்படுத்தும் முக்கிய காரணியாக உள்ளது. தற்போதைய கோவிட் - 19 நெருக்கடியானது பாரம்பரிய விநியோக முறைகளுக்குப் பதிலாக மாற்று வழிகளைத் தேடுவதற்குக் காப்புறுதியாளர்களை மேலும் உந்துவிக்கின்றது.

வரைபு 05 இன்படி, நீண்டகால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் ஆகிய இரண்டின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டண உருவாக்கத்திற்கான முகவர்களின் பங்களிப்பு ஆண்டு முழுவதும் சரிவைச் சந்தித்துள்ளது, இருப்பினும் ஒட்டுமொத்த தவணைக் கட்டண விநியோகத்தில், குறிப்பாக நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் அவர்கள் தொடர்ந்து ஆதிகம் செலுத்துகின்றனர். வங்கி உத்தரவாத ஊடகத்தின் படி, சமீப காலத்தில் நீண்டகால காப்புறுதியாளர்கள் மத்தியில் மேம்படுத்தப்பட்டுள்ளது மற்றும் அதன் விளைவு வரைபு 05 இல் காணக்கூடியதாக உள்ளது, ஏனெனில் நீண்டகால தவணைக் கட்டண விநியோகத்திற்கான வங்கிக் காப்பீட்டின் பங்களிப்பு 2020இல் 8.19% வீதத்தில் இருந்து 14.39% வீதமாக அதிகரித்திருந்தது. இந்த வருடத்தினுள் வங்கி உத்தரவாத ஊடகத்தின் ஊடாக விநியோகிக்கப்பட்ட பிரதான காப்புறுதி வகைகளில் குறைந்துவரும் நியதி உத்தரவாதப் பூட்கைகள் பிரதானமாக அமைந்திருந்தது.

மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமான உருவாக்கத்திற்குப் பொதுக் காப்புறுதி வியாபாரத்தைச் சேர்ந்த முகவர்கள், தரகர்கள், சந்தைப்படுத்தல் அலுவலர்கள் போன்ற விசேட விற்பனைப் படையினர் மற்றும் நேரடி வியாபாரம் என்பவர்களின் பங்களிப்பு 2020 மற்றும் 2019இல் நடுநிலையான அசைவினைக் கொண்டிருந்தது.

நேரடி வியாபாரம் பிரதானமாக அதனுடைய காப்புறுதி வகைகளின் தன்மை காரணமாக அரசாங்க காப்புறுதித் திட்டங்கள் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஏனைய தவணைக் கட்டணங்களை உள்ளடக்கியிருந்ததுடன் மேலும் வருகை தரும் வாடிக்கையாளர்கள், கைத்தொலைபேசி பிரயோகங்கள் மற்றும் இணையத்தையும் உள்ளடக்கியிருந்தது. 2020ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதி நிறுவனங்களின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 25.07 ஆகக் காணப்பட்டது, அதேசமயம் தொடர்புடைய குழு நிறுவனங்களால் விநியோகிக்கப்படும் தவணைக் கட்டணங்கள் அந்த ஆண்டில் அதே அளவில் இருந்தன.

**வரைபடம் 5**
**காப்புறுதிக் கம்பனிகளின் விநியோக ஊடகங்கள்**




| | நீண்ட கால | பொது | நீண்ட கால | பொது |
|---|---|---|---|---|
| | 2019 | | 2020 | |
| முகவர்கள் | 85.69 | 28.16 | 80.18 | 25.13 |
| தரகர்கள் | 1.14 | 17.45 | 1.27 | 18.47 |
| முகவர்கள் தவிர்ந்த நிறைவேற்று விற்பனைப் படை | 0.49 | 19.53 | 0.64 | 20.42 |
| நேரடி | 3.04 | 24.36 | 2.31 | 25.07 |
| வங்கிக்காப்புறுதி | 8.19 | 3.07 | 14.39 | 3.40 |
| தொடர்புடைய/ குழுக் கம்பனிகள் | 1.44 | 7.07 | 1.20 | 7.06 |
| ஏனையவை | 0.00 | 0.37 | 0.00 | 0.46 |

#### நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

#### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

கோவிட் 19 நோய்ப்பரவலை கட்டுப்படுத்துவதற்கு முடக்கல், தனிமைப்படுத்தல் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் உள்ளிட்டவற்றை உள்ளடக்கிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன. இந்த மிகவும் சவாலான காலகட்டத்தின் மத்தியிலும் காப்புறுதியாளர்களினால் 2020ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் இ.ரூபா 102,974 மில்லியனுடன் (2019: இ.ரூபா 88,787 மில்லியன்) 15.98% (2019:10.58%) வளர்சியைப் பதிவுசெய்ய முடிந்தது, இது கோவிட்-19 இன் நோய்ப்பரவலின் பொருளாதார மற்றும் சமூகத் தாக்கத்தைக் கருதுகையில் போற்றத்தக்கவொன்றாகும். தொழில்நுட்ப வளர்ச்சிகள் மற்றும் டிஜிடல் மயமாக்கல், இயங்கு மாதிரிகளின் மறுசீரமைப்பு மூலம் மேம்பட்ட செயற்பாட்டுத்திறன், புதிய பண்டப் புத்தாக்கம் போன்றவற்றை இந்தக் கொந்தளிப்பான சூழலில் ஒரு போட்டித்தன்மையைப் பெறுவதற்கும், நேர்மறையான திசையில் உந்துதலைத் தக்கவைப்பதற்குக் காப்பீட்டாளர்கள் பயன்படுத்தினர். மேலும், ஆயுட் காப்புறுதியின் ஊடாக இடர்களை குறைத்துக்கொள்ள முடியும் எனும் விழிப்புணர்வு நோய்ப்பரவல் காலத்தில் சற்று மேம்பட்டதனால், இது ஆயுள் காப்புறுதியாளர்களின் செயலாற்றுகையில் நேர்மறையான தாக்கத்தை விளைவித்தது.

நீண்டகால காப்புறுதிக் கைத்தொழிற்துறை 13 நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளையும் 02 கலவைக் காப்புறுதியாளர்களையும் இணைத்து மிகவும் போட்டித்தன்மையுள்ள சந்தையைத் தொழிற்படுத்தியது. நான்கு

கம்பனிகள் வெளிநாட்டுக் காப்புறுதிக் கம்பனிகளுடன் சேர்ந்தியங்கின.

தொழிற்துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சி விகிதம் கடந்த சில ஆண்டுகளாகக் கீழ் நோக்கிய பாதையைச் சந்தித்து வருகின்றது. எவ்வாறாயினும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், ஆயுள் காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் கடந்த ஐந்து ஆண்டுகளில் இரண்டாவது மிக உயர்ந்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சி விகிதத்தைப் பதிவுசெய்து துரிதமான விகிதத்தில் வளர்ந்தது. மதிப்பின் அடிப்படையில், எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 2016 தொடக்கம் 2020 வரை 62.22% வீதத்தினால் அதிகரித்துள்ளது.

அத்துடன், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் ஊடுறுவல் மட்டமானது தொடர்ந்தும் தட்டையான விளைவினையே பிரதிபலிக்கின்றது. சந்தைப் பிரிவுகளின் வளர்ந்து வரும் போக்குகளை நிவர்த்தி செய்தல், தொழில்நுட்ப முன்னேற்றங்களை மேம்படுத்துதல், கோவிட் - 19 மற்றும் வேகமான பொருளாதார மீட்சியின் வெற்றியுடன் இணைந்த டிஜிட்டல்மயமாக்கல் ஆகியவை காப்புறுதியாளர்களுக்கு விரிவாக்கத்திற்கான வாய்ப்புகளை வழங்கும். இருப்பினும், கோவிட் - 19 தொற்றுநோயிலிருந்து வெளிப்படும் அதிர்ச்சிகளும் சவால்களும் அடுத்த சில ஆண்டுகளில் தொடரும்.

அட்டவணை 7 நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளின் கம்பனி ரீதியான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் மற்றும் சந்தைப் பங்கினை விளக்குகின்றது.

**அட்டவணை 7**
**கம்பனி ரீதியான எழுதப்பட்ட தவணைக் கட்டணம் மற்றும் சந்தைப் பங்கு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 2016 | | 2017 | | 2018 | | 2019 (அ) | | 2020 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா) | சந்தைப் பங்கு (%) |
| ஏஐஏ லைப் | 10,103,915 | 15.92 | 11,510,581 | 16.08 | 12,739,351 | 15.87 | 13,848,283 | 15.60 | 14,049,559 | 13.64 |
| எலைன்ஸ் லைப் | 1,040,269 | 1.64 | 1,178,817 | 1.65 | 1,301,254 | 1.62 | 1,403,858 | 1.58 | 1,476,069 | 1.43 |
| அமான லைப் | 820,727 | 1.29 | 792,174 | 1.11 | 827,948 | 1.03 | 851,293 | 0.96 | 767,232 | 0.75 |
| ஆர்பிகோ | 745,386 | 1.17 | 1,038,085 | 1.45 | 1,387,432 | 1.73 | 1,633,156 | 1.84 | 1,863,046 | 1.81 |
| சிலிங்கோ லைப். | 15,027,600 | 23.67 | 15,765,484 | 22.03 | 17,812,774 | 22.18 | 18,718,553 | 21.08 | 22,076,250 | 21.44 |
| கோப்லைப் | 466,997 | 0.73 | 626,972 | 0.88 | 619,881 | 0.77 | 772,782 | 0.87 | 774,517 | 0.75 |
| எச்என்பி லைப் | 3,554,078 | 5.60 | 3,963,642 | 5.54 | 4,420,513 | 5.51 | 5,175,044 | 5.83 | 5,487,039 | 5.33 |
| ஜனசக்தி லைப் | 2,943,963 | 4.64 | 2,902,873 | 4.06 | 3,008,842 | 3.75 | 3,511,660 | 3.96 | 3,767,023 | 3.66 |
| எல்ஐசி | 473,867 | 0.75 | 582,114 | 0.81 | 522,698 | 0.65 | 598,896 | 0.67 | 714,127 | 0.69 |
| எல்ஓஎல்சி லைப் | 1,896,558 | 2.99 | 2,467,166 | 3.45 | 2,610,785 | 3.25 | 2,682,522 | 3.02 | 3,236,480 | 3.14 |
| எம்பிஎஸ்எல் | 235,533 | 0.37 | 123,732 | 0.17 | 65,839 | 0.08 | 54,757 | 0.06 | 40,996 | 0.04 |
| சனச லைப் | 367,637 | 0.58 | 454,056 | 0.62 | 521,193 | 0.65 | 537,171 | 0.61 | 694,455 | 0.67 |
| எஸ்எல்ஐசி | 11,893,640 | 18.74 | 12,517,119 | 17.49 | 13,205,802 | 16.45 | 14,820,025 | 16.69 | 19,257,997 | 18.70 |
| சொப்ட்லொஜிக் லைப் | 5,635,701 | 8.88 | 7,530,935 | 10.52 | 10,005,733 | 12.46 | 12,531,283 | 14.11 | 15,660,116 | 15.21 |
| யூனியன் லைப் | 8,270,751 | 13.03 | 10,117,630 | 14.14 | 11,243,915 | 14.00 | 11,647,757 | 13.12 | 13,108,605 | 12.73 |
| **மொத்தம்.** | **63,476,622** | **100** | **71,571,380** | **100** | **80,293,960** | **100** | **88,787,041** | **100** | **102,973,511** | **100** |
| வளர்ச்சி வீதம் (%) | **18.23** | | **12.75** | | **12.19** | | **10.58** | | **15.98** | |

கடந்த ஆண்டினைப் போலவே, 2020இல் சிலிங்கோ லைப் நிறுவனத்தினால் இ.ரூபா 22,076 மில்லியன் (2019: இ.ரூபா 18,719 மில்லியன்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை உருவாக்கியதன் மூலம் சந்தை முன்னணியாளர் எனும் நிலையைத் தக்க வைத்துக்கொள்ள முடிந்ததுடன், இது மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 21.44% (2019: 21.08%) வீதமாகும்.

குழு ஆயுள் வியாபாரம் மற்றும் ஓய்வூதியத் திட்டமிடல் பிரிவுகளில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் மிக உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்யும் அதேவேளையில், சந்தைப் பங்கில் சரிந்துவரும் போக்கை நிறுவனம் சற்று சமாளிக்க முடிந்தது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஸொப்ட்லொஜிக் லைப் என்பன 2020ஆம் ஆண்டில் முறையே இ.ரூபா 19,258 மில்லியன் (2019: 14,820 மில்லியன்) மற்றும் இ.ரூபா 15,550 மில்லியனை (2019: இ.ரூபா 12,51 மில்லியன்) எழுதப்பட்ட தவணைக் கட்டணமாகப் பெற்றுக்கொண்டதன் ஊடாக சந்தைப் பங்கில் முறையே 18.70% (2019: 16.69%) மற்றும் 15.21% (2019: 14.11%) வீதத்தைப் பெற்று இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுக்கொண்டன. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்கு 0.24% வீதத்தினால் சற்று அதிகரித்துள்ளது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மீளாய்வின் கீழ் வருடத்தில் 29.95% வருமான வளர்ச்சியுடன் ஒரு வலுவான வளர்ச்சி வேகத்தை வெளிப்படுத்தியது. அதேபோன்று, ஸொப்ட்லொஜிக் லைப் ஆனது ஏஐஏ இனை விஞ்சி மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டண அடிப்படையில் சந்தையில் மூன்றாவது இடத்தைப் பிடித்ததன் மூலம் அதன் அதிவேக வளர்ச்சி வேகத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் நிறுவனம் தொடர்ந்து இரட்டை இலக்க வளர்ச்சியைப் பராமரித்தது, கோவிட்- 19இலிருந்து தலைகீழாக எழுந்த போதிலும், அதன் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டத்தை கடந்த ஆண்டைப் போலவே 24.97% வீதத்தினால்

மேம்படுத்தியுள்ளது. டிஜிடல் மாற்றத்துடன் இணைந்த விநியோக ஊடகங்களின் மேம்படுத்தல், வளர்ச்சியை வழங்குவதற்குக் கடினமான காலங்களில் செல்ல நிறுவனத்தை இயக்கியது.

இந்த மூன்று நிறுவனங்களும் மொத்த சந்தைப் பங்கில் 55.35% (2019:452.89%) பங்களித்தன, இது அவர்களின் நெகிழ்வுத்தன்மைக்குச் சான்றாகும். இ.ரூபா 14,050 மில்லியன் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் (2019: இ.ரூபா 13,848 மில்லியன்) மற்றும் 13.64% (2019:15.60%) வீத சந்தைப் பங்குடன் ஏஐஏ நான்காவது இடத்தில் உள்ளது. மொத்த தவணைக் கட்டணத்தின் அடிப்படையில் நிறுவனம் சற்று விரிவடைந்திருந்தாலும், கடந்த சில ஆண்டுகளாக அவர்கள் பராமரித்து வந்த மூன்றாவது சந்தை நிலையைப் பாதுகாக்க இது போதுமானதாக இல்லை, ஆனால் சந்தைப் பங்கு மற்றும் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சி வீதத்தில் மேலும் சுருங்கியது. யூனியன் லைப் 2019 உடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது மற்றும் உலகளாவிய ஆயுள் பிரிவின் மூலம் பெருமளவில் உயர்த்தப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டண மதிப்புள்ள இ.ரூபா 13,109 மில்லியன் (2019: இ.ரூபா 11,648 மில்லியன்) பதிவு செய்யப்பட்டது. முந்தைய ஆண்டைப் போலவே யூனியன் லைப் 12.73% (2019:13.12%) சந்தைப் பங்குடன் சந்தையில் ஐந்தாவது இடத்தைப் பிரகடனப்படுத்தியது.

சனச லைப், எல்ஓஎல்சி லைப், எல்ஐசீ மற்றும் ஆர்பிகோ ஆகியவற்றிலிருந்து முறையே 29.28%, 20.65%, 19.24% மற்றும் 14.08% ஆகிய குறிப்பிடத்தக்க வளர்ச்சி விகிதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், அமானா லைப் மற்றும் எம்பிஎஸ்எல் தவிர அனைத்து ஆயுள் காப்புறுதியாளர்கள் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டண அடிப்படையில் வளர்சியை வெளிப்படுத்தினர், இது நெருக்கடியைத் தாங்கும் திறன் மற்றும் அவர்களின் வியாபார தொடர்ச்சித் திட்டமிடலின் செயற்திறனைக் குறிக்கின்றது.

விளக்கப்படம் 6 ஒவ்வொரு நீண்ட கால காப்புறுதியாளர்களினதும் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் சந்தைப் பங்கினை விளக்குகின்றது.

**வரைபடம் 6**

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் கம்பனி ரீதியான சந்தைப் பங்குகள் - 31 டிசம்பர் 2020ஆம் திகதியன்று நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கான முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் ஏனைய காப்புறுதியாளர்களும் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2016இல் இருந்து 2020 வரையான காலப்பகுதி வரை மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு பங்களிப்பு செய்த முதல் ஐந்து பங்களிப்பாளர்ளையும் ஏனைய காப்புறுதியாளர்களையும் வரைபு 7 விளக்குகின்றது.

நீண்ட கால காப்புறுதி கைத்தொழிற்துறையின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் இ.ரூபா 84,153 மில்லியன் (2019 இ.ரூபா 71,566 மில்லியன்) பெறுமதியான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பெற்று 81.72% வீதத்தைப் பதிவு செய்கின்ற அதேவேளையில், ஏனைய 10 காப்புறுதியாளர்களும் இ.ரூபா 18,821 மில்லியனைப் (2019:இ.ரூபா 17,221 மில்லியன்) பெற்று 18.28மூ (2019: 19.40%) வீதத்தைப் பதிவு செய்தனர். சிலிங்கோ லைப், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ஸொப்ட் லொஜிக் லைப், ஏஐஏ லைப், மற்றும் யூனியன் லைப் என்பன நீண்ட கால காப்புறுதி சந்தைப் பங்கில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஆதிக்க ஆட்டக்காரரான, சிலிங்கோ லைப் பல வருடங்களாக முதன்மை தானத்தில் இருந்து வாடிக்கையாளர்களுக்குச் சேவையை வழங்கி வருகின்றதுடன் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் குறைந்துவரும் போக்கை வெளிப்படுத்திய சந்தைப் பங்கிலிருந்து சற்று மீண்டு வந்துள்ளது. இரண்டாவது பங்களிப்பாளரான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2020இல் குறிப்பிட்டளவில் தனது வருமானத்தை அதிகரித்ததன் ஊடாக தனது சந்தைப் பங்கினை சற்று அதிகரித்துக் கொண்டுள்ளதுடன் இரண்டாம் இடத்தையும் தக்கவைத்துக்கொண்டுள்ளது. ஸொப்ட் லொஜிக் லைப், 2020 மற்றும் 2019 களில் ஏஐஏ மற்றும் யூனியன் லைப் என்பவற்றினைப் பின் தள்ளி தொடர்ச்சியாக முன்னேறி சந்தைப் பங்கினைக் கைப்பற்றி சந்தைப் பங்கில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. அதற்கமைவாக ஏஐஏ மற்றும் யூனியன் லைப் என்பன 2020 இல் நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களில் தரப்படுத்தப்பட்டன.

இந்த ஐந்து ஆட்டக்காரர்களும் அவர்களுடைய சந்தைப் பங்கினை 2019 உடன் ஒப்பிடுகையில் 2020 இல் 1.12% வீதத்தினால் சற்று அதிகரித்துக் கொண்டதன் விளைவாக முதல் மூன்று செயற்திறன் மிக்கவர்களினால் காட்டப்படும் செறிவூட்டப்பட்ட சந்தை பங்கு வளர்ச்சியின் விளைவாக மீதமுள்ள பத்து வீரர்களின் பங்கு 19% வீதத்திற்கு அதிகமாக இருந்தது.

வரைபடம் 7

**2016இல் இருந்து 2020 வரை முதல் ஐந்து பங்களிப்பாளர்களும் ஏனைய காப்புறுதியாளர்களும் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




| | சிலிங்கோ லைப் | எஸ்எல்ஐசி | சொப்ட்லொஜிக் லைப் | ஏஐஏ லைப் | யூனியன் லைப் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 2016 | 23.67 | 18.74 | 8.88 | 15.92 | 13.03 | 19.76 |
| 2017 | 22.03 | 17.49 | 10.52 | 16.08 | 14.14 | 19.74 |
| 2018 | 22.18 | 16.45 | 12.46 | 15.87 | 14.00 | 19.04 |
| 2019 (அ) | 21.08 | 16.69 | 14.11 | 15.60 | 13.12 | 19.40 |
| 2020 (ஆ) | 21.44 | 18.70 | 15.21 | 13.64 | 12.73 | 18.28 |

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதிக்குச் செலுத்திய தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைத்துக்கொள்ளல் வீதம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

2020 இல், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 20.90% (2019: 24.10%) வீத பங்குபற்றல் வியாபாரத்தையும், 41.32% (2019: 36.46%) வீத பங்குபற்றாத வியாபாரத்தையும், 36.15% (2018: 37.31%) வீத யுனிவேர்சல் லைபையும் 1.63% (2019: 2.13%) வீத இணைக்கப்பட்ட நீண்ட கால வியாபாரத்தையும் உள்ளடக்கியிருந்தது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் சிலிங்கோ லைப் முறையே 48.51% மற்றும் 28.12% மதிப்புள்ள போர்ட்போலியோக்களை வைத்திருப்பதன் மூலம் பங்குபற்றும் வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தியது மற்றும் மொத்தமாக சந்தையில் 76.63% பங்கைக் கொண்டுள்ளது.

ஸொப்ட் லொஜிக் லைப், சிலிங்கோ லைப் மற்றும் இலங்கை காப்பறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவை கூட்டாக 73.16% பங்குபெறாத போர்ட்போலியோவைக் கொண்டிருந்தன, அதே நேரத்தில் உலகளாவிய ஆயுள் வருமானமானது ஏஐஏ, யுனியன் லைப் மற்றும் சிலிங்கோ லைப் ஆகியவற்றால் 74.30% வீத பங்குடன் வழிநடத்தப்பட்டது. மீள்காப்புறுதியாளர்களுக்கு கொடுக்கப்பட்ட தவணைக் கட்டணம் இ.ரூபா 4,716 மில்லியன் (2019:இ.ரூபா 3,692 மில்லியன்) 2020 ஆம் ஆண்டில் ஆண்டுக்கு 27.73% வீத அதிகரிப்புடன் இருந்தது, முக்கியமாக பங்குபெறாத வியாபாரத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சிக்கு ஏற்ப உள்ளது. ஆயுள் காப்புறுதி வியாபாரத்தின் ஒட்டுமொத்த தக்கவைப்பு விகிதம் 95.42% (2019:95.84%) வீதமாக உள்ளது.

அட்டவணை 8

**நீண்ட கால காப்புறுதி வியாபாரம் தொடர்பான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள்காப்புறுதிக்கு செலுத்திய தவணைக் கட்டணம் மற்றும் தக்கவைத்துக்கொள்ளல் வீதங்களின் வகைகள் ரீதியான பகுப்பாய்வு**

| வகுப்பு | 2018 | | | 2019 (அ) | | | 2020 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | மீள்காப்புறுதி யாளர்களுக்கு வழங்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | தக்க வைத்தல் வீதம் (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | மீள்காப்புறுதி யாளர்களுக்கு வழங்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | தக்க வைத்தல் வீதம் (%) | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | மீள்காப்புறுதி யாளர்களுக்கு வழங்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | தக்க வைத்தல் வீதம் (%) |
| பங்குபற்றல் | 20,560,064 | 152,573 | 99.26 | 21,394,970 | 156,759 | 99.27 | 21,521,712 | 165,184 | 99.23 |
| பங்குபற்றாத | 30,922,561 | 2,214,357 | 92.84 | 32,370,493 | 2,977,659 | 90.80 | 42,549,552 | 3,994,144 | 90.61 |
| யுனிவேர்சல் லைப் | 26,751,609 | 900,185 | 96.64 | 33,129,499 | 473,575 | 98.57 | 37,227,884 | 484,876 | 98.70 |
| அலகு இணைக்கப்பட்டது | 2,059,725 | 98,671 | 95.21 | 1,892,079 | 84,245 | 95.55 | 1,674,363 | 71,743 | 95.72 |
| மொத்தம் | **80,293,960** | **3,365,786** | **95.81** | **88,787,041** | **3,692,237** | **95.84** | **102,973,511** | **4,715,946** | **95.42** |

## நீண்ட கால காப்புறுதி வியாபாரங்களின் சொத்துக்கள்

அட்டவணை 9இல் வெளிப்படுத்தியவாறு, நீண்ட கால காப்புறுதியாளர்கள் தங்கள் சொத்து போர்ட்/போலியோவிற்கு கூடுதல் மதிப்பைச் சேர்த்துள்ளனர், இது ஆயுள் காப்புறுதித்துறையின் மொத்த சொத்துகள் 16.21% (2019: 12.62%) வீதத்தினால் வளர்ச்சி அடைந்துள்ளது மற்றும் மொத்த சொத்துக்களின் பெறுமதி இ.ரூபா 563,769 மில்லியன் (2019: இ.ரூபா 485இ121 மில்லியன்) ஆகும்.

அட்டவணை 9இல் வெளிப்படுத்தியவாறு, நீண்ட கால காப்புறுதித்துறையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சொத்துக்களில் அதிக பங்கைக் கோரியதுடன், அதைத் தொடர்ந்து, சிலிங்கோ லைப் இருந்ததுடன், இரண்டும் இணைந்து காப்புறுதித் தொழிற்துறையின் மொத்த சொத்துக்களில் 55.15% வீதத்தைப் (2019: 56.50%) பெற்றிருந்தது. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மொத்த சொத்துக்கள் 28.40% வீதப் (2019: 29.04%) பங்குடன் இ.ரூபா 160,110 மில்லியனாக (2019: இ.ரூபா 140,882 மில்லியன்) சீராக மேம்பட்டது, அதேசமயம் சிலிங்கோ லைப் இன் மொத்த சொத்துகள் 13.20% வீதத்தினால் சீராக வளர்ச்சியடைந்து இ.ரூபா 150,801 மில்லியனைப் பெற்று சந்தையில் 26.75% (2019: 27.46%) வீதத்தை பெற்றுக்கொண்டது. ஏஐஏ மற்றும் யூனியன் லைப் என்பன மொத்த சொத்துகளாக முறையே இ.ரூபா 72,389 மில்லியன் (2019: இ.ரூபா 61,973 மில்லியன்) மற்றும் இ.ரூபா 62,600 மில்லியன் (2019: இ.ரூபா 55,249 மில்லியன்) ஐப் பதிவு செய்ததன் ஊடாக குறிப்பிடத்தக்க பகுதியைப் பெற்றுக்கொண்டு தொடர்ந்தும் சந்தையில் மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களில் இருந்தன. இந்த நான்கு கம்பனிகளும் இணைந்து மொத்த சொத்துகளில் 79.09% (2019:80.66%)வீதத்தை தம்வசம் வைத்திருந்ததுடன், 2019 உடன் ஒப்பிடுகையில் இது சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

ஸொப்ட்லொஜிக் லைப் அதன் சொத்துப் பட்டியலை வருடத்திற்கு வருட அடிப்படையில் 2020 இல் 60.55% வீதத்தினால் அதிகரித்தது, இதற்கு நிதியியல் மீள்காப்புறுதித் திட்டம் மற்றும் துணைக்கடன் உட்செலுத்தல் என்பன காரணமாக அமைந்தன. கம்பனி எச்என்பி லைப் மற்றும் ஜனசக்தி லைப் என்பவற்றினைப் பின்னுக்குத் தள்ளி சந்தையில் மொத்தச் சொத்துக்களில் ஐந்தாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது

எச்என்பி லைப் மற்றும் ஜனசக்தி லைப் என்பன ஆறாம் மற்றும் ஏழாம் இடங்களை மொத்த சொத்துக்களாக முறையே இ.ரூபா 26,043 மில்லியன் (2019:இ.ரூபா 22,152 மில்லியன்) மற்றும் இ.ரூபா 25,314 மில்லியன் (2019:இ.ரூபா 22,502 மில்லியன்) அடைந்ததன் மூலம் பெற்றுக் கொண்டன. புதிய வணிகத்திற்கு உத்தரவாதம் அளிக்காமல் ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதன் மூலம் மட்டுமே ஒரு சொத்துப்பட்டியலை இயக்கத் திட்டமிட்டுள்ள எம்பிஎஸ்எல் ஐத் தவிர அனைத்து ஆயுள் காப்புறுதி நிறுவனங்களும் தங்கள் சொத்துப் பட்டியலுக்கு கூடுதல் பெறுமதியைச் சேர்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எல்ஓஎல்சீ லைப் மற்றும் எலைன்ஸ் லைப் என்பன சவால்களுக்கு மத்தியிலும் 20% வீதத்திற்கு அதிகமான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளன. வரைவு 8 மொத்த சொத்துக்களின் கம்பனி ரீதியிலான பகுப்பாய்வை விளக்குகின்றது.

அட்டவணை 9

**நீண்டகால காப்புறுதி வியாபாரக் கம்பனிகளின் மொத்த சொத்துகள் ரீதியிலான பகுப்பாய்வு**

| காப்புறுதியாளர் | 2019 (அ) | | 2020 (அ) | |
|---|---|---|---|---|
| | (இ.ரூபா '000) | % | (இ.ரூபா '000) | % |
| ஏஐஏ லைப் | 61,973,402 | 12.77 | 72,388,786 | 12.84 |
| எலைன்ஸ் லைப் | 6,311,049 | 1.30 | 7,757,708 | 1.38 |
| அமான லைப் | 2,924,488 | 0.60 | 3,078,357 | 0.55 |
| ஆர்பிகோ | 3,647,798 | 0.75 | 4,356,605 | 0.77 |
| சிலிங்கோ லைப். | 133,211,402 | 27.46 | 150,801,381 | 26.75 |
| கோப்லைப் | 3,065,143 | 0.63 | 3,497,823 | 0.62 |
| எச்என்பி லைப் | 22,152,377 | 4.57 | 26,042,871 | 4.62 |
| ஜனசக்தி லைப் | 22,502,244 | 4.64 | 25,314,226 | 4.49 |
| எல்ஐசி | 3,114,846 | 0.64 | 3,345,474 | 0.59 |
| எல்ஓஎல்சி லைப் | 5,985,833 | 1.23 | 7,752,075 | 1.38 |
| எம்பிஎஸ்எல் | 1,233,715 | 0.25 | 1,190,121 | 0.21 |
| சனச லைப் | 2,185,160 | 0.45 | 2,326,417 | 0.41 |
| எஸ்எல்ஐசி | 140,881,506 | 29.04 | 160,110,048 | 28.40 |
| சொப்ட்லொஜிக் லைப் | 20,682,874 | 4.26 | 33,206,203 | 5.89 |
| யூனியன் லைப் | 55,249,152 | 11.39 | 62,600,409 | 11.10 |
| **மொத்தம்** | **485,120,989** | **100** | **563,768,504** | **100** |

வரைபடம் 8

**31 டிசம்பர் 2019 மற்றும் 2020 அன்று நீண்டகால காப்புறுதி வியாபாரக் கம்பனிகளின் மொத்த சொத்துக்கள் ரீதியான பகுப்பாய்வு**



**31 டிசம்பர் 2019 மற்றும் 2020ஆம் திகதியன்று சொத்துக்களின் செறிவு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 10 மற்றும் விளக்கப்படம் 9 என்பன 31 டிசம்பர் 2019 மற்றும் 2020ஆம் திகதியன்று வேறுபட்ட சொத்துக்களின் வகைப்படுத்தலுக்கிடையில் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்கள் தொடர்பான விரிவான தகவல்களை வழங்குகின்றன

அட்டவணை 10இல் காட்டப்பட்டவாறு, கடந்த ஆண்டுகளைப் போலவே, நீண்ட கால காப்புறுதியாளர்கள் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலும் திரவத்தன்மையைப் பேணுவதற்காகவும் தங்கள் முதலீடுகளை அரசாங்க கடன் பிணையங்களில் முதலீடு செய்தனர். அதனால், அரசாங்க கடன் பத்திரங்களின் பெறுமதி இ.ரூபா 243,567 மில்லியன் (2019: இ.ரூபா 192,16 மில்லியன்) ஆவதுடன், தொடர்ந்தும் பிரதான பங்கினைக் கொண்டிருந்ததுடன், மொத்த சொத்துக்களில் இது 43.20% (2019: 39.61%) வீதமாகும். ஒரு சிலரைத் தவிர அனைத்துக் காப்புறுதியாளர்களும் அரசாங்கப் பிணையங்களில் தங்கள் முதலீடுகளை மேம்படுத்தியுள்ளனர். இதன் விளைவாக 2020ஆம் ஆண்டில் ஆண்டுக்கு ஆண்டு 26.75% வீதம் எனும் கணிசமான வளர்ச்சி வீதம் கிடைத்தது.

கூட்டிணைந்த கடன் பத்திரங்களில் உள்ள முதலீடுகள், மொத்த சொத்து வகைகளில் 21.59% (2019: 21.97%) வீதமாக இருந்ததுடன், இது ஒரு காப்புறுதியாளரினால் அதிகரிக்கப்பட்ட பெறுமதியின் காரணமாக இ.ரூபா 121,707 மில்லியனை (2019: இ.ரூபா 106,578 மில்லியன்) அடைந்தது. மீண்டும் ஒரு காப்புறுதியாளரினால் வலுவூட்டப்பட்டதன் காரணமாக மூன்றாவது பெரிய சொத்தாக வைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு இ.ரூபா 80,634 மில்லியனாக (2019: இ.ரூபா 76,073 மில்லியன்) 14.30% (2019: 15.68%) வீதத்தினால் அதிகரித்தது. எனினும், சந்தையில் காணப்படும் குறைந்த வட்டி வீதத்தின் தாக்கத்தினால் 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வைப்புகளின் வளர்ச்சி வீதம் குறைவடைந்தது.

உரிமைப் பங்குகளில் முதலீடுகள் இ.ரூபா 38,722 மில்லியனாக (2019: இ.ரூபா 35,860 மில்லியன்) அதிகரித்தது, இது மொத்த சொத்துப் பட்டியலில் 6.87% (2019:7.39%) ஆக உயர்ந்துள்ளது, இது ஆண்டின் பிற்பகுதியில் உரிமைப் பங்குச் சந்தையின் ஈர்ப்பு மற்றும் முன்னேற்றத்தைக் குறிக்கின்றது.

மேற்குறிப்பிட்ட பிரதான முதலீட்டு வகைகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களில் 85.96% (2019:84.65%) வீதத்தைப் பதிவு செய்தன.

அட்டவணை 10

**நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் 31 டிசம்பர் 2019 மற்றும் 2020 அன்று சொத்துக்களின் செறிவு**

| சொத்துகளின் வகை | 2019 (அ) | | 2020 (ஆ) | |
|---|---|---|---|---|
| | இ.ரூபா'000 | % | இ.ரூபா'000 | % |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 192,163,331 | 39.61 | 243,561,027 | 43.20 |
| உரிமைப் பங்குகள் | 35,860,358 | 7.39 | 38,721,989 | 6.87 |
| கூட்டிணைந்த கடன் பத்திரங்கள் | 106,577,870 | 21.97 | 121,706,551 | 21.59 |
| நிலம் மற்றும் கட்டிடங்கள் | 15,670,406 | 3.23 | 16,903,643 | 3.00 |
| வைப்புகள் | 76,072,984 | 15.68 | 80,633,987 | 14.30 |
| அலகு நம்பிக்கைகள் | 5,584,810 | 1.15 | 9,991,046 | 1.77 |
| பூட்கைக் கடன்கள் | 6,822,801 | 1.41 | 6,944,985 | 1.23 |
| ஏனைய சொத்துகள் | 40,610,985 | 8.37 | 38,832,156 | 6.89 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 5,757,443 | 1.19 | 6,473,120 | 1.15 |
| **மொத்தம்** | **485,120,989** | **100** | **563,768,504** | **100** |

வரைபடம் 9

**நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் 31 டிசம்பர் 2019 மற்றும் 2020 அன்று சொத்துக்களின் செறிவு அரச கடன் பிணையங்கள்**




மேலும், ஏனைய சொத்துக்கள் இ.ரூபா 38,832 மில்லியனைப் (2019:இ.ரூபா 40,611 மில்லியன்) பதிவு செய்ததுடன், இது பிரதானமாக பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், கட்புலனாகா சொத்துகள், பூட்கையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணம், கிடைக்க வேண்டிய மீள்காப்புறுதி என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் குறைந்த வட்டி விகிதங்களின் எதிர்மறையான அபாயத்தைத் தணிப்பதற்காக, அலகு நம்பிக்கை கூறுகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு பெரும்பான்மையான நிறுவனங்களினால் செழுமைப்படுத்தப்பட்டன, இது அதன் கணிசமான வளர்ச்சியிலிருந்து தெளிவாகின்றது.

**முதலீட்டு வருமானம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

உயிர்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கோவிட் - 19 தொற்றுநோய் ஆகிய இரண்டிலிருந்து ஏற்பட்ட குறைந்த வட்டி வீத சூழல் மற்றும் நிலையற்ற நிதிச் சந்தைகள் இருந்தபோதிலும், ஒட்டுமொத்த முதலீட்டு வருமானம் 2019இல் இ.ரூபா 43,882 மில்லியனில் இருந்து 2020இல் இ.ரூபா 46,942 மில்லியனாக 6.97% வீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2019இல் சராசரி நீண்ட கால வியாபார முதலீடுகள் இ.ரூபா 480,521 மில்லியன் (2019:இ.ரூபா 414,387 மில்லியன்) ஆனது 15.96% வீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

அரசாங்க கடன் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட சராசரித் தொகையானது, இ.ரூபா 185,235 மில்லியனை (2018:இ.ரூபா 180,218 மில்லியன்) கொண்டு மொத்த சராசரி முதலீட்டில் அதிக பங்கினை வெளிப்படுத்தும் மற்றும் 2018 இல் முதலீகளினால் உருவாக்கப்பட்ட முதலீட்டு வருமானத்தில் அதிகரிப்பை பிரதிபலித்து 10.77% வீத முதலீட்டு வருமானத்தை உருவாக்கியது. அரசாங்க கடன் பிணையங்கள் மற்றும் கூட்டிணைந்த கடன் பத்திரங்கள் என்பவற்றில் முறையே இ.ரூபா 21,851 மில்லியன் (2019:19,947 மில்லியன்) மற்றும் இ.ரூபா 13,087 மில்லியன் (2019:10,422 மில்லியன்) முதலீட்டு வருமானத்தைப் பெற்றுக்கொண்டு மொத்த முதலீட்டு வருமானத்தில் உயர் பங்கினைப் பெற்றுக் கொண்டதுடன், இதனூடாக முறையே இ.ரூபா 217,862 மில்லியன் (2019:184,625 மில்லியன்) மற்றும் இ.ரூபா 114,142 மில்லியன் (2019:93,879 மில்லியன்) சராசரி முதலீட்டினை மேம்படுத்தியது.

இந்த இரண்டு பிரிவுகளும் ஒட்டுமொத்த முதலீட்டு வருமானத்தில் 74.43% வீதத்தை (2019:69.21%) வைத்திருந்ததுடன் அதே முதலீட்டு வருமானம் இரண்டு ஆண்டுகளிலும் முறையே 10% மற்றும் 11% வீதமாக இருந்தது.

வைப்புகள், அளவின் அடிப்படையில் அடுத்த பெரிய வகையாக இருப்பதால், சாரசரி முதலீடான ரூபா 78,353 மில்லியனுக்கு (2019:இ.ரூபா 71,463 மில்லியன்) எதிராக முதலீட்டு வருமானம் இ.ரூபா 8,265 மில்லியன் (2019:இ.ரூபா 9,718 மில்லியன்) ஆகும். அதேவேளையில், 2020இல் நிலவிய வட்டி விகிதங்களின் கீழ்நோக்கிய பாதையின் விளைவாக முதலீட்டு வருமானம் குறைந்து வருவதை இது குறிக்கின்றது. மேலே உள்ள மூன்று, அரசாங்க கடன் பத்திரங்கள், கூட்டிணைந்த கடன் மற்றும் வைப்புகள் இணைந்து மொத்த முதலீட்டு வருமானத்தில் 92.03% (2019: 91.35%) வீதத்தை வைத்திருந்தன. இது 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சந்தையில் வைப்புகளின் வட்டி வீதங்கள் குறைந்து வருவதை வெளிப்படுத்துகின்றது.

உரிமைப் பங்கு மீதான முதலீட்டு வருமானம் 2020இல் இ.ரூபா 2,659 மில்லியனாக (2019: இ.ரூபா 2,895 மில்லியன்) இருந்த அதேவேளையில் அலகு நம்பிக்கை கூறுகளில் இருந்தான முதலீட்டு வருமானம் இ.ரூபா 547 மில்லியனாக (2019: இ.ரூபா 356 மில்லியன்) ஆகும்.
ஒட்டுமொத் முதலீட்டு வருமானம் சராசரியாக 9.77% வீதமாக உள்ளது, இரு 2019இல் பதிவு செய்யப்பட்ட 10.59% வீதத்திலிருந்து வீழ்ச்சியடைந்துள்ளதைக் காட்டுகின்றது.

**அட்டவணை 11**

**முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகளின் சுருக்கம் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| வகை | 2019 (அ) | | 2020 (ஆ) | |
|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (இ.ரூபா'000) | சராசரி வருமானம் (இ.ரூபா'000) | முதலீட்டு வருமானம் (இ.ரூபா'000) | சராசரி வருமானம் (இ.ரூபா'000) |
| **அரசாங்க கடன் பிணையங்கள்** | 19,946,639 | 184,624,538 | 21,850,617 | 217,862,179 |
| - திறைசேரி பிணையங்கள் | 18,777,013 | | 20,379,416 | |
| - திறைசேரி உண்டியல்கள் | 225,989 | | 49,721 | |
| - ஏனையவை (ரிபோ) | 943,637 | | 1,421,480 | |
| **உரிமைப் பங்கு** | 2,894,988 | 35,486,239 | 2,658,670 | 37,291,174 |
| - மூலதன ஈட்டுகை/ நட்டங்கள் | 1,758,695 | | 1,600,473 | |
| - பங்குலாபம் | 1,136,294 | | 1,058,197 | |
| **கூட்டிணைந்த கடன்கள்** | 10,422,441 | 93,879,273 | 13,086,596 | 114,142,211 |
| - பிணையங்கள் மற்றும் தொகுதிக்கடன்கள் | 9,888,815 | | 12,878,534 | |
| - வணிகப் பத்திரம் | 533,625 | | 208,062 | |
| - ஏனைய ஒத்த நிதியியல் கருவிகள் | | | | |
| **நிலம் மற்றும் கட்டிடங்கள்** | 85,313 | 14,638,275 | 89,669 | 16,287,025 |
| **வைப்புகள்** | 9,717,566 | 71,463,073 | 8,264,835 | 78,353,485 |
| - வங்கி | 9,010,752 | | 7,033,581 | |
| - நிதி கம்பனிகள் | 706,814 | | 1,231,254 | |
| **அலகு நம்பிக்கை** | 355,936 | 6,234,848 | 546,577 | 7,787,928 |
| **பூட்கை கடன்கள்** | 322,789 | 6,435,561 | 383,803 | 6,883,893 |
| **ஏனையவை** | 136,517 | 1,625,558 | 61,265 | 1,913,594 |
| **மொத்தம்** | **43,882,190** | **414,387,366** | **46,942,032** | **480,521,489** |
| **முதலீட்டில் உழைக்கப்பட்ட சராசரி** | 10.59% | | 9.77% | |

***குறிப்பு:***
*துணை நிறுவனங்கள் மற்றும் அசோசியேற்றுகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. வருமானத்தை கணிப்பீடு செய்வதற்கு மேலே குறிப்பிட்ட அனைத்து வகைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டது.*

## காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் நிலை - நீண்ட கால காப்பறுதி வியாபாரம்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, காப்புறுதியாளர்களின் மூலதன மட்டங்களைத் திறம்பட நிர்வகிக்கும் நோக்கத்துடன், இடர் அடிப்படையிலா மூலதன மட்டங்களை தொடர்ந்து அளவிடுவதுடன் கண்காணித்து வருகின்றது, இதன் மூலம் முறையாக நிர்வகிக்கப்படும் காப்புறுதித்துறையின் மூலம் காப்புறுதிப் பூட்கையாளர்களின் நலன்களைப் பாதுகாக்கின்றது. இடர் அடிப்படையிலான மூலதன விதிகளின் கீழ், மூலதன போதுமை தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு காப்பறுதியாளர்கள் குறைந்தபட்ச மொத்த கிடைக்கப்பெறும் மூலதனமாக இ.ரூபா 500 மில்லியனையும் 120% வீத மூலதன போதுமை வீதத்தையும் பேணுவதற்கு வேண்டப்படுவர். இருப்பினும், காப்புறுதி வியாபாரத்தின் தன்மை, அளவு மற்றும் சிக்கலான தன்மை மற்றும் அது வெளிப்படுத்தும் அபாயங்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு காப்புறுதியாளர்கள் விவேகமான மூலதனப் போதுமை விகிதம் மற்றும் போதியளவான மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் என்பவற்றை பேணுதல் வேண்டும். அட்டவணைகள் 12,13 மற்றும் 14 என்பன மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் மூலதனப் போதுமை விகிதம், 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்கான இடர் அடிப்படை சார்ந்த விபரங்களை விளக்குகின்றது.

2020ஆம் ஆண்டின் இறுதியில் இடர் அடிப்படையிலா மூலதனத்திற்கு ஆதரவளிப்பதற்கான மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தின் போதுமையை அளவிடும் மூலதன போதுமை விகிதம் மீதான அவசியமான சராசரி 366% (2019: 298%) ஆகும். ஒரு காப்புறுதியாளரைத் தவிர்த்து ஏனைய அனைத்துக் காப்புறுதியாளர்களும் அமுலாக்கல் மட்டமான 160% வீதத்திற்கு மேல் மூலதனப் போதுமை வீதத்தைப் பதிவு செய்தனர். 31 டிசம்பர் 2020 அன்று கைத்தொழிற்துறையின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தின் மொத்தப் பெறுமதி இ.ரூபா 250,023 மில்லியன் (2019:இ.ரூபா 220,364 மில்லியன்) ஆகும். அனைத்து ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களும் ஒரே நேரத்தில் சரணடைந்தால், கடுமையான பாதகமான சூழ்நிலையின் அபாயத்தை நிவர்த்தி செய்யும் சரண்டர் மதிப்பு மூலதனக் கட்டணம் (SVCC), 2020ஆம் ஆண்டின் இறுதியில் இ.ரூபா 2,612 மில்லியன் (2019: இ.ரூபா 3,853 மில்லியன்) ஆகும்.

அட்டவணை 12

**31 டிசம்பர் 2019 மற்றும் 2020 அன்று கம்பனி ரீதியாக கடன்தீர் நிலை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2019 அன்று (அ) | | | | 31 டிசம்பர் 2020 அன்று (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொ.கி.மூ (இ.ரூபா'000) | இ.அ.மூ.தே (இ.ரூபா'000) | ச.மூ.ம.க (இ.ரூபா'000) | மூ.போ.வி (%) | மொ.கி.மூ (இ.ரூபா'000) | இ.அ.மூ.தே (இ.ரூபா'000) | ச.மூ.ம.க (இ.ரூபா'000) | மூ.போ.வி (%) |
| ஏஐஏ லைப் | 23,479,214 | 3,674,691 | 121,861 | 639 | 27,361,515 | 5,601,570 | | 488 |
| எலைன்ஸ் லைப் | 1,447,524 | 223,007 | 471,435 | 307 | 2,028,498 | 216,924 | 286,007 | 709 |
| அமானா லைப் | 508,242 | 267,470 | | 190 | 535,106 | 261,775 | | 204 |
| ஆர்பிகோ | 1,800,995 | 484,802 | 349,731 | 371 | 1,908,449 | 459,409 | 97,174 | 415 |
| சிலிங்கோ லைப். | 61,948,169 | 17,865,001 | 10,631 | 347 | 72,111,874 | 17,133,081 | 3,930 | 421 |
| கோப்லைப் | 885,437 | 469,593 | | 189 | 1,473,028 | 589,124 | | 250 |
| எச்என்பி லைப் | 7,921,589 | 2,461,800 | 416,272 | 322 | 8,966,667 | 2,653,681 | | 338 |
| ஜனசக்தி லைப் | 9,376,364 | 3,125,593 | 119,593 | 300 | 10,132,233 | 3,331,694 | | 304 |
| எல்ஐசி | 395,312 | 275,015 | | 144 | 485,940 | 338,702 | | 143 |
| எல்ஓஎல்சி லைப் | 1,280,311 | 588,513 | | 218 | 2,325,089 | 1,258,535 | | 185 |
| எம்பிஎஸ்எல் | 542,477 | 199,262 | | 272 | 556,357 | 76,062 | | 731 |
| சனச லைப் | 711,479 | 390,784 | 19,312 | 182 | 747,344 | 377,961 | | 198 |
| எஸ்எல்ஐசி | 83,505,746 | 19,148,373 | 1,046,379 | 436 | 79,654,571 | 17,370,300 | | 459 |
| சொப் லொஜிக் லைப் | 8,151,141 | 4,489,448 | 1,041,915 | 182 | 19,940,660 | 6,610,593 | 2,203,854 | 302 |
| யூனியன் லைப் | 18,409,499 | 5,002,806 | 255,663 | 368 | 21,795,969 | 6,396,436 | 20,587 | 341 |
| **மொத்தம்./முழுமையான** | **220,363,500** | **58,666,156** | **3,852,790** | **298** | **250,023,301** | **62,675,847** | **2,611,552** | **366** |

*குறிப்பு:*
*இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு 31 டிசம்பர் 2020ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த விபரத்திரட்டுகளில் இருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் 2020ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

### காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

கடன்தீர் (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளின் படி, அடுக்கு 1 மற்றும் அடுக்கு 2 மூலதனத்தைக் கூட்டியதன் பின்னர் கழிப்பனவு எனக் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கழிப்பதன் மூலம் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் கணிப்பிடப்படும். அட்டவணை 13, 31 டிசம்பர் 2020ஆம் திகதியில் நீண்ட கால காப்பறுதியாளர்களுடன் தொடர்புடைய மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தின் கலவையை வழங்குகின்றது. அட்டவணை 13 இல் காட்டப்பட்டுள்ளபடி, கைத்தொழிற்துறையின் அடுக்கு 1இல் ஒட்டுமொத்த மேம்படுத்தல் காரணமாக வளர்ச்சி 13.46% வீதமாக உந்தப்பட்டு கைத்தொழிற்துறையின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனமானது இ.ரூபா 250,023 மில்லியனைப் (2019:இ.ரூபா 220,364 மில்லியன்) பெற்றுக்கொண்டுள்ளது. ஸொப்ட்லொஜிக் லைப் மற்றும் சிலிங்கோ லைப் என்பவற்றின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் 2020இல் அடுக்கு 1 மூலதனத்தின் "காப்புறுதி நிதியத்தில் பேணப்படும் ஒதுக்கீடுசெய்யப்படாத மதிப்பீட்டு மிகை" மற்றும் "தக்கவைக்கப்பட்ட உழைப்புகளின் சீராக்கம்" என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக குறிப்பிடத்தக்களவில் உயர்ந்தது. மேலும், ஏஐஏ லைப், யூனியன் லைப், எல்ஓஎல்சி லைப மற்றும் எச்என்பி லைப் என்பன அடுக்கு 1 மூலதனத்தினால் உந்தப்பட்டு அவர்களுடைய மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது. மேலும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கை காப்புறுதி நிறுவனம் தவிர்த்து அனைத்து நீண்ட கால காப்புறுதியாளர்களும் அவர்களுடைய மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தை விரிவுபடுத்தினர்.

அடுக்கு1 மூலதனம் பங்கு மூலதனம் மற்றும் மூலதன ஒதுக்குகள், செலுத்திய திரட்சியற்ற மீளமுடியாத விருப்பபங்குகள், சீராக்கப்பட்ட தக்கவைத்திருக்கும் உழைப்புகள், ஒதுக்கப்படாத மதிப்பீட்டு மிகை என்பவற்றை உள்ளடக்கியிருப்பதுடன் பங்குபற்றல் வியாபாரத்திற்கான எதிர்காலத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட மிகைக் கொடுப்பனவுகளின் 50% ஆனது நட்டங்களை ஈடு செய்வதற்கு கிடைக்கப்பெறும் நிரந்தரமான மூலதனம் என வரைவிலக்கணப்படுத்தப்படும். அடுக்கு 1 மூலதனம் 10.23% வீதத்தினால் வளர்ச்சியடைந்து இ.ரூபா 258,922 மில்லியனைப் (2019: இ.ரூபா 234,901 மில்லியன்) பதிவு செய்தது.

அடுக்கு 1 இற்கு சமாந்தரமான உயர் தர மூலதன குணவியல்புகளில் சில குறைபாடுகளைக் கொண்டிருக்கும் அடுக்கு 2 மூலதனம் வரையறுக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் ஒதுக்குகள், திரட்டிய கழிக்கமுடியாத விருப்பத்திற்குரிய பங்குகள், கழிக்கக்கூடிய விருப்பத்திற்குரிய பங்குகள், வருமான ஒதுக்குகள் போன்றவற்றை உள்ளடக்கியிருப்பதுடன், இது 16.38% வீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் இ.ரூபா 22,382 மில்லியனைக் (2019: இ.ரூபா 19,232 மில்லியன்) கொண்டுள்ளது.

இந்தக் கழிப்பனவுகள் பிரதானமாக கட்புலனாக அல்லது திரவத்தன்மையல்லா சொத்துக்களை உள்ளடக்கியிருப்பதுடன் 2019இல் பதிவுசெய்யப்பட்ட இ.ரூபா 33,769 மில்லியனுடன் ஒப்பிகையில் 2020இல் இதன் பெறுமதி இ.ரூபா 31,281 மில்லியன் (2018:இ.ரூபா 33,923மில்லியன்) ஆகும்.

**அட்டவணை 13**

**காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2019ம் திகதியன்று (அ) | 31 டிசம்பர் 2020ம் திகதியன்று (ஆ) | | | |
|---|---|---|---|---|---|
| | கி.மு.தே | அடுக்கு 1 | அடுக்கு II | விலக்குகள் | கி.மு.தே |
| ஏஐஏ லைப் | 23,479,214 | 24,652,959 | 6,297,084 | 3,588,528 | 27,361,515 |
| எலைன்ஸ் லைப் | 1,447,524 | 2,453,590 | | 425,092 | 2,028,498 |
| அமானா லைப் | 508,242 | 491,439 | 94,921 | 51,253 | 535,106 |
| ஆர்பிகோ | 1,800,995 | 2,262,480 | | 354,031 | 1,908,449 |
| சிலிங்கோ லைப். | 61,948,169 | 78,160,246 | 3,890,031 | 9,938,403 | 72,111,874 |
| கோப்லைப் | 885,437 | 1,557,224 | 138,774 | 222,969 | 1,473,028 |
| எச்என்பி லைப் | 7,921,589 | 11,434,880 | 381,156 | 2,849,370 | 8,966,667 |
| ஜனசக்தி லைப் | 9,376,364 | 10,095,154 | 1,795,829 | 1,758,750 | 10,132,233 |
| எல்ஐசி | 395,312 | 380,920 | 161,899 | 56,879 | 485,940 |
| எல்ஓஎல்சி லைப் | 1,280,311 | 2,242,075 | 256,134 | 173,120 | 2,325,089 |
| எம்பிஎஸ்எல் | 542,477 | 563,737 | | 7,379 | 556,357 |
| சனச லைப் | 711,479 | 1,343,306 | | 595,961 | 747,344 |
| எஸ்எல்ஐசி | 83,505,746 | 83,153,107 | 155,614 | 3,654,150 | 79,654,571 |
| சொப் லொஜிக் லைப் | 8,151,141 | 18,674,630 | 3,742,958 | 2,476,928 | 19,940,660 |
| யூனியன் லைப் | 18,409,499 | 21,456,239 | 5,467,624 | 5,127,894 | 21,795,969 |
| **மொத்தம்** | **220,363,500** | **258,921,986** | **22,382,024** | **31,280,707** | **250,023,301** |

*குறிப்பு:*

*இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு 31 டிசம்பர் 2020ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த விபரத்திரட்டுகளில் இருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் 2020ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது*

**காப்புறுதி நிறுவனங்களினால் தேவைப்படுத்தப்படும் இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடுகளின் ஒப்பீடு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

இடர் அடிப்படையிலான மூலதன விகிதம் கடன் இடர், செறிவு இடர், சந்தை இடர், மீள்காப்புறுதி இடர், பொறுப்பு இடர் மற்றும் தொழிற்பாட்டு இடரை உள்ளடக்கிய பொருண்மையான இடருக்காக தீர்மானிக்கப்பட்ட மூலதன கட்டணங்களின் மொத்தமாகும். அட்டவணை 14, இடர் அடிப்படையிலான மூலதன விதிகளின் கீழ் கணிப்பிடப்பட்ட பிரதான இடர் வகைகளை உள்ளடக்கிய இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு பற்றிய கம்பனி ரீதியான பகுப்பாய்வைக் காட்டுகின்றது.

பல்வகைப்படுத்தலுக்கு முன் இடர் அடிப்படையிலான மூலதன விகிதமானது 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் 11.66% வீத வளர்ச்சியை அடைந்து இ.ரூபா 85,5111 மில்லியனை (2019: இ.ரூபா 76,580 மில்லியன்) எட்டியது, அதே நேரத்தில் பல்வகைப்படுத்தலுக்கு பின் இ.ரூபா 67,676 மில்லியனாக (2019: இ.ரூபா 58,666 மில்லியன்) திரட்டப்பட்டது. கடந்த ஆண்டுகளைப் போலவே, மாற்றத்திற்கு முன்னர் நீண்ட கால காப்புறுதியாளர்களினால் சந்தை இடர்கள், பொறுப்பு இடர்கள் மற்றும் செறிவு இடர்கள் போன்ற பாரிய இடர்கள் சந்திக்கப்பட்டதுடன் இவை இடர் அடிப்படையிலான மூலதன விகிதத்தின் 50.91%, 26.92% மற்றும் 8.39% என கணக்கீடு செய்யப்பட்டதுடன் பன்முகப்படுத்தலுக்கு முன் மொத்த இடர் அடிப்படையிலான மூலதன விகிதத்தின் 86.22% (2019:86.91%) வீதம் மொத்தமாக கணக்கீடு செய்யப்பட்டது.

**அட்டவணை 14**

**31 டிசம்பர் 2019 மற்றும் 2020 அன்று இடர் மூலதன தேவைப்பாட்டின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2019 (அ) திகதியன்று (இ.ரூபா'000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | மாற்றத்திற்கு முன் இ.மு.தே | மாற்றத்திற்கு பின் இ.மு.தே |
| ஏஜஏ லைப் | 470,921 | 677,436 | 1,394,906 | | 2,580,737 | 612,344 | 5,736,344 | 3,674,691 |
| எலைன்ஸ் லைப் | 2,563 | 5,057 | 104,964 | 1,105 | 184,830 | 51,426 | 349,945 | 223,007 |
| அமானா லைப் | 20,138 | 148,814 | 95,430 | 449 | 23,613 | 29,118 | 317,560 | 267,470 |
| ஆர்பிகோ | 42,371 | 139,405 | 194,481 | 211 | 303,370 | 35,654 | 715,492 | 484,802 |
| சிலிங்கோ லைப். | 1,563,802 | 1,051,504 | 14,986,895 | 4,878 | 2,708,943 | 1,345,605 | 21,661,627 | 17,865,001 |
| கோப்லைப் | 87,808 | 13,345 | 331,666 | | 179,742 | 29,625 | 642,186 | 469,592 |
| எச்என்பி லைப் | 336,655 | 356,165 | 1,662,346 | 1,617 | 677,346 | 217,332 | 3,251,461 | 2,461,800 |
| ஜனசக்தி லைப் | 355,358 | 131,977 | 2,535,244 | 2,433 | 757,422 | 211,997 | 3,994,432 | 3,125,593 |
| எல்ஐசி | 38,898 | 40,181 | 183,824 | 27 | 74,306 | 31,308 | 368,543 | 275,015 |
| எல்ஓஎல்சி லைப் | 21,935 | 63,311 | 259,741 | 5,399 | 469,213 | 58,451 | 878,049 | 588,513 |
| எம்பிஎஸ்எல் | 5,781 | 150,936 | 40,484 | 17 | 25,653 | 12,335 | 235,207 | 199,262 |
| சனச லைப் | 24,066 | 268,721 | 94,441 | 220 | 46,149 | 21,596 | 455,192 | 390,784 |
| எஸ்எல்ஐசி | 1,604,482 | 2,340,302 | 14,480,502 | | 5,011,022 | 1,434,825 | 24,871,132 | 19,148,373 |
| சொப் லொஜிக் லைப் | 202,984 | 847,336 | 1,688,459 | | 3,551,671 | 199,656 | 6,490,106 | 4,489,448 |
| யூனியன் லைப் | 385,195 | 633,902 | 3,794,651 | 158 | 1,243,261 | 555,585 | 6,612,752 | 5,002,806 |
| **மொத்தம்.** | **5,162,954** | **6,868,391** | **41,848,035** | **16,514** | **17,837,278** | **4,846,856** | **76,580,028** | **58,666,156** |

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2020 (ஆ) திகதியன்று (இ.ரூபா'000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | மாற்றத்திற்கு முன் இ.மு.தே | மாற்றத்திற்கு பின் இ.மு.தே |
| ஏஜஏ லைப் | 405,929 | 837,779 | 3,083,121 | | 3,484,467 | 717,372 | 8,528,668 | 5,601,570 |
| எலைன்ஸ் லைப் | 3,780 | 4,965 | 38,894 | 1,357 | 201,431 | 63,885 | 314,311 | 216,924 |
| அமானா லைப் | 20,623 | 145,518 | 93,121 | 692 | | 30,819 | 290,773 | 261,775 |
| ஆர்பிகோ | 43,003 | 24,935 | 268,971 | 48 | 309,600 | 40,799 | 687,356 | 459,409 |
| சிலிங்கோ லைப். | 1,788,403 | 936,699 | 13,906,140 | 6,752 | 3,771,492 | 1,579,705 | 21,989,191 | 17,133,081 |
| கோப்லைப் | 84,122 | 11,727 | 300,427 | 1,936 | 432,752 | 34,918 | 865,882 | 589,123 |
| எச்என்பி லைப் | 453,841 | 300,384 | 1,697,310 | 806 | 980,410 | 258,531 | 3,691,282 | 2,653,680 |
| ஜனசக்தி லைப் | 460,431 | 250,364 | 2,479,801 | 2,220 | 922,572 | 234,465 | 4,349,854 | 3,331,694 |
| எல்ஐசி | 40,735 | 65,364 | 206,213 | 43 | 126,036 | 35,598 | 473,991 | 338,702 |
| எல்ஓஎல்சி லைப் | 33,484 | 72,585 | 1,068,704 | 6,006 | 428,801 | 76,159 | 1,685,739 | 1,258,535 |
| எம்பிஎஸ்எல் | 8,245 | 25,398 | 38,938 | 22 | 20,022 | 10,646 | 103,271 | 76,062 |
| சனச லைப் | 26,138 | 181,540 | 157,429 | 17 | 95,106 | 22,215 | 482,445 | 377,961 |
| எஸ்எல்ஐசி | 1,722,707 | 2,410,946 | 12,072,062 | | 6,011,473 | 1,721,707 | 23,938,896 | 17,370,300 |
| சொப் லொஜிக் லைப் | 305,146 | 920,645 | 3,508,957 | 2,067 | 4,599,898 | 321,649 | 9,658,362 | 6,610,593 |
| யூனியன் லைப் | 550,837 | 982,231 | 4,614,727 | 184 | 1,633,884 | 668,703 | 8,450,567 | 6,396,436 |
| **மொத்தம்.** | **5,947,425** | **7,171,080** | **43,534,817** | **22,150** | **23,017,944** | **5,817,171** | **85,510,587** | **62,675,845** |

*குறிப்பு: இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு 31 டிசம்பர் 2020ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த விபரத்திரட்டுகளில் இருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் 2020ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது.*

### விநியோகிக்கப்பட்ட மற்றும் அமுலில் இருக்கும் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

அமுலில் உள்ள நீண்ட கால காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை 3,593,454 (2019: 3,383,290) ஆவதுடன், இது 6.21% வீதத்தினால் அதிகரித்துள்ளது. 2020இல் 739,784 (2019: 734,896) புதிய காப்புறுதிப் பூட்கைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், நோய்ப்பரவலினால் காணப்பட்ட சவால்களுக்கு மத்தியில் 2019 உடன் ஒப்பிடுகையில் சற்று மேம்பட்டுள்ளது.

மொத்த மக்கள் தொகையின் சதவீதமான நடைமுறையில் உள்ள ஆயுட் பூட்கையின் எண்ணிக்கை மற்றும் தொழிற்படையின் சதவீதமாக பூட்கைகளின் எண்ணிக்கை என்பன முறையே 16.39% (2019: 15.52%) மற்றும் 42.60% (2019: 39.48%) ஆகும். கடந்த சில ஆண்டுகளில் மேற்கூறிய இரண்டு விதங்களினால் சித்தரிக்கப்பட்ட மேல்நோக்கிய போக்கு, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிலும் தொடர்ந்து பேணப்பட்டு, புதுமைகளை உருவாக்கி, வளர்ந்து வரும் யதார்த்தங்களுக்கு ஏற்றவாறு சந்தையில் செழிக்கும் திறனை வலியுறுத்துகின்றது.

வரைபடம் 10

**விநியோகிக்கப்பட்ட மற்றும் அமுலில் இருக்கும் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்**




| | | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| (சாம்பல் நிறப் பட்டை) | விநியோகிக்கப்பட்ட புதிய ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை | 668,714 | 643,483 | 711,126 | 734,896 | 739,784 |
| (பச்சை நிறப் பட்டை) | அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் எண்ணிக்கை | 3,009,427 | 3,068,866 | 3,199,354 | 3,383,290 | 3,593,454 |
| (முக்கோணக் குறியுடைய கோடு) | மொத்த சனத்தொகையில் அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் %* | 14.19 | 14.31 | 14.76 | 15.52 | 16.39 |
| (× குறியுடைய கோடு) | மொத்த தொழிற்படையில் அமுலில் உள்ள ஆயுள் காப்புறுதி பூட்கைகளின் %* | 37.86 | 37.39 | 39.55 | 39.48 | 42.60 |

*மூலம்: நடு ஆண்டு தொழிற்படை மற்றும் சனத்தொகை - புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி*

### காப்புறுதி வகை ரீதியாக அமுலில் இருக்கும் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட பூட்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 15, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அமுலில் உள்ள உரிமை வழங்கல்கள், யுனிவேர்சல் லைப், தவணை, முழுமையான மற்றும் ஏனைய என வகைப்படுத்தப்பட்ட காப்புறுதி வகைகளின் சுருக்கத்தை வழங்குகின்றது. ஏனைய வகையானது பிரதானமாக சுகாதாரத் திட்டங்கள், அலகு இணைப்புகள், ஆண்டுத்தொகை மற்றும் குழு ஆயுள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. அமுலில் உள்ள மொத்தக் காப்புறுதி தொகையானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 6.21% வீதத்தினால் வளர்ச்சியடைந்து 3,593,454 மில்லியன (2019: 3,383,290) ஆவதுடன், 2018 ஆம் ஆண்டு காணப்பட்ட இ.ரூபா 3,055,587 மில்லியனுக்கு எதிராக 25.97% வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதுடன் 2020 இன் இறுதியில் காப்புறுதித் தொகை இ.ரூபா 5,037 பில்லியனாக 31.01% வீதத்தினால் விரிவடைந்துள்ளது.

கடந்த ஆண்டுகளைப் போலவே, உரிமை கோரல் வகைக் காப்புறுதிப் பூட்கைள் பிரதான பூட்கைகளாக இருந்ததுடன் இவற்றின் எண்ணிக்கை 1,286,181 (2019: 1,227,237) ஆகும். இது 2020இல் அமுலில் உள்ள மொத்தப் பூட்கைகளில் 35.79% வீதமாகும். இதே வகையில் காப்புறுதி செய்யப்பட்டதன் பெறுமதி இ.ரூபா 717 பில்லியன் (2019: இ.ரூபா 450 பில்லியன்) ஆவதுடன் ஒரு காப்புறுதியாளரின் உந்துகையினால் 59.18% வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. 2020இல் யுனிவேர்சல் லைப் பூட்கைகளின் எண்ணிக்கை 991,023 (2019:944,088ஐ அடைந்துள்ள அதேவேளையில், காப்புறுதியின் பெறுமதி இ.ரூபா 517 பில்லியனை (2019 இ.ரூபா 431 பில்லியன்) அடைந்துள்ளதன் ஊடாக 19.97% வீத வளர்ச்சியைப் பதிவு செய்கின்றது.

காப்புறுதி செய்யப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில், ஒரு ஆயுட் காப்புறுதியாளரின் குழு மடிஏ கொள்கைகளின் கீழ் நிபந்தனைக் காப்புறுதி தவணை உத்தரவாதம் குறைந்து வருவதால் முக்கியமாக 2020 இல் இ.ரூபா 1,558 பில்லினுக்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 34.26% வீத மேம்படுத்தலுடன் தவணைக் காப்புறுதிகள் இரண்டாவது பெரிய வகையாக பிரதிநிதித்துவப்படுத்தியது.

2019இல் 9.07% வீதமாக இருந்த மொத்த முதலீட்டு வருமானம் 2020இல் 6.77% வீதமாக குறைந்துள்ளது.

அட்டவணை 23

**முதலீட்டு வருமானம் மற்றும் சராசரி முதலீடுகளின் சுருக்கம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| வகை | 2019 (அ) | | 2020 (ஆ) | |
|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (இ.ரூபா '000) | சராசரி வருமானம் (இ.ரூபா '000) | முதலீட்டு வருமானம் (இ.ரூபா'000) | சராசரி வருமானம் (இ.ரூபா '000) |
| **அரசாங்க கடன் பிணையங்கள்** | 4,963,331 | 53,992,112 | 4,396,953 | 60,247,127 |
| - திறைசேரி பிணையங்கள் | 2,360,768 | | 2,157,967 | |
| - திறைசேரி உண்டியல்கள் | 1,363,360 | | 999,323 | |
| - ஏனையவை (ரிபோ) | 1,239,202 | | 1,239,663 | |
| **உரிமைப் பங்கு** | 2,872,003 | 33,233,311 | 912,911 | 32,380,068 |
| - மூலதன ஈட்டுகை/நட்டங்கள் | 90,712 | | 390,749 | |
| - பங்குலாபம் | 2,781,291 | | 522,162 | |
| **கூட்டிணைந்த கடன் பத்திரங்கள்** | 1,708,324 | 15,054,751 | 2,079,730 | 17,208,531 |
| - தொகுதிக்கடன் | 1,608,661 | | 1,991,433 | |
| - வணிகப் பத்திரம் | 99,663 | | 88,297 | |
| **நிலம் மற்றும் கட்டிடங்கள்** | - | 12,196,276 | - | 12,351,010 |
| **வைப்புகள்** | 2,608,567 | 22,150,354 | 2,406,024 | 24,829,025 |
| - வங்கி | 1,931,593 | | 1,900,784 | |
| - நிதி கம்பனிகள் | 676,974 | | 505,239 | |
| **அலகு நம்பிக்கை** | 58,203 | 1,595,773 | 159,812 | 4,247,927 |
| **ஏனையவை** | 372,772 | 485,262 | 326,797 | 673,313 |
| **மொத்தம்** | **12,583,201** | **138,707,840** | **10,282,227** | **151,937,000** |
| **சராசரி முதலீட்டு வருமானம்** | **9.07%** | | **6.77%** | |

**காப்புறுதிக் கம்பனிகளின் கடன்தீர் நிலை - பொதுக் காப்புறுதி வியாபரம்**

கோவிட் - 19 தொற்றுநோயைத் தொடர்ந்து, கடுமையாகப் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்திலிருந்து எழுப்பப்பட்ட பெரும் நிச்சயமற்ற தன்மைகளால் காபபுறுதித்துறையின் கடன்தொகை நிலை சிக்கலுக்குள்ளானது. எனவே, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மூலதன அளவைப் பாதுகாப்பதற்காக காப்புறுதியாளர்களை உன்னிப்பாகக் கண்காணிக்கப் பல நடவடிக்கைகளை எடுத்தது. மேலும், காப்புறுதியாளர்களைப் பாதுகாப்பதற்காகவும் காப்புறுதியாளர்களை நிலைபேற்றினை உறுதி செய்வதற்காகவும் மூலதனத்தைப் பராமரிக்கவும் பங்கிலாப விநியோகங்கள் மற்றும் பிற விருப்பத் தொகைகள் மீதான தற்காலிகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

அனைத்து முயற்சிகளுடனும், பொதுக் காப்புறுதி நிறுவனங்கள் நல்ல மூலதனத்தைப் பெற்றன, மேலும் பொதுக் காப்புறுதியாளர்களின் சராசரி மூலதனப் போதுமையளவு (CAR) மற்றும் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம் (TAC) என்பன முறையே 249% (2019:215%) மற்றும் இ.ரூபா 65,043 மில்லியன் (2019: இ.ரூபா 44,549 மில்லியன்) 2020ஆம் ஆண்டின் இறுதியில் தே.கா.ந.நிதியம் தவிர்த்து, ஒட்டுமொத்த கிடைக்கப்பெறும் மூலதன வளர்ச்சி 18.81% வீத வளர்ச்சி விகிதத்தை வெளிப்படுத்துகின்றது. மேலும், அனைத்துக் காப்புறுதியாளர்களும் 160% வீத அமுலாக்க நிலைக்கும் மூலதனக் கிடைக்கப்பெறும் வீதத்தைப் பதிவு செய்துள்ளனர்.

RBC விதிகளின் கீழ், காப்புறுதியாளர்கள் குறைந்தபட்சம் இ.ரூபா 500 மில்லியன் மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதனம் இ.ரூபா 500 மில்லியன் மற்றும் 120% மூலதன கிடைக்கப்பெறும் வீதத்தின் மூலதனத் தேவைகளுக்கு இணங்க வேண்டும். அதன்படி, ஒருவரைத் தவிர அனைத்து காப்புறுதியாளர்களும் 2020ஆம் ஆண்டின் இறுதியில் குறைந்தபட்ச தேவைகளுக்கு இணங்க முடிந்தது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 562% (2019:263%) வீத மூலதன சராசரி வீதத்தையும் மற்றும் இ.ரூபா 13,010 மில்லியன் (2019: இ.ரூபா 5,559 மில்லியன்) மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தையும் பதிவு செய்துள்ளது. இது அட்டவணை 24இல் சேர்க்கப்படவில்லை.

அட்டவணை 24, 25 மற்றும் 26ஆம் அட்டவணைகள் 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் காப்புறுதியாளர்களின் இடர் அடிப்படையிலான மூலதனம் (RBC) தொடர்பான விபரங்களை விளக்குகின்றது.

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2019 அன்று (அ) | | | 31 டிசம்பர் 2019 அன்று (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | மொ.கி.மூ (இ.ரூபா '000) | இ.அ.மூ.தே (இ.ரூபா '000) | CAR (%) | மொ.கி.மூ (இ.ரூபா '000) | இ.அ.மூ.தே (இ.ரூபா '000) | CAR (%) |
| எலைன்ஸ் ஜென. | 6,515,992 | 3,901,094 | 167 | 8,426,064 | 3,978,744 | 212 |
| அமானா ஜென. | 493,293 | 247,534 | 199 | 525,369 | 279,610 | 188 |
| சிலிங்கோ ஜென. | 5,978,705 | 3,220,685 | 186 | 7,472,104 | 4,081,902 | 183 |
| கெண்டினென்டல் | 1,836,265 | 721,772 | 254 | 2,629,220 | 904,617 | 291 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 1,698,652 | 907,055 | 187 | 2,550,823 | 1,024,217 | 249 |
| பியார்பெஸ்ட் | 3,960,926 | 2,187,118 | 181 | 5,057,218 | 2,692,147 | 188 |
| எச்என்பி ஜென. | 1,391,752 | 616,879 | 226 | 1,840,729 | 722,199 | 255 |
| எல்ஓஎல்சி ஜென. | 1,742,118 | 832,159 | 209 | 2,946,390 | 978,112 | 301 |
| எம்பிஎஸ்எல் | 520,039 | 244,949 | 212 | 422,154 | 135,852 | 311 |
| ஒரியன்ட் | 768,495 | 255,346 | 301 | 941,383 | 334,423 | 281 |
| பீப்பள்ஸ் | 3,141,246 | 1,264,299 | 248 | 4,162,922 | 1,369,045 | 304 |
| சனச ஜென | 533,062 | 256,532 | 208 | 628,444 | 247,000 | 254 |
| எஸ்எல்ஜசி | 26,163,057 | 12,350,481 | 212 | 27,440,331 | 12,307,698 | 223 |
| **மொத்தம்/சராசரி** | **54,743,602** | **27,005,903** | **215** | **65,043,150** | **29,055,565** | **249** |

### காப்புறுதிக் கம்பனிகளுக்கான மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாடு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

பொதுக் காப்புறுதித்துறையின் மொத்த மூலதனம் 18.81% செறிவூட்டப்பட்ட வளர்சியைப் பதிவு செய்தது மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தவிர்த்து 31 டிசம்பர் 2020இல் இ.ரூபா 65,043 மில்லியன் (2019: இ.ரூபா 54,744 மில்லியன்) வரை குவிந்தது.

மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதனமானது 'அடுக்கு 1' மற்றும் 'அடுக்கு 11' மூலதனத்தைச் சேர்ப்பதன் மூலமும், 'கழிவுகள்' எனக் குறிப்பிடப்பட்ட உருப்படிகளைக் கழிப்பதன் மூலமும் கணக்கிடப்படுகின்றது. அடுக்கு 1 மூலதமானது, இழப்புகளை ஈடுகட்ட முழுமையாகக் கிடைக்கும் நிரந்தர மூலதனத்தை உள்ளடக்கியது.

மொத்த சராசரி மூலதனத்திலிருந்து விலக்குகள் இழப்புகளை ஈடுகட்ட பொதுவாக கிடைக்காத, அருவமான அல்லது பணமதிப்பற்ற அருவமான அல்லது பணமதிப்பற்ற சொத்துகள் தொடர்பாக செய்யப்படுகின்றன.

மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதன வளர்ச்சியானது அடுக்கு 1 மூலதனத்தால் இயக்கப்பட்டது, இது முதன்மையாக சரிசெய்யப்பட்ட தக்க வருமானங்களால் அதிகரிக்கப்பட்டது. 2019 டிசம்பர் 31 இல் இருந்த இ.ரூபா 81,278 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2020 டிசம்பர் 31இல் 90,870 மில்லியனாக அடுக்கு 1 மூலதனம் 11.80% வீதத்தால் அதிகரித்துள்ளது.

அடுக்கு 11 மூலதனம் ஏறக்குறைய மாறாமல் இருந்தது மற்றும் 1.75% வீத சிறிதளவு அதிகரிப்பு மற்றும் மொத்தமாக இ.ரூபா 8,640 மில்லியனாக (2019: இ.ரூபா 8,491 மில்லியன்) இருந்தது. கழிவுகள் - 1.60% வீத சிறிதளவு சுருக்கத்தை வெளிப்படுத்தியது மற்றும் இ.ரூபா 34,467 மில்லியனாக (2019: இ.ரூபா 35,026 மில்லியன்) இருந்தது.

அட்டவணை 25

**31 டிசம்பர் 2019 மற்றும் 2020 அன்று மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத் தேவைப்பாட்டின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2019ஆம் திகதியன்று (அ) கி.மூ.தே (இ.ரூபா '000) | 31 டிசம்பர் 2020ஆம் திகதியன்று (ஆ) | | | |
|---|---|---|---|---|---|
| | | அடுக்கு I (இ.ரூபா'000) | அடுக்கு II (இ.ரூபா'000) | கழிப்பனவுகள் (இ.ரூபா '000) | கி.மூ.தே (இ.ரூபா '000) |
| எலைன்ஸ் ஜென. | 6,515,992 | 11,119,590 | | 2,693,527 | 8,426,064 |
| அமானா ஜென. | 493,293 | 1,412,806 | 291,574 | 1,179,011 | 525,369 |
| சிலிங்கோ ஜென. | 5,978,705 | 12,319,057 | 468,226 | 5,315,180 | 7,472,104 |
| கெண்டினென்டல் | 1,836,265 | 2,764,647 | | 135,427 | 2,629,220 |
| கோப்பரெட்டிவ் ஜென.. | 1,698,652 | 3,018,797 | 565,770 | 1,033,744 | 2,550,823 |
| பியார்பெஸ்ட் | 3,960,926 | 6,606,952 | | 1,549,734 | 5,057,218 |
| எச்என்பி ஜென. | 1,391,752 | 2,026,427 | | 185,698 | 1,840,729 |
| எல்ஓஎல்சி ஜென. | 1,742,118 | 3,163,229 | | 216,839 | 2,946,390 |
| எம்பிஎஸ்எல் | 520,039 | 502,438 | 13,114 | 93,397 | 422,154 |
| ஒரியன்ட் | 768,495 | 991,243 | | 49,860 | 941,383 |
| பீப்பள்ஸ் | 3,141,245 | 4,642,070 | | 479,149 | 4,162,922 |
| சனச ஜென | 533,062 | 721,356 | | 92,912 | 628,444 |
| எஸ்எல்ஜசி | 26,163,057 | 41,580,952 | 7,301,747 | 21,442,367 | 27,440,331 |
| **மொத்தம்** | **54,743,601** | **90,869,564** | **8,640,431** | **34,466,845** | **65,043,150** |

*குறிப்பு: இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு 31 டிசம்பர் 2020ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த விபரத்திரட்டுகளில் இருந்து பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் 2020ஆம் ஆண்டுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது*

எலையன்ஸ் ஜெனரல் மொத்தக் கிடைக்கப்பெறும் மூலனத்தில் ஒரு புள்ளியல் அடுக்கு 1 மூலதனத்தில் இருந்து தக்கவைக்கப்பட்ட வருமானத்தின் ஆதரவுடன் இ.ரூபா 1,910 மில்லியனை எட்டியது. மேலும், சிலிங்கோ ஜெனரல், எல்ஓஎல்சி ஜெனரல், பெயர் பெர்ஸ்ட் மற்றும் பீப்பள்ஸ் என்பன மொத்த சராசரி மூலதனத்தில் பதிவுசெய்யப்பட்ட விரிவாக்கங்களின் அடிப்படையில் அடுக்கு 1 மூலதனத்திலிருந்து வந்தவையாகும்.

வியாபாரத்தின் மறுசீரமைப்புக்கு உட்பட்ட ஒரு காப்புறுதியாளரைத் தவிர்து அனைத்து பொதுக் காப்புறுதியாளர்களும் 2020ஆம் ஆண்டில் தங்கள் மூலதனத் தளத்தை விரிவுபடுத்தினர்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதனத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியது, இது தக்கவைக்கப்பட்ட வருமானத்தில் இருந்து உயர்த்தப்பட்டது மற்றும் மொத்தம் இ.ரூபா 13,010 மில்லியன் (2019: இ.ரூபா 5,559 மில்லியன்) ஆகும் என்பதுடன் இது அட்டவணையில் 25 இல் சேர்க்கப்படவில்லை.

### காப்புறுதிக் கம்பனிகளின் இடர் மூலதனத் தேவைப்பாட்டின் மீதான ஒப்பீடு - பொதுக் காப்புறுதி வியாபாரம்

இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு என்பதை அனைத்து தொடர்புடைய வெளிபடுத்தக்கூடிய கடன் இடர், செறிவு இடர், சந்தை இடர், மீள்காப்புறுதி இடர், காப்புறுதி பொறுப்பு இடர் மற்றும் தொழிற்பாட்டு இடர்களை உள்ளடக்கி அனைத்து உரிய மற்றும் பொருண்மை வகை அபாயங்களை கையாள்வதற்கு அவசியமான திரட்டிய தேவையான மூலதனம் எனக் குறிப்பிட முடியும்.

பல்வகைப்படுத்தலுக்குப் பிறகு மொத்த இடர் மூலதனக் கட்டணங்கள் 2020ஆம் ஆண்டில் ஒரு சிறிய அதிகரிப்பு மற்றும் 2019இல் 27,006 இ.ரூபா மில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.59% வீதத்தினால் இ.ரூபா 29,056 மில்லியனாக உயர்த்தப்பட்டது. இந்த அதிகரிப்பு அடிப்படையில் பொதுக் காப்புறுதித்துறையில் இடர் மூலதன வீதத்தின் மிகப்பெரிய கலவையான செறிவு இடர் மற்றும் பொறுப்பு இடரிலிருந்து வெளிப்பட்டது. முந்தைய ஆண்டுகளைப் போலவே, பொதுக் காப்புறுதித்துறையானது பொதுவாக செறிவு இடருக்கு ஆளானதுடன் மொத்த இடர் கட்டணங்களில் 33.14% வீதத்தை ஆக்கிரமித்துள்ளது, இது பல்வகைப்படுத்தலுக்கு முன் இ.ரூபா 13,237 மில்லியன் ஆகும். பொது காப்புறுதியாளர்களினால் எதிர்கொள்ளப்படும் இரண்டாவது பெரிய ஆபத்தாக பொறுப்பு இடர் தொடர்கின்றது, பல்வகைப்படுத்தலுக்கு முன் மொத்த இடர் மூலதன வீதத்தில் 30.41% ஆக்கிரமித்து இ.ரூபா 12,146 மில்லியனுக்கு சமமாக உள்ளது. பல்வகைப்படுத்தலுக்கு முன் மொத்த இடர் மூலதன வீதத்தில் சந்தை இடர் 26.65% வீதத்தை ஆக்கிரமித்துள்ளது. அதன் பிறகு, இந்த மூன்று இடர் வகைகளும் பல்வகைப்படுத்தலுக்கு முன் மொத்த இடர் மூலதனக் கட்டணங்களில் 90.19% (2019:90.51%) வீதமாகும்.

அட்டவணை 26இல் சேர்க்கப்படாத தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், டிசம்பர் 31, 2020இல் முடிவடைந்த ஆண்டுக்கான பல்வகைப்படுத்தலுக்குப் பிறகு இடர் மூலதன விகிதம் இ.ரூபா 2,316 மில்லியன் (இ.ரூபா 2,114 மில்லியன்) எனப் பதிவு செய்துள்ளது.

**அட்டவணை 26**

**31 டிசம்பர் 2019 மற்றும் 2020 அன்று இடர் மூலதனத் தேவைப்பாட்டின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2019 (அ) திகதியன்று (இ.ரூபா ‘000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | பிரிந்துசெல்வதற்கு முன் இ.மு.தே | பிரிந்துசெல்வதற்கு பின் இ.மு.தே |
| எலைன்ஸ் ஜென. | 150,270 | 2,112,929 | 809,124 | 56,456 | 2,314,253 | 271,122 | 5,714,154 | 3,901,094 |
| அமானா ஜென. | 20,821 | 155,490 | 14,344 | 8,341 | 144,798 | 26,585 | 370,379 | 247,534 |
| சிலிங்கோ ஜென. | 251,653 | 1,434,138 | 889,040 | 196,997 | 1,621,495 | 246,035 | 4,639,358 | 3,220,685 |
| கென்டினென்டல் | 101,481 | 106,767 | 258,939 | 26,567 | 523,304 | 57,573 | 1,074,631 | 721,772 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 98,794 | 235,237 | 379,357 | 14,822 | 537,405 | 60,446 | 1,326,061 | 907,055 |
| பியார்பெஸ்ட் | 50,803 | 942,834 | 880,683 | 141,810 | 839,011 | 121,529 | 2,976,670 | 2,187,118 |
| எச்என்பி ஜென. | 60,806 | 211,162 | 119,661 | 12,983 | 463,003 | 49,564 | 917,179 | 616,879 |
| எல்ஓஎல்சி ஜென. | 22,708 | 136,823 | 352,249 | 39,798 | 619,815 | 63,866 | 1,235,259 | 832,159 |
| எம்பிஎஸ்எல் | 7,592 | 188,155 | 30,141 | 4,380 | 82,290 | 14,315 | 326,873 | 244,949 |
| ஓரியன்ட் | 25,556 | 147,984 | 15,740 | 3,229 | 166,580 | 19,821 | 378,910 | 255,346 |
| பீப்பள்ஸ் | 170,641 | 241,118 | 504,659 | 17,730 | 847,603 | 85,957 | 1,867,709 | 1,264,300 |
| சனச ஜென | 7,875 | 173,878 | 66,600 | 1,284 | 57,945 | 11,500 | 319,082 | 256,532 |
| எஸ்எல்ஐசி | 187,158 | 5,313,217 | 6,432,786 | 67,442 | 2,832,715 | 704,002 | 15,537,320 | 12,350,481 |
| **மொத்தம்** | **1,156,158** | **11,399,733** | **10,753,323** | **591,839** | **11,050,218** | **1,732,314** | **36,683,586** | **27,005,904** |

| காப்புறுதியாளர் | 31 டிசம்பர் 2020 (அ) திகதியன்று (இ.ரூபா ‘000) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் இடர் | செறிவு இடர் | சந்தை இடர் | மீள்காப்புறுதி இடர் | பொறுப்பு இடர் | தொழிற்பாட்டு இடர் | பிரிந்துசெல்வதற்கு முன் இ.மு.தே | பிரிந்துசெல்வதற்கு பின் இ.மு.தே |
| எலைன்ஸ் ஜென. | 102,501 | 2,665,343 | 502,633 | 32,584 | 2,202,872 | 259,886 | 5,765,820 | 3,978,744 |
| அமானா ஜென. | 19,703 | 181,769 | 17,185 | 11,074 | 157,238 | 26,107 | 413,076 | 279,610 |
| சிலிங்கோ ஜென. | 262,027 | 2,240,028 | 943,650 | 221,688 | 1,770,939 | 275,549 | 5,713,881 | 4,081,902 |
| கென்டினென்டல் | 98,013 | 317,117 | 314,862 | 24,340 | 494,275 | 70,767 | 1,319,374 | 904,617 |
| கோப்பரெட்டிவ் ஜென. | 156,866 | 173,732 | 493,406 | 14,530 | 583,482 | 73,693 | 1,495,708 | 1,024,217 |
| பியார்பெஸ்ட் | 52,320 | 1,253,312 | 833,750 | 348,916 | 1,016,716 | 149,376 | 3,654,390 | 2,692,147 |
| எச்என்பி ஜென. | 78,508 | 224,018 | 168,735 | 24,755 | 521,326 | 61,308 | 1,078,650 | 722,199 |
| எல்ஓஎல்சி ஜென. | 27,268 | 229,491 | 393,645 | 38,397 | 689,523 | 82,542 | 1,460,867 | 978,112 |
| எம்பிஎஸ்எல் | 10,548 | 53,429 | 13,849 | 6,112 | 105,870 | 14,198 | 204,006 | 135,852 |
| ஓரியன்ட் | 11,381 | 238,859 | 2,319 | 4,153 | 213,025 | 23,620 | 493,357 | 334,423 |
| பீப்பள்ஸ் | 192,721 | 523,220 | 327,517 | 19,335 | 857,117 | 100,517 | 2,020,428 | 1,369,045 |
| சனச ஜென | 12,223 | 141,767 | 79,877 | 1,647 | 73,370 | 12,598 | 321,482 | 247,000 |
| எஸ்எல்ஐசி | 162,613 | 4,994,508 | 6,552,587 | 77,164 | 3,460,241 | 758,831 | 16,005,944 | 12,307,698 |
| **மொத்தம்** | **1,186,693** | **13,236,593** | **10,644,017** | **824,693** | **12,145,994** | **1,908,992** | **39,946,982** | **29,055,564** |

*குறிப்பு : 2020ஆம் ஆண்டுக்கு பதிவுசெய்யப்பட்ட இலக்கங்கள், 31 டிசம்பர் 2020 இல் முடிவடைந்த ஆண்டுக்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த விபரத்திரட்டுகளில் இருந்து பெறப்பட்டவையாகும்.*

**தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம், தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள், தேறிய செலவுகள், தேறிய செலவுகள் விகிதம் மற்றும் தேறிய கலவை விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதம் உள்ளிட்ட பொதுக் காப்புறுதி பிரிவுகளில் இருந்து பெறப்பட்ட தவணைக்கட்டணம் - 1.44% வீதத்தினால் சுருங்கியது மற்றும் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தில் பதிவான எதிர்மறை வளர்ச்சி 2020ஆம் ஆண்டு முழுவதிலும் நிலவும் நலிந்த பொருளாதாரத்தின் ஆதரவுடன் நிகர ஈட்டப்பட்ட தவணைக் கட்டணத்தின் வளர்ச்சியைத் தடுக்கின்றது. 2020ம் ஆண்டு முடிவடைந்த நிலையில், நிகர உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம் இ.ரூபா 86,480 மில்லியனாக (2019: இ.ரூபா 87,748 மில்லியன்) பதிவு செய்யப்பட்டுள்ளது.

நிகர உழைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தின் மிகப்பெரிய வீழ்ச்சியானது மோட்டார் காப்புறுதி வணிகத்தின் மதிப்பின் அடிப்படையில் இ.ரூபா 867 மில்லியனாகக் காணப்பட்டதுடன் ஏனைய காப்புறுதி வியாபார வகைகள் இ.ரூபா 596 மில்லியன் வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. மறுபுறம், வேலைநிறுத்தம், கலவரம், சிவில் குழப்பம் மற்றும் பயங்கரவாதத்தின் நிகர ஈட்டப்பட்ட தவணைக் கட்டணம் மற்றும் தீக் காப்புறுதி வியாபாரம் மிதமான அளவில் 10.62% மற்றும் 7.13% வீதத்தினால் அதிகரித்து முறையே இ.ரூபா 6,160 மில்லியன் மற்றும் இ.ரூபா 2,339 மில்லியனாக இருந்தது. மேலும், கடந்த 2016 தொடக்கம் 2020 வரையிலான ஐந்தாண்டுகளைக் கருத்தில் கொள்ளும் போது தீ காப்புறுதி வியாபாரம் தொடர்பான நிகர ஈட்டப்பட்ட தவணைக்கட்டணம் புள்ளிவிபரங்கள் மேல்நோக்கிய போக்கை விளக்குகின்றன.

பொதுக் காப்புறுதித்துறையின் ஒட்டுமொத்த நிகர உரிமைக்கோரல்கள் -26.88% வீதத்தினால் சரிந்து இ.ரூபா 41,517 மில்லியனாக (2019: இ.ரூபா 58,149 மில்லியன்) வெளிப்படுத்தியுள்ளன. எனவே, ஒட்டுமொத்த நிகர உரிமைக்கோரல் விகிதம் 49.16% வீதமாகக் குறைந்துள்ளது, இது கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவுசெய்த மிகக் குறைந்த தொகையாகும். மேலும், பொதுக் காப்புறுதித்துறையின் ஒவ்வொரு துணை வகுப்பினரும் 2020ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிகர உரிமைக்கோரல்களில் சுருக்கங்களை வெளிப்படுத்தின என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோவிட் -19 இன் முதலாவது மற்றும் இரண்டாவது அலைகளின் போது செயற்படுத்தப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாடுகள், தொற்றுநோக்குப் பிறகு பயண மற்றும் சுற்றுலாத்துறைகளில் ஏற்பட்ட திடீர் சரிவு மற்றும் மோட்டார் உரிமைக்கோரல்களை நேரடியாக் குறைத்தது.

மிக வெளிப்படையாக, ஆண்டு முழுவதும் விதிக்கப்பட்ட இடைவிடாத முடக்கல்கள் காரணமாக மோட்டார் காப்புறுதிக் கோரிக்கைகள் மதிப்பின் அடிப்படையில் பெருமளவு குறைந்துள்ளதுடன் மற்றும் இது அண்ணளவாக இ.ரூபா 7.6 பில்லியன் பதிவானது. இரண்டாவதாக, சுகாதரக் காப்புறுதி வியாபாரத்தின் கீழ் பெறப்பட்ட நிகர உரிமைக்கோரல்கள் மதிப்பின் அடிப்படையில் குறிப்பிடத்தக்களவு குறைந்ததுடன், இது இ.ரூபா 12,122 மில்லியனாக (2019:இ.ரூபா 16,760 மில்லியன்) இருந்தது. இந்த சரிவு அடிப்படையில் சுரக்ஷா காப்புறுதித் திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட உரிமைக்கோரல்கள் தொடர்பான ஒற்றைக் காப்புறுதியாளருக்கு ஒதுக்கப்பட்டது.

மிகவும் வெளிப்படையாக, இடைவிடாத முடக்கல்கள் காரணமாக மோட்டார் காப்புறுதி கோரிக்கைகள் மதிப்பின் அடிப்படையில் பெருமளவு குறைந்துள்ளன. 2020ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வரும் இந்த காப்புறுதித் திட்டத்தை நிறுத்தியதால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வியாபாரத்தில் இருந்து பெறப்படும் கோரிக்கைகள் இல்லாததால், இதர காப்புறுதி வியாபாரத்தின் தேறிய உரிமைக்கோரல் விகிதம் 2019ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 63.70% வீதத்திலிருந்து 28.26% வீதமாகக் குறைந்தது.

இதற்கிடையில் ஏனைய வியாபார வகைகளான தீ மற்றும் கடல்சார் உரிமைக்கோரல்கள் மற்றும் தேறிய உரிமைக்கோரல் விகிதத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை வழங்கின, மேலும் இரண்டு வகைகளும் முறையே 87.26% மற்றும் 26.48% வீதமென பதிவுசெய்யப்பட்டுள்ளன.

முந்தைய ஆண்டைப்போலன்றி, பொதுக் காப்புறுதியாளர்களினால் ஏற்படும் செலவுகள் மெதுவான கட்டத்தில் 2.62% (2019: 9.67%) வீதத்தினால் அதிகரித்து, இ.ரூபா 34,138 மில்லியன் (2019:இ.ரூபா 33,268 மில்லியன்) ஆக இருந்தது. பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் ஒட்டுமொத்த தேறிய செலவு வீதம் 1.56% வீதத்தினால் உயர்த்தப்பட்டு 2019இல் பதிவுசெய்யப்பட்ட 37.91% வீதத்துடன் ஒப்பிடுகையில் 2020இல் 39.47% வீதமாகக் காணப்பட்டது. காப்புறுதியாளர்கள் தொற்றுநோயால் முன்வைக்கப்படும் சவால்களை முன்கூட்டியே மாற்றியமைக்க முடியும் வகையிலும் மற்றும் மெய்நிகர் இணைப்பிலிருந்து தடையற்ற சேவையை வழங்குவதனையும் உறுதிசெய்தனர், இது 2020ஆம் ஆண்டில் ஏற்படும் செலவுகளின் குறைந்த வளர்ச்சியைப் பாதித்திருக்கலாம்.

தேறிய கோரிக்கை விகிதம் மற்றும் தேறிய செலவு விகிதத்தின் கூட்டுத்தொகையான தேறிய ஒருங்கிணைந்த விகிதம் 2020ஆம் ஆண்டு 100% வீதத்திற்கும் கீழ் குறைந்தது, இது 88.64% (2019:104.18%) வீதமாக இருந்தது, இது கடந்த 05 ஆண்டுகளில் மிகக் குறைந்த ஒருங்கிணைந்த விகிதத்தை அறிக்கையிடுகின்றது.

அட்டவணை 27

**தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம், தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள், தேறிய செலவுகள், தேறிய செலவுகள் விகிதம் மற்றும் தேறிய கலவை விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| வகை | தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா '000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
| தீ | 1,213,542 | 1,721,160 | 1,957,237 | 2,183,650 | 2,339,266 |
| கடல் | 903,170 | 991,573 | 1,104,376 | 1,175,289 | 966,785 |
| மோட்டார் | 44,593,900 | 50,580,010 | 56,891,349 | 58,724,480 | 57,857,937 |
| சுகாதாரம் | 9,349,093 | 11,435,476 | 12,386,134 | 15,153,049 | 14,809,578 |
| நானாவிதம் | 3,306,901 | 3,891,564 | 4,492,033 | 4,942,850 | 4,346,801 |
| **உப மொத்தம்** | **59,366,606** | **68,619,783** | **76,831,128** | **82,179,319** | **80,320,367** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 3,274,297 | 3,734,321 | 4,031,846 | 5,568,739 | 6,159,888 |
| **மொத்தம்** | **62,640,903** | **72,354,104** | **80,862,975** | **87,748,058** | **86,480,255** |

| வகை | தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள் (இ.ரூபா '000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
| தீ | 1,024,290 | 1,640,062 | 1,696,698 | 2,546,301 | 2,041,356 |
| கடல் | 266,057 | 345,331 | 453,917 | 500,555 | 255,979 |
| மோட்டார் | 28,966,019 | 31,134,209 | 34,681,762 | 34,501,309 | 26,881,280 |
| சுகாதாரம் | 8,065,476 | 10,511,212 | 12,148,224 | 16,759,694 | 12,122,437 |
| நானாவிதம் | 2,121,221 | 4,186,860 | 3,457,623 | 3,148,570 | 1,228,258 |
| **உப மொத்தம்** | **40,443,063** | **47,817,674** | **52,438,224** | **57,456,428** | **42,529,310** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 33,677 | (10,519) | 76,068 | 692,927 | (12,232) |
| **மொத்தம்** | **40,476,740** | **47,807,154** | **52,514,292** | **58,149,354** | **42,517,078** |

| வகை | தேறிய கோரிக்கைகளின் வீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
| தீ | 84.40 | 95.29 | 86.69 | 116.61 | 87.26 |
| கடல் | 29.46 | 34.83 | 41.10 | 42.59 | 26.48 |
| மோட்டார் | 64.96 | 61.55 | 60.96 | 58.75 | 46.46 |
| சுகாதாரம் | 86.27 | 91.92 | 98.08 | 110.60 | 81.86 |
| நானாவிதம் | 64.15 | 107.59 | 76.97 | 63.70 | 28.26 |
| **உப மொத்தம்** | **68.12** | **69.68** | **68.25** | **69.92** | **52.95** |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 1.03 | (0.28) | 1.89 | 12.44 | (0.20) |
| **மொத்தம்** | **64.62** | **66.07** | **64.94** | **66.27** | **49.16** |

| விளக்கம் | தேறிய செலவுகள் (இ.ரூபா '000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ தவிர்த்து அனைத்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய செலவுகள் | 21,421,928 | 24,491,746 | 29,490,544 | 31,855,625 | 33,153,452 |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ | 653,706 | 732,786 | 842,515 | 1,411,974 | 984,128 |
| **மொத்தம்** | **22,075,634** | **25,224,532** | **30,333,059** | **33,267,599** | **34,137,580** |

| விளக்கம் | தேறிய செலவுகள் (இ.ரூபா '000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ தவிர்த்து அனைத்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய செலவுகளின் வீதம் | 36.08 | 35.69 | 38.38 | 38.76 | 41.28 |
| பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய செலவுகளின் வீதம் மொத்தம் | 35.24 | 34.86 | 37.51 | 37.91 | 39.47 |

| விளக்கம் | தேறிய செலவுகள் (இ.ரூபா '000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
| எஸ்ஆர்சீசீ அன்ட் ரீ தவிர்த்து அனைத்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய கலவை வீதம் | 104.21 | 105.38 | 106.63 | 108.68 | 94.23 |
| பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் தேறிய கலவை வீதம் மொத்தம் | 99.86 | 100.94 | 102.45 | 104.18 | 88.64 |

‘000

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பிரதிபலிக்கும் பூட்கைகளின் எண்ணிக்கை - பொது காப்புறுதி வியாபாரம்

பொதுக் காப்புறுதித்துறையின் கட்டுப்படுத்தப்பட்ட செயற்திறன், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தைக் குறிக்கும் பூட்கைகளின் எண்ணிக்கையை -2.45% வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதனைப் பிரதிபலிக்கின்றது, அத்துடன் இவ்வெண்ணிக்கை 2020இல் 6,539,589 (2019: 6,704,144) ஆக இருந்தது. 2020ஆம் ஆண்டில் காப்புறுதி வியாபாரத்தின் சுகாதார வகுப்பைத் தவிர, பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் ஒவ்வொரு துணை வகுப்பினரும் ஒரே மாதிரியான வீழ்ச்சியை வெளிப்படுத்தினர். கோவிட்-19 தொற்றுநோயின் விழிப்புணர்வுடன், அதிகமான நுகர்வோர் சுகாதாரக் காப்புறுதிக் கொள்கைகளை நோக்கிச் செல்கின்றனர், மேலும் சில பொதுக் காப்புறுதியாளர்கள் கோவிட்-19 இன் காப்பீட்டுடன் புதிய சுகாதாரக் காப்புறுதித் தயாரிப்புகளை அறிமுகப்படுத்தி சந்தை வாய்ப்பைப் பெற்றனர். இருப்பினும், 2020ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த காப்புறுதி பூட்கைகளில் 0.44% என்ற குறைந்தபட்ச பகுதியை சுகாதார காப்புறுதிப் பூட்களைகள் குறிப்பிடுகின்றன.

மோட்டார் காப்புறுதிப் பூட்கைகளின் எண்ணிக்கை மொத்த காப்புறுதிப் பூட்கைகளில் 90.49% ஆக்கிரமித்துள்ளது மாத்திரம் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் - 0.35% வளர்ச்சி குறைந்துள்ளது. ஆயினும்கூட, மூன்றாம் தரப்பு மோட்டார் காப்புறுதிப் பூட்கைகள் விரிவான பூட்கைகளுக்கு மாறாக 5.07% உயர்வை அளித்தது - 5.59% சரிவை பதிவுசெய்தது, நுகர்வோர் விருப்பம் குறைந்த தவணைக்கட்டணங்களுடன் குறைந்தபட்ச பாதுகாப்பை நோக்கி தூண்டப்பட்டு, கட்டாய ஒழுங்குமுறை தேவையைப் பூர்த்தி செய்யத் தூண்டியது, தொற்றுநோய் பாதகமான விளைவுகளால் தூண்டப்பட்டது. பூட்கையாளர்கள் மூன்றாம் நபர் காப்புறுதிக்கு மாறினர், மேலும் தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார அழுத்தத்தின் காரணமாக பூட்கைகள் காலாவதியாகிவிடுகின்றன, இது வணிக வளர்ச்சியைத் தடுக்கின்றது. இதேபோல், ஏனைய காப்புறுதி மற்றும் கடல்சார் காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தைக் குறிக்கும் பூட்கைகளின் எண்ணிக்கை முறையே - 28.40% மற்றும் -23.41% வீதமாக சுருங்கியது.

2016ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரை மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தை உருவாக்க பங்களித்த பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பல்வேறு உப வகுப்புகளுக்கான காப்புறுதிக் கொள்கைகளின் எண்ணிக்கையை அட்டவணை 28 பிரதிபலிக்கின்றது.

வரைபடம் 20

**தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம், தேறிய ஏற்கநேர்ந்த கோரிக்கைகள், தேறிய செலவுகள், தேறிய செலவுகள் விகிதம் மற்றும் தேறிய கலவை விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**




அட்டவணை 28

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பூட்கைகளின் எண்ணிக்கை - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| வகை | பூட்கைகளின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
| தீ | 246,058 | 241,884 | 245,027 | 234,408 | 220,196 |
| கடல் | 191,966 | 172,733 | 187,338 | 179,001 | 137,093 |
| வாகனம் | 5,075,622 | 5,390,222 | 5,614,901 | 5,937,989 | 5,917,348 |
| மூன்றாம் தரப்பு | 2,628,255 | 2,784,920 | 2,821,529 | 2,919,884 | 3,067,955 |
| விரிவான | 2,447,367 | 2,605,302 | 2,793,372 | 3,018,105 | 2,849,393 |
| சுகாதாரம் | 16,040 | 11,893 | 17,267 | 23,237 | 29,019 |
| நானாவிதம் | 238,921 | 311,084 | 427,470 | 329,509 | 235,933 |
| **மொத்தம்** | **5,768,607** | **6,127,816** | **6,492,003** | **6,704,144** | **6,539,589** |

### புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள காப்புறுதிப் பூட்கைகளின் விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்

அட்டவணை 29 மற்றும் வரைபு 21 ஆகியவை 2019 மற்றும் 2020ஆம் ஆண்டின் இறுதியில் நடைமுறையில் உள்ள புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் பூட்கைகள் பற்றிய விரிவான தகவல்களை விளக்குகின்றன

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட புதிய கொள்கைகள் -13.90% வீதத்தினால் குறைவடைந்துள்ளதுடன், அதன் மொத்த எண்ணிக்கை 2,850,308 ஆகும். இந்த வீழ்ச்சி மோட்டார் வாகனக் காப்புறுதிப் பூட்கைகளினால் ஏற்பட்டதாகும். மேற்குறிப்பிட்டவாறு, புதிய விரிவான பூட்கைகள் குறைவடைந்ததுடன் எதிர்மாறாக 3ஆம் தரப்பு பூட்கைகள் அதிகரித்தன மற்றும் மோட்டார் வகையின் கீழ் வழங்கப்பட்ட புதிய பூட்கைகள் அனைத்தும் சேர்த்து மொத்த எண்ணிக்கை 2,471,051 ஆக இருந்தது. மேலும், சுகாதாரக் காப்புறுதி வியாபாரத்தின் கீழ் புதிய பூட்கைகள் 3,725 ஆல் அதிகரித்துள்ளன

மறுபுறம், அதே காப்புறுதியாளருடன் பூட்கையாளர்களினால் புதுப்பிக்கப்பட்ட பூட்கைகளின் எண்ணிக்கை 8.39% வீத மிதமான வளர்ச்சியை அளித்ததுடன் இத்தொகை 3,663,655ஆக பதிவு செய்யப்பட்டது, இது பிரத்தியேகமாக மோட்டார் மற்றும் சுகாதாரக் காப்புறுதிப் பூட்கைகளினால் இயக்கப்படுகின்றது. 2020ஆம் ஆண்டின் இறுதியில் நடைமுறையில் உள்ள பூட்கைகளின் எண்ணிக்கை பாதியாக -2.82% வீதத்தினால் குறைந்து 6,474,623 ஆக மாறியது. இந்த ஆண்டில் பொதுக் காப்புறுதித்துறையின் வளர்ச்சி வாய்ப்புகளைத் தடுக்கும் வகையில் ஏனைய காப்புறுதி வகைகளான நானாவித வகை, கடல், தீ மற்றும் விரிவான மோட்டார் ஆகியவற்றுக்கான பூட்கைகள் சென்ற ஆண்டைக் காட்டிலும் முறையே - 24.23%, -24.19%, - 6.92% மற்றும் - 6.29% வீதத்தினால் குறைவடைந்துள்ளன.

அட்டவணை 29

**புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள காப்புறுதிப் பூட்கைகளின் விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

| வகை | 2019 | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|
| | புதிய பூட்கைகள் | புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் | வருட இறுதியில் அமுலில் உள்ள பூட்கைகள் | புதிய பூட்கைகள் | புதுப்பிக்கப்பட்ட பூட்கைகள் | வருட இறுதியில் அமுலில் உள்ள பூட்கை |
| தீ | 86,023 | 151,104 | 232,968 | 71,135 | 149,084 | 216,847 |
| கடல் | 176,083 | 4,087 | 172,571 | 134,232 | 3,726 | 130,828 |
| வாகனம் | 2,814,187 | 3,126,583 | 5,925,551 | 2,471,051 | 3,424,277 | 5,863,856 |
| மூன்றாம் தரப்பு | 1,463,297 | 1,456,199 | 2,922,586 | 1,531,788 | 1,515,051 | 3,049,795 |
| விரிவான | 1,350,890 | 1,670,384 | 3,002,965 | 939,263 | 1,909,226 | 2,814,061 |
| சுகாதாரம் | 15,574 | 7,794 | 23,392 | 19,299 | 9,642 | 29,636 |
| நானாவிதம் | 218,653 | 90,538 | 308,107 | 154,591 | 76,926 | 233,456 |
| **மொத்தம்** | **3,310,520** | **3,380,106** | **6,662,589** | **2,850,308** | **3,663,655** | **6,474,623** |

### மீள்காப்புறுதி வியாபாரம்

19 டிசம்பர் 2020ஆம் திகதி மேலதிக சாதாரண அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1528/20, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு, உள்ளூர் பொதுக் காப்புறுதிச் சந்தையில் இருந்து கட்டாய மீள்காப்புறுதித் தொகையை ஏற்கும் அதிகாரத்தை வழங்குகின்றது, மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பொதுக் காப்புறுதி வியாபாரத்தைப் பரிவர்த்தனை செய்யும் ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனிக்கும் பொது மீள்காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தின் இருபது சத விகிதம் (குறிப்பிடப்பட வேண்டிய விதிகளுக்கு உட்பட்டது) என நிர்ணயித்துள்ளது. கூறப்பட்ட வர்த்தமானியைத் தொடர்ந்து, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது 2008ஆம் ஆண்டு தொடக்கம் 'தேசிய மீள்காப்புறுதியாளர்' என்ற முதன்மை நோக்கத்துடன் மீள்காப்புறுதியின் அபாயத்தை ஏற்கத் தொடங்கியது.

டிசம்பர் 31, 2012 ஆம் திகதி இலக்கம் 1791/4 உடைய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளுக்கு அமைவாக, அனைத்து முதன்மை காப்புறுதியாளர்களும் 2013 தொடக்கம் ஒவ்வொரு பொது மீள்காப்புறுதி வியாபாரத்திலிருந்து எழும் மொத்தப் பொறுப்பில் முப்பது சத வீதத்தை தேசிய நம்பிக்கை நிதியத்திற்கு விட்டுக்கொடுத்தல் வேண்டும்.

2020ஆம் ஆண்டில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மீள்காப்புறுதித் தவணைக்கட்டண வருமானம் இ.ரூபா 3,235 மில்லியனைப் பதிவுசெய்துள்ளது, இது 2019இல் பதிவு செய்யப்பட்ட இ.ரூபா 4,174 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 22.48% வீதத்தினால் குறைந்துள்ளது. 2020ஆம் ஆண்டில், இ.ரூபா 275 மில்லியன் (2019: இ.ரூபா 449 மில்லியன்) மீள்காப்புறுதியாளர்களுக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தால் மீள்காப்புறுதித் தவணைக் கட்டணமாக வழங்கப்பட்டது, இது ஆண்டுக்கு 38.75% வீதத்தினால் குறைந்துள்ளது. இந்த குறைந்த செயற்திறன் முக்கியமாக 31 மார்ச் 2020 தொடக்கம் நடைமுறைக்கு வரக்கூடிய 30% வீத தன்விரும்பிப் பங்கை

வரைபடம் 21

**புதிய, புதுப்பிக்கப்பட்ட மற்றும் அமுலில் உள்ள காப்புறுதிப் பூட்கைகளின் விபரம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**




ஏற்றுக்கொள்வதை நிறுவத்துவதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் எடுத்த முடிவின் காரணமாக இருந்தது. எவ்வாறாயினும், ஒகஸ்ட் 1, 2020 தொடக்கம் 1 ஒகஸ்ட் தொடக்கம் 2022 ஜனவரி 31 வரையிலான 30% வீத கட்டாய அமர்வுக்கான பின்னடைவு காப்புறுதியுடன் 30% கட்டாய தன்விரும்பி மீள்காப்புறுதிப் பங்கை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மீண்டும் ஏற்கத் தொடங்கியது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது 2019ஆம் ஆண்டில் ஏற்கப்பட்ட இ.ரூபா 3,560 உடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டில் இ.ரூபா 1,567 மில்லியன் கோரிக்கைகளை ஏற்றுள்ளதுடன், இது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 55.98% வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. கோவிட் - 19 இன் 1வது மற்றும் 2வது அலைகளின் போது செயற்படுத்தப்பட்ட இயக்கம் கட்டுப்பாடுகள், மோட்டார், தீ மற்றும் ஏனைய உரிமைக்கோரல்களை நேரடியாகக் குறைத்தது மற்றும் தொற்றுநோயைத் தொடர்ந்து பயணம் மற்றும் சுற்றுலாத் தொழில்களில் கூர்மையான சரிவு ஆகியவை ஏற்பட்டுள்ள இந்த குறிப்பிடத்தக்க சரிவுக்குப் பின்னால் உள்ள முக்கிய காரணிகள் ஆகும்.

2020ஆம் ஆண்டில் பெறப்பட்ட உரிமைக்கோரல்களில் கூர்மையான குறைவு ஏற்பட்டதன் மூலம், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி வியாபாரமானது 2019ஆம் ஆண்டில் எழுத்துறுதி நட்டம் மற்றும் வரிக்கு முன்னரான தேறிய நட்டம் என்பன முறையே இ.ரூபா 770 மற்றும் இ.ரூபா 662 மில்லியனாக இருக்கையில் அதனுடன் ஒப்பிடும்போது வரிக்கு 2020இல் எழுத்துறுதி இலாபம் மற்றும் இலாபம் முறையே இ.ரூபா 990 மில்லியன் மற்றும் இ.ரூபா 1,170 மில்லியன் எனப் பதிவுசெய்துள்ளது.

மீள்காப்புறுதி செயற்பாட்டின் மொத்த சொத்துக்கள் 2019ஆம் ஆண்டு இ.ரூபா 6,690 மில்லியனாக இருந்ததுடன் அதனுடன் ஒப்பிடுகையில் 2020இல் 5.62% வீதமாக சற்று அதிகரித்திருந்தது இ.ரூபா 7,066 மில்லியனாக இருந்தது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி வியாபாரத்தின் கீழ்

அறிக்கையிடப்பட்ட அரசாங்கக் கடன் பத்திரங்களில் முதலீடுகள் 2019 டிசம்பர் 31ஆம் திகதி அறிக்கையிடப்பட்ட இ.ரூபா 2,484 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 19.16% வீதத்தினால் அதிகரித்து 2020 டிசம்பர் 31இல் இ.ரூபா 2,960 மில்லியனாக உள்ளது. அதன்படி, மீள்காப்புறுதி வியாபாரத்தின் கீழ் உள்ள மொத்த சொத்துக்களில், அரசாங்கக் கடன் பத்திரங்கள் 42% வீதமாக உள்ளது. மேலும் தவணைக்கட்டணப் பெறத்தக்கவைகள் மற்றும் மறுசீரமைப்பு ஏற்பாடுகளில் இருந்து பெறத்தக்கவைகள் முறையே மொத்த சொத்துக்களில் 18% மற்றும் 16% வீதமாகும். எவ்வாறெனினும், மீள்காப்புறுதி வியாபாரத்தை ஆதரிக்க போதுமான நிதிக் கருவிகள் இல்லை, அங்கு மீள்காப்புறுதிப் பொறுப்பில் 96% வீதம் மட்டுமே நிதிக் கருவிகள் மூலம் ஈடுசெய்யப்பட்டுள்ளது.

### காப்புறுதி தரகர் கம்பனிகள்

காப்புறுதித் தரகு நிறுவனங்கள் இடைத்தரகர்களாக வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வேறுபட்ட தேவைகளுக்கு ஏற்ப பொருத்தமான காப்புறுதிக் கொள்கைகளை வாங்க உதவுகின்றன. மேலும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட வகை காப்புறுதித் தீர்வில் கவனம் செலுத்தலாம் அல்லது பல்வேறு வகையான காப்புறுதித் தீர்வுகள் குறித்து ஆலோசனைகளை வழங்கலாம். காப்புறுதி முகவர்களைப் போலவே பல செயற்பாடுகளைச் செய்யும்போது, பூட்கையாளர்களின் நலனுக்காக அவர்கள் செயற்படும் முகவர்களிடமிருந்து வேறுபடுகிறார்கள். காப்புறுதித் தரகர்கள் ஒன்று அல்லது பல காப்புறுதி நிறுவனங்களின் கீழ் பூட்கைகளை விற்கின்றார்கள், இது 2020ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு இறுதியில் சந்தையில் 68 காப்புறுதி தரகர் கம்பனிகள் தொழிற்பட்டதுடன், இவை இ.ரூபா 28,912 மில்லியன் (2019:இ.ரூபா 29,317 மில்லியன்) பெறுமதியான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை உழைத்துக்கொண்டன. இந்த முழுமையான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமானது நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களில் இருந்து பெறப்பட்ட முறையே இ.ரூபா 1,422 மில்லியன் (2019: இ.ரூபா 1,095) மில்லியன் மற்றும் இ.ரூபா 27,490 மில்லியன் (2019: இ.ரூபா 28,22 மில்லியன்) தொகைகளை உள்ளடக்கியிருந்தது. உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் பொதுக் காப்புறுதி வியாபாரம் 95.08% வீதத்தையும் நீண்ட கால காப்புறுதி வியாாபரம் 4.92% வீதத்தையும் கொண்டிருந்தன.

2019இல் உருவாக்கப்பட்ட இ.ரூபா 29,317 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் காப்புறுதித் தரகு வியாபாரத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் 1.38% வீத வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்தாலும், நாட்டின் தொற்றுநோய் சூழ்நிலையுடன் ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளுக்கான அதிகரித்த கோரிக்கைகள் காரணமாக நீண்டகால காப்புறுதி வணிகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு 29.85% வீதமாக இருந்தது.

இடைத்தரகராக, காப்புறுதித் தரகர் கம்பனிகள் SRCC&T தவணைக் கட்டணம் உள்ளடங்களாக, பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கணிசமான மொத்தத் தவணைக் கட்டணமாக (ரூபா 105,276 மில்லியன்) பங்களித்துள்ளன. கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும், 2020இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு மிகக்குறைவாகவே இருந்தது. தரகர் கம்பனிகளினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், 1.38% வீதப் பங்களிப்பை மட்டுமே மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக (இ.ரூபா 102,974 மில்லியன்) உருவாக்கியிருந்தது.

2020இல், முப்பதியொரு காப்புறுதி தரகர் கம்பனிகள் ரூபா 100 மில்லியனை விட அதிகமான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களை உழைத்திருந்ததுடன், இவை ஒன்று சேர்ந்து இ.ரூபா 27,462 மில்லியனை பெற்றிருந்தன. மிகுதி 37 காப்புறுதி தரகர் கம்பனிகளும் ரூபா 1,450 மில்லியனைப் பெற்றுள்ளன.

கூடுதலாக, காப்புறுதி தரகு நிறுவனங்கள் மீள்காப்புறுதி தரகுச் சேவைகளுக்கு இடைத்தரகர்களாகச் செயற்படும் கருவிகளை விரிவுபடுத்தியுள்ளன, அதன்படி சில தரகு நிறுவனங்கள் 2020ஆம் ஆண்டில் இ.ரூபா 463 மில்லியன் கணிசமான தவணைக்கட்டணங்களையும் தரகினையும் பெற்றுள்ளன. (2019: இ.ரூபா 1,551 மில்லியன்)

**வரைபடம் 22**

**2011 இருந்து 2020 வரை காப்புறுதி தரகர் கம்பனிகளின் ஊடாக உருவாக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்**




| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நீண்ட கால காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா.மில்லியன்) | 296 | 195 | 191 | 158 | 206 | 263 | 341 | 655 | 1,095 | 1,422 |
| பொதுக் காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (இ.ரூபா.மில்லியன்) | 10,19 | 12,53 | 14,18 | 14,55 | 16,12 | 17,51 | 22,08 | 24,40 | 28,22 | 27,49 |
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் தரகர்களின் பங்களிப்பு % | 12.78 | 14.03 | 14.39 | 13.91 | 13.28 | 12.43 | 13.59 | 13.81 | 14.92 | 13.88 |

*குறிப்பு : 2020ஆம் ஆண்டுக்கு பதிவுசெய்யப்பட்ட இலக்கங்கள், 31 டிசம்பர் 2020 இல் முடிவடைந்த ஆண்டுக்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த விபரத்திரட்டுகளில் இருந்து பெறப்பட்டவையாகும்.*

அட்டவணை 30

**காப்புறுதி தரகு கம்பனியின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் - 2020**

| இல. | தரகருடைய பெயர் | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நீண்ட கால காப்புறுதி வியாபாரம் | | பொதுக் காப்புறுதி வியாபாரம் | | மொத்தம | |
| | | இ.ரூபா '(000) | சந்தைப் பங்கு (%) | இ.ரூபா '(000) | சந்தைப் பங்கு (%) | இ.ரூபா '(000) | சந்தைப் பங்கு (%) |
| 1 | ஏடிஎஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 14,905 | 1.05 | 1,156,453 | 4.21 | 1,171,358 | 4.05 |
| 2 | எயிட்கன் ஸ்பென்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | - | 0.00 | 818,501 | 2.98 | 818,501 | 2.83 |
| 3 | அல்பின்கோ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 130 | 0.01 | 1,026,480 | 3.73 | 1,026,610 | 3.55 |
| 4 | அலியோன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | 746 | 0.05 | 126,499 | 0.46 | 127,246 | 0.44 |
| 5 | அம்ட்ரஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 46 | 0.00 | 121,174 | 0.44 | 121,220 | 0.42 |
| 6 | அஸ்கி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | - | 0.00 | 2,220,592 | 8.08 | 2,220,592 | 7.68 |
| 7 | அஸட்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 30,037 | 2.11 | 1,647,531 | 5.99 | 1,677,568 | 5.80 |
| 8 | சினர்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | 50,398 | 3.54 | 128,396 | 0.47 | 178,795 | 0.62 |
| 9 | சிஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட | 210 | 0.01 | 2,815,501 | 10.24 | 2,815,711 | 9.74 |
| 10 | கொலொம்போர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | 8,523 | 0.60 | 356,517 | 1.30 | 365,040 | 1.26 |
| 11 | கொமரஷல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட. | 30,998 | 2.18 | 2,407,293 | 8.76 | 2,438,291 | 8.43 |
| 12 | டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 344,392 | 24.22 | 1,308,859 | 4.76 | 1,653,250 | 5.72 |
| 13 | ஈகுவிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | - | 0.00 | 107,173 | 0.39 | 107,173 | 0.37 |
| 14 | ஈசாலி கரிம்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 95,501 | 6.72 | 418,928 | 1.52 | 514,429 | 1.78 |
| 15 | பின்லே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | 22,035 | 1.55 | 1,008,910 | 3.67 | 1,030,944 | 3.57 |
| 16 | ஜோர்ஜ் ஸ்டுவர்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட | 37,571 | 2.64 | 1,476,707 | 5.37 | 1,514,278 | 5.24 |
| 17 | குளோபல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் சேர்விஸ் (பிறைவட்) லிமிடட. | 12,141 | 0.85 | 117,824 | 0.43 | 129,965 | 0.45 |
| 18 | இன்சூர்மீ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | 102,620 | 7.22 | 1,023,455 | 3.72 | 1,126,075 | 3.89 |
| 19 | லைப் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிறைவட்) லிமிடட். | 54,279 | 3.82 | 372,229 | 1.35 | 426,508 | 1.48 |
| 20 | மேர்கன்டைல் போர்சூன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 15,942 | 1.12 | 893,304 | 3.25 | 909,246 | 3.14 |
| 21 | நேஷன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | 12,718 | 0.90 | 394,521 | 1.44 | 407,239 | 1.41 |
| 22 | நேஷன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | 108,255 | 7.61 | 1,651,080 | 6.01 | 1,759,335 | 6.09 |
| 23 | புரோகெயர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 15,558 | 1.09 | 223,515 | 0.81 | 239,073 | 0.83 |
| 24 | புரெட்டெக்ஸன் அன்ட் அட்மோஸட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட். | 172 | 0.01 | 491,089 | 1.79 | 491,261 | 1.70 |
| 25 | புரெட்டெக்ஸன் அன்ட் அசூரதன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட. | 143,590 | 10.10 | 84,644 | 0.31 | 228,234 | 0.79 |
| 26 | ரிலைன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட; | 42,000 | 2.95 | 1,064,890 | 3.87 | 1,106,890 | 3.83 |
| 27 | சேனாரத்ன இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 41,771 | 2.94 | 1,203,868 | 4.38 | 1,245,639 | 4.31 |
| 28 | செங்கடகல இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | - | 0.00 | 1,002,716 | 3.65 | 1,002,716 | 3.47 |
| 29 | ஸ்ரடர்ஜிக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 40,985 | 2.89 | 104,043 | 0.38 | 145,028 | 0.50 |
| 30 | வோலங்கா இன்சூரன்ஸ் சேவிஸஸ் (பிறைவட்) லிமிடட் | 17,926 | 1.26 | 90,202 | 0.33 | 108,128 | 0.37 |
| 31 | ஸெனித் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிடட் | 44,141 | 3.12 | 311,890 | 1.13 | 356,032 | 1.23 |
| | ஏனைய காப்புறுதித் தரகர் கம்பனிகள் (37) | 134,230 | 9.44 | 1,315,386 | 4.78 | 1,449,616 | 5.01 |
| | **உப மொத்தம்** | **1,421,821** | **100.00** | **27,490,169** | **100.00** | **28,911,989** | **100.00** |

# தொழிற்பாடுகளின் மீளாய்வு

## மேற்பார்வை மீளாய்வு

### காப்புறுதிக் கம்பனிகள்

#### 1. விபரத்திரட்டுகளின் மீளாய்வு

**அ) வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டுகள், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் மற்றும் காப்புறுதிக் கணிப்பீட்டு அறிக்கைகள்**

2017 மார்ச் 13ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட 14 மற்றும் 15ஆம் தீர்மானங்களுக்கு அமைவாக சகல காப்புறுதி வழங்குனர்களும் தமது வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டு மற்றும் நிதிசார் கணக்காய்வுக் கூற்றுக்கள் ஆகியவற்றை குறிப்பிட்ட நிதி ஆண்டு நிறைவடைந்து அடுத்து வருகின்ற நான்கு மாதங்களினுள் சபைக்குச் சமா்ப்பிக்க வேண்டும் என வேண்டப்படுகின்றனர். மேலும், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதிக் கணக்கீட்டு அறிக்கை ஒன்றையும் மற்றும் வருடாந்த நியதிச் சட்ட விபரத்திரட்டுடன் தொடர்புடைய சாராம்சம் ஒன்றையும் சட்டத்திற்கு அமைவாக சமா்ப்பிக்க வேண்டும்..

இருப்பினும், கோவிட்-19 தொற்றுநோயுடன் நாட்டில் நிலவும் நிலைமை காரணமாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஒரு மாத காலத்திற்கு வருடாந்த / கணிப்பீட்டு விபரத்திரட்டுகளை சமா்ப்பிப்பதற்கான நீடிப்பினை வழங்கியது.

ஆணைக்குழு விபரத்திரட்டுகள் உரிய நேரத்தில் சமா்ப்பிக்கப்படுவதைக் கண்காணிப்பதுடன், அவற்றின் செம்மை மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதையும் உறுதிப்படுத்துவதற்கு அவற்றைப் பரீட்சிக்கின்றது. மீளாய்வின் போது அவதானிக்கப்படும் நியதிச் சட்டத் தேவைகளில் இருந்தான விலகல்களை குறிப்பிட்ட காலத்திற்குள் நிவர்த்தி செய்யுமாறு காப்புறுதிக் கம்பனிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது. அவசியமாயின், பின்னூட்டு நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், விபரத்திரட்டுகளின் மீளாய்வின் போது அவதானிக்கப்படும் பிரச்சினைகள் அமைவிடத்திலான பரீட்சித்தல்களின் போதும் உரிய கம்பனிகளுக்கு அறிவிக்கப்படுகின்றது.

**ஆ) காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் குழுக்களின் நிதிப் பாதிப்பின் மதிப்பீடு**

காப்புறுதி வழங்குனர்கள் அவர்களுடைய வருடாந்த விபரத்திரட்டின் ஒரு பகுதியாக, இடர் மதிப்பீட்டு அறிக்கையை ஆணைக்குழுவிற்கு ஒவ்வொரு வருடமும் சமா்ப்பிப்பதற்கு கோரப்படுகின்றனர். அதற்கமைவாக, காப்புறுதிக் கம்பனிகளின் தொழிற்பாடுகள் தொடா்பான மேலோட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, இந்த வருடம் இடர் மதிப்பீட்டு அறிக்கையில் நிறுவன கட்டமைப்பு மற்றும் உரிமை, வியாபார சுருக்கக் குறிப்பு, சிரேஸ்ட முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம், கோரிக்கைகள் நிர்வாகம், இடர் முகாமைத்துவம் போன்றவை தொடர்பாக உள்ள தகவல்களை ஆணைக்குழு மீளாய்வு செய்தது.

**இ) மீள்காப்புறுதி ஒழுங்குகள்**

சட்டத்தின் பிரிவு 31(1) நியதிகளுக்கு அமைவாக காப்புறுதியாளர்கள் அதன் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்கும் வகையில் ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் அவர்களுடைய மீள்காப்புறுதி ஒழுங்குபடுத்தல்கள் தொடா்பாக 15 மார்ச் 2020ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு கோரப்பட்டனர். இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் நாடு தழுவிய முடக்கலைக் கருத்தில் கொண்டு மின் பதிப்பு மூலம் அதைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எவ்வாறெனினும், கோவிட் - 19 தொற்றுநோய் காரணமாக சில நிறுவனங்கள் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட தரப்படுத்தல் தேவையை திருப்திப்படுத்தும் வகையில் மீள்காப்புறுதியாளரிடமிருந்து மீள்காப்புறுதி காப்பீடுகளைப் பூர்த்தி செய்கின்றதுடன், காப்பீடுகள் உரிய வகைகளுக்குப் பெறப்பட்டு காப்புறுதி வழங்குனர் தேசிய காப்புறுதி நம்பிக்கை சபையினால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழு இக்குறித்த ஆவணங்களை மீளாய்வு செய்கின்றது. யாதேனும் இணக்கப்பாடின்மை மற்றும் விலகல்கள் அவதானிக்கப்படின், அதனை திருத்துவதற்கான நடவடிக்கைகளை குறித்த கால வரையறைக்குள் மேற்கொள்ளுமாறு உரிய கம்பனிகளுக்கு ஆணைக்குழுவினால் அறிவித்தல் வழங்கப்படும்.

மேலும், அனைத்துக் காப்புறுதியாளர்களும் தங்களுடைய சுயவிருப்ப மீள்காப்புறுதி ஏற்பாடுகளை காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்க வேண்டும். காலாண்டு வருமானத்தை மதிப்பாய்வு செய்யும் போது, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு வழங்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச கடன் மற்றும் நிதி வலிமை மதிப்பீட்டிற்கு இணங்காத சில நிறுவனங்கள் மதிப்பிடப்படாத மீள்காப்புறுதியாளர்களுடன் சுயவிருப்ப மீள்காப்புறுதி ஏற்பாடுகளை செய்திருப்பது கவனிக்கப்பட்டது. அதன்படி, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எடுக்கும்படி அறிவிக்கப்பட்டதுடன், குறித்த இணங்காமை தொடர்பாக சட்டப் பிரிவுக்கும் அறிவிக்கப்பட்டது.

**ஈ) காலாண்டு விபரத்திரட்டுகள்**

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து நாற்பத்தைந்து தினங்களுக்குள் காலாண்டு விபரத்திரட்டினை ஆணைக்குழுவிற்குச் சமா்ப்பிக்குமாறு காப்புறுதிக் கம்பனிகள் வேண்டப்படுகின்றன.

2020ஆம் ஆண்டுக்கு சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டதுடன், சட்டத்தின் ஒழுங்குவிதிகளுடன் அவர்களுடைய காலாண்டு செயற்பாடுகள் மற்றும் இணக்கப்பாடுகளின் இணக்கம் உறுதிப்படுத்தப்பட்டது.

காப்புறுதி வழங்குனர்களின் சொத்து மற்றும் பொறுப்பு நிலை, மூலதனப் போதுமை (கடன்தீர் நிலை), திரவத்தன்மை மற்றும் ஏனைய இடர் பரப்புகள் என்பவற்றைப் பகுப்பாய்வு செய்வதன் ஊடாக ஒவ்வொரு காலாண்டும் ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனிகளினதும் நிதியியல் நிலை தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டது. காலாண்டு விபரத்திரட்டுகளில் அவதானிக்கப்பட்ட இணக்கப்பாடின்மை மற்றும் குறிப்பிடக்கூடிய வேறுபாடுகள் உரிய காப்புறுதிக் கம்பனிகளுக்கு குறிக்கப்பட்ட கால எல்லையினுள் திருத்தப்படுவதற்காக அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியினதும் காலாண்டு செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காக, ஆணைக்குழு பொது மற்றும் நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளின் தவணைக் கட்டண வருமானம், உத்தரவாதமளிக்கப்பட்ட இலாபம் மற்றும் தேறிய இலாபம் என்பனவற்றை விபரத்திரட்டின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்தது. மேலும், முழுமையான பகுப்பாய்வு விகிதங்கள் பயன்படுத்தப்பட்டு இலாபத்தன்மை, செலவினங்கள் மற்றும் கோரிக்கைகள் போன்றன குறித்த காப்புறுதி வழங்குனர்களின் காலாண்டு செயற்பாட்டின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், முன்னைய காலாண்டு எச்சரிக்கை விகிதங்களுடன் ஒப்பீடும் செய்யப்பட்டது.

2006ஆம் ஆண்டு 6ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், சபையின் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் அவர்கள் இணங்குகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் காப்புறுதி வழங்குனர்கள் காலாண்டு விபரத்திரட்டுகளுடன் இரண்டு இணக்கப்பாட்டு சான்றிதழினை வழங்குமாறு கோரப்படுகின்றனர்.

**உ) மாதாந்த விபரத்திரட்டுகள்**

2020ஆம் ஆண்டில், இரண்டு நிறுவனங்கள் அவ்வப்போது அறிக்கையிடப்பட்ட இணக்கமின்மையின் அடிப்படையில் சட்டபூர்வ அறிக்கைகள், இடர் அடிப்படையிலான மூலதன நிலை போன்றவற்றைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. அதன்படி, இந்த நிறுவனங்களின் நிதி நிலைச் சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் விதிகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக, இந்த நிறுவனங்கள் சமர்ப்பித்த மாதாந்த விபரத்திரட்டுகளை ஆணைக்குழு பகுப்பாய்வு செய்தது

#### 2. கடன்தீர் எல்லை விதிகளுடனான (இடர் அடிப்படையிலான மூலதனம்) இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல்

2015 கடன்தீர் எல்லை விதிகளுக்கு அமைவாக, ஒவ்வொரு காப்புறுதி வியாபாரமும் குறைந்தபட்ச மூலதனப் போதுமை விகிதத்தையும் மொத்த கிடைக்கப்பெறும் மூலதனத்தையும் பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் இரண்டும் பேணுதல்

வேண்டும் என்பதுடன் அவர்களின் கடன்தீர் எல்லைக் கணிப்பீட்டினை மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த விபரத்திரட்டுகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கடன்தீர் எல்லை விதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு ஆணைக்குழு இவ்வாறான கணிப்பீட்டினை பகுப்பாய்வு மற்றும் மீளாய்வு செய்கின்றது. காப்புறுதி வழங்குனர்கள் அவசியமான கடன்தீர் எல்லையைப் பூர்த்திசெய்வதற்குத் தவறும் பொழுதில் அல்லது கணிப்பீடானது தவறாக இருக்கும் சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அதனை சீர்செய்வதற்கும் மற்றும் கடன்தீர் எல்லையுடன் இணங்குவதற்குமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு சபை அவர்களுக்கு அறிவுறுத்தும்.

### 3. முதலீட்டு குறித்துரைப்புகளுடனான இணக்கப்பாட்டினைக் கண்காணித்தல்

#### அ) அரச பிணையங்களில் முதலீடு

அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் அவர்களுடைய காப்புறுதி நிதிகளை அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யுமாறு கோரப்படுகின்றனர். சட்டத்தின் 25ஆம் பிரிவுக்கு அமைவாக, அரச பிணையங்களில் தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துக்களில் 20% வீதத்திற்குக் குறையாத தொகையையும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் சொத்துக்களில் 30% வீதத்திற்குக் குறையாத தொகையையும் முதலீடு செய்யுமாறு கோரப்படுகின்றனர். குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் வழங்கப்பட்ட விபரத்திரட்டுகள் மற்றும் உரிய துணை ஆவணங்கள் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக அரச பிணையங்களில் முதலீடுகளை ஆணைக்குழு மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்கின்றது.

யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது வேறுபாடுகள் அவதானிக்கப்படின், குறிப்பிட்ட கால வரையறைக்குள் உரிய திருத்தத்திற்கான நடவடிக்கையை எடுக்குமாறு உரிய காப்புறுதிக் கம்பனிகளுக்கு ஆணைக்குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்படும்.

#### ஆ) தீர்மானம் 1 இற்கு அமைவாக ஏனைய முதலீடுகள்

ஒவ்வொரு காப்புறுதி வழங்குனர்களும் அவர்களின் தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துக்கள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் மீதிகளை 2011 மார்ச் 01ஆம் திகதி 1ஆவது தீர்மானத்திற்கும் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகவும் முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். ஆணைக்குழு 1ஆம் தீர்மானத்திற்கு அமைவாக காப்புறுதி வழங்குனர்களினால் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் அவர்கள் வழங்கிய விபரத்திரட்டுகளை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப ஒதுக்குகள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் முதலீட்டு விபரங்களை மீளாய்வு செய்கின்றது.

இந்த வருடம் 1ஆம் தீர்மானத்துடன் வேறுபட்டமை மற்றும் இணக்கப்பாடின்மை ஒரு காப்புறுதி வழங்குனரிடம் அவதானிக்கப்பட்டது. அதற்கமைவாக, கம்பனிக்கு உடனடியாக தீர்மானம் 1இற்கு அமைவாக அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கம்பனி, தீர்மானம் 1இற்கு அமைவாக அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

### 4. கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) மீதான அமுலாக்கல் உபாயமார்க்கம்

காப்புறுதிக் கம்பனி கடன்தீர் எல்லை( இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளுக்கு அமைவாக மூலதன போதுமை தேவைப்பாடுகளை பராமரிப்பதற்குத் தவறின், ஆணைக்குழு தலையீட்டை மேற்கொண்டு, அந்தக் கம்பனி இடர் அடிப்படையிலான மூலதனத்தின் மீது அமுலாக்கப்பட்டுள்ள உபாயமார்க்கத்தின் அடிப்படையில் சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதற்குக் காரணம், காப்புறுதிக் கம்பனிகளை முதல் கட்டத்திலேயே அடையாளம் காணல் மற்றும் குறிப்பிடத்தக்க அமுலாக்கல் பிரச்சினை வருவதற்கும் மற்றும் அவர்களுடைய கட்டுப்பாட்டை மீறுமளவிற்கு வளருவதற்கு முன்னர் வினைத்திறனான ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகும். இது காப்புறுதி நிறுவனங்களின் செயற்திறனை உன்னிப்பாகக் கண்காணிக்க, நிதி நிலமை அல்லது கடன்தொகையில் ஏதேனும் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்படுவதையும் நெருக்கடி நிலைக்கு இட்டுச்செல்வதையும் தடுப்பதற்கு வழிவகுக்கும். இவ்வருடம் நான்கு நிறுவனங்கள் 120% இருந்து 160% வீதமான மூலதனப் போதுமை விகிதத்தை அறிவித்தன, அதன்படி ஆணைக்குழு அமுலாக்க உபாயமார்க்கத்தின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தது.

### 5. காப்புறுதியாளரின் புதிய பதிவு

2020ஆம் ஆண்டில் பொதுக் காப்புறுதி வியாபாரத்தைக் கையாளும் ஒருவர் ஆயுள் காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டுநடாத்த உப நிறுவனத்தை உருவாக்குவதற்கு விண்ணப்பத்தை சமார்ப்பித்துள்ளார். அதன்படி, நீண்ட கால காப்புறுதி வியாபாரத்திற்கான உரிமத்தைப் பெறுவதற்கான நோக்கத்திற்காக நிதித்திட்டங்கள், இடர் கட்டுப்பாட்டு அமைப்புகளின் விபரங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய வணிக முன்மொழிவை அவர்கள் சமர்ப்பித்துள்ளனர். இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் கணிப்பீட்டு ஆலோசகரின் கருத்துகளுடன் மேலே உள்ள விண்ணப்பத்தை மதிப்பாய்வு செய்தோம், மேலும் நிறுவனத்தின் நிதி நிலையை நிரூபிக்க சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் உரிமம் வழங்குவதற்கான நோக்கத்திற்காக திருப்திகரமாக இருப்பதாகத் தோன்றுவதைக் கவனித்தோம். எவ்வாறாயினும், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை மதிப்பாய்வு செய்ததில் மற்றும் பெறப்பட்ட கணிப்பீட்டு ஆலோசகரின் கருத்துகளின் அடிப்படையில், குழு அமைப்பு, தாய் நிறுவனத்திடமிருந்து ஆதரவு சேவைகள், அழுத்தமான சோதனைகள் மற்றும் தொடர்புடைய அனுமானங்கள், தயார்நிலை உட்பட நிதி நிறுவனங்கள் மற்றும் இடர் அடிப்படை மூலதனம் ஆகியவற்றை முன்னறிவிப்பதில் மேற்கொள்ளப்பட்ட சூழ்நிலை பகுப்பாய்வு போன்றன நிறுவனத்தினால் விவரிக்கப்பட்டது. SLFRS 17 மற்றும் நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப அமைப்பு, AML/ CFT இணக்கத்தின் கட்டமைப்பு, உரிமம் வழங்குவதற்கான நோக்கத்திற்காக வணிகத் தொடர்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவது போன்றவற்றைக் கோடிட்டுக் காட்டும் நேரடித் திட்டத்தை அமுல்படுத்தல்.

### 6. அமைவிட பரிட்சித்தல்

2020ஆம் அண்டு, கோவிட்-19 நோய்ப்பரவல் காரணமாக ஏற்பட்ட குறிப்பிடத்தக்க இடையூறு காரணமாக, காப்புறுதி நிறுவனங்களின் அமைவிட ஆய்வுகள் மேற்கொள்வதைப் பிரிவு தற்காலிகமாக ஒத்திவைத்துள்ளது. எனினும், பிரிவு ஒரு காப்புறுதி நிறுவனத்தில் தொலைநிலை ஆய்வை முடித்துள்ளது. இந்த ஆய்வின் நோக்கம், முதலீடுகள், இடர் முகாமைத்துவம், நிதி நிலை போன்ற நிறுவனங்களின் மையப்படுத்தப்பட்ட பகுதிகளை மதிப்பீடு செய்வதாகும். அமைவிட ஆய்வுகளின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுடன் அவர்களின் பதிலளிப்புக்காக மேம்படுத்தலை மேற்கொள்வதற்காக காப்புறுதியாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது

### 7. இலங்கை மத்திய வங்கிக்குத் தகவல்களை வழங்குதல்

ஆணைக்குழு காலாண்டு விபரத்திரட்டுகளில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட, விபரங்களை காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் காலாண்டு செயற்பாடுகள் தொடர்பான நிதியியல் தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் நிதி முறைமை நிலைப்படுத்தல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கும்.

### 8. நிதி அமைச்சிடம் முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பித்தல்

இப்பிரிவு காலாண்டு அடிப்படையில் பிரிவின் பெறுபேறுகளின் முன்னேற்றம் குறித்த அறிக்கையைத் தயாரித்து நிதி அமைச்சிடம் சமர்ப்பித்தது. இது காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரிவின் மேற்பார்வை நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது.

### 9. கைத்தொழில் கைநூல் 2019

இலங்கை காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு தயாரிப்பு நோக்கத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 2019ஆம் ஆண்டிற்கான தொழில் கையேடு புத்தகத்தை (ஈ-புத்தகம்) பிரிவு

தயாரித்துள்ளது. அதன்படி, கைத்தொழில் கையேடு புத்தகத்தில் மற்றும் நிறுவனங்கள் வாரியான இருப்புநிலை அறிக்கைகள், வருமான அறிக்கைகள், சொத்துக்களின் செறிவு போன்றவற்றுக்குப் பொருத்தமான புள்ளிவிபரங்கள் உள்ளன. இலங்கை காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு இணையத்திலும் வெளியிடப்பட்டது. .

## 10. இடர் கருவி

வருடாந்த விபரத்திரட்டுகள் மற்றும் காலாண்டு விபரத்திரட்டுகளின் ஊடாக காப்புறுதி வழங்குனர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி மற்றும் ஏனைய தகவல்களின் அடிப்படையில், முன்னராக எச்சரிக்கை முறைமையாக ஒவ்வொரு கம்பனியினதும் பிரதான இடர்களை அடையாளம் காண்பதற்கு உள்ளக இடர் கருவியினை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அபிவிருத்தி செய்துள்ளது. அதற்கமைவாக, ஒவ்வொரு கம்பனியினதும் இடர்கள், மூலதன போதுமை வீதம், மொத்தக் கிடைக்கப்பெறும் மூலதனம், எழுத்தாக்க விகிதம், இலாப வீதம் போன்றவற்றின் அடிப்படையில் குறைந்த, நடுநிலையான மற்றும் உயர்ந்தவை என வகைப்படுத்தப்படுகின்றதுடன் கண்காணிப்புத் தலையீடுகள் மேற்கொள்ளப்படும்.

வருடாந்திர வருமானம் மற்றும் காலாண்டு வருமானம் மூலம் காப்புறுதியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி மற்றும் பிற தகவல்களின் அடிப்படையில், இலங்கை காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஒவ்வொரு காப்புறுதியாளரின் முக்கிய அபாயங்களையும் முன்கூட்டிய எச்சரிக்கை பொறிமுறையாக அடையாளம் காண ஒரு உள் இடர் கருவியை உருவாக்கியது. இடர் விபரக்குறிப்பு வாழ்க்கை மற்றும் பொது நிறுவனங்களுக்காக தனித்தனியாக முக்கியமாக நிதி மற்றும் இணக்கக் கண்ணோட்டத்தில் வகைப்படுத்தப்பட்டது, பின்னர் இடர் மதிப்பீட்டு அறிக்கையையும் இணைத்து அதை மாற்றியமைத்தது. முக்கிய நிதி அளவுகோல்களாக மூலதனம், சொத்துகள், இலாபம், சந்தைப் பங்கு போன்றவை கருதப்படுவதுடன் இணங்குதல் முன்னோக்கு கடன்தீர் தேவைப்பாட்டுடனான இணக்கம், மீள்காப்புறுதி விதி முறைகள் மற்றும் நிபந்தனைகள், தீர்மானம் 1, சமர்ப்பிப்புகளில் தாமதம் உள்ளடக்கியுள்ளது. அதன்படி, காப்புறுதி நிறுவனங்கள் மதிப்பெண்களின் அடிப்படையில் "உயர்", "நடுத்தர" மற்றும் "குறைந்த" இடருள்ள நிறுவனங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேற்கூறிய இடர் வகைகளின் படி வகைப்படுத்துவதற்காக, அந்தந்தக் காப்புறுதி நிறுவனங்களின் வருடாந்திர செயற்திறனைப் பிரிவு பயன்படுத்துகின்றது. "அதிக இடருள்ள" என வகைப்படுத்தப்பட்ட காப்புறுதி நிறுவனங்களின் செயற்திறனை இப்பிரிவு உன்னிப்பாகக் கண்காணிக்கும். இடர் அடிப்படையிலான அணுகுமுறை, நிறுவனம் சார்ந்த ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் மேற்பார்வையின் அளவு ஆகியவை காப்புறுதியாளரின் இடர் மதிப்பெண்ணைப் பொறுத்து மாறுபடும்

## 11. பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கு எதிர்த்துப் போராடல் நடவடிக்கைகள் (AML/CFT)

### அ) அவ்விடத்துக்குச் சென்று ஆய்வுசெய்தல்

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் புலன்விசாரணைப் பிரிவுடன் இணைந்து ஆணைக்குழு மூன்று பணத்தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலுக்கு எதிர்த்துப் போராடல் தொடர்பான கள விசாரணைகளை 2006ஆம் ஆண்டு 6ஆம் இலக்க நிதியியல் பரிமாற்றங்கள் தொடர்பான அறிக்கையிடல் சட்டத்தின் 18ஆம் பிரிவுடன் இணைந்து வாசிக்க வேண்டிய பிரிவு 15(1)(உ) இற்கு அமைவாக, நிதியியல் பரிமாற்றங்கள் தொடர்பான அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் உள்ள சட்டம் மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகளுடன் காப்புறுதிக் கம்பனிகள் ஒழுகுகின்றனவா என்பதை மதிப்பீடு செய்வதற்காக நடாத்தியது. அவர்களுடைய பதிலைப் பெறுவதற்காக உரிய காப்புறுதியாளர்களுக்கு கள விசாரணை தொடர்பான அவதானிப்புகள் தெரிவிக்கப்பட்டன.

### ஆ) வாடிக்கையாளர் பரிவர்த்தனைகளை சலித்தெடுத்தல், கண்காணித்தல் மற்றும் அரசியல் ரீதியாக வெளிப்படும் நபர்களின் மேம்பட்ட வாடிக்கையாளரின் விடாமுயற்சி மீதான கருப்பொருள் மீளாய்வு மீதான கேள்வித்தாள்

2006ஆம் ஆண்டு நிதி சார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து நிதியியல் உளவறிதல் அலகினால் வடிவமைக்கப்பட்ட கேள்வித்தாளினை அடிப்படையாகக் கொண்டு - வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல்களை சலித்தெடுத்தல், கண்காணித்தல் மற்றும் அரசியல் ரீதியாக வெளிப்படும் நபர்களின் மேம்பட்ட வாடிக்கையாளருக்கான விடாமுயற்சி-தொடர்பான ஆய்வுப்பொருள் சார்ந்த மீளாய்வினை மேற்கொள்வதற்கு தகவல்களைச் சேகரித்தலை ஆரம்பித்தது.

பிரிவு அனைத்து ஆயுள் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும் அதற்கான பதில்களைச் சேகரித்து, இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் அலகுக்கு வழங்குவதற்கு அறிக்கையைத் தயாரித்தது.

## 12. SLFRS 16 குத்தகைகள்

இலங்கை கணக்கியல் நியமம், 'SLFRS 16 - குத்தகைகள்' 2019 ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது, அங்கு நிறுவனங்கள் குத்தகை ஒப்பந்தங்களுக்கான இருப்புநிலைக் குறிப்பில் உள்ள குத்தகைகளை 'பயன்பாட்டு உரிமை' மற்றும் 'குத்தகைப் பொறுப்பு' என அங்கீகரிக்க வேண்டும்.

புதிய 'பயன்படுத்தும் உரிமைச் சொத்துகள்' மற்றும் 'குத்தகைப் பொறுப்புகள்" ஆகியவற்றின் பயன்பாடுகள், 2015ஆம் ஆண்டுக்கான கடன்தீர் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகளில் குறிப்பிடப்படவில்லை. எனவே, காப்புறுதியாளர்களிடமிருந்து விபரங்களைப் பெற்ற பிறகு, இடர் அடிப்படையிலான விதிகளுக்கு SLFRS - 16 விண்ணப்பத்தின் தாக்கத்தை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மதிப்பாய்வு செய்துள்ளது. கைத்தொழிற்துறைக்கு கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியதைக் குறிப்பிட்டு 'SLFRS 16 – குத்தகைகள்' கடன்தீர் எல்லை இடர் அடிப்படையிலான மூலதனம்' விதிகள் 2015 இற்கு விண்ணப்பிப்பதற்கான ஒரு தெளிவுபடுத்தல் அறிக்கைகயைப் பிரிவு வெளியிட்டது.

## 13. முன்மொழியப்பட்ட பங்குலாப விநியோகம்

11 ஏப்பிரல் 2020ஆம் திகதியிடப்பட்ட பணிப்புரைகளுக்கு அமைவாக (உருப்படி 15இன் கீழ் விரிவாக கலந்துரையாடப்பட்டது), "கோவிட் 19 நோய்ப்பரவல் காரணமாக காப்புறுதிப் பூட்கையாளர்களுக்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட நிவாரணம்", 2020 நிதியியல் ஆண்டுக்கான இடைக்கால காசுப் பங்குலாபங்கள் உள்ளடங்கலாக 2019 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுகான பங்குலாபங்களை பிரகடனப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றைத் தவிர்க்குமாறு அனைத்துக் கம்பனிகளும் கோரப்பட்டன.

பின்னர், ஆணைக்குழு மேலே உள்ளவற்றைத் திருத்தியது மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுதல் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் 11 ஏப்பிரல் 2020இற்கு முன்னர் 2019 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட பங்குலாபங்களுக்கு மேற்கூறிய கடப்பாடு பொருந்தாது என்று காப்புறுதி நிறுவனங்களுக்குத் தெரிவித்தது.

## 14. தவணைக்கட்டண வைப்புகள்

பல காப்புறுதி நிறுவனங்கள்/ பூட்கையாளர்கள்/ முன்மொழிபவர்களிடமிருந்து பெறப்பட்ட தவணைக்கட்டண வைப்புகளில் கணிசமான தொகையை மிகை, முற்பணம், அடையாளம் காணப்படவில்லை மற்றும் காலாவதியான பூட்கைத் தவணைக் கட்டணங்கள் என வேறுபட்ட வடிவங்களில் பொறுப்பு நிலுவைகளாக மொத்த எழுதப்பட்ட தவணைக்கட்டணம் அங்கீகரிக்கப்படாது பதிவு செய்திருப்பதைப் பிரிவு கவனித்தது.

அதற்கமைவாக, ஜனவரி 08, 2020ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின்படி, அனைத்துக் காப்புறுதி நிறுவனங்களின் முதன்மை அதிகாரிகளுக்கு, காப்புறுதியாளர்கள் பொது மக்களுக்குச் சொந்தமான பணத்தைத் திரும்ப வழங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள், மேலும் அதுவரை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு கூடுதல் வழிமுறைகளை வெளியிடும்

வரை, 2019 நிதியாண்டிலிருந்து அமுலுக்கு வரும்வகையில் பொது மக்களுக்குச் சொந்தமான அத்தொகையினை வருமான அறிக்கைக்கு திருப்பி எழுதவோ அல்லது மாற்றவோ கூடாது.

## 15. காப்புறுதித்துறையின் தொழிற்பாடு மற்றும் வியாபாரத் தொடர்ச்சிக்கு கோவிட் - 19 இன் தாக்கம்

அ) கோவிட்-19 நெருக்கடியுடன் காப்புறுதி நிறுவனங்களின் செயற்பாட்டின் தாக்கம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு பிரிவு கேள்வித்தாள்களைத் தயாரித்துள்ளது. அதன்படி, தொழிற்பாட்டுப் பிரிவுகள், செயற்படாத பிரிவுகள், பூட்கையாளர்களுக்கு சேவை வழங்குவதற்கான வழிமுறைகள், விலக்குகள் மூலம் குறைக்கப்படும் கோரிக்கைகள் மீதான முகாமைத்துவத் தீர்மானங்கள் மற்றும் இறுதித்திகதிகள், புதிய காப்புறுதி வகைகள்/ ரைடர்கள், நிதி நிலைபேற்றுத்தன்மை மீதான தாக்கம் ஆகியவற்றால் குறைக்கப்படும் உரிமைக்கோரல்களின் மேலாண்மை முடிவுகள், கடனளிப்பு, முகவர் செயற்பாடு போன்றவை தொடர்பான தகவல்களைப் பிரிவு கோரியது. .

காப்புறுதியாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட வணிகத் தொடர்ச்சித் திட்டங்களின் அடிப்படையில், பெரும்பான்மையானவர்களினால் எந்த சிரமமும் தாமதமும் இல்லாமல் தங்கள் தொடர்பாடுகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்த முடிந்தது. இருப்பினும், சில சிறிய தொழிற்பாட்டாளர்கள் தங்கள் வாடிக்கையாளர் தளங்கள் காரணமாக சில சிரமங்களை எதிர்கொண்டனர்.

ஆ. பல காப்புறுதி மேற்பார்வையாளர்களாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது, சாத்தியமான கோவிட் 19 வீழ்ச்சியிலிருந்து பெரும் நிச்சயமற்ற தன்மைகளுக்கு எதிராக வணிகத் தொடர்ச்சி மற்றும் பூட்கையாளர்களுக்கு நெகிழ்வான சிகிச்சையை உறுதிசெய்ய ஒழுங்குமுறை நடவடிக்கைகளை விவேகத்துடன் எடுத்துள்ளது. 11 ஏப்பிரல் 2020 திகதியிடப்பட்ட கடிதத்தின் அடிப்படையில், “கோவிட் 19 நோய்ப்பரவலுக்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிடமிருந்து பூட்கையாளர்களுக்கு நிவாரணம் மற்றும் ஆதரவு அவசியம்” என்பதன் கீழ் 31 மார்ச் 2020இல் முடிவடைந்த திகதியில் இருந்து ஒவ்வொரு மாதமும் கீழ்வருவனவற்றை அறிக்கையிடும்படி அனைத்து காப்புறுதியாளர்களும் கோரப்பட்டனர்

(அ) மூலதனப் போதுமை தேவைப்பாட்டின் நிலை, அதாவது, TAC, RCR, SVCC மற்றும் CAR

(ஆ) பணிப்புரை # 1 தேவைக்கு இணங்குவதை முதன்மை அலுவலர் சான்றழிக்கவும், இணங்கவில்லை என்றால், நிறுவனத்தின் முதன்மை அலுவலரினால் விபரங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

மேலும், மூலதனத் திட்டம் மற்றும் மூலதனப் போதுமை வீதத்தைச் சந்திப்பதற்கு சாத்தியமான உத்திகள் பற்றி விவாதிக்க உயர் நிர்வாகத்துடன் நடாத்தப்பட்ட சந்திப்புகளின் அடிப்படையில் இடர் அடிப்படையிலான மூலதன விதிகள் மற்றும் பணிப்புரை # 1 உடன் சந்திப்பதில் சிக்கல் உள்ள நிறுவனங்களுக்கான அமுலாக்க உத்தியின் அடிப்படையில் பிரிவு பல முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அமுலாக்க நிலை இந்தச் சூழ்நிலையை சமாளிக்க இடர் முகாமைத்துவ செயல்முறை மற்றும் விரிவான மூலதனத் திட்டத்தை வழங்க அறிவுறுத்தப்பட்டது.

இ) மேலும், செப்டெம்பர் 23, 2020 திகதியிடப்பட்ட கடிதத்தின்படி, அனைத்துப் பொதுக் காப்புறுதி நிறுவனங்களும் கோவிட்-19 அனுபவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருளாதார சீர்குலைவு (உதா: சுகாதாரம், வியாபாரத் தடங்கல்கள், பயணக் காப்புறுதி போன்றவை) காரணமாக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்குத் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகள் பற்றிய விபரங்களை பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் வழங்குதல் வேண்டும். .

## 16. நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி மீதான மதிப்பீடு

நிதிச் சேவைகளின் வரையறைகளின் கீழ் காப்புறுதி வணிகம் வருவதன் அடிப்படையில் பெரும்பாலான ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி நிறுவனங்களுக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பெறுமதி சேர் வரி மீதான நிதிச் சேவை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என இலங்கை காப்புறுதிச் சங்கம் அறிவித்திருந்தது.

எனினும், காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் படி ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி நிறுவனங்கள் நிதிச் சேவைகள் வணிகத்தில் இல்லை என்று இலங்கை காப்புறுதிச் சங்கம் கருதுகின்றது. மேலும் இலங்கை காப்புறுதிச் சங்கம் கணக்காய்வு நிறுவனத்துடன் ஆலோசனை செய்து முழுமையான அறிக்கையைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு, அதன் தலையீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பித்துள்ளது. எனினும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு வரி மதிப்பீடு தொடர்பாக நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு வரும்வரை இதில் தலையிடுவதில்லை எனும் எண்ணத்தில் உள்ளது, ஏனைய வழக்குகள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் மட்டத்திலும் வரி மேன்முறையீடுகள் ஆணைக்குழு மட்டத்திலும் உள்ளது.

.

## காப்புறுதித் தரகர் கம்பனிகள்

## 1. காலாண்டு விபரத்திரட்டுகள், இடைக்கால நிதியியல் கூற்றுகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் மீளாய்வு

2010 பெப்பரவரி 25ஆம் திகதி வெளியிடப்பட்ட 1642/16 (முதலாம் அட்டவணை) வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளுக்கு அமைவாக, ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து நாற்பத்து ஐந்து நாட்களினுள் காப்புறுதி தரகர் கம்பனிகள் அவர்களின் காலாண்டு விபரத்திரட்டுகளை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்படுகின்றனர்.

2020ஆம் ஆண்டு, அனேகமான காப்புறுதி தரகர் கம்பனிகள் தங்கள் காலாண்டு விபரத்திரட்டுகளை ஆணைக்குழுவிற்கு இறுதி நாளுக்கு முன்னராக சமர்ப்பித்தன. அவர்களின் நிதியியல் நிலைமையை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அவை சட்டம், ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்குகின்றமையை கண்காணிப்பதற்கும் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுகள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது. யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது விலகல்கள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டதாயின், குறிப்பிட்ட காலவரையறைக்குள் அவற்றினைத் திருத்துமாறு உரிய காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

நிதியாண்டு முடிவடைந்ததும் அதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் காப்புறுதி தரகர் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகள் ஆணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது. யாதேனும் இணக்கப்பாடின்மை அல்லது விலகல்கள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டதாயின் அவற்றினைத் திருத்துமாறு நடவடிக்கை எடுக்குமாறு உரிய காப்புறுதி தரகர் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

.

## 2. பதிவினைப் புதுப்பித்தல்

2021ஆம் ஆண்டுக்கான அவற்றின் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் காப்புறுதி தரகர் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப் பெற்றது. புதுப்பிப்பதற்கு முன்னர் அவற்றின் நிதியியல் நிலைமையை தீர்மானிப்பதற்காக, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் மற்றும் காலாண்டு விபரத்திரட்டுகள் என்பனவற்றை ஆணைக்குழு பகுப்பாய்வு செய்தது

## 3. புதிய காப்புறுதித் தரகர் கம்பனிகளைப் பதிவு செய்தல்

இவ்வருடத்தினுள் காப்புறுதி தரகர் கம்பனிகளாக பதிவினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்மொழியப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது. ஆணைக்குழு பதிவிற்கு விதப்புரை செய்வதற்கு முன்னர், விண்ணப்பிக்கப்பட்ட கம்பனியின் விற்பனை மற்றும் நிதியியல் முன்மதிப்பீடு, நிறுவனத்தின் கட்டமைப்பு, கிடைக்கப்பெறும் உட்கட்டமைப்பு வசதி மற்றும் வெளிவாரி கணக்காய்வாளரின் சான்றிதழ் உள்ளடங்கலாக வியாபாரத் திட்டத்தைப் பகுப்பாய்வு செய்தது.

# ஒழுங்குமுறைப்படுத்தல் மீளாய்வு

### காப்புறுதிக் கம்பனிகளின் பதிவு

இவ்வருடம் ஆணைக்குழு புதிய பதிவுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. ஒரு காப்புறுதிக் கம்பனி அதன் கலைத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதுடன், அதனுடன் சேர்த்து பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளின் எண்ணிக்கை 28 ஆகும்.

**இணைப்பு I:** ஆணைக்குழுவில் பதிவுசெய்துள்ள அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளின் பெயர்களையும் அவை கொண்டு நடாத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட வியாபார வகை/வகைகள் என்பவற்றையும் வழங்கும்.

### அமுலாக்கல் நடவடிக்கைகள்

### காப்புறுதிக் கம்பனிகள்

### இடைநிறுத்தல்கள்

சிலிங்கோ டக்காபுல் லிமிடட் நிறுவனத்திற்கு 2009 இல் விதிக்கப்பட்டுள்ள இடைநிறுத்தல் 2020 வரை தொடர்கின்றது. அத்துடன், ஆணைக்குழுவினால் நியாயமான கோரிக்கைகள் என அடையாளம் காணப்பட்ட கோரிக்கைகள் அனைத்தையும் நிறுவனம் தீர்த்து வைத்திருந்தாலும், சிலிங்கோ டக்காபுல் லிமிடட் மீது நீதிமன்ற வழக்குகள் தொடர்ந்து நடைபெற்று வருவதனால், உரிமைகோரல் தீர்வு செயன்முறையை முடிக்க முடியவில்லை.

### பணிப்புரை

ஒரு காப்புறுதியாளர் மோட்டார் சைக்கில் ஓட்டுனர்களுக்கு எவ்வித கட்டணமுமின்றி பெற்றோல் கூப்பன்கள் போன்ற ஊக்குவிப்புகளை வழங்குவதன் ஊடாக மூன்றாம் தரப்பு காப்புறுதியை ஊக்குவிப்பது தொடர்பாக ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதற்கமைவாக, ஆணைக்குழு காப்புறுதியை பெற்றுக்கொள்பவர்களுக்கு மூன்றாம் தரப்பு காப்புறுதியை ஊக்குவித்தலை நிறுத்துமாறு அந்தக் கம்பனிக்கு அறிவித்தது. எனினும் அந்த குறிப்பிட்ட விளம்பரத்தை சமூக ஊடகத்தில் தொடர்ந்தும் வெளியிடுவதை அவதானித்தது. அதனால், மேற்குறித்தவற்றைக் கவனத்தில் கொண்டு, காப்புறுதியாளருக்கு ஆணைக்குழு பிரிவு 57இன் கீழ், உடனடியாக அமுல்படுத்தும் வகையில் அதனுடைய முகப்பக்கத்தில் இருந்து மூன்றாம் தரப்பு காப்புறுதி ஊக்குவிப்பு பதிவினை நீங்குவதற்கான பணிப்புரையை வழங்கியது.

### புதிய காப்புறுதி தரகர் கம்பனிகளின் பதிவு மற்றும் காப்புறுதித் தரகர் கம்பனிகளின் பதிவைப் புதுப்பித்தல்.

காப்புறுதி தரகர்களாகப் பதிவுசெய்ய ஆர்வமுள்ள ஆட்களிடமிருந்து இந்த ஆண்டில் பத்து புதிய வியாபாரத்திட்டங்களை ஆணைக்குழு பெற்றது. இந்த வருடம் ஆணைக்குழு மூன்று ஆட்களுக்கு கம்பனியாக கூட்டிணைப்பு செய்வதற்கு பெயர் அனுமதியை வழங்கியது. அத்துடன் ஆணைக்குழு ஒரு கம்பனிக்கு இந்த வருடத்தில் காப்புறுதித் தரகுக் கம்பனிகளாக செயற்படுவதற்கான பதிவினையும் வழங்கியது.

2021ஆம் ஆண்டுக்கு அவர்களுடைய புதுப்பித்தல்களை மேற்கொள்வதற்கு 66 காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன், சட்டத்தின் தேவைப்பாட்டுக்கு அமைவாக இணங்கியமையினால் அதில் 66 கம்பனிகளுக்கும் பதிவைப் புதிப்பித்தலுக்கான அனுமதி வழங்கப்பட்டது.

**இணைப்பு II**: ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் காப்புறுதித் தரகர் கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவை காப்புறுதி வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட வகை/ வகைகள் என்பவற்றையும் வழங்குகின்றது.

### அமுலாக்கல் நடவடிக்கைகள்

### காப்புறுதித் தரகர் கம்பனிகள்

### எச்சரிக்கைகள்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் ஆறு காப்புறுதித் தரகுக் கம்பனிகளுக்கு எச்சரிக்கைக் கடிதங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டன. உரிய திகதியில் காலாண்டு விபரத்திரட்டினை சமர்ப்பிக்காமை தொடர்பாகவும் சுற்றுநிருபம் 41இற்கு அமைவாக அதற்கான காரணத்தை அறிவிக்காமை தொடர்பாகவும் கம்பனியின் தலைமை அலுவலர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

### இடைநிறுத்தல்கள்

இரண்டு காப்புறுதித் தரகுக் கம்பனிகள் காலாண்டு முடிவடைந்து ஒரு மாதத்தினுள் குறைந்தபட்ச தேறிய மூலதனத் தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதனால் 19ஆவது பணிப்புரையுடன் இது இணங்காமையினால், அந்தக் கம்பனிகள் இணக்கப்பாட்டினை அடையும் வரை அவற்றின் பதிவினை இடைநிறுத்தியது.

### இரத்துசெய்தல்கள்

ஒரு காப்புறுதித் தரகுக் கம்பனி காலாண்டு முடிவடைந்து ஒரு மாதத்தினுள் குறைந்தபட்ச தேறிய மூலதனத் தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு தவறியுள்ளமையினால் 19ஆவது பணிப்புரையுடன் இது இணங்காமையினை ஆணைக்குழு அவதானித்தது. தொடர்ந்தும் கம்பனி குறைந்தபட்ச தேறிய மூலதனத் தேவைப்பாட்டுடன் இணங்காமையினால் ஆணைக்குழு அதன் பதிவினை 2020இல் இரத்துசெய்தது.

### காப்புறுதி நட்ட சீராக்கலாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் காப்புறுதி நட்ட சீராக்கலாளர்களின் பதிவினைப் புதுப்பித்தல்.

இவ்வருடத்தினுள் ஆணைக்குழு 7 நபர்களை நட்டச் சீராக்கலாளர்களாகப் பதிவு செய்வதற்கு அனுமதியினை வழங்கியது. அத்துடன், ஆணைக்குழு இவ்வருடத்தினுள் 16 நபர்களின் பதிவினை நட்டச் சீராக்கலாளர்களாகப் புதுப்பிப்பதற்கான அங்கீகாரத்தையும் வழங்கியது.

சட்டத்தின் பிரிவு 114(1)ஆம் பிரிவுக்கு அமைவாக, “நட்டச் சீராக்கலாளர்” என்பவர் அலசியாராய்வதில் விசேட அறிவினைக் கொண்டுள்ளவராகவும் காப்புறுதிக் கோரிக்கைகளில் இருந்து எழும் நட்டங்களை மதிப்பிடக்கூடியவராகவும் சட்டத்தின் கீழ் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக நட்டச் சீராக்கலாளர்களாகவும் பதிவு செய்யப்பட்டவர் ஆவார்.

**இணைப்பு III:** ஆணைக்குழுவில் நட்டச் சீராக்கலாளர்களாகப் பதிவு செய்தவர்களின் பெயர்களையும் அனுமதிப்பத்திரத்தின் செயல்வலுத் திகதியையும் வழங்கும்.

### ஒழுங்குமுறைப்படுத்தல் - ஆலோசனை நடவடிக்கைகள்

1. ஆணைக்குழு திருத்தப்பட்ட சட்டத்திற்கு அமைவாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஏற்பாடுகளின் நியதிகளின் கீழ் பணிப்பாளர்களை நியமிப்பதற்கு அங்கீகாரத்தை வழங்கியது. எனினும் கூட்டிணைந்த ஆளுகைச் சட்டத்தின் மீதான 17ஆம் பணிப்புரையுடன் இணங்காமை காரணமாக பல விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படவில்லை.

2. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக காப்புறுதி மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளுக்கான தலைமை அலுவலர்களை நியமிப்பதற்கு கோரிக்கை விடுத்து சமர்ப்பிக்கப்பட்ட பல விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு ஒப்புதலை வழங்கியுள்ளது.

3. காப்புறுதிக் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளைக் கருத்தில் கொண்டு, காப்புறுதிக் கைத்தொழிற்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 114(அ) பிரிவின் கீழ் நெதர்லாந்தின் கணிப்பீட்டுச் சங்கத்தின் அங்கத்துவ தகைமையை ஆணைக்குழு அங்கீகரித்தது.

4. காப்புறுதித் தரகர் கம்பனிகள் சிலவற்றினால் சுற்றறிக்கை 36இன் கீழ் வெளிநாட்டு சுகாதாரக் காப்புறுதிப் பண்டங்களுக்கான புதுப்பித்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை கவனத்தில் கொண்ட ஆணைக்குழு மேலும் ஒரு வருட அங்கீகரிப்புக்கான அனுமதியை வழங்கியது.

சுற்றறிக்கை 36 ஏதேனும் காப்புறுதித் தரகர் கம்பனி ஏதும் வெளிநாட்டு காப்புறுதிப் பூட்கை வகைகளை தங்கள் வியாபாரத்தில் இணைத்துக்கொள்ள விரும்பின், அதற்கான அனுமதியை ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும் எனக் கோருகின்றது.

5. ஆணைக்குழு காப்புறுதியாளர்களின் பல காப்புறுதி வகைகளை மீளாய்வு செய்ததுடன், உரிய காப்புறுதியாளர்களுக்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவதானிப்பை வழங்கியுள்ளது. சுற்றறிக்கை 39, இல: அனைத்துக் காப்புறுதியாளர்களும், அவர்களின் புதிய காப்புறுதிப் பண்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர், அந்தப் பண்டம் தொடர்பான பூட்கை ஆவணங்களை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. இரண்டு வகைகளுக்குமான காலாண்டு விபரத்திரட்டினைச் சமர்ப்பித்தலுக்கு மேலதிகமாக மாதாந்த விபரத்திரட்டினைக் கோரி 2015இல் காப்புறுதியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட பணிப்புரையினை திருத்தியமைக்க ஆணைக்குழு தீர்மானித்தது. இந்தத் திருத்தமானது மாதாந்த அடிப்படை மீது மொத்த கிடைக்கப்பெறும் மூலதனம், இடர் அடிப்படையிலான மூலதனத் தேவைப்பாடு மற்றும் மூலதன போதுமை வீதம் என்பவற்றை மாதாந்தம் சம்ர்ப்பிக்க வேண்டும் எனும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன், கம்பனியின் நிதி நிலமை சீராகும் வரை வெளித்தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் வரையறுக்கப்பட்டது.

7. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு வரியின் பின்னரான இலாபத்தில் 1% வீதத்தைப் பயிர் காப்புறுதித் தீர்வையாக செலுத்துதல் தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை காப்புறுதிச் சங்கம் கோரியது. ஆயுட்காப்புறுதியாளர்கள் விவசாயிகளுக்கு பயிர் காப்புறுதியை வழங்காத போதிலும், அவர்கள் 1% வீத வரியினை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்குச் செலுத்த வேண்டும், இது அவர்களின் வருமானத்தைக் குறைக்கின்றது. இந்த நிலமையை மீளாய்வு செய்த ஆணைக்குழு, ஆயுட் காப்புறுதியாளர்களை இந்த தீர்வையில் இருந்து விலக்களிக்குமாறு நிதி அமைச்சினைக் கோரியது.

8. ஆணைக்குழு நட்ட சீராக்கலாளர்களாக பதிவினை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது. எனினும், இந்நபர் தொடர்பாக மோசடி நடவடிக்கைகளில் ஈடுப்பட்டமை காரணமாக சேவையில் இருந்து இடைநிறுத்திய நபர்களை மீண்டும் சேவையில் எக்காரணம் தொடர்பாகவும் மீண்டும் இணைத்துக்கொள்ளுதலைத் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும் என்பது தொடர்பாக ஆணைக்குழுவினால் 09.01.2017ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட பணிப்புரை 14இன் பிரயோகம் தொடர்பான கேள்வி எழுந்தது. அதனால் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட நபர்களுக்கு பதவிகளை வழங்கினால் அதில் நம்பிக்கை/ நேர்மை தொடர்பான கேள்வி எழுவதுடன், கைத்தொழிற்துறையில் ஒரு மோசமான முன்னுதாரணமாக இருக்கும் என்பதனால், அந்த நபரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

9. 31 ஜனவரி 2020, 29 பெப்பரவரி 2021, 31 மார்ச் 2020களில் முடிவடைந்த மாதங்களுக்கான காப்புறுதிக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த விபரத்திரட்டுகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன், அதன் போது பொதுக் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்தக் கிடைக்கப்பெறு மூலதனத் தேவைப்பாடான மிகக்குறைந்த ரூபா 500 மில்லியன் மூலதனத் தேவைப்பாடு வீழ்ச்சியடைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. ஆணைக்குழுவினால் கோரப்பட்டதற்கு அமைவாக, இந்த மூலதன போதுமை வீதத்தின் பற்றாக்குறையில் இருந்து மீள்வதற்கு கம்பனி பல்வேறு தேர்வுகளை முன்மொழிந்தது.

முன்மொழிவுகளை மீளாய்வு செய்ததன் பின்னர், அவர்களுடைய இறுதித் தீர்மானத்தை சமர்ப்பித்து பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மூலதன போதுமைத் தேவைப்பாட்டுடன் இணங்குமாறு அறிவுறுத்தியது.

10. 2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற பல விண்ணப்பங்களுக்கு ஆணைக்குழு பதிலளித்தது.

11. ஆணைக்குழு பல்வேறு காப்புறுதிக் கம்பனிகளுக்கு காப்புறுதி வியாபாரத்தைத் தவிர்த்து ஏனைய வியாபாரங்களை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்கியது. பணிப்புரை 10, அனைத்து காப்புறுதித் தரகர் கம்பனிகளும், சட்டதில் வரைவிலக்கணப்படுத்தப்படாத காப்புறுதி தரகர் வியாபாரம் தவிர்த்து ஏனைய துணைச் சேவைகளை வழங்குவதற்கு முன்னர் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

12. இலங்கையில் இருந்து தமது நடவடிக்கைகளை சுயவிருப்பத்தின் அடிப்படையில் நிறுத்தும் செயற்பாடுகள் தொடர்பாக, கோரிக்கையாளர்களிடமிருந்து பல்வேறு விசாரணைகள் கிடைக்கப்பெற்றமையினால், அந்தக் கம்பனியின் முடிவுறுத்தல் தொடர்பாக பொது மக்களுக்கு மூன்று மொழிகளிலும் பத்திரிகை அறிவித்தலை வெளியிடுமாறு ஆணைக்குழு பணித்தது.

13. ஒரு காப்புறுதிக் கம்பனி இரண்டு வெளிநாட்டு நிதியங்களிடமிருந்து கடன்களைப் பெற்று அதனுடைய அடுக்கு II மூலதனத்தைப் பலப்படுத்துவதற்கு ஆணைக்குழுவின் அனுமதி/ பின்னூட்டலைக் கோரியிருந்தது. கம்பனி மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களுக்கான கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் முன்வரைவு கடன் ஒப்பந்தப் படிவத்தை ஆணைக்குழுவின் கவனத்திற்கு சமர்ப்பித்தது. அடுக்கு II மூலதனத்தின் கீழ் பெறப்படும் குறிப்பட்ட கடனினால் தாக்கமுறும் இடர் அடிப்படையிலான மூலதனத்திற்கான திருத்தங்களுக்கான முன்மொழிவினைக் கவனத்தில் கொண்டு, இந்த வசதியளிப்பின் காரணமாக காப்புறுதிப் பூட்கையாளர்களின் உரிமைகள்/ நலன்கள் என்பன பாதிப்படையமாட்டாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அனைத்து முன்னேற்பாடுகளையும் எடுக்குமாறும் கடன் வழங்கும் கம்பனிகளின் நிலமையை அறிவிக்குமாறும் ஆணைக்குழு கோரியது.

14. பணிப்புரை 18 வழங்கப்படுவதற்கு முன்னரான ஐந்தாண்டு காலத்திற்கான பங்குதாரர்களுக்கு மாற்றப்பட்ட கோரப்படாத நன்மைகள் தொடர்பான விபரங்களை வழங்குமாறு அனைத்து நீண்ட கால காப்புறுதிக் கம்பனிகளையும் ஆணைக்குழு கோரியது. ஒரு கம்பனி அந்த கோரப்படாத நன்மைகளை பங்குதாரர்களுக்கு மாற்றியிருப்பதை அவதானித்ததுடன், ஆணைக்குழு அந்த கொடுக்கல் வாங்கலை மீளப்பெறுமாறு பணித்ததுடன் அதன் பிரதான அலுவலர், பணிப்பாளர் சபை மற்றும் கம்பனியின் வெளிவாரி கணக்காளர் என்பவர்களிடமிருந்து விளக்கத்தையும் கோரியது.

15. 2020இல், காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற பங்குப் பரிவர்தனையின் கீழ் பட்டியலிடப்பட வேண்டும் என்பதன் கீழ் இரு காப்புறுதிக் கம்பனிகள் மட்டும் தொடர்ந்திருந்ததை அவதானிக்க முடிந்ததுடன் இரு கம்பனிகளுக்கும் ஆறுமாத நீடிப்பினை வழங்குவதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது.

16. செப்டெம்பர் 20213இல், ஆணைக்குழு வேறாக்கல் வழிகாட்டுதலை கைத்தொழிற்துறைக்கு வழங்கியதுடன், வேறாக்கப்பட்ட கம்பனிகளுக்கிடையில் சேவைகளைப் பரிமாறிக்கொள்வதற்கு, கட்டுப்பாட்டுப் பொறிமுறையின் கீழ் அனுமதியை வழங்கியது. எனினும், துணைக் காப்புறுதிச் சேவைகளை வழங்குதல் அங்கீகரிக்கப்படவில்லை. மூன்று காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து தற்போதுள்ள பகிர்ந்துகொள்ளல் சேவைகளைத் தொடர்வதற்கான வேண்டுகோள்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளுக்கும் பகிர்ந்துகொள்ளல் சேவைகள் தொடர்பாக புதிய வழிகாட்டல்கள்/ பணிப்புரையினை ஆணைக்குழு வழங்கும் வரை அந்த சேவைகளைத் தொடர்வதற்கு நீடிப்பினை வழங்கியது.

17. இரு காப்புறுதிக் கம்பனிகள் கம்போடியாவில் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனியில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு அனுமதியினை ஆணைக்குழுவிடம் கோரியது. விபரங்களைக் கோரி ஆராய்ந்ததன் பின்னர், பல்வேறு நிபந்தனைகளின் கீழ் அந்தக் காப்புறுதிக் கம்பனிகளுக்கு ஆணைக்குழு அனுமதியினை வழங்கியது.

# விசாரணை மீளாய்வு

தற்போதுள்ள மற்றும் உத்தேச பூட்கை வைப்பாளர்களின் நன்மைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தின் கீழ், காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் கோரிக்கையாளர்கள் இருவருக்கிடையில் தோன்றும் முரண்பாடுகளை தீர்த்துவைப்பதற்காக கோரிகையாளர்கள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கும் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உள்ளது. அத்துடன், யாரேனும் காப்புறுதியாளர், தரகர் அல்லது முகவருக்கு எதிராக யாதேனும் தவறான நடவடிக்கைகள் அல்லது ஒழுங்கீனங்கள் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளதா என ஆணைக்குழு புலனாய்வு செய்யும்.

ஆணைக்குழுவிற்கு யாதேனும் முரண்பாடுகள் அல்லது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதும் (காப்புறுதியாளர், காப்புறுதித் தரகருக்கு அல்லது முகவருக்கு எதிராக), எதிர்த் தரப்பினருக்கு அவர்களின் தீர்மானம் தொடர்பாக அதற்கான காரணத்தை சான்றளிக்கும் தகவல்கள் மற்றும் ஆவணங்களுடன் கட்டியெழுப்புமாறு கோரப்படுவர். அவசியமாயின் ஆணைக்குழு தீர்மானத்திற்கு வருவதற்காக மூன்றாம் தரப்பினரிடமிருந்து உறுதிப்படுத்தல்களையும் தனிப்பட்ட நிபுணர்களிடமிருந்து கருத்துகளையும் பெற்றுக்கொள்ளும்.

### மொத்தப் பரிந்துரைகளின் பகுப்பாய்வு

மீளாய்வுக்குட்பட்ட இவ்வருடத்தில் மொத்தமாக 446 புதிய முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்றதுடன், அதில் 367 விடயங்கள் (கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டு முன்கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகள் உள்ளடங்கலாக) இவ்வருடத்தினுள் தீர்க்கப்பட்டது. தீர்க்கப்பட்ட விடயங்களில் ஆணைக்குழுவின் தலையீடு காரணமாக 155 கோரிக்கைகள் காப்புறுதி பூட்கையாளர்களுக்குச் சார்பாக தீர்க்கப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி இ.ரூபா 82.2 மில்லியன் ஆகும்.

***விளக்கப்படம் 01 :கடந்த ஐந்து வருடங்களில் கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகள்***

**கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்**




கடந்த ஐந்து வருடங்களில் ஆணைக்குழுவுக்கு மொத்தமாக 1,709 விடயங்கள் கிடைக்கப்பெற்றது. விளக்கப்படம் 1இல் காட்டப்பட்டுள்ளவாறு, கடந்த ஆண்டுடன் (315) ஒப்பிடுகையில் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை (446) கணிசமானளவில் அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அதிகரிக்கப்பட்டமையினால், இவ்வருடத்தினுள் முறைப்பாடுகள் அதிகரித்திருக்கக்கூடும்.

***விளக்கப்படம் 2: 2020 இனுள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் மாதாந்தப் பகுப்பாய்வு***




இந்த ஆண்டினுள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையை மாதாந்த அடிப்படையில் விளக்கப்படம் 2 காட்டுகின்றது. அதிகப்படியான முறைப்பாடுகள் டிசம்பர் மாதத்தில் (125) கிடைக்கப்பெற்றதுடன், ஏப்பிரல் மாதத்தில் (0) மிகக் குறைந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. நாட்டில் காணப்பட்ட நோய்ப்பரவல் மற்றும் முடக்கல் நிலமை காரணமாக ஏப்பிரல் மாதத்தில் முறைப்பாடுகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை சாராசரியாக மாதத்திற்கு 37 முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், ஜுலை, ஒகஸ்ட், செப்டெம்பர், ஒக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களில் சராசரிக்கும் மேலாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

***விளக்கப்படம் 3: 2020இன் மொத்த பரிந்துரைகளின் வகைப்படுத்தல்***




2020ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற மொத்த பரிந்துரைககளின் வகைப்படுத்தல் விளக்கப்படம் 3இல் காட்டப்பட்டுள்ளது. இந்த மொத்த முறைப்பாடுகளில் முறையே 304 (68%) பரிந்துரைகள் பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாகவும் 105 (24%) பரிந்துரைகள் நீண்டகாலக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாகவும் கிடைக்கப்பெற்றவையாகும். இங்கு வழங்கப்பட்டவற்றில் 37 (8%) பரிந்துரைகள் பொது முறைப்பாடுகளாகும், இவற்றை காப்புறுதி வியாபாரத்துடன் வகைப்படுத்துவதற்கு முடியாது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், கிடைக்கப்பெற்ற பரிந்துரைகளில் பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான பரிந்துரைகள் 56% (2019இல்)வீதத்தில் இருந்து 68% வீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் நீண்ட கால வியாபாரம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பரிந்துரைகள் 24% (2019இல்) வீதத்தில் இருந்து 34% வீதத்தினால் சற்று அதிகரித்துள்ளது. ஏனைய பரிந்துரைகளின் வீதமானது 10% (2019) வீதத்தில் இருந்து 8% வீதமாகக் குறைவடைந்துள்ளது.

### பொதுக் காப்புறுதி வியாபாரம் மீதான பரிந்துரைகளின் பகுப்பாய்வு

ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப் பெற்ற பிரச்சினையின் வகையை அடிப்படையாகக் கொண்டு பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு தொடர்பான விபரங்கள் அட்டவணை1இல் காட்டப்பட்டுள்ளது.

***அட்டவணை 1: பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான பரிந்துரைகள்: பிரச்சினைகள் ரீதியாக***

| பிரச்சினை | # | % |
|---|---|---|
| முரண்பாட்டுக் கோரிக்கை | 277 | 91.1 |
| பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாமை | 148 | 53.4 |
| வழங்கப்பட்ட கோரிக்கைக் கொடுப்பனவு தொடர்பாக திருப்தியின்மை | 26 | 9.4 |
| கோரிக்கைக் கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் | 103 | 37.2 |
| ஏனைய முறைப்பாடுகள் | 27 | 8.9 |
| **மொத்தம்** | **304** | **100.0** |

அட்டவணை 1இல் காட்டப்பட்டவாறு, பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கீழ் உள்ள மொத்த முறைப்பாடுகளில் (304) 277 (91.1%) முறைப்பாடுகள் உரிமைகோரல் முரண்பாடுகள், மீதமுள்ள 27 (8.9%) முறைப்பாடுகள் இடைக்கால கொள்கை இரத்து போன்ற பிற புகார்கள், கேள்விகளுக்கு பதிலளிக்கவில்லை, தவணைக் கட்டணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கைகள் மற்றும் பூட்கை ஆவணங்களை பெறாதது போன்றவையாகும். உரிமை கோரல் முறைப்பாடுகளின் கீழ் முறைப்பாடுகளுக்கான (53.4%) முக்கிய பிரச்சினை பொறுப்பை ஏற்காதது, அதாவது உரிமைகோரல் மறுப்பாகும்.

பரிந்துரைக்கான ஆணிவேர், மோட்டார் வாகனக் காப்புறுதிக் கோரிக்கைகளை நிராகரிப்பதற்கான பிரதான காரணம் வெளிப்படுத்தாமை அல்லது விபத்துகள் தொடர்பான பிரதான காரணங்களை தவறான முறையில் சித்தரித்தமை (உள்ளடங்காத பயன்பாடு, குடித்துவிட்டு வாகனம் ஓட்டுதல், சாரதிக்கு முறையான சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை அல்லது காப்புறுதி செய்தவர் வாகன விற்பனையின் போது காப்புறுதி செய்வதற்கான விருப்பினைக் கொண்டிராமை போன்றன), விபத்து பற்றிய விளக்கத்துடன் சேதங்கள் பொருந்தாமை, முழுத் தவணைக் கட்டணத்திற்கான கட்டணத்தைச் செலுத்தாமையினால் விபத்து நடந்த வேளையில் பூட்கை இரத்து செய்யப்பட்டிருத்தல் போன்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அரசாங்க ஆய்வாளர் திணைக்களம், காவல் நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் மூன்றாம் சாட்சிகளிடமிருந்து (அவசியமானால்) அவதானிப்புகளை அழைப்பதன் மூலம் உரிமைகோரல் மறுப்பு தொடர்பாக விரிவான விசாரணைகள் நடாத்தப்பட்டன. பூட்கை இழப்புக் காரணத்தை உள்ளடக்கிய சந்தர்ப்பங்களில், உரிமைகோரல் தொடர்பான பொருள் உண்மைகளை மோசடி அல்லது வேண்டும் என்றே சித்தரிக்காத வேளைகளில் ஆணைக்குழு உரிமைகோருபவர்களுக்கு உதவியது.

உரிமைகோரல் முரண்பாடுகளின் கீழ் பரிந்துரைகளுக்கு (37.2%) வீதம் கோரப்பட்டதற்கு முக்கிய காரணமாக தீர்ப்பதில் காணப்பட்ட தாமதமும் அமைந்திருந்தது. கோரிக்கைகள் மீது மேலும் விசாரணைகளை மேற்கொள்வதே காலதாமதத்திற்குக் காரணமாக அமைந்திருந்தது. அத்துடன், உரிமைகோரல்கள் குறித்து மேலதிக விசாரணைகளை இறுதியாக்குவதற்குத் தகவல்களையும் ஆவணங்களையும் வழங்குவதில் காப்புறுதியாளர்கள் அல்லது பழுதுபார்ப்பவர்களின் தாமதங்கள் காரணமாக பெரும்பாலன தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. மீதி இருபத்தியாறு முறைப்பாடுகளும் வழங்கப்பட்ட / செலுத்தப்பட்ட உரிமைக் கோரலின் அதிருப்தி காரணமானவையாகும். பூட்கை சொற்களின் தவறான புரிதல் மற்றும் இழப்பு சரிசெய்தல் / விலக்குகள் குறித்து காப்புறுதியாளர்கள் வழங்கிய விளக்கங்களில் தெளிவு இல்லாமை ஆகியவை இந்த பரிந்துரைகளுக்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

## நீண்டகால காப்புறுதி வியாபாரம் மீதான பரிந்துரைகளின் பகுப்பாய்வு

***அட்டவணை 2 - நீண்டகாலக் காப்புறுதி வியாபாரம் தொடர்பான பரிந்துரைகள்: பிரச்சினைகள் ரீதியாக***

| பிரச்சினை | # | % |
|---|---|---|
| முரண்பாட்டுக் கோரிக்கைகள் | 44 | 42.0 |
| பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாமை | 19 | 43.2 |
| முதிர்ச்சி மற்றும் சரணடைதல் நன்மைகள் | 22 | 50.0 |
| வழங்கப்பட்ட கோரிக்கைக் கொடுப்பனவுத் தொகை தொடர்பாக திருப்தியின்மை | 3 | 6.8 |
| ஏனைய முரண்பாடுகள் | 61 | 58.0 |
| மீள்செலுத்தல்/ இரத்துச்செய்தல் அல்லது புதுப்பித்தல் கோரிக்கைகள | 31 | 50.8 |
| தகவலுக்கான ஏற்பாடு | 3 | 5 |
| தவணைக் கட்டணங்களின் தவறான கையாளுகை/ மோசடி | 2 | 3.2 |
| ஏனையவை | 25 | 41.0 |
| **மொத்தம்** | **105** | **100.0** |

அட்டவணை 2இற்கு அமைவாக, நீண்டகாலக் காப்புறுதி தொடர்பான மொத்தப் பரிந்துரைகளில் (105) கோரிக்கை தொடர்பான முரண்பாடுகள் (42%) மற்றும் ஏனைய முறைப்பாடுகள் (57%) வீதமும் இருந்தன

கோரிக்கை முரண்பாடுகளில் (50%) பெரும்பான்மையானவை முதிர்ச்சி நன்மைகள் மற்றும் சரணடைதல் நன்மைகள் தொடர்பானவையாகும். அவ்வாறான முரண்பாடுகளுக்குப் பிரதான காரணம் பூட்கை சொல்லமைப்புக் கொண்ட பந்திகள் மற்றும் காப்புறுதியாளர்களினால் வழங்கப்படும் விளக்கங்களின் பற்றாக்குறையாகும். இந்த முரண்பாடுகளில் பெரும்பாலானவை உரிமை கோருபவர்களுக்கு எழுத்துமூலமாக அல்லது ஆணைக்குழுவில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் தேவையான விளக்கங்களை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுகின்றது.

ஏனைய 43.2% வீதமான கோரிக்கை முரண்பாடுகள் காப்புறுதியாளரினால் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளாமையுடன் தொடர்புடையவையாகும். கொள்கையின் தொடக்கத்திலோ அல்லது புதுப்பித்தலிலோ பொருள் உண்மைகளை வெளிப்படுத்தாது அல்லது தவறாகச் சித்தரிப்பதை அடிப்படையாகக் கொண்டது. காப்புறுதி ஒப்பந்தங்களின் காப்புறுதியின் அடிப்படைச் சட்டக்கொள்கை uberrimae fidei (பரிபூரண நம்பிக்கை) ஆவதுடன், ஒப்பந்தத்தின் இரு தரப்பினருக்கும் நேர்மாறாக செயற்படுகின்றது. அதாவது காப்புறுதியாளர் மற்றும் காப்புறுதி செய்யப்பட்டவர் இருவருக்கும் இது பொதுவானது. ஒரு காப்புறுதியாளர் முன்மொழிவு படிவத்தில் முன்மொழிந்தவர் வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில், முன்மொழிவாளரின் உயிருக்கான ஆபத்தை ஏற்றுக்கொள்வது மற்றும் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானிக்கின்றார். எனவே பொருள் உண்மைகளை வெளிப்படுத்தாத அல்லது தவறாகச் சித்தரிப்பது காப்புறுதியாளர்களினால் பரிபூரண நம்பிக்கையை மீறுவதாகும்.

அட்டவணை 2இற்கு அமைவாக, நீண்டகாலக் காப்புறுதி தொடர்பான மொத்தப் பரிந்துரைகளில் (105) கோரிக்கை தொடர்பான முரண்பாடுகள் (42%) மற்றும் ஏனைய முறைப்பாடுகள் (57%) வீதமும் இருந்தன. கோரிக்கை முரண்பாடுகளில் (50%) பெரும்பான்மையானவை முதிர்ச்சி நன்மைகள் மற்றும் சரணடைதல் நன்மைகள் தொடர்பானவையாகும். அவ்வாறான முரண்பாடுகளுக்குப் பிரதான காரணம் பூட்கை சொல்லமைப்புக் கொண்ட பந்திகள் மற்றும் காப்புறுதியாளர்களினால் வழங்கப்படும் விளக்கங்களின் பற்றாக்குறையாகும். இந்த முரண்பாடுகளில் பெரும்பாலானவை உரிமை கோருபவர்களுக்கு எழுத்துமூலமாக அல்லது ஆணைக்குழுவில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் தேவையான விளக்கங்களை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுகின்றது.

ஏனைய 43.2% வீதமான கோரிக்கை முரண்பாடுகள் காப்புறுதியாளரினால் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளாமையுடன் தொடர்புடையவையாகும். கொள்கையின் தொடக்கத்திலோ அல்லது புதுப்பித்தலிலோ பொருள் உண்மைகளை வெளிப்படுத்தாது அல்லது தவறாகச் சித்தரிப்பதை அடிப்படையாகக் கொண்டது. காப்புறுதி ஒப்பந்தங்களின் காப்புறுதியின் அடிப்படைச் சட்டக்கொள்கை uberrimae fidei (பரிபூரண நம்பிக்கை) ஆவதுடன், ஒப்பந்தத்தின் இரு தரப்பினருக்கும் நேர்மாறாக செயற்படுகின்றது. அதாவது காப்புறுதியாளர் மற்றும் காப்புறுதி செய்யப்பட்டவர் இருவருக்கும் இது பொதுவானது. ஒரு காப்புறுதியாளர் முன்மொழிவு படிவத்தில் முன்மொழிந்தவர் வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில், முன்மொழிவாளரின் உயிருக்கான ஆபத்தை ஏற்றுக்கொள்வது மற்றும் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானிக்கின்றார். எனவே பொருள் உண்மைகளை வெளிப்படுத்தாத அல்லது தவறாகச் சித்தரிப்பது காப்புறுதியாளர்களினால் பரிபூரண நம்பிக்கையை மீறுவதாகும்.
சில நிகழ்வுகளில், முன்மொழிவாளர்களினால் உண்மைகளை வெளிப்படுத்தாததற்கும் தவறாகச் சித்தரிப்பதற்கும் காரணம்

தொடர்புடைய காப்புறுதிக் கொள்கைகள் குறித்த விழிப்புணர்வு இல்லாதது மற்றும் பொருள் தகவல்களை வெளிப்படுத்த வேண்டிய கடமை பற்றிய தெரியாமையாகும். ஆகையால் காப்புறுதியாளர்கள் வருங்கால பூட்கையாளர்களுக்கு தங்களது வெளிப்படுத்தல் கடமை மற்றும் அவ்வாறு செய்யத் தவறினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் குறித்து முறையாக அறிவிக்கப்படுவதை உறுதி செய்ய கூடுதல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆணைக்குழுவினால் வெளிப்படுத்தாமை அல்லது தவறாகச் சித்தரிக்கப்பட்டமை வேண்டுமென்றே மேற்கொள்ளப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திய சில நிகழ்வுகளுக்கு மட்டுமே ஆணைக்குழுவினால் உதவ முடிந்தது.

பூட்கைகளை இரத்துச் செய்து தவணைக்கட்டணங்களை திரும்பப்பெறுதல் அல்லது பூட்கைகளுக்கு புத்துயிர் பெறுவதற்கான கோரிக்கைகள் தொடர்பாக நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட பிற புகார்களின் முக்கிய காரணம் (50.8%) பூட்கைகளை இரத்துச்செய்து தவணைக் கட்டணங்களை மீளப்பெறுவதற்கான கோரிக்கைகள் தொடர்பான விடயங்களில் உதவ முடியாது, ஏனெனில் அதற்குரிய காலம் முடிந்த பின்னர், அதாவது பூட்கை ஆவணம் கிடைத்த நாளிலிருந்து 21 நாட்களினுள் இல்லை எனில் பூட்கையாளர்களுக்கு அத்தகைய உரிமையில்லை, எனினும் பூட்கையாளர்கள் அல்லது உரிமைகோருபவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் தெளிவாகத் தெரிந்த இடத்தில் நிவாரணம் வழங்க காப்புறுதியாளர்கள் ஒப்புக்கொண்டனர். புத்துயிர் பெறுவதற்கான கோரிக்கைகள் குறிப்பிட்ட காலத்தில் காலாவதியான பிறகு செய்யப்படும் பூட்கைக்கு புத்துயிர் அளிக்க நடவடிக்கை எடுக்கும் தாமதங்களை பூட்கையாளர்கள் நியாயப்படுத்தக்கூடிய இடத்தில் மட்டுமே உதவ முடியும். ஆயுட் காப்புறுதிப் பூட்கையாளர்கள் மீள்கொடுப்பனவை கேட்பதற்குப் பிரதான காரணமாக பூட்கையாளர்களுக்கு ஆயுட் காப்புறுதிப் பூட்கையின் முக்கியத்துவம் விளங்குவதற்கு போதிய அறிவு காணப்படாமை மற்றும் நாளாந்தக் கட்டணங்களை செலுத்துவதற்கு எதிர்கொள்ளும் நிதிப்பிரச்சினைகள் அமைந்திருந்தன.

தகவல்களை வழங்குவது தொடர்பான புகார்கள் (5%) விசாரணைகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதன் மூலம் தீர்க்கப்படலாம். தவணைக்கட்டணங்களை செலுத்துதல் மற்றும் முறைகேடாகப் பயன்படுத்துவது தொடர்பான 3.2% புகார்கள் மட்டுமே இருந்தன. சரிபார்க்கக்கூடிய ஆதாரங்களால் தவறாகப் பயன்படுத்துவதை நிறுவக்கூடிய இடத்தில் மட்டுமே பூட்கையாளர்களுக்கு உதவ முடியும். ஏனைய புகார்களில் (41%) பூட்கைக் கடன்கள், தவணைகட்டணம் செலுத்தும் முறைகள் மற்றும் கிளை அலுவலகங்களின் செயற்பாடு தொடர்பானவையாகும். விசாரணைகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் இதுபோன்ற அனைத்துப் புகார்களும் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன..

### ஏனைய முறைப்பாடுகள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், வியாபாரத்துடன் குறிப்பிடப்படாத 37 பிற விடயங்கள் முக்கியமாக நியாயமற்ற பணி நீக்கம்/ தடுப்புப்பட்டியல் மற்றும் முகவர்களின் கல்வித் தகுதிகள் புகார்தாரர்களுக்கு உதவ அல்லது விவகாரங்களைத் தீர்ப்பதற்கான சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், சாத்தியமான இடங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# சந்தை அபிவிருத்தி மற்றும் வெளித்தரப்பு உறவுகள் மீளாய்வு

காப்புறுதிப் பூட்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பொறுத்துத் தவிர்க்க முடியாத நிகழ்வு அல்லது இடருடன் தொடர்புடைய சில அல்லது அனைத்து நிதி இழப்புகளுக்குத் தனிநபருக்கு அல்லது நிறுவனத்திற்கு இழப்பீடுகளை வழங்குகின்றது, எனவே பொருளாதார வளர்ச்சிக்குக் காப்புறுதித்துறை முக்கியமானதாகும். காப்புறுதிப் பண்டங்கள் நுகர்வோரால் மிகவும் சிக்கலானதாகவும் விலை உயர்ந்ததாகவும் கருதப்படுகின்றன. இத்தகைய கருத்து காப்புறுதியை இடர் முகாமைத்துவத்திற்கான ஒரு கருவியாகத் தடுக்கின்றது, அது வளங்களின் ஒதுக்கீடு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாக அதன் முழுத்திறனையும் பயன்படுத்துகின்றது.

2020இல், ஆணைக்குழு, சந்தை அபிவிருத்தி மற்றும் வெளித்தரப்பு உறவுகள் சார்ந்த நடவடிக்கைகள் தொடர்பாக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) மூலதனச் சந்தை மேம்பாட்டுத்திட்டம் (CMDP) மற்றும் உலக வங்கியின் சர்வதேச வளர்ச்சி சங்கத்தின் நிதித்துறை நவீனமயமாக்கல் திட்டம் (FSMP) ஆகியவற்றின் செயற்பாடுகளில் முக்கியமாகக் கவனம் செலுத்தியது.

கோவிட் 19 வைரஸின் பரவல் காரணமாக திட்டமிடப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் / செயற்பாடுகளை நடாத்துவதற்கு 2020ஆம் ஆண்டு சவாலான ஆண்டாகும். எவ்வாறாயினும் பரிசீலனைக்கு உட்பட்ட ஆண்டில், அது சாத்தியமாகும் போது, பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஆணைக்குழு நடாத்தியது. ஆணைக்குழு காப்புறுதியின் முக்கியத்துவம், காப்புறுதி கைத்தொழிற்துறை மற்றும் அதன் தற்போதைய அபிவிருத்திகள், பொருத்தமான காப்புறுதிப் பண்டங்களைத் தேர்ந்தெடுத்தல், மீதான அறிவினை மேம்படுத்துவதன் ஊடாக தற்போதைய மற்றும் உத்தேச பூட்கையாளர்களின் விருப்பத்தைப் பாதுகாப்பதற்காக இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. இந்த நோக்கத்தைத் தொடர, இலக்கு பார்வையாளர்களை அடைவதற்கு ஆணைக்குழு பல்வேறு தகவல் தொடர்பு ஊடகங்களைப் பயன்படுத்தியது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பயன்படுத்தப்பட்ட தகவல் தொடர்பு ஊடகங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விபரங்கள் பின்வருமாறு:

### காப்புறுதி விழிப்புணர்வு உருவாக்குதன் மீதான எல்லைகடந்த நிகழ்ச்சித்திட்டங்கள்

#### பிரதேச செயலக மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்த நிகழ்ச்சிகள் பிரதேச செயலகங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டன. இத்தகைய திட்டங்களின் நோக்கம், கிராம அலுவலர்கள், பொலிஸ், மதுவரித் திணைக்கள அலுவலர்கள், சமுர்த்தி விளையாட்டு, அபிவிருத்தி, விவசாய மற்றும் ஏனைய கள அலுவலர்கள் மற்றும் அந்தந்தப் பிரதேச செயலகங்களின் பணியாளர்கள் போன்ற பொது மக்களுடன் தொடர்புறும் அலுவலர்களின் காப்புறுதி குறித்த அறிவை மேம்படுத்துவதாகும். ஆணைக்குழுவின் பங்கு (காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் ஒழுங்குபடுத்துனராக) பங்கேற்பாளர்களுக்கு ஆயுள் அல்லது சொத்துக்கான அபாயங்களை ஈடுகட்டத் தேவையான காப்புறுதிக் கொள்கையை வைத்திருப்பதன் முக்கியத்துவம், காப்புறுதிக் கொள்கையாளரின் உரிமைகள் மற்றும் கடமைகள், காப்புறுதிப் பூட்கையை வாங்கும் போது மற்றும் பராமரிக்கும் போது மற்றும் காப்புறுதிக் கொள்கையின் கீழ் உரிமை கோரும் போது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய காரணிகள் பற்றி தெரியப்படுத்தப்படுவதாகும்.
வருடத்திற்குத் திட்டமிடப்பட்ட நான்கு நிகழ்ச்சித்திட்டங்களில் இரண்டு காப்புறுதி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 16 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய யட்டினுவர மற்றும் ஊவா பரணகம பிரதேச செயலகங்களில் 'பிரதேச செயலக நாள் கூட்டத்தின்' போது நடாத்தப்பட்டன. எனினும் மிகுதி நிகழ்ச்சித்திட்டங்கள் கோவிட் - 19 நோய்ப்பரவல் காரணமாக இரத்துசெய்யப்பட்டது.





பிரதேச செயலகங்களில் நடத்தப்பட்ட பிரதான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக, இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் காப்புறுதி மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "Inspire 2020" எனும் விழிப்புணர்வு செயலமர்வில் ஆணைக்குழுவின் அதிகாரிகள் வளவாளர்களாகப் பங்குபற்றினர். இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் காப்புறுதி மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மாணவர்களின் அழைப்பினை ஏற்று 'the Role of the Regulator and Regulatory Aspects" எனும் தொனிப்பொருளில் விளக்கமான காட்சிப்படுத்தலை மேற்கொண்டனர்.





### அச்சு மற்றும் மின்னிலத்திரனியல் ஊடகத்தின் ஊடாக தகவல்களைப் பரப்புதல்

#### அச்சு ஊடகம்

மீளாய்வின் கீழ் உள்ள காலகட்டத்தில் முறையே காப்புறுதித்துறையின் செயற்திறன் மற்றும் மொபைல் காப்புறுதி குறித்த செய்திக் குறிப்பு மற்றும் ஒரு செய்தி அறிவிப்பை ஆணைக்குழு வெளியிட்டது.

#### மின்னிலத்திரனியல் ஊடகம்

காப்புறுதி மீதான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு தகவல்களைப் பரப்புவதற்கு ஊடகம் மிகப் பெரிய வகிபாகத்தை வகிக்கின்றது. அதனால், மீளாய்வுக்குட்பட்ட காலத்தில் ஆணைக்குழு இரண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடாத்தியது. காப்புறுதி விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குக் கீழ்வரும் நிகழ்ச்சிகளில் ஆணைக்குழுவின் அலுவலர்கள் பங்குபற்றினர்.

#### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

- இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் செய்திப் பிரிவின் 'சுருக்கமான செய்திகள்' கலைப் போட்டியின் பரிசளிப்பு விழா தொடர்பான விபரங்களை வெளியிட்டது.

- இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் 'Sanhinda' இல் கலந்துரையாடல் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது

### ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலதன சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

அங்கீகரிக்கப்பட்ட நுகர்வோர் கல்வி உபாயமார்க்கம் மூன்று உபாயமார்க்கங்கள் மற்றும் செயற்படுவதற்கான காலக்கெடுவை உள்ளடக்கிய ஒரு விநியோக கட்டமைப்பை உள்ளடக்கியதுடன் இது ஆணைக்குழு செயற் திட்டம் 2020 இல் இணைக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் கல்வி உபாயமார்க்கத்தை 2020 நான்காம் காலாண்டில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அ) உபாயமார்க்கம் 01 – இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, காப்புறுதிக் கல்வியறிவை அதிகரிக்கவும் நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் யூடியூப்பை சேர்ப்பதன் மூலம் தற்போதுள்ள இணையத்தளத்தை வலுப்படுத்தவும், தகவல் தொடர்பு திட்டங்களை விரிவுபடுத்தவும். நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

யூடியூப் சனல் மற்றும் வீடியோக்களை உருவாக்கும் பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட முகவருடன் இணைந்து தயாரிக்கப்படும் வீடியோக்களுக்கான உள்ளடக்கங்களை ஒப்புக்கொண்ட பகுதிகளின் அடிப்படையில் ஆணைக்குழு தயாரித்துள்ளது. 2021ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அனைத்து வீடியோக்களையும் தயார் செய்து யூடியூப் சனலில் வீடியோக்களை இரு மாதங்களுக்கு ஒருமுறை பதிவேற்ற முகவர் நிலையம் ஒப்புக்கொண்டது.

ஆ) உபாயமார்க்கம் 02 – இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களின் காப்புறுதிக் கல்வியறிவை அதிகரிக்க காப்புறுதி வழங்குனர்களுக்கு வழிகாட்டுதலை வழங்குவதற்கு பணிப்புரையை வழங்குதல்.

ஆணைக்குழு, இலங்கையின் காப்புறுதிச் சங்கத்துடன் இணைந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான காப்புறுதி எழுத்தறிவுத் திட்டங்களைத் திரட்டும் நோக்கில் கலந்துரையாடியது. இலங்கையின் காப்புறுதிச் சங்கம், நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கு உடன்பட்டது. உத்தி பற்றிய சுருக்கமான அறிமுகம், மூலோபாயத்திற்கான பகுத்தறிவு, மூலோபாயத்தை அணிதிரட்டுவதற்கான வழிமுறை, பரிந்துரை முதலியன போன்ற விபரங்களை அளித்து, உத்தியை செயற்படுத்துவது குறித்த அவர்களின் கருத்துகளுக்காக இலங்கை காப்புறுதிச் சங்கத்திற்கு அனுப்பப்பட்டது. CES இன் விநியோகக் கட்டமைப்பின் கீழ் தேவைப்படும்படி, கற்றல் தொகுதி மற்றும் நிகழ்ச்சிகளுக்கான விளக்கக்காட்சிகளுக்கான உள்ளடக்கத்தை ஆணைக்குழு தயாரித்தது.

இ) உபாயமார்க்கம் 01 – தேர்ந்தெடுக்கப்பட்ட பிந்தைய பள்ளிக் கல்வி∴ பயிற்சி நிறுவனங்களின் மாணவர்களுக்கு காப்புறுதி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு உதவுகின்றது.

ஆணைக்குழு வளாகத்தில் இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் காப்புறுதி மற்றும் மதிப்பீட்டுத் திணைக்கள மாணவர்களுக்காக 'ஒழுங்குபடுத்துபவரின் பங்கு மற்றும் ஒழுங்குபடுத்தும் அம்சங்கள்' பற்றிய சுருக்கமான கலந்துரையாடலை ஆணைக்குழு ஏற்பாடு செய்தது.

தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தின் வணிகவியல் பிரிவுக்கான ஆணையாளர் ஆணைக்குழுவுடன் ஆரம்ப கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். தேசிய கல்வி நிறுவனத்தின் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அவர்களின் உதவியை வழங்க ஒப்புக்கொண்டது. மேலும் 2020ஆம் ஆண்டில் மேற்கு, வடமேல், வடமத்திய மற்றும் வடமாகாணங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்காக 04 நிகழ்ச்சிகளை நடாத்த ஒப்புக்கொண்டது. பள்ளிக்குப் பின் கல்வி/ பயிற்சி நிறுவனங்களின் மாணவர்களுக்கான திட்டத்தை நடத்துவதில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்வதற்காக இலங்கை காப்புறுதிச் சங்கம் வள நபர்களை பரிந்துரைத்துள்ளது.

எனினும், கோவிட் 19 வைரஸ் பரவலின் காரணமாக திட்டமிடப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்திட்டங்கள் நடாத்தப்படவில்லை

### நிதியியற் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டம் (FSMP)

சந்தை அபிவிருத்தி மற்றும் வெளிவாரி உறவுகள் நடவடிக்கைகளின் கீழ் ஒதுக்கப்பட்ட இல. 11 மற்றும் 1 ஆக்கக்கூறுகள் தொடர்பான காப்புறுதிக் கணிப்பீட்டு ஆலோசனையுடன் தொடர்புடைய பணிகளை ஆணைக்குழு ஆரம்பித்தது.

அ) ஆக்கக்கூறு 11 – சிரேஸ்ட காப்புறுதிக் கணிப்பீட்டு நிபுணருடன் நெருக்கமாகப் பணியாற்றுதல் மற்றும் காப்புறுதிப் பண்டங்கள் மற்றும் கொள்கைகள் மீது தகவல்களைச் சேகரிப்பதற்குத் தரவுகளை ஒரிடத்தில் மத்தியப்படுத்துவதற்கான அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் இறப்பு மற்றும் நோய்யுற்ற அட்டவணைகளை ஒழுங்கமைத்தல்.

ஆக்கக்கூறு # 11 தொடர்பான ஆய்வு அறிக்கை இறுதி செய்யப்பட்டுள்ளது

ஆ) ஆக்கக்கூறு 13 – மோட்டார், தீ மற்றும் மருத்துவ காப்புறுதிப் பண்டங்கள் தொடர்பான இடைவெளிப் பகுப்பாய்வு அறிக்கையில் காணப்படும் விதப்புரைகளை அமுல்செய்வது தொடர்பாக மீளாய்வு செய்வதற்கு சிரேஸ்ட கணிப்பீட்டு நிபுணருடன் நெருக்கமாகப் பணிபுரிதல். கணிப்பீட்டு ஆலோசகர் வரைவு அறிக்கையை சமர்ப்பித்திருந்ததுடன், ஆணைக்குழு அதனை மீளாய்வு செய்து மேம்படுத்தலுக்கான விதப்புரைகளுடன் அதனை மீள சமர்ப்பித்துள்ளது.

### தேசிய நிதி சேர்த்தல் உபாயமார்க்கம் (NFIS)

ஆணைக்குழு தொடர்பான செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் அறிக்கையின் படி உடன்பட்ட செயற்பாடுகளை 2021ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிப்பதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

### ஏனைய ஈடுபாடுகள்
### பொதுமக்கள் விசாரணைகளுக்கு பதிலளித்தல்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், காப்புறுதி கைத்தொழிற்தொடர்பான தகவல்கள் மற்றும் வழிகாட்டல்களைக் கோரி பொது மக்கள், காப்புறுதி பூட்கை உரிமையாளர்கள் மற்றும் பல்வேறுபட்ட நலன்விரும்பிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற விசாரணைகளுக்குக் கம்பனி பதிலளித்தது

# நிர்வாக மீளாய்வு

**ஊழியர்**

எந்த ஒரு நிறுவனத்தின் வெற்றியும் அதன் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட மக்களின் திறமையிலேயே பெரும் அளவில் தங்கி இருக்கின்றது. எனவே, சபையின் வெற்றிகரமான உத்திகளுக்கு முதுகெலும்பாக இருப்பது மனித மூலவளம் என நாங்கள் நம்புகின்றோம்.

காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்கள் அனைவரது ஆர்வங்களையும் பாதுகாக்கும் நோக்கத்துடன். இலங்கையின் காப்புறுதி கைத்தொழில் நேர்மையுடன் நடத்தப்படுவதை உறுதி செய்யும் ஒட்டு மொத்த நோக்கத்தை அடைவதற்கு தனது கடமையை நிறைவேற்ற அவசியமான நடவடிக்கைகளை அடையாளம் காணுகின்ற வகையில் தனது நிறுவனக் கட்டமைப்பை ஆணைக்குழு நிறுவியுள்ளது.

தேவைப்படும் தொழில் சார்ந்தவர்களை ஏற்ற நேரத்தில் நியமிப்பதன் ஊடாக, மனித வளத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன். மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது அனேக முக்கியமான முன்னெடுப்புகளை சபை எடுத்தது. இத்தகைய முன்னெடுப்புகளை சந்திப்பதற்காக, மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது நிரந்தர பதவிகளுக்கு ஒரு பணிப்பாளர் மற்றும் மூன்று உதவிப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். 2020 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, சபையின் மொத்த பணியாட் தொகுதியினரின் எண்ணிக்கை 21 ஆகும்.

கீழே உள்ள அட்டவணையில் பணிக் குழுவினரின் கல்வி மற்றும் தொழில் சாந்த தகைமைகள் காட்டப்பட்டுள்ளது:

| ஊழியர்களின் எண்ணிக்கை | ஊழியர்களின் கல்வி சார / தொழில் சார் தகைகமைகள் (40) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பட்டப்பின்படிப்பு பட்டங்களும் முதலாவது பட்டமும், மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும் | பட்டப்பின் படிப்பு பட்டங்களும் மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும் | பட்டப் பின்படிப்பு மற்றும் முதலாவது பட்டம் | முதலாவது பட்டமும் மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும் | முதலாவது பட்டம் | தொழில் சார்ந்த தகைமைகள் |
| 51 | 11 | 04 | 07 | 05 | 10 | 03 |

**பயிற்சி**

நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு ஊழியர்கள் அறிவையும் தொழில்சார்ந்த திறனையும் மேம்படுத்திக் கொள்வதற்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது சபையின் பூட்கையாகும். இந்த வருடம் கோவிட் 19 நோய்பரவல் காரணமாக, ஒன்லைன் ஊடான பயிற்சி சந்தர்ப்பங்கள் மட்டுமே ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது.

**பணியாட் தொகுதியினரின் நலன்கள்**

நிறுவனத்தின் பணியாளர்களின் நலன்களில் அக்கறை காட்டுவது, அவர்கள் மத்தியில் ஊக்குவிப்பை உருவாக்குவதிலும் அவர்களின் நேர்மையை அதிகரிப்பதிலும் முக்கிய காரணியாக செயற்படுகின்றது. எனவே, உள்ளேயும், வெளியிலும் கிடைக்கும் மருத்துவத் திட்டங்கள், சுய விபத்து காப்புறுதி பூட்கை, வாகனம் மற்றும் துயரிடர் கடன் திட்டங்கள், பண்டிகை முற்பணக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக கவர்ச்சிகரமான நலன்புரி பொதிகள் ஆகியவற்றை சபை வழங்குகின்றது. மேலும் கோவிட் - 19 நோய்ப்பரவலில் இருந்து ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் உடல் நலத்தை பாதுகாப்பதற்காக ஆணைக்குழு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

# நிதியியல் மீளாய்வு

### பூட்கையாளர் பாதுகாப்பு நிதியம்

பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்திற்காக சேகரிக்கப்பட்ட செஸ் நாட்டில் வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டதை முகம்கொடுக்கும் வகையில் அதிகரித்த வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் விவேகமான முறையில் முதலீடு செய்யப்பட்டது. வரைபு 1 2016 தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரை செஸ் சேகரிப்பு மற்றும் முதலீட்டு வருமானம் என்பவற்றைக் காட்டுகின்றது. கோவிட் - 19 நோய்ப்பரவலின் மத்தியிலும் செஸ் வருமான சற்று அதிகரித்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் செஸ் வருமானம் அதிகரித்துள்ளதை வரைபு 1 காட்டுகின்றது. சாதகமான சந்தை நிலைமை காரணமாக 2017 இருந்து 2019 வரை குறிப்பிடத்தக்க முதலீட்டு வருமான அதிகரிப்பைக் காட்டுகின்றது, எனினும் 2020 ஆம் ஆண்டின் பெரும் பகுதியில் குறைந்த பட்ச வட்டி வீதங்கள் காணப்பட்டதால் அதிகரிப்பு வீதம் சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகரித்துள்ளதுடன், அதனை வரைபு 2 காட்டுகின்றது. நிதியத்தின் நிலையான வளர்ச்சிக்கு நீண்ட கால முதலீட்டுக்கு உயர் வட்டி வீதங்களுடன் இணைந்த ஆணைக்குழுவின் தேறிய மிகைப் பரிமாற்றத்தின் பங்களிப்பு காரணமாகியது.

*வரைபடம் 1*

***கீழே உள்ள வரைபு 5 2016 தொடக்கம் 2020 வரையிலான காலப்பகுதிக்கான ஆணைக்குழுவின் மொத்தச் செலவை வெளிப்படுத்துகின்றது.***




| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|
| செஸ் வருமானம் (இ.ரூபா மில்லியன்) | 408 | 418 | 479 | 493 | 506 |
| முதலீட்டு வருமானம் (இ.ரூபா மில்லியன்) | 229 | 372 | 455 | 574 | 622 |

*வரைபடம் 2*

***2016 - 2020 வரையான காலப்பகுதிக்கு காப்புறுதி பூட்கையாளர்களின் நிதியத்தின் பெறுமதி***




| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவுகள் (இ.ரூபா மில்லியன்) | 3,292 | 4,110 | 5,043 | 6,253 | 7,469 |

31 டிசம்பர் 2020ஆம் திகதியன்று நிதியத்தின் சொத்துக்களின் கலவை கீழே விளக்கப்படுகின்றது.

*வரைபடம் 3*

***31 டிசம்பர் 2020 திகதயன்று காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் சொத்துக்களின் கலவை***



### ஆணைக்குழுவின் வருமானம்

கீழ்வரும் மூலங்களில் இருந்து ஆணைக்குழு வருமானத்தைப் பெற்றுக்கொள்கின்றது.:

- காப்புறுதியாளர்கள், காப்புறுதித் தரகர் கம்பனிகள் மற்றும் நட்டச் சீராக்கலாளர்களைப் பதிவுசெய்தல் கட்டணம்
- காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து பெறப்படும் வருடாந்தக் கட்டணம்
- காப்புறுதித் தரகர் கம்பனிகளின் பதிவைப் புதுப்பிப்பதற்கான வருடாந்தக் கட்டணம்
- மிகை நிதியத்தை முதலீடு செய்வதன் ஊடான வட்டி வருமானம்
- நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தில் இருந்து வருமானம்

2016இல் இருந்து 2020 வரை கிடைக்கப்பெற்ற மொத்த வருமானத்தின் சுருக்கத்தை விளக்கப்படம் 4 விளக்குகின்றது.

*வரைபடம் 4*

***2016 - 2020 வரையான காலப்பகுதியில் ஆணைக்குழுவின் வருமானம்***




| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|
| வருடாந்தக் கட்டணங்கள் (இ.ரூபா மில்லியன்) | 126 | 142 | 168 | 224 | 245 |
| பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் கட்டணங்கள் (இ.ரூபா மில்லியன்) | 5 | 9 | 8 | 14 | 14 |
| ஏனைய வருமானம் (இ.ரூபா மில்லியன்) | 3 | 3 | 8 | 16 | 13 |
| நன்கொடை அங்கீகரிப்பு (இ.ரூபா மில்லியன்) | 2 | 1 | 2 | 84 | 16 |
| மொத்த வருமானம் (இ.ரூபா மில்லியன்) | 136 | 155 | 186 | 339 | 288 |

### ஆணைக்குழுவின் செலவுகள்

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமானத்தில் 15% வீதக் குறைப்பை உள்வாங்க கடுமையான வரவுசெலவுக் கட்டுப்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் திட்டமிடல்கள் போன்றவை கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் 5% வீத செலவினக் குறைப்புக்கு பங்களித்தன. 2020இல் ஆணைக்குழு இ.ரூபா 109.8 மில்லியன் மிகையைப் பதிவு செய்தது. கொள்கைத் தீர்மானத்திற்கு அமைவாக, வரிக் கழிப்பனவை மேற்கொண்டன் பின்னர் குறிப்பிட்ட மிகை பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்படும்.

கீழே உள்ள வரைபு 5 2016 தொடக்கம் 2020 வரையிலான காலப்பகுதிக்கான ஆணைக்குழுவின் மொத்தச் செலவை வெளிப்படுத்துகின்றது.

*வரைபடம் 5:*

***2016 - 2020 வரையான காலப்பகுதியில் ஆணைக்குழுவின் மொத்த செலவுகள்***




| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவுகள் (இ.ரூபா மில்லியன்) | 124 | 125 | 143 | 188 | 178 |

# நிதி தகவல்கள்



# கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } BAF/E/IRCSL/AR/2020 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 29 டிசம்பர் 2021

தலைவர்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

**இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 2020 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று தொடர்பான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவுக்கமைய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.**

---

**1. நிதி கூற்று**

**1.1 உள்ளவாறான விளக்க கருத்து**

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 2020 டிசம்பர் 31 திகதிய நிதிநிலை கூற்று மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை கூற்று, உரித்து மாற்றமடையும் கூற்று மற்றும் அத்திகதியில் நிறைவடையும் ஆண்டுக்கான நிதிப்பாய்ச்சல் கூற்று, நிதி கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், சாராம்சங்கங்கள் முக்கியமான கணக்கீட்டு தராதரங்களை உள்ளடக்கிய 2020 டிசம்பர் 31 நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 (1) பிரிவுடன் இணைத்து வாசிக்க வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதி சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய எனது ஆணையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரைக்கமைய எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் உள்ளவாறான விளக்க கருத்துக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர, நிதியத்தின் 2020 டிசம்பர் 31 திகதிய நிதிநிலை மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை மற்றும் நிதிப்பாய்ச்சல் இலங்கை அரச துறை கணக்கீட்டு தராதரங்களுக்கு அமைவாக உண்மையான, நியாயமான நிலையை வெளிப்படுத்துகிறது என்பது எனது கருத்தாகும்.

**1.2 உள்ளவாறான விளக்க கருத்துக்கான அடிப்படை**

(அ) 2000 ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 103 (1) ஆம் பிரிவுக்கு அமைவாக, காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் நிறுவப்பட்டுள்ளதுடன் சட்டத்தின் பிரிவு 7இற்கு அமைவாக அறவிடப்படும் செஸ் தீர்வையைக் கொண்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். இந்தச் சட்டத்தின் 103 (2) ஆம் பிரிவுக்கு அமைவாக, காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதிய வைப்பு செய்யப்படும் நிதியானது, காப்புறுதிப் பூட்கையாளர்களின் பொதுப் பாதுகாப்பிற்காகவும் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட ஏனைய விசேட நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட முடியும். எனினும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து ஆணைக்குழுவினால் மீளப் பெறப்படுவதற்கு ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்பட்ட விதிகள் கணக்காய்வுக்குக் கிடைக்கப்பெறவில்லை. எனினும் 2020ஆம் ஆண்டு ரூபா 5,773,521.00 மீளப்பெறப்பட்டுள்ளது.


இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

(ஆ) காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் பரிவர்த்தனைகள் மற்றும் நிலுவைகளை அங்கீகரித்து அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகள் தொடர்பாகப் போதுமான வெளிப்பாடுகள் செய்யப்படவில்லை.

(இ) திரட்டிய நிதியத்தின் மீதியான ரூபா 18,504,176 காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு 2019இல் மாற்றப்பட்டது. எனினும் நிதியில் கூற்றுகளில் கணக்காய்விலோ அல்லது வெளிப்படுத்தலிலோ போதியளவு தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை.

(ஈ) SLPSAS 01 - நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

(i). நியமத்தின் பந்தி 95(C)இன் படி, தேறிய சொத்துக்களினுள் ஒவ்வொரு ஒதுக்கீட்டின் தன்மை மற்றும் நோக்கம் தொடர்பாக விளக்கம் ஏதும் வெளிப்படுத்தப்படவில்லை.

(ii). காப்புறுதி பாதுகாப்பு பூட்கையாளர்களுக்கான நிதியத்தில் ரூபா 7,468,719,234 ஒதுக்கீடு மற்றும் நிதியமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும், நியமத்தில் 07ஆம் பந்திக்கு அமைவாக, காப்புறுதிப் பூட்கையாளர்கள் பாதுகாப்பு நிதியமானது நடைமுறையல்லாப் பொறுப்புகளின் கீழ் வகைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள போதிலும் ஐந்தொகைத் திகதியன்று ரூபா 31,617,612.00 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ளுடுPளுயுளு 07 - ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் 65ஆம் பந்தியுடன் இணங்கும் வகையில் ஒவ்வொரு நிதியியல் காலத்தின் போதும் சொத்துக்களின் ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாமையினால் எழுந்துள்ளது. SLPSAS 03 - கணக்கியல் கொள்கைகள், கணக்கியல் மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்களுக்கான 47 ஆம் பந்தியின் கீழான ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் நியமத்தின் ஏற்பாடான வழுக்களின் தவறான பிரயோகம் சரிசெய்யப்படவில்லை. மேலும், SLPSAS 07 ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் 92ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் முழமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட மொத்தக் கொண்டு செல்லும் தொகை வெளிப்படுத்தப்படவில்லை.

(ஊ) SLPSAS 10 நாணயப்பரிமாற்று கொடுக்கல் வாங்கல்களின் இருந்தான வருமானத்தின் 39ஆம் பந்திக்கு அமைவாக, ரூபா 12,784,254 வட்டி வருமானத்தையும் மற்றும் ரூ. 210,661 ஏனைய வருமானத்தையும் அடையாளம் காண்பதற்கான கணக்கியல் கொள்கைகளையும் நாணயப்ப ரிமாற்றத்தில் இருந்தான வருமானத்தின் ஒவ்வொரு முக்கியமான வகைகளையும் ஆணைக்குழு வெளிப்படுத்தவில்லை.

(எ) SLPSAS 11 நாணயப்பரிமாற்றமல்லாத கொடுக்கல் வாங்கல்களின் இருந்தான வருமானத்தின் 107ஆம் பந்திக்கு அமைவாக, காப்புறுதிக் கம்பனிகளில் இருந்தான ரூபா 244,899,120 வருடாந்தக் கட்டணத்தையும் மற்றும் ரூ. 14,497,295 புதுப்பித்தல் கட்டணத்தையும், FSMP இருந்தான ரூ 12,344,401 வருமானத்தையும் ரூபா 2,910,041 மானியத்தையும் அடையாளம் காண்பதற்கான கணக்கியல் கொள்கைகளையும் நாணயப்பரிமாற்றமல்லாத வருமானத்தை அடையாளம் காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகளை ஆணைக்குழு வெளிப்படுத்தவில்லை.

(ஏ) ஆணைக்குழு பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் அல்லது பொறுப்பினை அடையாளம் காணவில்லை. பிற்போடப்பட்ட வரிக் கணக்கீட்டுக்கு அமைவாக, 31 டிசம்பர் 2020 ஆம் திகதியன்று பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு ரூ.984,637.

(ஐ) ஒதுக்கீடுகள் மற்றும் நிதியங்களின் கீழ் நிதியியல் கூற்றின் முகப்பின் மீது கிடைக்கப்பெறும் நிதி அமைச்சில் இருந்து கிடைக்கும் மானியத் தொகையின் மீது ரூபா 307,535 ஆகும். எவ்வாறாயினும், இந்த நிலுவைக்கான தன்மை, கணக்கியல் கொள்கை மற்றும் பிற வெளிப்பாடுகள் தொடர்பாக போதுமான வெளிப்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

(ஒ) ஆணைக்குழு நிதிக் கூற்றின் குறிப்பு இலக்கம் 26இல் சில தொடர்புடைய தரப்பினரை வெளிப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், SLPSAS 14 தொடர்பான தரப்பினரின் வெளிப்படுத்தல்களின் விதிகளின் படி அவர்களுடனான உறவு மற்றும் அடையாளம் காணப்பட்ட பரிவர்த்தனைகள் குறித்து எந்த வெளிப்பாடுகளும் செய்யப்படவில்லை.

(ஓ) நிதி அமைச்சுனும் நிதி அமைச்சின் பிரதான முகாமைத்துவ நபர்களுடனும் மேற்கொள்ளப்படும் தொடர்புடைய தரப்பினருடனான உறவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு தராதரங்களுக்கு (இ.க.த) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தராதரங்களின் கீழ் எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிகூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதுமானதும், பொருத்தமானதுமாகும் என நம்புகிறேன்.

### 1.3 ஆணைக்குழுவின் 2020ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் ஆணைக்குழுவின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியுள்ளது ஆனால் நிதியியல் கூற்றுகளையும் கணக்காய்வாளர் நாயகத்தின் இந்த அறிக்கையின் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் என என்னால் கருதப்பட்ட, எனது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையையும் உள்ளடக்கவில்லை. முகாமைத்துவம் ஏனைய தகவல்களுக்குப் பொறுப்பாகும்.

நிதியியல் கூற்றுகள் மீதான எனது கருத்துகள் ஏனைய தகவல்களை உள்ளடக்காது மற்றும் அதுதொடர்பாக எவ்வித வடிவத்திலும் உத்தரவாதத்தையும் நான் வெளிப்படுத்தமாட்டேன்.

நிதியியல் கூற்றுகளின் எனது கணக்காய்வுடன் தொடர்புடைய, மேலே அடையாளம் காணப்பட்ட பிற தகவல்கள் கிடைக்கும் போது அவற்றைப் படிப்பதே, அவ்வாறு செய்யும் போது மற்றத் தகவல்கள் நிதிநிலைக் கூற்று அல்லது கணக்காய்வில் பெறப்பட்ட எனது அறிவு அல்லது வேறுவிதமாக முரணானதாக உள்ளதா என்பதைக் கருத்தில் கொள்ளவும் அல்லது பொருள் தவறாகக் கூறப்படுகின்றது என வெளிப்பட்டால் அதனை அறிதலே எனது பொறுப்பாகும்,

ஆணைக்குழுவின் 2020 ஆண்டறிக்கையை நான் வாசிக்கும் போது, அதில் பொருள் தவறான அறிக்கைகள் உள்ளன என்று நான் முடிவு செய்தால், நான் திருத்தம் செய்ய ஆளுகைக்கு பொறுப்பானவர்களுக்கு அந்த விடயத்தைத் தெரிவிக்க வேண்டும். மேலும் பொருள் திருத்தப்படாவிட்டால் தவறான அறிக்கைகள் உள்ளன, அவை உறுப்புரை 154 (6) இல் உள்ள விதிகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் சேர்க்கப்படும் அரசியலமைப்பின் சரியான நேரத்தில் தாக்கல் செய்யப்படும்.

### 1.4 நிர்வாக தரப்பினரின் பொறுப்புகள் மற்றும் நிதிக்கூற்றுக்கான ஆளுகைக்குப் பொறுப்பானவர்கள்

இந்த நிதிக்கூற்று இலங்கை அரச துறை கணக்கீட்டு தராதரங்களுக்கு அமைய தயாரிக்கப்படுதல், நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி, தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்களவு பொய்யான கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றை தயாரிப்பதற்கு தேவையான உள்ளக நிர்வாக தீர்மானங்களை மேற்கொள்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றை தயாரிக்கும் போது, நிதியத்தை தொடர்ச்சியாக பேணிச்செல்லும் இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன், நிதியத்தை குலைப்பதற்கு முகாமைத்துவம் கருதினாலோ அல்லது வேறு மாற்று தெரிவகள் இல்லாவிட்டால் செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ச்சியாக இயக்கும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் ஆணைக்குழுவை தொடர்ச்சியாக இயக்குவதற்கான விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பு, நிர்வகிக்கும் தரப்பினரால் வகிக்கப்படுகிறது.

2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவுக்கமைய நிதியத்தின் வருடாந்த மற்றும் சமகால நிதிக்கூற்றை தயாரிக்க கூடிவாறு தமது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரியவாறான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேண வேண்டும்.

**1.5 நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு.**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்று மோசடி, தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்களவு பொய்யான கூற்றுக்கள் அற்றதென நியாயமான சான்று வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுபடுத்தல், உயர் தரத்தில் சான்றுபடுத்திய போதிலும், இலங்கை கணக்காய்வு தராதரங்களுக்கு அமைய கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் குறிப்பிடத்தக்களவு கூறப்படாதவைகளை வெளிப்படுத்தியதாக சான்றுபடுத்தப்படவில்லை. மோசடி, தவறுகளின் தனியான அல்லது கூட்டான தாக்கம் காரணமாக குறிப்பிடத்தக்களவு வெளிப்படுத்தப்படாதவை இருக்கலாம் என்பதுடன், இந்த நிதிக்கூற்றை அடிப்படையாக கொண்டு பரிசோதித்தவர்களால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பில் தாக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்வாண்மையான தீர்ப்பு மற்றும் தொழில்வாண்மையான சந்தேகத்துடன் இலங்கை கணக்காய்வு தராதரங்களுக்கு அமை கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடிகள், தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்களவு பொய்யான கூற்றுக்களின் ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்தக்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குவிதிகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள், தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தவிர்ப்பதற்கு, போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகளை பெறுதல் எனது கருத்துக்கு அடிப்படையானதாகும். குறிப்பிடத்த பொய்யான கூற்றுக்களால் ஏற்படும் தாக்கங்களை விடவும் சோடிகளால் ஏற்படும் தாக்கம் பலமானது. போலி ஆவணங்கள் தயாரித்தல், வேண்டுமென்றே தவிறவிடுதல் மற்றும் உள்ளக கட்டப்பாட்டின் தவறவிடுதல்கள் மோசடிகள் ஏற்பட காரணமாகும்.

- சந்தர்ப்பத்தக்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குவிதிகளை திட்டமிடுவதற்காக நிதியத்தின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் தெளிவடைந்த போதிலும், உள்ளக கட்டுப்பாட்டின் பயன்மிகு தன்மை தொடர்பில் கருத்து தெரிவிக்கப்படவில்லை.

- பாவிக்கப்பட்ட கணக்கீட்டு தராதரங்கள், கணக்கிடப்பட்ட செலவு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளை வெளிப்படுத்தல்கள் தராதரம் பாராட்டப்படுகிறது.

- சம்பவங்கள் அல்லது நிலமைகள் காரணமாக நிதியத்தை தொடர்ச்சியாக பேணுதல் தொடர்பில் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை பாவிக்கப்படும் தொடர்புடைய தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதுமானளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் தீர்மானித்தால் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அந்த வெளிப்படுத்தல் போதுமானதல்ல எனின், எனது கருத்து கணக்காய்வு செய்யப்பட வேண்டும். இருந்தபோதிலும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலமைகள் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவடையலாம்.

- வெளிப்படுத்தலை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளை சமர்ப்பித்தல், விளக்கம் மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்கு அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதி கூற்றுக்களில் உள்ளடக்கியது பாராட்டப்படுகிறது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டபிடிப்புகள்,பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வாக தரப்பினர் தெளிவுபடுத்தப்பட்டனர்.

**2. ஏனைய சட்டபூர்வ மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2.1 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய கணக்காய்வுக்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டன. எனது பரிசீலனையில் தெரியவருவதற்கு அமைய உரிய நிதி அறிக்கை நிறுவனத்தால் பேணப்பட்டு வந்துள்ளது.

2.1.2 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய நிதியத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்று கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாகிறது.

2.1.3 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெறப்பட்ட சாட்சிகள் அடிப்படையிலும், போதுமானளவு விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் கூற்றுக்களை செய்வதற்கு போதுமான எதுவும் எனது கவனத்துக்கு உட்படவில்லை.

2.2.1 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய நிதிய கட்டுப்பாட்டு சபையின் எவராவது உறுப்பினருக்கு நிதியம் தொடர்பில் நேரடியாகவோ, ஏனைய வழிகளிலோ சாதாரண வியாபார நிலமைக்கு புறம்பான தொடர்புகள் இருப்பதாகவும்,

2.2.2 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய ஏதாவது தொடர்புடைய எழுத்து மூல சட்டத்துக்கு அல்லது நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விஷேட ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதல்லாத வகையில் செயற்பட்டுள்ளதாக,

| **தொடர்புடைய ஒழுங்குவிதிகள் / உத்தரவுகள்** | **விபரம்** |
|---|---|
| (அ) 31 டிசம்பர் 2018ஆம் திகதியிடப்பட்ட 2104/09 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்தான வருடாந்தக் கட்டணம் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் அல்லது ரூபா 200,000.00 இதில் எது உயர்வானதோ அதில் 0.125% வீதத்தில் அறவிடப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக இரண்டு காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து குறைவான தொகை அறவிடப்பட்டுள்ளது. |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | |
|---|---|
| (ஆ) 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க வருமான வரிச் சட்டம் (திருத்தம்) | நடைமுறைச் சொத்துகளின் கீழ் 2019ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் தொகை ரூபா 1,208,606.00 ஆகும். 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க வருமான வரிச் சட்டத் திருத்தத்திற்கு அமைவாக 01 ஜனவரி 2020இல் இருந்து அமுலுக்கு வரும்வகையில் சேவைகள் மீதான நிறுத்திவைத்தல் வரி அகற்றப்பட்டுள்ளது. எனினும், நிறுவனம் மீதியை அறவீடு செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை மற்றும் அதே மீதி 31 டிசம்பர் 2020 இல் எஞ்சியுள்ளது. |

2.2.3 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய ஆணைக்குழுவின் அதிகாரம், பணிகள் மற்றும் கருமங்களுக்கு அமைவாக இல்லாத வகையில் செயற்படுத்தப்பட்டுள்ளதாக,

2.2.4 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புகள் தவிர ஆணைக்குழுவின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் உற்பத்தித்திறனாக காலப்பகுதியில் சட்ட விதிகளுக்கு அமைவாக பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு பாவிக்கப்பட்டிருக்கவில்லை என,



டபில்யூ. பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

# கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் 2020ஆம் ஆண்டுக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பதில்கள்

| 2020ஆம் ஆண்டு அறிக்கையில் கணக்காளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விடயங்களுக்கு குழுவின் பதிலளிப்பு | |
|---|---|
| **கணக்காளர் நாயகத்தின் அறிக்கை** | **இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பதில்** |
| உள்ளவாறான விளக்க கருத்துக்கான அடிப்படை | |
| அ. 2000 ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் 103 (1) ஆம் பிரிவுக்கு அமைவாக, காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் நிறுவப்பட்டுள்ளதுடன் சட்டத்தின் பிரிவு 7இற்கு அமைவாக அறவிடப்படும் செஸ் தீர்வையைக் கொண்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். இந்தச் சட்டத்தின் 103 (1) ஆம் பிரிவுக்கு அமைவாக, காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதிய வைப்பு செய்யப்படும் நிதியானது, காப்புறுதிப் பூட்கையாளர்களின் பொதுப் பாதுகாப்பிற்காகவும் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட ஏனைய விசேட நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட முடியும். எனினும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து ஆணைக்குழுவினால் மீளப் பெறப்படுவதற்கு ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்பட்ட விதிகள் கணக்காய்வுக்குக் கிடைக்கப்பெறவில்லை. எனினும் 2020ஆம் ஆண்டு ரூபா 5,773,521.00 மீளப்பெறப்பட்டுள்ளது. | சட்டத்தின் 103 (1) ஆம் பிரிவுக்கு அமைவாக, காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் வைப்புச் செய்யப்படும் நிதியை, விதியினால் உருவாக்கப்பட்ட ஏனைய குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்த முடியும். கைத்தொழிற்துறையின் அபிவிருத்தி தொடர்பான பணிகள், கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான மூலதனச் செலவுகள் எனக் கருதப்படும். தயவுசெய்து இணைக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை உசாவவும் (இணைப்பு 3).<br><br>ஆணைக்குழுவின் நிதியில் இருந்து காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு இந்த ஆண்டும் கடந்த ஆண்டும் மாற்றப்பட்ட தொகைகள் முறையே ரூ.129 மில்லியன் மற்றும் ரூ.93 மில்லியன் ஆகும். காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து பெயரளவிலான பற்றுகள் மேலே உள்ள வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் வெளிப்படைத்தன்மைக்காகவும் அனுப்பப்படுகின்றன |
| ஆ. காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் பரிவர்த்தனைகள் மற்றும் நிலுவைகளை அங்கீகரித்து அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகள் தொடர்பாகப் போதுமான வெளிப்பாடுகள் செய்யப்படவில்லை. | காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் என்பது ஆணைக்குழுவின் ஒருங்கிணைந்த பகுதியாகும் மற்றும் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் ஆளுகையில் பிரயோகிக்கக்கூடிய அனைத்து கணக்கியல் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் உள்ளன. மேலும், காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் மீதான பகுப்பாய்வுத் தரவுள் வருடாந்த அறிக்கையின் நிதியியல் மீளாய்வுகளின் கீழ் உட்படுத்தப்பட்டுள்ளது. |
| இ. திரட்டிய நிதியத்தின் மீதியான ரூபா 18,504,176 காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கு 2019இல் மாற்றப்பட்டது. எனினும் நிதியில் கூற்றுகளில் கணக்காய்விலோ அல்லது வெளிப்படுத்தலிலோ போதியளவு தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை | திரட்டிய நிதியமானது பூஜ்ஜியப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் எவ்வித அசைவுகளையும் 2020இல் கொண்டிருக்கவில்லை. 2019இல் அசைவுகள் காணப்பட்ட போது உரிய வெளிப்படுத்தல்கள் உருவாக்கப்பட்டன. ஆணைக்குழுவின் அனுமதியுடன் காப்புறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்கான பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டது. தயவு செய்து இணைக்கப்பட்டுள்ள ஆணைக்குழு பத்திரங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றைப் பார்வையிடவும். |
| ஈ. SLPSAS 01 – நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்<br>1. நியமத்தின் பந்தி 95(C)இன் படி, தேறிய சொத்துக்களினுள் ஒவ்வொரு ஒதுக்கீட்டின் தன்மை மற்றும் நோக்கம் தொடர்பாக விளக்கம் ஏதும் வெளிப்படுத்தப்படவில்லை<br><br>2. காப்புறுதி பாதுகாப்பு பூட்கையாளர்களுக்கான நிதியத்தில் ரூபா 7,468,719,234 ஒதுக்கீடு மற்றும் நிதியமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும், நியமத்தில் 07ஆம் பந்திக்கு அமைவாக, காப்புறுதிப் பூட்கையாளர்கள் பாதுகாப்பு நிதியமானது நடைமுறையல்லாப் பொறுப்புகளின் கீழ் வகைப்படுத்தப்படுதல் வேண்டும். | ஆணைக்குழுவிடம் சுயமாக விளக்கப்பட்ட மீள் மதிப்பீட்டு ஒதுக்கீடு எனும் ஒதுக்கீடு மட்டுமே உள்ளதனால் மேலதிக விளக்கங்கள் தேவையில்லை.<br><br>காப்புறுதிப் பாதுகாப்பு பூட்கையாளர்களுக்கான நிதியம் ஆணைக்குழுவின் ஒரு பகுதியாகவே கருதப்படுகின்றது. அதனால் உரிமைப்பங்கு அசைவுகள் வெளிப்படுத்தப்படவில்லை. மேலும் காப்புறுதி பாதுகாப்பு பூட்கையாளர்களுக்கான நிதியத்தில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் ஆணைக்குழுவின் தேறிய சொத்தின் நிலையைப் பாதிப்பதில்லை. காப்புறுதி பாதுகாப்பு பூட்கையாளர்களுக்கான நிதியம் தொடர்பாக மதிப்பீட்டு கணக்கீட்டு சிகிச்சையானது காப்புறுதி பாதுகாப்பு பூட்கையாளர்களுக்கான நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்களைப் பூஜ்ஜியமாக்குகின்றது. |
| உ. முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள போதிலும் ஐந்தொகைத் திகதியன்று ரூபா 31,617,612.00 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. SLPSAS 07 – ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் 65ஆம் பந்தியுடன் இணங்கும் வகையில் ஒவ்வொரு நிதியியல் காலத்தின் போதும் சொத்துக்களின் ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாமையினால் எழுந்துள்ளது. SLPSAS 03 – கணக்கியல் கொள்கைகள், கணக்கியல் மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்களுக்கான 47 ஆம் பந்தியின் கீழான ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் நியமத்தின் ஏற்பாடான வழுக்களின் தவறான பிரயோகம் சரிசெய்யப்படவில்லை. மேலும், SLPSAS 07 ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் 92ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட மொத்தக் கொண்டு செல்லும் தொகை வெளிப்படுத்தப்படவில்லை | இலங்கை அரச துறையினருக்கான கணக்கியல் நியமம் 07இற்கு அமைவாக மீள்மதிப்பீட்டின் நிகழ்வு இடைவெளியின் ஏற்ற இறக்கம் மற்றும் சொத்துக்களின் நியாயமான மதிப்பில் ஏற்படும் மாற்றங்களின் முக்கியத்துவத்தைப் பொறுத்து அமைந்திருக்கும். நிர்வாகமும் கணக்காய்வுக் குழுவும் முழுமையாக மதிப்பிழந்த சொத்துக்கள் பொதுவாக நிலையற்றவையல்ல என்றும், மீள மதிப்பீட்டிற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் மாற்றங்கள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல எனவும் கருதினர். மேலும், மீள்மதிப்பீட்டு செலவைக் கருத்தில் கொண்டு வாகனங்களை மட்டும் மீள்மதிப்பீடு செய்ய கணக்காய்வுக் குழு முடிவுசெய்துள்ளது. அதனால், எங்கள் நிறுவனம் SLPAS 07 இற்கு அமைவாக நாங்கள் கருதுகின்றோம்.<br>கணக்கெடுப்புக்கான சபையின் குழு பயனுள்ள ஆயுட்காலத்தை மதிப்பாய்வு செய்யும் பணியை ஒப்படைக்கின்றது மற்றும் அவர்களின் கருத்தைப் பொறுத்து SLPSAS 03இன் படி கணக்கியல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். |

| | |
|---|---|
| ஊ. SLPSAS 10 நாணயப்பரிமாற்று கொடுக்கல் வாங்கல்களின் இருந்தான வருமானத்தின் 39ஆம் பந்திக்கு அமைவாக, ரூபா 12,784,254 வட்டி வருமானத்தையும் மற்றும் ரூ. 210,661 ஏனைய வருமானத்தையும் அடையாளம் காண்பதற்கான கணக்கியல் கொள்கைகளையும் நாணயப்ப ரிமாற்றத்தில் இருந்தான வருமானத்தின் ஒவ்வொரு முக்கியமான வகைகளையும் ஆணைக்குழு வெளிப்படுத்தவில்லை | SLPSAS 10 நாணயப்பரிமாற்று கொடுக்கல் வாங்கல்களின் கீழ் கீழ்வரும் வெளிநாட்டு நாணயப் பரிமாற்றத்திலிருந்தான எவ்வித கொடுக்கல்வாங்கல்களையும் ஆணைக்குழு கொண்டிருக்கவில்லை.<br>(அ) சேவைகளை வழங்கல்<br>(ஆ) பண்டங்களின் விற்பனை: மற்றும்<br>(இ) ஏனையவர்களினால் பயன்படுத்தப்பட்டு வட்டி, அரசுரிமை மற்றும் பங்குலாபத்தைத் தரும் உரிமச் சொத்துக்கள். வட்டி வருமானமான ரூபா 12,784,254 நிலையான வைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் இருந்து பெறப்பட்டதுடன் ரூபா 210,661 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களில் இருந்து பெறப்பட்ட வட்டியை பிரதிபலிப்பதுடன், இவை உள்;ர் நாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் ஆவதுடன் வெளிநாட்டு நாணயங்களில் இருந்தான கொடுக்கல் வாங்கல்கள் எதுவுமில்லை. |
| எ. SLPSAS 11 நாணயப்பரிமாற்றமல்லாத கொடுக்கல் வாங்கல்களின் இருந்தான வருமானத்தின் 107ஆம் பந்திக்கு அமைவாக, காப்புறுதிக் கம்பனிகளில் இருந்தான ரூபா 244,899,120 வருடாந்தக் கட்டணத்தையும் மற்றும் ரூ. 14,497,295 புதுப்பித்தல் கட்டணத்தையும், FSMP இருந்தான ரூ 12,344,401 வருமானத்தையும் ரூபா 2,910,041 மானியத்தையும் அடையாளம் காண்பதற்கான கணக்கியல் கொள்கைகளையும் நாணயப்பரிமாற்றமல்லாத வருமானத்தை அடையாளம் காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகளை ஆணைக்குழு வெளிப்படுத்தவில்லை. | வருமானத்தை அடையாளம் காணல் கொள்கை கணக்கீட்டு கொள்கை 4.1 இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளதுடன், இது அட்டுறு அடிப்படையில் அடையாளம் காணப்படுகின்றது. FSMP ற்கான வருமானத்தை அடையாளம் காணல் கொள்கை கணக்கீட்டுக் கொள்கைகள் 3.3.2 இன் கீழும் நன்கொடைகள் 3.3.1 இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் குறிப்புகள் மேற்குறிப்பிடப்பட்டவைக்கான அடையாளம் காணல் கொள்கையை விளக்குகின்றது. |
| ஏ. ஆணைக்குழு பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் அல்லது பொறுப்பினை அடையாளம் காணவில்லை. பிற்போடப்பட்ட வரிக் கணக்கீட்டுக்கு அமைவாக, 31 டிசம்பர் 2020 ஆம் திகதியன்று பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு ரூ.984,637 | எதிர்பார்த்தபடி வரி விலக்குள் ஏதும் இல்லாத நிலையில், ஒத்திவைக்கப்பட்ட வரியை வழங்குவது பற்றி சிந்திப்போம |
| ஐ. ஒதுக்கீடுகள் மற்றும் நிதியங்களின் கீழ் நிதியியல் கூற்றின் முகப்பின் மீது கிடைக்கப்பெறும் நிதி அமைச்சில் இருந்து கிடைக்கும் மானியத் தொகையின் மீது ரூபா 307,535 ஆகும். எவ்வாறாயினும், இந்த நிலுவைக்கான தன்மை, கணக்கியல் கொள்கை மற்றும் பிற வெளிப்பாடுகள் தொடர்பாக போதுமான வெளிப்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை | நிதி அமைச்சின் முடிவுகளின் அடிப்படையில் நிதியுதவி தொடர்பாகப் பெறப்பட்ட இந்த மானியம் குறிப்பு 3.3.2 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது, மேலும் இது அதன் தன்மை மற்றும் கணக்கியல் செயன்முறையைக் கூறுகின்றது. |
| த ஒ. ஆணைக்குழு நிதிக் கூற்றின் குறிப்பு இலக்கம் 26இல் சில தொடர்புடைய தரப்பினரை வெளிப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், SLPSAS 14 தொடர்பான தரப்பினரின் வெளிப்படுத்தல்களின் விதிகளின் படி அவர்களுடனான உறவு மற்றும் அடையாளம் காணப்பட்ட பரிவர்த்தனைகள் குறித்து எந்த வெளிப்பாடுகளும் செய்யப்படவில்லை. | ஆணைக்குழு தொடர்புடைய தரபிப்பினர் தொடர்பாக வெளிப்படுத்துவதற்குத் தகுதியான எந்தவொரு பரிவர்த்தனைகளையும் தொடர்புடைய தரப்பினருடன் உறவையும் கொண்டிருக்கவில்லை. |
| ஓ. நிதி அமைச்சுடனும் நிதி அமைச்சின் பிரதான முகாமைத்துவ நபர்களுடனும் மேற்கொள்ளப்படும் தொடர்புடைய தரப்பினருடனான உறவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படவில்லை | வெளிப்படுத்துவதற்குத் தகுதியானதாகக் குறிப்பிடப்பட்ட தொடர்புடைய தரப்பினருடன் எந்தவிதமான பரிவர்த்தனைகளையும் உறவுகளையும் ஆணைக்குழு கொண்டிருக்கவில்லை. எனினும் நிதி அமைச்சின் ஈடுபாடு தொடர்பான வெளிப்பாடுகள் கணக்குகளுக்கான குறிப்பு இலக்கம் 3.3.2 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| **ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள்** | |
| 31 டிசம்பர் 2018ஆம் திகதியிடப்பட்ட 2104/09 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக<br>காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்தான வருடாந்தக் கட்டணம் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் அல்லது ரூபா 200,000.00 இதில் எது உயர்வானதோ அதில் 0.125மூ வீதத்தில் அறவிடப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக இரண்டு காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து குறைவான தொகை அறவிடப்பட்டுள்ளது. | காப்புறுதிக் கம்பனி 2017ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்டதுடன் 2019ஆம் ஆண்டில் இடைநிறுத்தல் அகற்றப்பட்டதுடன், அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க வருமான வரி<br>நடைமுறைச் சொத்துகளின் கீழ் 2019ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் தொகை<br>ரூபா 1,208,606.00 ஆகும். எனினும் 01 ஜனவரி 2020இல் இருந்து அமுலுக்கு வரும்வகையில் சேவைகள் மீதான நிறுத்திவைத்தல் வரி அகற்றப்பட்டுள்ளது. மீதியை அறவீடு செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | 01 ஜனவரி 2020இல் இருந்து அமுலுக்கு வரும்வகையில் சேவைகள் மீதான நிறுத்திவைத்தல் வரி அகற்றப்பட்டுள்ள போதிலும், ஏற்கனவே உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களுக்கு அமைவாக ரூபா 1,208,606.00 மீளளிப்புத் தொகையாவதுடன், எங்களுடைய வரி ஆலோசனையாளர்கள் 2020/2021 வரிமதிப்பீட்டாண்டுக்கான வரி விபரத்திரட்டுகள் சமர்ப்பிக்கப்பட்டதும் அதனைக் கோர முடியும் என உறுதிப்படுத்தியுள்ளார்கள். |

# நிதியியல் நிலைமை கூற்று

**31 டிசம்பர் 2020 அன்றுள்ளவாறு**

| | குறிப்புகள் | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2019 இல முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துகள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள் | 1 | 15,984,713 | 15,691,234 |
| காப்புறுதிப் பூட்கையாளர் நிதியம் - வாடகை மற்றும் மின்சார வைப்புகள் மற்றும் திறைசேரிப் பிணையங்கள் | 2 | 868,593,949 | 1,086,252,949 |
| வாடகைக்கான மீள்செலுத்தக்கூடிய வைப்பு | | 2,688,246 | - |
| **நடைமுறையல்லாச் சொத்துகள்** | | 887,266,908 | 1,101,944,183 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்பு | 3 | 522,560 | 654,321 |
| காப்புறுதிக் கொள்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் - முதலீடுகள் மற்றும் ஏனையவை | 2 | 6,600,125,286 | 5,166,705,283 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 4 | 18,509,817 | 21,986,662 |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | 35,000,000 | - |
| அரசாங்க பிணையங்களில் உள்ள முதலீடுகள - ரிபோ | | 110,000,000 | 162,000,000 |
| காசுக்குச் சமமானவையும் | 5 | 5,673,130 | 11,455,374 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | 6,769,830,793 | 5,362,801,640 |
| **மொத்த சொத்துக்கள்** | | 7,657,097,701 | 6,464,745,823 |
| **ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | | |
| **ஒதுக்குகளும் நிதிகளும்** | | | |
| பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் | 7 | 7,468,719,234 | 6,252,958,232 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | | 17,689,652 | 17,689,652 |
| நிதி அமைச்சில் இருந்து கிடைக்கப்பெற்ற மானியம் | | 307,535 | 976,126 |
| **மொத்த ஒதுக்குகளும் நிதிகளும்** | | 7,486,716,421 | 6,271,624,010 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | |
| மானியம் | 8 | 10,834,812 | 7,966,332 |
| ஓய்வு நலக் கடப்பாடு | 9 | 19,473,749 | 15,839,021 |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | 30,308,561 | 23,805,353 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| பெற்றுக்கொண்ட முற்பணங்கள் | | 14,140,076 | 14,332,836 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புகள் | 10 | 124,531,745 | 154,280,881 |
| வங்கியின் மறை மீதி | 5 & 21 | 1,405,898 | 702,743 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | 140,077,719 | 169,316,460 |
| **மொத்த ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | 7,657,097,701 | 6,464,745,823 |

இந்தக் கணக்குக் கூற்றுக்களைத் தயார் செய்வதிலும், சமர்ப்பிப்பதிலும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களே பொறுப்புடையவர்களாவர்.

"மேலே கூறப்பட்ட நிதிநிலைமைக் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் 97 தொடக்கம் 108 ஆம் பக்கம் வரையிலான குறிப்புகளோடு சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்.".

**ரசீக் ஸாருக்**
தலைவர்

அங்கத்தவர்

**தமயந்தி பெர்னாண்டோ**
பணிப்பாளர் நாயகம்

**சதீஸ் குமார்**
பணிப்பாளர் நாயகம் - நிதி மற்றும் நிர்வாகம்

கொழும்பு, இலங்கை
01 டிசம்பர் 2021

# நிதிச் செயலாற்றுகை கூற்று

**31 டிசம்பர் 2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்புகள் | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2019 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருமானம் | 11 | 259,396,415 | 238,813,675 |
| FSMP இல் இருந்து வருமானம் | 12 | 12,344,401 | 81,620,094 |
| மானிய அங்கீகாரம் | 8 | 2,905,041 | 2,324,391 |
| வட்டி வருமானம் | 13 | 12,784,254 | 15,757,900 |
| ஏனைய வருமானம் | 14 | 210,661 | 338,154 |
| **மொத்த வருமானம்** | | **287,645,772** | 338,854,213 |
| **செலவுகள்** | | | |
| ஊழியர் ஆகுசெலவு | 15 | (109,096,963) | (112,323,915) |
| தொழில்முறைக் கட்டணங்கள் | 16 | (302,000) | - |
| தொழிற்பாட்டு செலவுகள் | 17 | (66,594,283) | (73,323,241) |
| FSM கருத்திட்ட செலவுகள் | 18 | (640,875) | (456,260) |
| நிதி மற்றும் ஏனையவை | 19 | (1,733,725) | (1,568,501) |
| **மொத்தச் செலவு** | | **(178,367,845)** | (187,671,916) |
| வரிக்கு முன்னரான தேறிய மிகை /(பற்றாக்குறை) | - | 109,272,927 | 151,182,297 |
| வரிவிதிப்பு | 21 | (16,348,823) | (22,479,379) |
| காப்புறுதிப் பூட்கையாளர் நிதியத்திற்கு மாற்றப்பட்ட மிகை | 7 | (93,214,934) | (129,218,719) |
| வரிக்கு பின்னரான மிகை /(பற்றாக்குறை) | | 290,831 | (515,801) |
| ஓய்வு நன்மைகள் தேவைப்பாட்டின் மீது உண்மையான நட்டம் / (ஈட்டுகை) | | (290,831) | 515,801 |
| **வருடத்திற்கான தேறிய மிகை** | | **-** | - |

"மேலே கூறப்பட்ட நிதிநிலைமைக் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் 97 தொடக்கம் 108 ஆம் பக்கம் வரையிலான குறிப்புகளோடு சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்."

# உரிமைப்பங்கு/தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றத்திற்கான கூற்று

**31 டிசம்பர் 2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | திரட்டப்பட்ட மிகைகள்/ (பற்றாக்குறைகள்) | மொத்தம் |
|---|---|---|---|
| **01 ஜனவரி 2018 அன்று மீதி** | 7,389,652 | - | 7,389,652 |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்டது | - | 41,337,937 | 41,337,937 |
| ஆதன மீள்மதிப்பீடு மீதான ஈட்டுகை | 10,300,000 | - | 10,300,000 |
| **31 டிசம்பர் 2018ம் திகதியன்று மீதி** | 17,689,652 | 41,337,937 | 59,027,589 |
| **01 ஜனவரி 2019 அன்று மீதி** | 17,689,652 | 41,337,937 | 59,027,589 |
| சம்பள மீள்திருத்தம் தொடர்பான முன் வருட சீராக்கம் | - | (11,643,186) | (11,643,186) |
| 2018ம் ஆண்டுக்கான வருமான வரி சீராக்கம் | - | (11,190,575) | (11,190,575) |
| PPFற்கு 2018 இல் மாற்றப்பட்ட மிகை | - | (18,504,176) | (18,504,176) |
| இவ்வருடத்திற்கான மிகை | - | (515,801) | (515,801) |
| கணிப்பீட்டு நட்டம் / (ஈட்டுகை) | - | 515,801 | 515,801 |
| ஆதனம், பொறி மற்றும் தளபாடங்களுக்கு மாற்றப்பட்டது | - | - | - |
| **திரட்டிய நிதியத்திற்கு மாற்றப்பட்டது** | 17,689,652 | - | 17,689,652 |
| **31 டிசம்பர் 2020 அன்று மீதி** | 17,689,652 | - | 17,689,652 |
| இவ்வருடத்திற்கான மிகை | - | 93,505,765 | 93,505,765 |
| ஆதனம், பொறி மற்றும் தளபாடங்களுக்கு மாற்றப்பட்டது | - | (93,214,934) | (93,214,934) |
| கணிப்பீட்டு நட்டம் / (ஈட்டுகை) | - | (290,831) | (290,831) |
| **31 டிசம்பர் 2020 அன்று மீதி** | 17,689,652 | - | 17,689,652 |

# காசுப்பாய்ச்சல் கூற்று

**31 டிசம்பர் 2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்புகள் | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2019 இல முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| இக்காலப்பகுதிக்கான நிகர அதிகரிப்பு/(குறைவு) | | 109,563,757 | 151,182,297 |
| பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடு | 1 | 5,480,041 | 4,899,489 |
| ஓய்வு நலனுக்கான ஏற்பாடு | 9 | 3,925,559 | 4,558,024 |
| அகற்றல் மீதான இலாபம்/(நட்டம்) | 14 | - | (83,065) |
| மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு - ஓய்வு நலன் | 9 | - | (359,100) |
| மானிய அங்கீகாரம் | 8 | (2,905,041) | (2,324,391) |
| வட்டி வருமானம் | 13 | (12,784,254) | (15,757,900) |
| நடைமுறை மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நிகர அதிகரிப்பு | | 103,280,062 | 124,771,809 |
| நடைமுறை மூலதனத்தில் மாற்றம் | | | |
| இருப்புகளில் குறைவு/(அதிகரிப்பு) | 3 | 131,762 | (131,701) |
| பெறுவனவுகளில் குறைவு/(அதிகரிப்பு) | 4 | 374,136 | (7,721,734) |
| முற்பணங்களில் அதிகரிப்பு/(குறைவு) | | (192,760) | 171,021 |
| கடன் வழங்குநர் மற்றும் அட்டுறுக்கான அதிகரிப்பு/(குறைவு) | 10 | 3,704,753 | 136,025,149 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிதிப் பாய்ச்சல் | | 4,017,891 | 128,342,736 |
| வருமான வரி செலுத்தப்பட்டது | 21 | (12,931,704) | (17,343,545) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிகர நிதிப் பாய்ச்சல்கள் | | 94,366,249 | 253,114,545 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/ நிதிப் பாய்ச்சல்கள்** | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | 52,000,000 | (131,300,000) |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | (35,000,000) | 40,000,000 |
| வட்டி வருமானம் | | 12,661,839 | 15,724,103 |
| ஆதனம், பொறி மற்றும் இயந்திர விற்பனை மூலம் பெறப்பட்ட வருமானம் | 14 | - | 83,065 |
| ஆதனம், பொறி மற்றும் இயந்திரக் கொள்வனவு | 1 | (5,773,521) | (4,901,298) |
| முதலீட்டு நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | 23,888,318 | (80,394,130) |
| **நிதியியல் நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| காப்புறுதிக் கொள்கையாளர் பாதுகாப்பு நிதியத்தில் மாற்றப்பட்ட மூலதனம் | 7 | 5,773,521 | 4,901,298 |
| PPF 2019இல் மாற்றப்பட்ட மிகை | | (129,844,897) | (129,218,719) |
| திரட்டப்பட்ட மிகை -2018 | 6 | - | (41,337,937) |
| நிதி அமைச்சில் இருந்து கிடைக்கப்பெற்ற மானியம் | | (668,591) | 976,126 |
| நிதியில் நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல் | | (124,739,967) | (164,679,232) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் நிகர அதிகரிப்பு/(குறைவு) | | 6,485,399 | 8,041,184 |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 10,752,632 | 2,711,448 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 4,267,233 | 10,752,632 |
| **வங்கி மற்றும் கையிலுள்ள காசு** | 5 & 21 | | |
| நிதி முகாமைத்துவக் கணக்கின் மீதி | | 5,014,430 | 10,197,543 |
| இலங்கை வங்கி FSM கணக்கு | | 658,147 | 1,257,278 |
| சேமிப்பு - NSB | | 554 | 554 |
| | | 5,673,131 | 11,455,375 |
| இலங்கை வங்கியின் எதிர்மறை மீதி * | | | |
| இலங்கை வங்கி 1977 - லெட்ஜர் பதிவுக்கு அமைவாக | | 1,405,898 | 702,743 |
| | | 4,267,233 | 10,752,632 |

"மேலே கூறப்பட்ட நிதிநிலைமைக் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் 97 தொடக்கம் 108 ஆம் பக்கம் வரையிலான குறிப்புகளோடு சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்.".

# காப்பறுதிப் பூட்கையாளர்களின் பாதுகாப்பு நிதியம் காசுப்பாய்ச்சல் கூற்று

**31 டிசம்பர் 2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | குறிப்புகள் | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2019 இல முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| காப்புறுதிப் பூட்கையாளர்களின் நிதியத்தில் நிகர அதிகரிப்பு | | 1,215,761,003 | 1,210,191,963 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான நிகர அதிகரிப்பு | | 1,215,761,003 | 1,210,191,963 |
| தொழிற்படு மூலதன மாற்றம் | | | |
| அரசாங்க பிணையங்கள் மீதான கிடைக்கவுள்ள வட்டியின் (அதிகரிப்பு)/ குறைவு | | (71,803,279) | (50,203,714) |
| செஸ் கிடைப்பனவுகளில் (அதிகரிப்பு)/குறைவு | | (13,765,866) | 2,848,980 |
| வாடகை வைப்புகளில் (அதிகரிப்பு)/குறைப்பு | | - | - |
| PPF இருந்து மாற்றப்பட்ட தொகையின் அதிகரிப்பு/(குறைவு) | | 36,871,008 | (125,914,867) |
| | | (48,698,137) | (173,269,601) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசு | | 1,167,062,867 | 1,036,922,363 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/ நிதிப் பாய்ச்சல்கள்** | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | 1,076,659,000 | - |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | (2,111,732,500) | (1,019,563,000) |
| முதலீட்டு நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | (1,035,073,500) | (1,019,563,000) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் நிகர அதிகரிப்பு/(குறைவு) | | 131,989,367 | 17,359,363 |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 18,406,669 | 1,047,306 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | | 150,396,035 | 18,406,669 |
| நடைமுறைக் கணக்கில் மீதி | 2 | 1,000,000 | 1,000,000 |
| நிதி முகாமைத்துவக் கணக்கின் மீதி | | 149,396,035 | 17,406,669 |
| | | 150,396,035 | 18,406,669 |

குறிப்பு : காப்புறுதியாளர் பாதுகாப்பு நிதியத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று ஒரு மேலதிக வெளிப்படுத்தல் ஆகும்.

.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1. முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1. 1 அறிக்கையிடல் நிறுவனம்

### 1.1.1 சட்ட வடிவம்

2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் தொழிற்பாடுகள் 2001 பெப்பரவரி 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1172/ 27 உடைய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைவாக 01 மார்ச் 2001ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டன..

ஆணைக்குழுவின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் 11ஆம் மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

### 1.1.2 முதன்மைச் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாட்டின் தன்மை

ஆணைக்குழுவின் நோக்கமாகவும் பொறுப்பாகவும், இலங்கையினுள் காப்புறுதிப் பூட்கையாளர்களினதும் உத்தேச காப்புறுதிப் பூட்கையாளர்களினதும் தேவையைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் காப்புறுதி வியாபாரத்தை நேர்மையுடனும் மற்றும் தொழில்முறையுடன் விவேகமாக மேற்கொள்வதை உறுதிசெய்தல் அமைந்துள்ளது.

சட்டத்தில் குறிப்பிட்டவாறு ஆணைக்குழுவின் கடமை மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் கீழ்வருமாறு அமையும்.

(அ) இலங்கையினுள் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ளும் காப்புறுதியாளர்களைப் பதிவுசெய்தல்

(ஆ) காப்புறுதித் தரகர்களாகப் பதிவுசெய்தல்

(இ) காப்புறுதி கைத்தொழிற்துறையின் அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கல்,

(ஈ) காப்புறுதிக் கைத்தொழிற்துறையுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்,

(உ) ஆணைக்குழுவின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளைச் செயற்படுத்தல், செய்தல் மற்றும் நிறைவேற்றுதல் போன்ற நோக்கங்களுக்காக அவசியமான அத்தகைய அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை ஈடுபடுத்தல்,

(ஊ) ஏதேனும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை கைக்கொள்வதுடன், அதனை விற்பனை செய்தல், குத்தகைக்கு வழங்கல் அல்லது அகற்றவும் முடியும்,

(எ) அதனுடைய அதிகாரத்தை, கடமைகளை மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு, செயலாற்றுவதற்கு மற்றும் விடுவிப்பதற்கு அவசியமான ஒப்பந்தங்களுக்கு வருதல், மற்றும்

(ஏ) இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்களை, கடமைகளை மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு, விடுவிப்பதற்கு மற்றும் செயலாற்றுவதற்கு உரிய அவசியமான அனைத்து ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல

### 1.2 தயாரித்தலுக்கான அடிப்படை

### 1.2.1 இணக்கக்கூற்று

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் நிதியியல் கூற்றுகள் நிதியியல் நிலைமைக் கூற்று, நிதியியல் செயலாற்றுகைக் கூற்று, உரிமைப்பங்கு/ தேறிய சொத்துகளில் மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவனவற்றை நிதியில் கூற்றுகளுக்கான குறிப்புகளுடன் உள்ளடக்கியிருப்பதுடன் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுடன் இணங்குகின்றது.

இந்த நிதியியல் கூற்றுகளை விநியோகிப்பதற்கான அங்கீகாரம் 25 பெப்பரவரி 2021 ஆம் திகதி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

### 1.2.2 அளவீட்டு அடிப்படை

ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள், வரலாற்று ஆகுசெலவு இணக்கத்தில் கீழ் தயாரிக்கப்பட்டதுடன் கீழ்வருவன தவிர்ந்து நிதியியில் கூற்றுக்களைப் பாதிக்கும் வகையிலான பணவீக்க காரணிகளுக்கான சீராக்கங்கள் செய்யப்படவில்லை என்பது தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது.

வரையறுக்கப்பட்ட நன்மைத் தேவைப்படுகள் கணிப்பீட்டு பெறுமதியின் மீது அதன் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளதுடன் குறிப்பு 3.1.1 இல் விளக்கப்பட்டுள்ளது. பொருத்தமான இடங்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் பின்னிணைப்பு குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.2.3 தொடர்ந்து செல்லும் கரிசனை

ஆணைக்குழு உறுப்பினர்கள், இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொடர்ந்து செல்லும் கரிசனை அடிப்படையில் ஆணைக்குழு தொடர்ந்து இயங்குவதற்கான தகைமை உள்ளதா என்பதை மதிப்பீடு செய்துள்ளனர். ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழு அதன் செயற்பாட்டைத் தொடரும் எனவும், எதிர்பார்க்கக்கூடிய எதிர்கால நியதிச் சட்டக் கடமைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்ற நியாயமான உறுதிப்பாட்டுடன் உள்ளனர். எதிர்காலம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் கருத்திற் கொண்ட பின்னர் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழு அதன் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டிய தேவை ஒன்று உள்ளது என்பதை எதிர்பார்க்கவில்லை. இதற்கமைவாக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்கள் ஆணைக்குழு அதன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் தொடர்ந்து செல்லும் கரிசனை என்பதைத் தொடர்ந்து தழுவுகிறது.

### 1.2.4 செயற்பாட்டு மற்றும் வெளிப்படுத்தும் நாணயம்

ஆணைக்குழுவினால் செயற்படுத்தும் நாணயமான இலங்கை ரூபாவில் நிதியியல் கூற்றுகளில் நாணயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து நிதியியல் தகவல்களும் மிகக் கிட்டிய பெறுமதியாக்கப்பட்டு ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.2.5 ஒப்பீட்டுத் தகவல்கள்

இந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்வதற்காகவும் சிறந்த வெளிப்படுத்தலுக்காகவும் கடந்த வருடத்திற்கான நிதியியல் கூற்றுகளின் வெளிப்படுத்தல் மற்றும் வகைகப்படுத்தல் திருத்தப்பட்டுள்ளது.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1.2.6 பொருண்மை மற்றும் திரட்டல்

நிதியியல் கூற்றுக்களில் ஒவ்வொரு பொருண்மையான வகுப்புகளின் ஒத்த உருப்படிகள் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவை பொருண்மையற்றவையாக இருந்தாலன்றி உருப்படியின் வேறுபட்ட தன்மை அல்லது செயற்பாடுகள் காரணமாக வேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.2.7 முக்கியமான கணக்கீட்டுத் தீர்மானங்கள், கருதுகோளுக்கான மதிப்பீடுகள்

எஸ்எல்பீஎஸ்ஏஸ் உடன் இணங்கும் வகையில் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகம் மற்றும் சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையிடல் தொகை என்பவற்றைப் பாதிக்கும் முகாமைத்துவத்திற்கு தீர்மானங்களை, மதிப்பீடுகளை மற்றும் கருதுகோள்களை மேற்கொள்வதற்கு அவசியமாகின்றது. உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகளில் இருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. எந்த மதிப்பீடு திருத்தப்பட்டதோ மற்றும் ஏதேனும் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றதோ அந்தக் காலத்திற்கான கணக்கீடு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் அடையாளம் காணப்படுகின்றது.

கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிப்பதில் உள்ள சிக்கலான தீர்மானத்திற்குரிய தகவல்கள், அவை நிதியியல் கூற்றுகளில் உள்ள அடையாளம் காணப்பட்ட தொகைகளின் மீது முக்கியமான பாதிப்பை உருவாக்குமாயின் அவை கீழ்வரும் குறிப்புகளை உள்ளடக்கியிருக்கும்.

#### தள்ளுபடி காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல்களில் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஒரு சொத்து அல்லது சொத்துக்களின் போட்போலியோ பாதிப்படைகின்றது என்பதற்கான புறநிலை சான்றுகள் உள்ளதா என்பதற்காக ஆணைக்குழு மதிப்பீடு செய்கின்றது. ஒரு சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய தொகை என்பது பயன்பாட்டில் உள்ள அதன் பெறுமதி உயர்வாக இருத்தல் மற்றும் அதன் நியாயமான பெறுமதி விற்பதற்கான செலவை விடக் குறைவாக இருத்தல் என்பதாகும். பயன்பாட்டில் உள்ள பெறுமதியை மதிப்பீடு செய்தல், எதிர்கால காசுப் பாய்ச்சலை மதிப்பீடு செய்தல் என்பன பொருத்தமான தள்ளுபடி வீதத்தைப் பயன்படுத்தி அதனுடைய தற்போதைய பெறுமதிக்கு தள்ளுபடி செய்யப்படுகின்றது, அது சொத்தின் குறிப்பிட்ட இடர் மற்றும் அந்த நேரப் பணப் பெறுமதிக்கான தற்போதைய சந்தை மதிப்பீட்டினைப் பிரதிபலிக்கும்.

#### தேய்மானம்

தேய்மான முறை, பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் மீதமுள்ள மதிப்புகள் என்பற்றைத் தீர்மானிப்பதற்கு ஒரு தீர்ப்புத் தேவைப்படுகின்றது.

#### பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

எதிர்கால வரித் திட்டமிடல் உபாயமார்க்கத்துடன் எதிர்கால வரிவிதிப்பு இலாபங்களின் மட்டத்தின் அடிப்படையில் அடையாளம் காணப்படக்கூடிய பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் தொகையைத் தீர்மானிப்பதற்கு முகாமைத்துவ தீர்மானம் அவசியமாகின்றது.

#### வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட நன்மைத் தேவைப்பாடுகளின் பொறுப்பின் மதிப்பீடானது கழிவு, வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள் மற்றும் இறப்பு வீதங்கள் மற்றும் இந்தத் திட்டங்களின் நீண்ட காலத் தன்மை, நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்ட அத்தகைய மதிப்பீடுகள் என்பவை உள்ளடங்களாக கருதுகோள்களின் முக்கிய கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

#### நடைமுறை வரிவிதிப்பு

நிதியியல் கூற்றுகளில் வழங்கப்பட்டுள்ள நடைமுறை வரிப் பொறுப்புகள் தொடர்புடைய அறிக்கைகள் வரிச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை பிரயோகித்து உண்மையான பொறுப்பை பிரதிபலிக்கின்றது என நிர்வாகம் நம்புகின்றது. ஆணைக்குழுவினால் பரிவர்த்தனை மீது எடுக்கப்பட்ட நிலைப்பாடுகள் தொடர்பாக முரண்பாடான கொள்கைகளை வருமான அதிகாரிகள் மேற்கொள்வதற்கான நிகழ்வுகள் இருக்கக்கூடும். ஏதேனும் கணக்கில் கூடுதல் செலவுகள் இருந்தால் இந்தப் பிரச்சினைகள் ஆணைக்குழுவினால் பொறுப்புகள் உறுதிப்படுத்தப்படும் நேரத்தில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

### 1.2.8. அறிக்கையிடும் காலப் பகுதியின் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களில் தேவையான இடங்களில் அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் நடைபெற்ற அனைத்து முக்கிய சம்பவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு, பொருத்தமான சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

### 1.3 வெளிநாட்டு நாணயத்தை மாற்றுதல்

ஏதேனும் வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற நடவடிக்கைகள் இருப்பின், கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற வேளையில் இருந்த நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் அவை, அறிக்கையிடும் நாணயமான இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டு நாணயத்தில் உள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஐந்தொகை தாளில் உள்ள திகதியில் காணப்பட்ட நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டது. அதன் காரணமாக உருவான ஈட்டுகைகளும் நட்டங்களும் வருமானம் மற்றும் செலவுக் கணக்கில் தீர்க்கப்பட்டன.

### 1.4 நிதியியல் இடர் முகாமைத்துவ நோக்கங்கள் மற்றும் கொள்கைகள்

ஆணைக்குழுவின் நிதியியல் பொறுப்புகள் முற்பணங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ளது. நிதியியல் பொறுப்புகள் என்பது ஆணைக்குழுவிற்கு வரவேண்டிய நேரடியான தொழிற்பாட்டிலிருந்தான வருமானக் கிடைப்பனவுகளும் ஏனைய குறுகிய கால முதலீடுகளுமாகும்.

#### 1.4.1 சந்தை இடர்

சந்தை இடர் என்பது சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக நிதியியல் சாதனத்தின் எதிர்கால காசுப் பாய்ச்சலின் நியாயமான பெறுமதியாகும். சந்தை விலைகள் இரு வகையான இடர்களை உள்ளடக்கியிருக்கும். அவை வட்டி வீத இடர் மற்றும் நாணய இடராகும். நிதியியல் நிறுவனங்களில் உள்ள வைப்புகள் உள்ளடங்கலாக நிதியியல் சாதனங்கள் சந்தை இடரினால் பாதிக்கப்படும்

#### 1.4.1.1 வட்டி வீத இடர்

வட்டி வீத இடர் என்பது நிதியியல் சாதனத்தின் நியாயப் பெறுமதி அல்லது எதிர்கால காசுப்பாய்ச்சல் சந்தையின் வட்டி வீதங்களினால் நிலையில்லாமல் மாறுவதாகும். ஆணைக்குழுவின் சந்தை வட்டி வீதங்களின் மாற்றத்திலான இடருக்கு வெளிப்பாடு ஆணைக்குழுவின் மிதக்கும் வட்டி வீதங்களுடனான கடப்பாட்டுக்கு பிரதானமானதாகும

#### 1.4.1.2. திரவம்தன்மை இடர்

ஆணைக்குழு தொடர்ச்சியான காசுப்பாய்ச்சல் முன்மதிப்பீடு மற்றும் காசு வரவுசெலவுக் கணிப்பீட்டைப் பயன்படுத்தி பற்றாக்குறையான திரவத்தன்மை இடரைக் கண்காணிக்கும்.

# கணக்கீட்டுக் கொள்கைகள்

## 2. சொத்துகள் மற்றும் மதிப்பீட்டுக்கான அடிப்படை

### 2.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

**உரிமை கொள்ளப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன, திரண்ட தேய்மானத்தில் இருந்து கழிக்கப்பட்டு, அதன் நிலை/ மீள் மதிப்பீட்டுத் தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் விலை, அவை எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்த எண்ணியிருந்ததோ அதற்காக அவை செயற்படுகின்ற நிலையில் கொண்டுவருவதற்கு உட்பட்ட ஏதேனும் செலவுகள் மற்றும் அதனைக் கைக் கொள்வதற்கான செலவுகள் என்பவற்றை உள்ளடக்கும்.

ஆணைக்குழு மூலதனச் செலவாகக் கருதும் உருப்படிகளுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகளுடன் தொடர்புடைய கொண்டு செல்லல் அல்லது பாய்ச்சலில் நிரந்தர தன்மையுடைய சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், விரிவாக்கல் அல்லது மேம்படுத்தல் நோக்கத்திற்காக பிற்பட நேர்ந்த ஆகுசெலவு உறப்பட்டது.

மீள்மதிப்பீட்டு மாதிரி மூன்று வருடங்களுக்கு ஒருமுறை மீள்மதிப்பீடு செய்யப்படும் மோட்டார் வாகனங்களுக்கு பிரயோகிக்கப்படும் மற்றும் அதன் பின்னர் எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் 7 இன் கீழ் மீள்மதிப்பீட்டு மாதிரியுடன் இணங்குதல் வேண்டும்.

**தேய்மானம்**

பெறுமானத் தேய்வு, நேர்கோட்டு அடிப்படையில், மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்திற்கு ஏற்ப அறவிடப்பட்டுள்ளது. பயன்பாட்டு ஆயுள், தேய்மான முறைகள் மற்றும் மீதமுள்ள பெறுமதி ஆண்டுதோறும் அல்லது அந்த மதிப்பீடு அவசியம் எனும் ஏதேனும் சூழ்நிலை எழுமாயின் அதற்கு முன்னதாக மதிப்பிடப்படும்.

| சொத்து | வருடத்திற்கு % |
|---|---|
| மோட்டார் வாகனங்கள | 25 |
| தளபாடமும் பொருத்திகளும | 12.5 |
| அலுவலக மற்றும் EDP உபகரணம் | 25 |
| பயிற்சி உபகரணம் | 25 |

ஒரு சொத்து கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து அது அகற்றப்படும் நாள் வரை பெறுமானத் தேய்வு கணிக்கப்படுகிறது. அகற்றப்படுதல் மீதான பெறுவனவுகளும் இழப்புக்களும் அகற்றப்படுவதிலிருந்து பெறப்படும் வருமானத்தைக் கொண்டு வரும் தொகையுடன் ஒப்பிட்டு தீர்மானிக்கப்படுகின்றது.

### 2.2 முதலீடுகள்

அங்கீகாரம் பெற்ற அரச வங்கிகளில் நிலையான வைப்புகள் மற்றும் குறுகிய கால முதலீடுகள், அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரச திறைசேரி பிணையங்களில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அறிக்கையிடல் திகதி வரை திரட்டப்பட்ட வட்டி ஆகுசெலவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முதலீடுகள் ஆண்டு இறுதி வரை ஆகுசெலவு மற்றும் திரட்டப்பட்ட வட்டியில் கூறப்படுகின்றன. அதனால், நிதியாண்டின் இறுதியில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் வெளிப்படுத்தும் நிதியியல் சாதனங்கள் மீது இடர்கள் எழமாட்டாது.

### 2.3 இருப்புச் சரக்கு

இருப்புச் சரக்குகளின் செலவு குறைவாக அல்லது பெறக்கூடிய நிகர பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன. பொருள் பட்டியல்களுக்கான விலை "முதலில் வருவது முதலில்" (FIFO) என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

### 2.4 பெறுவனவுகள்

மதிப்பு குறைப்புக்கான ஏற்பாட்டுக்கு பின்னர் எதிர்பார்க்கப்படும் மதிப்பு பெறுமதியாக வரவுகள் கொண்டு செல்லப்படுகின்றன. அனைத்து பெறத்தக்கவைகளும் புறநிலை சான்றுகளைக் கருத்தில் கொண்டு குறித்துரைக்கப்பட்ட குறைபாட்டு மூலம் மதிப்பிடப்படுகின்றன.

### 2.5 நிதியல்லாச் சொத்துகளின் மதிப்புக் குறைப்பு

நிதியல்லாச் சொத்துக்களில் குறைப்புகள் ஏறப்படலாம் எனும் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் உள்ள அறிகுறி தென்படும் சூழ்நிலையில் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் ஆணைக்குழு மதிப்பிடுகின்றது. அவ்வாறான அறிகுறி வெளிப்பட்டால், ஆணைக்கு சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய பெறுமதிக்கு மதிப்பீட்டினை மேற்கொள்ளும். மீட்டெடுக்கக்கூடிய பெறுமதியினை விட கொண்டு செல்லும் சொத்தின் பெறுமதி விஞ்சுமாயின், அந்த சொத்து சேதமடைந்த சொத்தாகக் கருதப்படுவதுடன அதன் மீட்டெடுக்கக்கூடிய பெறுமதிக்கு குறைப்பு செய்யப்படும்.

### 2.6 காசு மற்றும் காசுக்குச் சமனானவை

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசு மற்றும் காசுக்குச் சமமானவை வங்கியிலும், கையிலும் உள்ள பணத்தை உள்ளடக்குகின்றது.

## 3. பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

ஐந்தொகைத் திகதியில் அனைத்து கருத்தில் கொள்ள வேண்டிய பொறுப்புகளும் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மிகையாக அறியப்பட்டவைக்கு போதியளவு ஏற்பாடுகள் பொறுப்புகளுக்கு செய்யப்பட்டுள்ளது.

நிதியியல் கூற்றுகளைத் தயாரிக்கும் போது ஆகுசெலவில் அனைத்து அறியப்பட்ட பொறுப்புகளும் கணக்கீடு செய்யப்படும்.

3.1 நிதியியல் நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்ட பொறுப்புகளில் அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் அல்லது கேள்வி மீதான கொடுப்பனவு நிலுவையாக உள்ள அனைத்துக் கொடுப்பனவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3.2 நிதியியல் நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாப பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்ட பொறுப்புகளில் அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குப் பினனர் உள்ள நிலுவையாக உள்ள அனைத்துக் கொடுப்பனவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3.3 ஒரு தற்செயல் பொறுப்பு என்பது கடந்த கால நிகழ்வுகளில் இருந்து எழும் ஒரு சாத்தியமான தேவைப்பாடாகும்.

யாருடைய இருப்பு இருக்கும் நிகழ்வின் அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிச்சயமில்லாத எதிர்கால நிகழ்வுகளுக்கு அப்பால் ஆணைக்குழுவின் கட்டுபாட்டுக்கு அமையாத நிகழாத ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது அல்லது நிகழ்காலத்தின் தேவைப்பாடு அடையாளம் காணப்படாதவிடத்து காரணம் அது சாத்தியமாக இருக்காதவிடத்து அந்த தேவைப்பாட்டினைத் தீர்க்க வளங்களின் வெளியேற்றம் தேவைப்படும்.

3.4 கடந்த கால நிகழ்வின் விளைவாக ஆணைக்குழுவினால் தற்போது சட்ட ரீதியாக அல்லது ஆக்கபூர்வமான தேவைப்பாடு அடையாளம் காணப்படும் போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படும் மற்றும் தேவைப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு அவசியமான

# கணக்கீட்டுக் கொள்கைகள்

பொருளாதார நன்மைகளை உள்ளடக்கிய வளங்களின் வெளியேற்றம் சாத்தியமாகும் மற்றும் தேவைப்பாட்டின் தொகைக்கு அளவான மதிப்பீட்டை மேற்கொள்ள முடியும்.

### 3.1 ஓய்வுகால நலன்கள்

### 3.1.1 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நலன் திட்டங்கள் - பணிக்கொடை

1983ஆம் ஆண்டு 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு அனைத்து ஊழியர்களுக்கான ஓய்வுகால நலன் திட்டத்தை ஆணைக்குழு உருவாக்கியுள்ளது. இந்த ஓய்வுகால நலன் திட்டம் ஒரு ஊழியர் ஓய்வின் போது பெற்றுக்கொள்ளும் நலன் தொகையினை வரையறுத்துள்ளது.

இலங்கை அரசதுறை கணக்கியல் நியமம் 19: ஊழியர் நன்மைகளின் கீழ் விபரித்துள்ள உய்த்தறியப்பட்ட அலகு கடன் முறையினைப் பயன்படுத்தி ஆணைக்குழு வருடந்தோறும் வரையறுக்கப்பட்ட நலன் திட்டத்தைக் கணிப்பீடு செய்வதன் ஊடாக நிதியியல் நிலைமைக் கூற்றில் பொறுப்பு இனங்காணப்படும்.

| | |
|---|---|
| **2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில்** | **15,839,020** |
| தற்போதைய சேவை ஆகுசெலவு | 2,262,462 |
| வட்டி ஆகுசெலவு | 1,663,097 |
| கடந்த ஆண்டின் கீழ் ஏற்பாடு | - |
| விரிவான வருமானக் கூற்றில் இலாப நட்டத்தில் அறவிடப்பட்டது | **3,925,559** |
| கணிப்பீடு செய்யப்பட்ட நட்டங்கள் / (ஈட்டுகைகள்) | (290,831) |
| செலுத்தப்பட்ட நலன்கள் | - |
| **2020 நிதியியல் ஆண்டின் இறுதியில்** | **19,473,748** |

கடந்த ஆண்டில் ஏற்பாடுகளின் பற்றாக்குறை அல்லது மிகை காரணமாக எழும் மாற்றங்களினால் ஈட்டுகைகளும் நட்டங்களும் எழுவதுடன் அவை எழும் காலத்தில் நிதிநிலை செயற்பாட்டுக் கூற்றில் அவை அறவீடு செய்யப்படும். இந்த ஆண்டுக்கான தேவைப்பாடு உடனடியாக விரிவான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும். . பிரதான கணிப்பீட்டு எடுகோள்கள் பின்வருமாறு எடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| கழிவு வீதம் | : | ஆண்டுக்கு 6% |
| சம்பள அதிகரிப்பு வீதம் | : | 4% |
| ஓய்வுபெறும் வயது | : | 60 வருடங்கள் |

### 3.1.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் – EPF மற்றும் ETF

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன, பொருத்தமான நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக, அனைத்து ஊழியர்களும் ஊழியர் பங்கிலாப பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புகள் ஆகியவற்றுக்குத் தகுதியுடையவர்கள். ஆணைக்குழு ஊழியர் நம்பிக்கை நிதிய மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றுக்கு ஊழியர்களின் மொத்த வருமானத்திலிருந்து முறையே 12% மற்றும் 3% இனை பங்களிப்புச் செய்கிறது.

### 3.2 மானியம்

### 3.2.1 காப்புறுதிப் பூட்கையாளர்கள் பாதுகாப்பு நிதியம்

பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்ட காப்புறுதிக் பூட்கையாளர்களின் மூலதனச் செலவு, மானியமாகக் கருதப்பட்டு சொத்து ஒன்றின் மதிப்பிடப்பட்ட பாவனைக் காலத்தின் மீது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 3.2.2 நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டம்

மானியங்கள் அதனுடைய நியாயப் பெறுமதியில் நிதியியல் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றது. மானியம் தொடர்புடைய செலவுகள் எழும் போது, அது அந்தக் காலத்திற்குரிய வருமானமாக அதனுண்டய ஆகுசெலவுடன் பொருந்துவதற்கு முறைமையான அடிப்படையின் மீது ஈடுசெய்யும் நோக்கம் கொண்டது

பெறுபேறு அடிப்படையிலான நிதியிடல் வருமானமாக அங்கீகரிக்கப்படுவதற்காக நிதி அமைச்சிடமிருந்து மானியம் கிடைக்கப் பெறும். முதலீட்டு கருத்திட்ட நிதியிடலுக்கான மானியம் கிடைக்கப்பெறும் போது அது கூறப்பட்ட ஆகுசெலவுடன் வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

## 4. வருமானம் மற்றும் செலவு

### 4.1 வருமான அங்கீகாரம்

IRCSL வின் வருமானம் அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வெளியீடுகளின் விற்பரன போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட சேவைகள் ∴ கட்டணங்கள் என்பவற்றிலிருந்தான வருமானம் அந்த சேவைகள் செயற்பட்ட காலத்தில் அடையாளம் காணப்படுகின்றது.

2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குகுமுறைப்படுத்தல் சட்டத்தின் 103(1)ஆம் பிரிவு நியதிகளுக்கு அமைவாக பூட்கையாளர் பாதுகாப்பு நிதியம் எனும் நிதியமொன்று இருத்தல் வேண்டும் என்பது காப்புறுதி கைத்தொழிற்துறை ஒழுங்குகுமுறைப்படுத்தல் சட்டத்தின் 7ஆம் பிரிவுக்கு அமைவாக அறவிடப்படும் செஸ் அதற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

### 4.1.1 ஏனைய வருமானம்

ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் அடையாளம் காணப்படுகின்றது

### 4.2 செலவு அங்கீகாரம்

ஆணைக்குழுவைப் பேணிப் பாதுகாப்பதற்காக கூறப்பட்ட அனைத்து செலவுகளும் வருமானத்தின் மீதான செலவுகளை உறுதிப்படுத்துவதற்கு வருவாய்க்கு அறவிப்பட்டுள்ளது.

### 4.2.1 வட்டி வருமானம் மற்றும் செலவுகள்

முதலீடுகள் மீதான வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவுகள் நிதியில் நிலைமைக் கூற்றில் அட்டுறு அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

### 4.3 காசுப் பாய்ச்சல் கூற்று

நேரடியல்லா முறையைப் பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

## 1 ஆதனம், பொறி மற்றும் உபரணம்

| | மோட்டார் வாகனங்கள் | தளபாடங்களும், பொருத்திகளும் | அலுவலக உபகரணம் (EDP & ஏனையவை) | பயிற்சி உபகரணங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **ஆகுசெலவு/ மீள்மதிப்பீடு** | | | | | |
| 01 ஜனவரி 2019 அன்று மீதி | 10,300,000 | 14,152,432 | 26,635,537 | 141,450 | 51,229,419 |
| சேர்ப்புகள் | - | 1,508,944 | 3,392,354 | - | 4,901,298 |
| அகற்றல்கள் | - | (18,895) | (2,271,627) | - | (2,290,522) |
| 31 டிசம்பர் 2019 அன்று மீதி | 10,300,000 | 15,642,481 | 27,756,264 | 141,450 | 53,840,195 |
| 01 ஜனவரி 2020 அன்று மீதி | 10,300,000 | 15,642,481 | 27,756,264 | 141,450 | 53,840,195 |
| சேர்ப்புகள் | - | 1,383,081 | 4,390,440 | - | 5,773,521 |
| அகற்றல்கள் | - | - | - | - | - |
| 31 டிசம்பர் 2020 அன்று மீதி | 10,300,000 | 17,025,562 | 32,146,704 | 141,450 | 59,613,716 |
| **திரட்டப்பட்ட பெறுமானத்தேய்வு** | | | | | |
| 01 ஜனவரி 2019 அன்று மீதி | - | 12,675,881 | 22,722,663 | 141,450 | 35,539,995 |
| இவ்வருடத்திற்கான கட்டணம் | 2,575,000 | 533,646 | 1,790,844 | - | 4,899,489 |
| அகற்றல்கள் | - | (18,895) | (2,271,627) | - | (2,290,522) |
| 31 டிசம்பர் 2019 அன்று மீதி | **2,575,000** | **13,190,632** | **22,241,880** | **141,450** | **38,148,962** |
| 01 ஜனவரி 2020 அன்று மீதி | 2,575,000 | 13,190,632 | 22,241,880 | 141,450 | 38,148,962 |
| இவ்வருடத்திற்கான கட்டணம் | 2,575,000 | 580,890 | 2,324,151 | - | 5,480,041 |
| அகற்றல்கள் | - | - | - | - | - |
| 31 டிசம்பர் 2020 அன்று மீதி | **5,150,000** | **13,771,522** | **24,566,031** | **141,450** | **43,629,003** |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதி** | | | | | |
| 31 டிசம்பர் 2020 அன்று மீதி | **5,150,000** | **3,254,039** | **7,580,674** | **-** | **15,984,713** |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதி** | | | | | |
| 31 டிசம்பர் 2019 அன்று மீதி | **7,725,000** | **2,451,848** | **5,514,385** | **-** | **15,691,234** |

31.12.2020 அன்று முற்றாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துகள் 33,128,786

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | குறிப்புகள் | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2019 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **2 காப்புறுதி பூட்கையாளர் பாதுகாப்பு நிதியத்தின் முதலீடுகள் மற்றும் ஏனையவை** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| வாடகை மற்றும் மின்சார வைப்பு | | 9,593,949 | 9,593,949 |
| திறைசேரி உண்டியல்கள் | | - | 1,076,659,000 |
| நிலையான வைப்புகள் | | 859,000,000 | - |
| | | 868,593,949 | 1,086,252,949 |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | 5,872,692,500 | 4,619,960,000 |
| நிலையான வைப்புகளில் இருந்து கிடைக்க வேண்டிய வட்டி | | 349,263,763 | 277,460,484 |
| கிடைக்க வேண்டியவை CESS | | 140,326,575 | 126,560,709 |
| நிதி முகாமைத்துவக் கணக்கின் மீதி | 23 | 149,396,035 | 17,406,669 |
| வங்கியில் உள்ள மீதி | 23 | 1,000,000 | 1,000,000 |
| PPF மாற்றப்பட்ட மிகை | | 87,446,413 | 124,317,421 |
| | | 6,600,125,286 | 5,166,705,283 |
| கழி | | | |
| PPF இருந்து மாற்றப்பட்ட வேண்டிய தொகை | | - | - |
| | | 6,600,125,286 | 5,166,705,283 |
| மொத்த சொத்துகள் | | 7,468,719,235 | 6,252,958,232 |
| **3 சரக்குஇருப்பு** | | | |
| அச்சிடுதல், எழுதுகருவிகள் மற்றும் கணணி உதிரிப்பாகங்கள் | | 490,870 | 617,711 |
| முத்திரை | | 31,690 | 36,610 |
| | | 522,560 | 654,321 |
| **4 ஏனைய நடைமுறைச் சொத்துகள்** | | | |
| வைப்புகள் | | 219,987 | 2,896,832 |
| சேமிப்பு - NSB | | - | - |
| ஏனைய கிடைப்பனவுகள் | | 227,953 | 2,185,248 |
| WHT ஈடுசெய்ய வேண்டியவை | | 1,208,606 | 1,208,606 |
| VAT கட்டுப்பாடு | | 129,409 | 3,794,678 |
| வட்டிக் கிடைப்பனவுகள் - அரசாங்க பிணையங்கள் | | 122,415 | 536,878 |
| ஊழியர் கடன்கள் * | | 8,758,228 | 5,347,093 |
| PPF இருந்து மாற்றப்பட வேண்டிய தொகை | | 4,649,569 | 5,393,700 |
| கைக்கொள்ளுக்கான ஏற்பாடு | | 3,193,650 | 623,626 |
| | | 18,509,817 | 21,986,662 |
| *ஊழியருக்கு வழங்கப்பட்ட கடன்கள் | | | |
| 01 ஜனவரி 2020 அன்று மீதி | | 5,347,093 | 5,005,967 |
| இவ்வருடத்தில் வழங்கப்பட்ட கடன்கள் | | 6,436,900 | 3,862,000 |
| | | 11,783,993 | 8,867,967 |
| இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மீள்செலுத்தல்கள் | | (3,025,765) | (3,520,873) |
| 31 டிசம்பர் 2020 அன்று மீதி | | 8,758,228 | 5,347,093 |
| **5 காசு மற்றும் காசுக்கு சமனானவை** | | | |
| **வங்கியில் உள்ள காசு** | | | |
| நிதி முகாமைத்துவக் கணக்கின் மீதி | 23 | 5,014,430 | 10,197,543 |
| இலங்கை வங்கி FSMP கணக்கு | | 658,147 | 1,257,278 |
| சேமிப்பு - NSB | | 554 | 554 |
| | | 5,673,130 | 11,455,374 |
| **இலங்கை வங்கியின் மறை மீதி *** | | | |
| இலங்கை வங்கி 1877 - பேரேட்டின் படி | 23 | 1,405,898 | 702,743 |
| | | 4,267,232 | 10,752,631 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | குறிப்புகள் | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2019 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **6 திரட்டிய நிதியம்** | | | |
| வருட ஆரம்பத்தில் உள்ள மீத | 20 | - | 41,337,937 |
| வருடத்திற்கான மீதி | | - | |
| திருத்தப்பட்ட சம்பள நிலுவை 2018 - தற்போதுள்ள ஊழியர்கள் | | - | (10,237,415) |
| திருத்தப்பட்ட சம்பள நிலுவை 2018 - நிறுத்தப்பட்ட ஊழியர்கள் | | - | (985,609) |
| 2018ற்கான திருத்தப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவு | | - | (73,217) |
| திருத்தப்பட்ட விடுமுறையை பணமாக்கும் கொடுப்பனவு - 2018 | | - | (346,946) |
| 2018ம் ஆண்டுக்கான வருமான வரி | | - | (11,190,575) |
| 2018 மீதி மாற்றப்பட்டது - காப்புறுதி பூட்கையாளர்களுக்கான பாதுகாப்பு நிதியம் | | - | (18,504,176) |
| வருட இறுதியில் மீதி | | - | - |
| **7 காப்புறுதிப் பூட்கையாளர்கள் பாதுகாப்பு நிதியம்** | | | |
| ஆரம்ப மீதி | | 6,252,958,232 | 5,042,765,873 |
| இவ்வருடம் கிடைத்த செஸ் | | 506,139,149 | 493,068,161 |
| ரிபோ மற்றும் சேமிப்பு கணக்குகளில் இருந்து கிடைத்த வட்டி | | 479,514 | 3,698,834 |
| திறைசேரி பிணையங்களின் முதலீடுகளில் இருந்து கிடைத்த வட்டி | | 33,151,511 | 92,882,074 |
| நிலையான வைப்புகளில் இருந்து கிடைத்த வட்டி | | 588,341,378 | 477,484,713 |
| நிதி முகாமைத்துவ கணக்கில் இருந்து கிடைத்த வட்டி | | 211,291 | 247,397 |
| ஆணைக்குழுவின் நிகர மிகை - 2018 | | - | 18,504,176 |
| நடைமுறை வருடத்தில் தேறிய மிகை | | 93,214,934 | 129,218,719 |
| | | 7,474,496,007 | 6,257,869,945 |
| கழி: | | | |
| மூலதனச் செலவுகளுக்கான மாற்றல் | | 5,773,521 | 4,901,298 |
| மொத்த மாற்றல்கள் - காப்புறுதிப்பூட்கை பாதுகாப்பு நிதியம் | | 5,773,521 | 4,901,298 |
| வங்கிக் கட்டணங்கள் | | 8,251 | 10,414 |
| | | 5,781,773 | 4,911,713 |
| முடிவு மீதி | | 7,468,714,234 | 6,252,958,232 |
| **8 மானியம்** | | | |
| வருட ஆரம்பத்தில் மீதி | | 7,966,331 | 5,389,425 |
| காப்புறுதிப் பூட்கையாளர் காப்புறுதி நிதியத்தில் இருந்து மூலதன செலவு | | 5,773,521 | 4,901,298 |
| கழி : இவ்வருடததின் கடன் தீர்ப்பு | | (2,905,041) | (2,324,391) |
| வருட இறுதியில் மீதி | | 10,834,811 | 7,966,331 |

**குறிப்பு - மானியத்தை அடையாளம் காணல்**

கீழ்வரும் வீதங்களில் வருமானங்களாக மானியம் நிதியியல் செயலாற்றுகை கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளது

(அதாவது, தொடர்புடைய சொத்துக்களின் பயனுள்ள ஆயுள் குறித்த முறைமையான அடிப்படை)

| | 31.12.2020 | 31.12.2019 |
|---|---|---|
| மோட்டார் வானம் | 25% | 25% |
| அலுவலக உபகரணம் - ஏனையவை மற்றும் EDP | 25% | 25% |
| தளபாட இணைப்புகள் மற்றும் பொருத்திகள் | 12.5% | 12.5% |
| பயிற்சி உபகரணங்கள் | 25% | 25% |

| **9 ஒய்வு நலன் தேவைப்பாடுகள்** | 31.12.2020 | 31.12.2019 |
|---|---|---|
| வருட ஆரம்பத்தின் மீதி | 15,839,021 | 12,155,897 |
| இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் | 3,925,559 | 3,288,805 |
| கடந்த வருடத்தின் பற்றாக்குறை ஏற்பாடு | - | 1,269,219 |
| உண்மையான (ஈட்டுகை)/ நட்டம் | (290,831) | (515,801) |
| (-)இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | - | (359,100) |
| வருட இறுதியில் மீதி | 19,473,749 | 15,839,021 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | குறிப்புகள் | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2019 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **10 ஏனைய நடைமுறை பொறுப்புகள்** | | | |
| அட்டுறு செலவுகள் | | **25,591,998** | 22,304,938 |
| EPF கொடுப்பனவு செய்ய வேண்டியவை | | **1,258,891** | 1,135,994 |
| ETF கொடுப்பனவு செய்ய வேண்டியவை | | **188,834** | 170,400 |
| PAYE கொடுப்பனவு செய்ய வேண்டியவை | | **30,320** | 151,990 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய பிடித்து வைத்தல் | | **36,228** | 36,228 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய வருமான வரி | | **6,776,668** | 3,359,549 |
| PPF இருந்து மாற்றப்பட்ட வேண்டிய தொகை | | **87,446,413** | 124,317,421 |
| ஏனையவை | | **3,202,393** | 2,804,361 |
| | | **124,531,745** | 154,280,881 |
| **11 வருமானம்** | | | |
| காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற வருடாந்தக் கட்டணம் | | **244,899,120** | 224,428,714 |
| பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணம் | | **14,497,295** | 14,384,961 |
| | | **259,396,415** | 238,813,675 |
| **12 FSM கருத்திட்டத்தில் இருந்து வருமானம்** | | | |
| FSMP - DLI மானியம் | 26 | **11,675,810** | 81,096,220 |
| FSMP - DLI மானியம் அல்லாதவை | | **668,591** | 523,874 |
| | | **12,344,401** | 81,620,094 |
| **13 வட்டி வருமானம்** | | | |
| நிலையான வைப்புகளில் இருந்தான வட்டி | | **7,748,539** | 10,258,118 |
| நிதி முகாமைத்துவ நிதியத்தின் மீதான வட்டி | | **228,338** | 286,691 |
| சேமிப்பு கணக்கு மீதான வட்டி | | **-** | 57 |
| ரிபோ மீதான வட்டி | | **4,807,377** | 5,213,034 |
| | | **12,784,254** | 15,757,900 |
| **14 ஏனைய வருமானம்** | | | |
| வாகனக் கடன் மீதான வட்டி | | **83,622** | 30,328 |
| இடர் கடன் மீதான வட்டி | | **127,039** | 142,586 |
| அகற்றல் மீதான இலாபம் | | **-** | 83,065 |
| நானாவித வருமானம் | | **-** | 82,175 |
| | | **210,661** | 338,154 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | குறிப்புகள் | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2019 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **15 ஊழியர் செலவுகள்** | | | |
| ஊழியர் சம்பளங்கள் | | 69,948,812 | 65,968,080 |
| EPF 12% | | 8,365,679 | 7,913,290 |
| ETF 3% | | 2,091,420 | 1,978,323 |
| தலைவர் - கொடுப்பனவு | | 1,162,466 | - |
| தலைவர் - எரிபொருள் கொடுப்பனவு | | 238,887 | - |
| ஆணைக்குழு அங்கத்தவர்கள் - அமர்வுக்கான கொடுப்பனவு | | 865,972 | 540,000 |
| உள்ளுறைக் கொடுப்பனவு | | 283,500 | 344,925 |
| மேலதிக நேரம் | | 306,761 | 400,137 |
| ஊழியர் மருத்துவச் செலவு | | 2,416,726 | 1,927,480 |
| ஊழியர் மருத்துவக் காப்புறுதி | | 2,001,327 | 1,615,932 |
| தீ மற்றும் தனியாள் காப்புறுதி | | 379,922 | 339,294 |
| ஊழியர் நலன்புரி | | 2,038,778 | 841,693 |
| உள்ளூர் ஊழியர் பயிற்சி மற்றும் சந்தா | | 401,492 | 1,610,639 |
| ஆணைக்குழு அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர் - வெளிநாட்டு பயிற்சி மற்றும் பயணம் | | - | 10,375,090 |
| செயலலாற்றுகை அடிப்படையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவு | | 8,438,186 | 7,178,213 |
| ஆட்சேர்பு விளம்பரம் | | 128,975 | 693,115 |
| பணிப்பாளர்களின் வதிவிடத் தொலைபேசி | | 439,740 | 461,959 |
| விடுமுறையைக் காசாக்கல் | | 1,673,310 | 1,218,344 |
| வாகனத் தொழிற்பாட்டுக் குத்தகைக் கட்டணம் | | 1,455,048 | 1,455,048 |
| சாரதிக் கொடுப்பனவு | | - | 500 |
| பணிப்பாளர் வாகனக் கொடுப்பனவு | | 3,166,986 | 3,246,712 |
| பணிப்பாளர்களின் எரிபொருள் கொடுப்பனவு | | 1,030,514 | 1,066,755 |
| ஊழியர் பணிக்கொடை | | 2,262,462 | 3,148,387 |
| | | 109,096,963 | 112,323,915 |
| **16 தொழில்முறைக் கட்டணங்கள்** | | | |
| ஆலோசனைக் கட்டணம் | | 302,000 | - |
| | | 302,000 | - |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

| | குறிப்புகள் | 31.12.2020 இல் முடிவுற்ற வருடம் ரூபா | 31.12.2019 இல் முடிவுற்ற வருடம் ரூபா |
|---|---|---|---|
| **17 தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | |
| வாடகை | | 41,537,311 | 40,474,432 |
| தரிப்பிடக் கட்டணம் | | 761,000 | 730,676 |
| தொலைபேசிக் கட்டணங்கள் மற்றும் இணையம் | | 1,329,925 | 1,417,311 |
| மின்சாரம் | | 1,602,200 | 1,859,221 |
| அலுவலகப் பராமரிப்பு | | 1,476,835 | 551,193 |
| அச்சிடுதல் மற்றும் எழுதுகருவி | | 2,413,783 | 3,406,080 |
| பொது மக்கள் விழிப்புணர்வு | | 1,459,568 | 9,834,508 |
| போக்குவரத்து - உள்ளூர் | | 112,381 | 170,842 |
| ஈடிபி மற்றும் ஏனையவைக்கான அலுவலக உபகரணப் பராமரிப்பு | | 3,298,073 | 2,107,863 |
| ஐஏஐஎஸ் (IAIS) ற்கான சர்வதேச அங்கத்துவக் கட்டணம் | | 4,124,500 | 3,413,130 |
| விளம்பரம் - ஏனையவைகள் | | 135,000 | 128,925 |
| சட்டச் செலவுகள் | | 279,330 | 522,852 |
| பத்திரிகை மற்றும் நூலக புத்தகங்களுக்கான சந்தா | | 236,414 | 153,471 |
| தபால் மற்றும் பொதிக் கட்டணம் | | 152,900 | 238,326 |
| கணக்காய்வுக் கட்டணம் - கணக்காய்வாளர் நாயகம் | | 457,200 | 161,400 |
| கணக்காய்வுக் கட்டணம் - உள்ளக | | 1,050,000 | 1,603,166 |
| பெறுமானத் தேய்வு | | 5,480,041 | 4,899,489 |
| பொதுச் செலவுகள் | | 73,730 | 109,255 |
| சட்டச் செலவுகள் | | 64,000 | 1,210 |
| புலனாய்வுச் செலவுகள் | | 1,850 | 33,661 |
| மேற்பார்வை செலவுகள் | | 6,020 | 2,500 |
| வாகனப் பராமரிப்பு | | 215,300 | 126,395 |
| வாகனக் காப்பறுதி | | 90,626 | 67,026 |
| வாகன ஓட்டக் கட்டணங்கள் | | 97,780 | 287,862 |
| தேசக் கட்டுமான வரி | | 138,516 | 1,022,445 |
| | | 66,594,283 | 73,323,241 |
| **18 FSM கருத்திட்டம் தொடர்பான செலவுகள்** | | | |
| ஆட்சேர்ப்புக்கான விளம்பரம் | | 640,875 | 450,760 |
| வங்கிக் கட்டணம் | | - | 5,500 |
| | | 640,875 | 456,260 |
| **19 நிதி மற்றும் ஏனைய செலவுகள்** | | | |
| பணிக்கொடை ஏற்பாடுகள் மீதான வட்டி | | 1,663,097 | 1,409,637 |
| வங்கி கட்டணங்கள் | | 70,628 | 158,864 |
| | | 1,733,725 | 1,568,501 |

**20. நிதி முகாமைத்துவக் கணக்குகள், பேரேட்டு மீதிகள் மற்றும் வங்கி மீதிகள்**

